
வானவில்
ஓவியமே!
ஜெய்சக்தி

நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வானவில் ஓவியமே |
| ஆசிரியர் | : ஜெயசக்தி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதல் பதிப்பு | : 2008 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 Kg வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : 240 |
| எழுத்து | : 11 புள்ளி |
| வெளியிடுவோர் | : ஸ்ரீ செல்வ நிலையம் |

விலை: ரூ.90.00



# வானவில் ஓவியமே!

## 1

''நல்வரவு! வாங்க! வணக்கம்!'' என்று உற்சாகமாக வரவேற்றார் ஞானமுத்து.

''வணக்கம்!'' என்று அரைப் புன்னகையுடன் உள்ளே நுழைந்தான் உமாசங்கர்.

உமாசங்கர் உள்ளே நுழைந்ததும் என்னமோ அந்த அலுவலகமே ஒளியடைந்து விட்டாற்போலத் தோன் றியது ஞானமுத்துவுக்கு.

''அப்பாடா!'' என்றிருந்தது.

நண்பரும் பார்ட்னருமான அம்பலவாணனின் மகன். ''இதோ! அதோ! இப்ப வருவான்! அடுத்த மாதம் வந்

துடுவான்'' என்று அம்பலவாணன் சொல்லிக் கொண்டிருக்க ஒரு கட்டத்தில் ஞானமுத்துவுக்கு சந்தேகமே வந்து விட்டது.

''வரமாட்டான்'' என்பதைத்தான் இப்படிச் சொல்கிறாரோ என்று தோன்றியது. போன மாதம்தான் உறுதியான பதிலாகச் சொன்னார்.

''ஒரு வழியாத் தம்பி வர்றேன்னு சொல்லிட்டான். அவனே சொந்தமா அவனுக்குன்னு பிடித்த தொழில்களைக் கைவசம் வச்சிருக்கறதாலே இதுல ஆர்வம் காட்டமாட்டேங்கறான். இப்ப ஒரு வழியா அவனுக்குப் புரிய வச்சிருக்கேன்.. ஆனா.. அவன் ஒரு மாதிரியான பேர்வழி! ஜாக்கிரதை!'' என்று எச்சரிக்கை வேறு செய்திருந்தார். அதனால் ஞானமுத்துவும் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க முடிவு செய்தார்.

உமாசங்கருக்கென்று ஒதுக்கியிருந்த அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார்.

உள்ளே நுழைகிற ஒரு கணத்துக்குள்ளாகவே அறையை நோட்டம் விட்டு விட்டான். முகத்தில் திருப்தி தெரிந்தது.

ஞானமுத்துவும் கவனமாக அவனுடைய பார்வையையும், முகபாவத்தையும் கவனித்துக் கொண்டு வந்தாராதலால் அவர் முகத்திலும் திருப்தி தோன்றியது.

''தம்பி! என்ன சாப்பிடறீங்க? கூல்ட்ரிங்ஸ்'' என்று கேட்டார்.

''இல்லே! நான் அதிகமாக கூல்ட்ரிங்ஸ் சாப்பிடறதில்லே! காபியோ, டீயோ குடுக்கச் சொல்லுங்க! அதுவும் ஒரு நாளைக்கு ரெண்டு கப்தான்'' என்றான்.



லேசாகப் புன்னகைத்தான்.

''அது சரி அது சரி! நல்லதுதான்!'' என்றார் ஞானமுத்து அவசரமாக.

தன்னைத் திருப்திப் படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிற விஷயங்களுக்கெல்லாம் அவர் அவசரமாக ''ஆமாம் சாமி'' போடுவதைப் பார்த்து அவனுக்கு உள்ளுக்குள்ளே சிரிப்பு தோன்றியது போலும்.

கண்களில் குறும்பு மின்னி மறைந்தது.

''அப்புறம்.. சொல்லுங்க.. அங்கிள்!'' என்றான் தீவிரமான முகபாவத்துடன்.

தங்கள் தொழிலைப் பற்றி விளக்கமாகச் சொன்னார் ஞானமுத்து.

ஏற்றுமதியில் இருந்தார்கள்! அதுபோக வியாபாரம் என்று இரண்டு மூன்று தொழில்கள் இருந்தன.

பெரிய கம்பெனிகளோடு தொடர்பு வைத்துக் கொண்டு உதிரிப் பாகங்கள் தயாரித்துக் கொடுத்தார்கள்.

ஞானமுத்து எல்லாத் தொழில்களையும் பற்றி விவரமாகச் சொன்னார். முதலில் லேசான அலட்சியப் பார்வையுடன் அவர் பேசுவதைக் கேட்க ஆரம்பித்த உமாசங்கர் ஓரிரு நிமிடங்களிலேயே தன் பார்வையின் தன்மையை மாற்றிக் கொண்டான்.

ஞானமுத்து தொழில்களைப் பற்றிய அடிப்படைகள் சந்தையின் போக்கு பற்றியெல்லாம் தெளிவாகத் தெரிந்தவராகவே இருந்தார். அதனால் அவன் கணகளிலும் மரியாதை கூடியது.

பொறுமையாகவும் ஆழமாகவும் உள்வாங்கிக் கொண்டான். அதேபோல அவன் கேட்ட கேள்விகளில் இருந்தும்

அவருக்கும் சில விஷயங்கள் புரிந்தன. அவனும் ஏதோ மேம்போக்கான இளைஞன் அல்ல. நவீனமாக உடையுடுத்திக் கொண்டிருந்தாலும், தொழில் உழைப்பு என்று வரும்போது தெளிவாகவே இருக்கிறான் என்பது புரிந்தது.

பரஸ்பரம் மரியாதை கூடியது. கிட்டத்தட்ட இரண்டு மணி நேரப் பேச்சுக்குப் பிறகு சொந்த விஷயங்களுக்குத் தாவினார்கள்.

''தம்பி! தங்கறதெல்லாம் எப்படி?'' என்று கேட்டார் ஞானமுத்து.

''அங்கிள்! மூணு நாள் இங்கே! மத்த நாட்கள் என்னோட மத்த தொழில்களைப் பாக்கணும்'' என்றான்.

''நல்லது.. தம்பி!''

அப்போதுதான் அவன் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

''அங்கிள்! நீங்களே நல்லா நிர்வாகம் செய்யக் கூடியவர்னு தெரியுது. அப்புறம் ஏன்?'' என்று நிறுத்தினான்.

ஞானமுத்து ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார்.

''எனக்கு எல்லாத்துலயும் ஒரு வெறுப்பு வந்துருச்சுப்பா..'' என்று.

''அங்கிள்! எனக்கு உங்க மனக்கஷ்டம் புரியுது! ஆனா..! இப்பத்தான், அட்லீஸ்ட் கொஞ்ச நாளைக்காவது நீங்க உங்களை பிஸியா வச்சுக்கணும்! இல்லேன்னா.. மனசு ரொம்பக் கெட்டுடும்..'' என்றான்.

''இல்லப்பா! நான் வெட்டியா பொழுதைப் போக்கப் போறது இல்லே! விவசாயம் பாக்கப் போறேன். இங்க



வந்தா.. அடிக்கடி..'' என்று நிறுத்த உமாசங்கர் பரிவாகப் பார்த்தான்.

''கலாதர் ஞாபகம் வருதா? அவரு இருந்திருந்தா... இந்தத் தொழில்களோட பொறுப்பெல்லாம் எடுத்துகிட்டிருப்பார்'' என்றான் ஆறுதலாக.

''அது தெரியலப்பா! ஆனா.. ஒரு பெரிய பொறுப்பை எனக்கு வச்சிட்டுப் போயிருக்கான்'' என்றான்.

''அங்கிள்! மனசு வருத்தப்படாதீங்க! நல்ல வேளையா அவருக்குன்னு ஒரு வாரிசு இருக்கு! அந்தக் குழந்தையை சிறப்பா வளர்க்கப் பாக்கலாம்'' என்றான்.

அதில் அவன் தன்னையும் இணைத்துக் கொண்டபோது அவர் மனத்துக்கு ஆறுதலாக இருந்தது.

''அப்புறம்.. யாழினி..!'' என்று நிறுத்தினான்.

''யாழினி.. இப்பத்தான் தேறிட்டு வருது. அது மட்டும் இல்லப்பா.. அதுவும். தொழில்கள்ல கொஞ்சம் பழகணும். நானே ட்ரெயினிங் குடுப்பேன். ஆனா.. அதைப் பாக்கும் போதெல்லாம் எனக்கு என் மேலயே கோபம் வருது. பேசாமக் கலாதருக்குக் கல்யாணம் பண்ணாமயே இருந்திருக்கலாம்னு தோணுது. அந்தப் புள்ளையப் பாக்கும் போதெல்லாம் எனக்கு சங்கடமாகும்..'' என்று நிறுத்தினார்.

உள்ளே பொங்கிய உணர்வைக் கட்டுப்படுத்திக் கொள்ள கஷ்டப்பட்டார்.

''அங்கிள்... ப்ளீஸ்! வேற பேசலாம்'' என்றான்.

''இல்லப்பா! பேசுவோம்! எனக்கும் என் மனசுல இருக்கறதையெல்லாம் கொட்டறதுக்கு ஆள் வேணும் இல்லே!

உங்க அத்தைகிட்ட எதுவும் பேச முடியாது! பேச ஆரம் பிச்சாலே பொல பொலனு கண்ணீர்தான். யாழினிகிட்ட யும் பேச முடியாது.. ஆனா.. நான் இதையெல்லாம் பேசறதுனாலே உன்னை ஒண்ணும் கஷ்டப் படுத்த லியே'' என்றார்.

''இல்லைங்க.. அங்கிள்! பேசுங்க..! உங்க மனசுக்கும் ஆறுதலாகட்டும்! உங்களுக்கு இன்னொரு மகனா நான் இருக்கேன்..'' என்றான்.

அவர் விடுபட்ட உணர்வோடு தொடர்ந்தார்.

''தம்பி! எனக்கு ஒரே ஒரு உதவி செய்யணும்! கொஞ் சம் பொறுமையா யாழினிக்கும் இந்த நிர்வாகமெல்லாம் கத்துக் குடுக்கணும்'' என்றார்.

உமாசங்கர் கொஞ்சம் திடுக்கிட்டுப் போனான். அப்பா தன்னிடம் இப்படியொரு விஷயத்தைச் சொல்லவே யில்லையே! இளம் விதவை அப்படி ஒரு பொண்ணுக்கு.. நீ தொழில் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தால் ஒரேயடியாக இந்தத் திசைக்கே கும்பிடு போட்டிருப்பான். ஆனால் உள்ளே காலை வைத்தாகியது. அதுவும் அங்கிள் இப்படி உருக்கமாக வேண்டிக் கொள்ளும்போது எப்படி மறுப்பது என்றும் தோன்றியது.

''அங்கிள்!'' என்று தயங்க அவர் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

''தம்பி! மறுத்துச் சொல்லிடாதே! எங்களுக்கும் வய சாகிட்டே போகுது. அந்தப் பொண்ணைத் தயார் பண்ணி னாத்தான் அவளோட எதிர்காலத்துக்குப் பாதுகாப்பு..'' என்றார் கெஞ்சுவது போல.



உமாசங்கரின் மனம் நெகிழ்ந்து விட்டது. ''செய்யறேன்.. அங்கிள்! செய்யறேன்!'' என்றான் அவசரமாக.

ஞானமுத்து அதற்குப் பிறகுதான் மனம் தெளிந்தார். பேச்சிலேயே உற்சாகம் கூடியது.

உமாசங்கரின் ஊர் மூன்று மணி நேரப் பயணத்தில் இருந்தது. தினமும் ஆறு மணி நேரம் காலையும் மாலை யும் பயணம் செய்வது தேவையற்றது என்று நினைத் தான்.

அம்மாவும் அப்பாவும் ''கோயமுத்தூருக்கே வந்து விடுகிறோம். ஆனால் ஆறு மாதம் போகட்டும்'' என் றார்கள். அதிலும் அப்பா ஏனோ கோயமுத்தூருக்கு அவன் வந்து அங்கே இருக்கிற தொழில்களை மேம்படுத்திக் கொடுக்க வேண்டும் எண்ணத்திலே மிகவும் ஆர்வமாக இருந்தார்.

கடந்த ஆறு மாதமாகவே தொடர்ந்து அது பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அதனால்தான் ''சரி'' என்று ஒத்துக் கொண்டான். இப்போது ஞானமுத்துவிடமும் அதையே சொன்னான்.

''அங்கிள்! தினமும் சேலம் போயிட்டு வர்றது தேவை யில்லேனு நினைக்கிறேன். அதனால இங்க எனக்குன்னு ஒரு வீடு.. பாக்கணும்'' என்று அவன் முடிக்கு முன் பாகவே ஞானமுத்து குறுக்கிட்டார்.

''என்ன தம்பி! எதுக்காக வீடு பாக்கறது! நம்ம பக்கத்து பங்களாவே சும்மாதான் கிடக்குது. நீங்க வந்து தங்கிக் குங்க'' என்றார்.

''அது.. வந்து!

''என்ன அது.. இதுன்னுகிட்டு..! தனியா எதுக்கு வாடகை வீடு. தனி பங்களா.. எந்த விதத்திலும் நாங்க உங்களுக்குத் தொந்தரவா இருக்க மாட்டோம். தனிக் காம்பவுண்ட்! இன்டிபென்டன்ட்டா.. இருக்கும்'' என்றார்.

உமாசங்கர் யோசித்தான்.

''நான் ஏற்கனவே உங்கப்பாகிட்டே பேசிட்டேன். தம்பி! அப்பா.. சரின்னுட்டார்'' என்றார்.

இப்போது உமாசங்கருக்கு வேறு வழியிருக்கவில்லை.

''சரி.. அங்கிள்! நான் இன்னைக்கு ஈவ்னிங் வந்து பாக்கறேன்.. எனக்கு மனசுக்குப் பிடிச்சா..'' என்று இழுத்தான்.

மிகவும் அருகில் இருப்பது தேவையற்றது என்று நினைத்தான்.

''அது எதுக்குத் தம்பி! சாயங்காலம்! இப்பவே போலாம்'' என்றார் ஞானமுத்து ஆர்வமாக.

அவன் உறுதியான மறுப்புத் தெரிய அவர் முகம் பார்த்தான்.

''இல்லிங்க.. அங்கிள்! நாம ஆபீஸ் அவர்ஸ்.. கீப் அப் பண்ணினாத்தான் நம்ம ஸ்டாஃப்கிட்டே வேலை வாங்க முடியும். நான் ஈவ்னிங் சிக்ஸ் ஒ கிளாக்குக்கு வர்றேன்'' என்றான்.

ஞானமுத்துவின் கண்களில் மரியாதை கூடியது.

''சரிப்பா!'' என்றார்.

''அங்கிள்! சாப்பிட்டு முடிஞ்சதும் இங்க இருக்கிற யூனிட்டெல்லாம் பாத்துரலாம்'' என்றான்.



பிற்பகல் முழுக்க அருகிலே இருந்து யூனிட்டெல்லாம் பார்த்தார்கள். பாக்கும்போதே தனது நிர்வாக முறைகளைப் பற்றி மனதுக்குள் திட்டம் வகுத்துக் கொண்டான் உமாசங்கர்.

ஞானமுத்துவை ரொம்பவும் அலைக்கழிக்காமல் அவரை அலுவலகங்களில் அமர வைத்து விட்டு மேனேஜரை வரவழைத்துக் கொண்டு சளைக்காமல் சுற்றி வந்தார்கள்.

ஞானமுத்து உள்ளுக்குள் அவனை மெச்சிக் கொண்டார். பேசுகிற பேச்சுக்களிலும், மேனேஜர்களிடம் கேட்கிற கேள்விகளிலும் இருந்து அவருக்கு ஒன்று புரிந்தது. அவன் தனக்கே சலுகைகள் அளித்துக் கொள்வதில்லை என்ற உண்மைதான் அது.

''இப்படி.. ஒருவரிடம்தான் தனது மருமகள் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று நினைத்துக் கொண்டார்.

கலாதரின் நினைவு வந்தது. அவன் மட்டும் உயிரோடு இருந்திருந்தால்..'' என்று எண்ணினார்.

''உயிரோடு இருந்திருந்தால்.. மட்டும்..! உமாசங்கரின் அளவுக்கு.. திறமையாய் இருந்திருப்பானா? திறமை.. இருக்கட்டும்.. அட்லீஸ்ட்'' என்று எண்ண ஓட்டம் ஓட சட்டென்று மனதுக்குத் தடை போட்டுக் கொண்டார்.

'வேண்டாம்..! பழைய நினைவுகளில் இருந்து மீள வேண்டும்' என்று தனக்கே சொல்லிக் கொண்டார்.

செல்போனை எடுத்து வீட்டுக்குப் போன் செய்தார்.

மருமகளிடம் பேசினார். முகத்தில் சுருக்கங்கள் விழுந்தன. குரலைச் சற்றே உயர்த்தினார்.

''பாரும்மா! நீ என்ன சொன்னாலும் நான் கேக்கறதா இல்லை!'' என்றார் கறாராக. மேலும் ஒன்றிரண்டு கட்டளைகள் இட்டார். இணைப்பைத் துண்டித்தார்.

மீண்டும் அலுவலகம் வந்தார்கள். மாலை ஐந்து மணியிருக்கும்.

அலுவலகத்தின் உதவியாளர் வந்து ஞானமுத்துவிடம்.

''ஐயா.. மேடம்.. வந்திருக்காங்க!'' என்றார்.

''வரச்சொல்லு.. வரச்சொல்லு..!'' என்றார்.

வந்தாள்!

ஞானமுத்துவிடம் பேசிக் கொண்டே திரும்பிய உமாசங்கர் அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

அப்படியே பேச்சை நிறுத்தினான்!

எதிரே நின்ற அந்த இளம்பெண்ணைப் பார்த்தவுடன் அடி மனத்தில் தோன்றிய உணர்வுகளை அடக்கப் படாத பாடு பட்டு விட்டான்.

## 2

''பெரியப்பா! இவ்வளவு பெரிய பங்களா தேவையான்னு யோசிக்கறேன்'' என்றான் உமாசங்கர்.

ஞானமுத்து அன்புடன் புன்னகைத்தார்.



''இருக்கட்டும்ப்பா! அதான்.. அம்மாவும், அப்பாவும் ஆறு மாசத்திலே வரப்போறாங்கன்னு சொல்றியே..! அப்புறம் மறுபடி எதுக்கு இன்னொரு இடம் தேடறது. எனக்கும் அம்பலவாணன் பக்கத்துல இருந்தாத் தெம்பா இருக்கும்பா! இப்ப நீ வந்ததே என்னமோ எனக்கு யானை பலம் வந்த மாதிரி இருக்கு..'' என்றார்.

உமாசங்கருக்கு அவருடைய உணர்வுகள் புரிந்தது. இளம் வயது மகளைப் பறி கொடுப்பது என்பது எவ்வளவு கடினமான விஷயம் என்றும் அதை ஜீரணித்துக் கொள்வது என்பது எவ்வளவு கடினமானது என்பதும் அவனுக்குப் புரிந்தது. பங்களா வசதியாகவே இருந்தது. கீழே பெரிய ஹால். பக்கவாட்டில் ஒரு விருந்தினர் அறை ஹாலைக் கடந்து உள்ளே போனால் மீண்டும் ஒரு பெரிய ஹால். கீழேயே நான்கைந்து பெட்ரூம்கள் மாடியிலும் அதே போல ''ஒத்தை மனிதனுக்கு அதுவும் கட்டை பிரம்மச்சாரிக்கு இத்தனை தேவையா?'' என்று தோன்றியது.

''சரி.. மெது மெதுவாகப் பேசிப் புரிய வைக்கலாம்'' என்று இவன் எண்ணிக் கொண்டான்.

''சரிங்க... பெரியப்பா! உங்க இஷ்டம்!'' என்றான்.

அதற்குப் பிறகுதான் ஞானமுத்துவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''நம்ம வீட்டுக்குப் போலாம்பா!'' என்றார்.

வீட்டை விட்டு முன் பகுதிக்கு வந்தவுடனே ஒரு விஷயம் கவனித்தான். இரண்டு பங்களாக்களுக்கும் இடையே உள்ள மதில் சுவர் சற்றே உயரம் குறைந்திருந்தது. அவன் முகத்தில் சிந்தனை ஓடியது. மெதுவாகத் திரும்பி ஞானமுத்துவிடம் சொன்னான்.

''பெரியப்பா! தப்பா நினைக்காதீங்க! ரொம்பப் பக்கத்தில் இருந்தா.. உறவு கெட்டுடும். ஆனாலும் இப்ப உங்களோட இருக்கறது உங்களுக்கும் ஒரு ஆறுதலா இருக்கும்! அப்பா.. அம்மாவுக்கும் மனசு திருப்தியா இருக்கட்டும்கறதுக்காகத்தான் நான் இந்த ஏற்பாட்டுக்கே ஒத்துக்கறேன். ஆனாலும் அவங்கவங்களுக்குப் பிரைவஸின்னு கொஞ்சம் இருக்கணும். அதனாலே இந்த மதில் சுவரைக் கொஞ்சம் உசத்திரலாம்..'' என்றான்.

ஞானமுத்து ஏதும் நினைத்துக் கொள்வாரோ என்ற கவலை கூட அவன் மனதில் தோன்றியது. ஆனால் அவர் நல்ல விதமாகவே எடுத்துக் கொண்டார்.

''சரிப்பா! செஞ்சர்லாம்!'' என்றார்.

ஞானமுத்துவின் வீட்டுக்குப் போனார்கள்.

அன்னபூரணி அவர்களைக் கண்டதும் பொங்கிப் பொங்கி அழுதார்.

மகன் இறந்து ஒரு வருஷம் ஆகியும் கூட அவரால் அந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதிலும் உமாசங்கரைப் பார்த்தவுடனே உள்ளே அவரது பழைய துக்கமெல்லாம் பொங்கியது.

''உங்கப்பாவும், இவரும் என்னென்னவோ கனவெல்லாம் வச்சிருந்தாங்களே! அவங்க எப்படி ஒத்துமையா இருந்தாங்களோ அதே போல நீங்களும் ஒத்துமையா இருந்து என்னென்னவோ சாதிக்கப் போறீங்கன்னு நினைச்சமே. கடைசியில இப்படி...'' என்று அழுதார்.

உமாசங்கர் ஒன்றுமே பேசவில்லை. அவரது அருகில் அமர்ந்து கொண்டான். தோளில் சாய்த்துக் கொண்டான். இடக்கையால் தோளில் தட்டிக் கொடுத்தான். வலக்



கையால் அவரது கையை பிடித்துக் கொண்டான். அவரே அமைதியாகும் மட்டும் அழ விட்டான்.

அழுது அடங்கினார். ஞானமுத்து எதிரே அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

மெல்ல அழுகை அடங்கிய பிறகு அடங்கிய குரலில் சொன்னான்.

''அத்தே! பிறப்பும் இறப்பும் நம்ம கையில இல்லை! இத்தனை நாள் அவன் உங்களோட வாழ்ந்துட்டுப் போகணும்னு இருக்கு! போனதையே நினைச்சீங்கன்னா.. உடம்பு கெட்டுடும். யாழினி இருக்காங்க! குழந்தை.. இருக்கான். அவங்க ரெண்டு பேர் உருவத்துலயும் நீங்க இனிமே கலாதரைப் பார்க்க வேண்டியது தான். இழப்போட துக்கம் பெருசுதான். ஆனா... அதையே சுமந்துகிட்டு இருக்கறதால ஆகப் போறதென்ன?'' என்றான்.

மெல்லிய ஆதரவான குரலில் ஆத்மார்த்தமாக அவன் பேசிய விதம் பெரியவர்கள் இருவருக்கும் ஆறுதலாக இருந்தது.

''அம்மா..! யாழினி!'' என்று குரல் கொடுத்தார் ஞானமுத்து.

யாழினி உள்ளேயிருந்து வந்தாள். அவள் தோளில் தொற்றிக் கொண்டு ஒரு குழந்தை.

குறுகுறுவென்று பார்த்துக் கொண்டு வந்தான். அந்நியர் ஒருவரைப் பார்த்தவுடன் தாயின் தோளில் முகம் புதைத்துக் கொண்டான்.

யாழினியின் பின்னாலேயே வேலைக்காரம்மா மயிலாள் இரு சிறிய தட்டுக்களில் பலகாரம் கொண்டு

வந்தாள். ஒன்றில் இனிப்பும் மற்றொன்றில் காரமும் வந்தது.

''பரவாயில்லை..!'' என்று அவன் தடுத்தபோது ஞானமுத்து குறுக்கிட்டார்.

''தம்பி! எவ்வளவோ துக்கத்துடன் இருந்தாலும் நீ வந்தது எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்ப்பா! இனிப்பு எடுத்துக்கோ!'' என்றார்.

அவன் ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டபடி யாழினியின் மேல் ஒரு கணம் பார்வையைச் செலுத்தினான்.

துடைத்துப் போட்டாற் போன்ற மாசுமறுவற்ற முகம். முகத்தில் அசாதாரணமான அழுத்தம். வேதனையா, இல்லையா என்றே கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு இறுக்கமான முகபாவம்.

அலுவலகத்திலேயே கவனித்திருந்தான். தன் வருகை சம்பந்தப்பட்ட ஏதோ ஒன்று அந்தப் பெண்ணுக்குப் பிடிக்கவில்லை என்று புரிந்தது. ஞானமுத்துவின் வற்புறுத்தலுக்காகத்தான் அலுவலகத்திற்கே வர ஒத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை யூகித்துக் கொண்டான்.

ஒரு பக்கம் அப்பாவின் மேல் கோபமாக வந்தது. இந்தத் தொழில்களையெல்லாம் விற்று விடலாம் என்று பிடிவாதம் பிடித்துப் பார்த்தான்.

''வேண்டாம்ப்பா! மகனும் போயிட்டான். இந்த சமயத்துல நாமளும் பார்ட்னர்ஷிப்பை உடைச்சோம்னா.. முத்து மனசு விட்டுடுவான்..'' என்று வாதாடினார்.

அது சரியென்றே பட்டது உமாசங்கருக்கு. அந்த ஒரு காரணத்துக்காகத்தான் இங்கே வர ஒத்துக் கொண்டான்.



ஆனால் இந்தப் பெண்ணுக்குள்ளே தனக்கு ஒரு எதிரி இருக்கிறாற்போல மனசுக்குப் பட்டது. ஆனால் உடனே சுதாரித்துக் கொண்டான்.

''பார்க்கலாம்! என்னதான் நடக்கிறதென்று..'' என்று எண்ணிக் கொண்டான்.

சவால்கள் அவனுக்கு எப்போதுமே பிடித்தமானவை. ஜெயிப்பது ஒரு சந்தோஷம் என்றால் தோற்பதும் ஒரு அனுபவம்தான் என்பான்.

எப்போதோ படித்த ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. தாமஸ் ஆல்வா எடிசன் பல்பு கண்டு பிடிக்குமுன்பாக ஆயிரக்கணக்கான முறை தன்னுடைய பரிசோதனையில் தோற்றுப் போகிறார். அப்போது சொல்வாராம். ஒவ்வொரு முறையும் நான் தோற்கவில்லை. ஜெயிக்க வேண்டுமென்றால் எதையெதை செய்யக் கூடாது என்று தெரிந்து கொண்டேன் என்றார். அதுபோலத்தான் உமாசங்கரும் ஒவ்வொரு தோல்வியிலும் நாம் கற்றுக் கொள்கிறோம் என்பான்.

வியாபாரத்தில் ஏற்றுமதியில் எத்தனை பிரச்சினைகளைச் சந்தித்திருக்கிறான். இந்தப் பெண எம்மாத்திரம்? சிறு பெண் என்று எண்ணிக் கொண்டான். அவளது எதிர்ப்புணர்வின் காரணம் என்ன என்று புரிந்து கொண்டு அதைச் சரி செய்தால் போகிறது என்று எண்ணிக் கொண்டான்.

யாழினி எதிரில் வந்து அமர்ந்தாள்.

''ஹாய்!'' என்று அவன் குழந்தையிடம் நட்புணர்வுடன் கையசைப்பதை வெறுமையுடன் பார்த்தாள்.

''பையன் பேரு... அருண்காந்தி'' என்றார் ஞானமுத்து.

''ஆஹா! அதான் ரொம்ப பிரைட்டா.. இருக்கீங்க!'' என்று சிரித்தான்.

அம்மாவின் மடியில் முகம் புதைத்துக் கொண்ட குழந்தை மெல்லத் திரும்பி அவன் முகம் பார்த்தது. அந்தச் செயலில் மனம் பறி கொடுத்தாற் போல உணர்ந்த உமாசங்கர் பளிச்சென்று சிரித்தான்.

குழந்தை மெல்லப் புன்னகைத்தது. மெல்ல அவன் பக்கம் நோக்கித் திரும்பியது. ஒரு அடி எடுத்து வைத்தது.

உமாசங்கர் சட்டென்று எழுந்தான். குழந்தையை அள்ளிக் கொண்டான்.

''வாங்க.. சார்! ரொம்ப யோசிக்கறீங்க!'' என்று சிரித்தான்.

மடியில் அமர்த்திக் கொண்டான். யாழினியைப் பார்த்து இயற்கையாகப் புன்னகைத்தான்.

''யாழினி.. ரொம்ப ஒண்ணும் வொரி பண்ணிக்காதீங்க!'' மெதுவாக் கத்துக்கலாம்..!'' என்றான்.

குழந்தை அவனிடம் ஒட்டிக் கொண்டான். அவன் மடியில் அமர்ந்து கொண்டான். உமாசங்கர் கையில் கட்டியிருந்த வாட்சை திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மெல்லக் குழந்தையின் தோள்களை வருடிக் கொடுத்தபடியே மேலும் சற்று நேரம் ஞானமுத்துவிடம் பேசிக் கொண்டிருந்தான்.

உலக நடப்புக்களைப் பற்றி அவன் பேச யாழினி ''எக்ஸ்க்யூஸ் மீ'' என்று எழுந்தாள்.



''மாமா! சாருக்கும் இன்னைக்கு நம்ம வீட்ல இருந்தே டிபன் அனுப்பிரலாம்'' என்றாள்.

ஞானமுத்து அப்போது உமாசங்கரிடம்,

''ஏம்ப்பா! உனக்கும் இங்கிருந்தே டிபன் சாப்பாடு..'' என்று ஆரம்பிக்க,

''வேண்டாம்.. மாமா! அப்புறம் ஏண்டா சொன்னோம்னு வருத்தப்படற மாதிரி நிலைமை ஆயிடும். நான் நேரம் கெட்ட நேரத்துக்கு வருவேன். போவேன். நைட் வொர்க் பண்ணுவேன். என்னோட ஃபுட் ஹாபிட்ஸ் வேற மாதிரி.. சமையற்காரர் போட்றலாம்'' என்றான்.

''போட்டாச்சுப்பா! காரைக்குடியிலிருந்து நல்ல மனுஷன் ஒருத்தர் கிடைச்சிருக்காரு. அவரு அண்ணன் தான் நம்ம வீட்ல செய்யறாரு. தம்பிக்காரர் கட்டைப் பிரம்மசாரி. கல்யாணம் வேண்டாம்னுட்டு இருக்காரு. உன் கூடவே தங்கிக்குவாரு'' என்றார்.

''தாங்க்ஸ்... பெரியப்பா! நிறைய விஷயங்களை யோசிச்சு.. யோசிச்சுச் செஞ்சிருக்கீங்க! ரொம்பத் தாங்க்ஸ்...'' என்றான்.

விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

வீட்டுக்குள் நுழைந்து தனது அறையில் தன்னுடைய பொருட்களை ஒழுங்கு படுத்தினான். அழகான மர வேலைப்பாடு! பெரிதாக இரண்டு காட்ரேஜ் பீரோக்கள் அதற்கான சாவியும் கொடுத்திருந்தார்.

முக்கியமான பைல்களை அதிலே அடுக்கி விட்டான். சமையற்காரர் உலகநாதன் எட்டிப் பார்த்தான்.

''தம்பி! பூரி செஞ்சுடட்டுமா?'' என்றார்.

''வேண்டாங்கய்யா! இன்னைக்கு ரெண்டு மூன்று ஸ்வீட்ஸ் சாப்பிட்டாச்சு! நைட்லயும் ஆயில் வேண்டாம். ஏதாவது லைட்டா செய்ங்க! சும்மா.. உப்புமா கூடப் போதும்!'' என்றான்.

உலகநாதன் புன்னகைத்தார்.

''சரிங்க தம்பி!'' என்று போனார். ஆனால் அவன் சாப்பிட வந்தபோது வெறும் உப்புமாவாக இல்லாமல் காய்கறிகள் போட்டு சமைத்திருந்தார். கூடவே தேங்காய்ச் சட்டினி வேறு.

உமாசங்கர் ரசித்து உண்டான்.

''நல்லாருந்துச்சு..!'' என்று பாராட்டினான்.

''அய்யா. அம்மாவும் அப்பாவும் வரப்போ நீங்க பொறுப்பெடுத்துகிட்டு அம்மாவுக்கு ரெஸ்ட் குடுத்துரணும்...'' என்றான்.

உலகநாதன் மகிழ்ந்து போனார். எடுத்தவுடனே அப்படிச் சொல்ல வேண்டுமென்றால் தன் சமையல் பிடித்து விட்டது என்றுதானே பொருள்.

''சொல்லுங்க! எல்லா நேரமும் இங்கயே இருப்பீங்களா?'' என்றான்.

''ஆமாங்கய்யா! இடையில் சும்மா கொஞ்ச நேரம் அண்ணனையும் அவங்க பேமிலியையும் பார்த்து வருவேன்..'' என்றான்.

''நல்லது..!'' என்றான்.

அறைக்குப் போய் விட்டான்.

ஓரளவு பொருட்களை ஒழுங்கு படுத்திய பின் படுக்கையில் கை கால்களை நீட்டிச் சாய்ந்து கொண்டான்.



செல்போனை எடுத்து அப்பாவிடமும், அம்மாவிடமும் பேசினான்.

''அம்மா! இங்கே ஒரு அருமையான சமையற்காரர் இருக்காரு. சீக்கிரமே வந்துருங்க. நீங்களும் கொஞ்சம் ப்ரீயா இருக்கலாம்.'' என்றான்.

''அப்படியா! சாப்பாட்டுக்குத்தான் என்ன பண்ணுவியோ..ன்னு கவலைப்பட்டேன்'' என்றார் அம்மா.

''ஏம்மா! அதான் ஞானமுத்து பெரியப்பா வீடு. இருக்கில்லே!'' என்றான்.

''ஆமா! ஆனாலும்.. அடுத்தவங்க வீட்ல.. எல்லா நேரமும் ப்ரீயா இருக்க முடியாதில்ல'' என்றார் அம்மா.

அப்பா போனைக் கையில வாங்கிச் சிரித்தார்.

''உங்கம்மாவுக்கு எப்பவும் சாப்பாட்டுக் கவலை தாண்டா'' என்றார்.

உமாசங்கர் இந்தப் பக்கம் புன்னகைத்தான். ''ஆமப்பா! அம்மான்னா அப்படித்தான்'' என்றான்.

''அம்மா கவலையை மட்டும் புரிஞ்சுக்கற நீ.. என் அப்பாவோட கவலையைப் புரிஞ்சுக்க மாட்டேங்கறே..'' என்றார்.

''ஆஹா.. பாயிண்டுக்கு வந்துட்டீங்களா?'' என்று சிரித்தான் உமாசங்கர்.

''ஆமப்பா...!'' என்றார்.

''சரி.. ஒரு ஆறு மாசம் டைம் குடுங்க..'' என்றான்.

''சரி..!''

''அப்பா.. ஆறு மாசம் கழிச்சுச் சொல்றேன்னு சொல்லியிருக்கேன்'' என்றான்.

''ஓஹோ..! என்று அப்பாவுக்குத் தன் மகன் வாழ்க்கையில் செட்டிலாக வேண்டும் என்ற கவலை அவருக்கு.''

அன்னபூரணி அழுத் விதத்தை மகன் விவரிக்கக் கேட்டு மனம் வருந்தினார் அம்பலவாணன்.

''அப்புறம்.. யாழினி.. எப்படியிருக்கு?'' என்றார்.

''கொஞ்சம்.. இறுக்கமாகத்தான் இருக்கு..! அந்தப் பொண்ணுக்கு ஏதோ.. இந்த பிஸினஸ் அரேன்ஜ்மென்ட் பிடிக்கல போல இருக்கு..!'' என்றான்.

''இதுவோ.. இனி.. வேற ஏதாவது கவலையோ.. என்னமோ..! பொறுத்துப் போப்பா..'' என்றார்.

''சரிப்பா!'' என்றான்.

என்னென்ன விஷயங்களையும் அவமானங்களையும் பொறுத்துப் போக வேண்டுமென்று தெரிந்திருந்தால் அன்றைக்கே கிளம்பியிருப்பான்.

## 3

ஒரு வாரம் ஓடி விட்டது!

யாழினியும் அலுவலக நேரத்துக்கு வந்தாள். ஆனால் பிற்பகலில் கிளம்பிப் போய் விடுவாள்.

குழந்தைக்கு இரண்டே வயதுதானே ஆகியிருந்தது. அதனால் குழந்தையை கவனிக்க வேண்டுமாம். அது



பற்றி ஏற்கனவே ஞானமுத்துவும் பேசியிருந்தார். அதனால் அவனும் பெரிதாக ஆட்சேபிக்கவில்லை.

ஒரு வகையில் அவனுக்கு வசதியாகவும் இருந்தது. பிற்பகலிலிருந்து கொஞ்சம்.. ப்ரீயாக இருக்க முடிந்தது.

யாழினி நேரடியாக அவனிடம் வாதாடுவதில்லை. மறுப்புச் சொல்வதில்லை. ஆனால் சுருக்கமான, மிகச் சுருக்கமான பேச்சு. சமயத்தில் அவனுக்கே மிகச் சலிப்பாக இருந்தது.

தொழில் தொடர்பான பேச்சுக்களை மட்டுமே பேசினார்கள். தேவைக்கு மீறிய ஒரு இறுக்கம் அவளிடத்தில் தெரிந்தது. முதலில் சற்றுக் கூர்ந்து கவனித்தவன் அதற்குப் பிறகு அது பற்றிய நினைப்பை விட்டு விட்டான். அது மட்டுமல்லாமல் அவள் ஒரு பெண் என்பதையே மறந்து விட்டவன் போல இயல்பாக நடத்த ஆரம்பித்தான்.

மெல்ல மெல்ல அவளும் இயல்பானாள். இறுக்கம் தளர்ந்ததே தவிர விலகி நிற்கிற விதம் அப்படியேதான் இருந்தது.

அன்றைக்கு வியாழக்கிழமை!

உமாசங்கர் தன்னுடைய தனிப்பட்ட தொழில்களைப் பார்க்க ஒதுக்கியிருக்கும் நாள்!

ஒரு கல்யாண மண்டபம் இருந்தது! அவனுக்கென்று தனிப்பட்ட ஏற்றுமதித் தொழில்களும் இருந்தன.

போயிருந்தான்.

எதிர்பாராத விதமாக முக்கியமான தொழில் தொடர்பாளர் கோவைக்கு வருவதாக செய்தி வந்தது.

ஞானமுத்துவுக்கு போன் செய்து ''பெரியப்பா! நான் இங்கே ஹெல்ட்அப் நீங்களே மேனேஜ் பண்ணுங்க'' என்று சொல்லியிருந்தான். ஆனால் என்ன நடந்ததோ தெரியவில்லை!

ஞானமுத்து சற்று வருத்தமாகப் பேசினார். ''தம்பி! எப்பவுமே நான் அப் டு டேட்டா விஷயங்களை வைத் திருப்பேன். ஒண்ணு ரெண்டு பைல் உங்க பீரோவுல இருந்துச்சு போல. யாழினிக்கும் சரியா விஷயம் தெரி யலே. மூல்சந்த் கொஞ்சம் திருப்தியில்லாமல் போனார்'' என்றார்.

''ஓ..!'' என்றான் அடங்கிய குரலில்.

''என்ன திடீர்னு பார்ட்னர்னு சின்னப் பையனைக் கொண்டு வந்து இறக்கியிருக்கீங்க உங்க சைடுக்கும் ஒரு சின்னப் பொண்ணைக் காட்டறீங்க!''ன்னு ஒரு நம்பிக்கை யில்லாமப் பேசினார்.

டெக்ஸ்டைல் தொடர்பான நம்ம ஏற்றுமதிக்கெல்லாம் அவர்தான் சரக்கு சப்ளை. அது மட்டுமில்லப்பா! பணம் கூட முன்னே பின்னேன்னு அட்ஜஸ்ட் பண்ணி வாங்கிப் பாரு..'' என்றார் வருத்தம் தோய்ந்த தொனியில்.

''ம்..!'' என்று உள்வாங்கிக் கொண்ட உமாசங்கர்.

''சரிங்க. பெரியப்பா! போனதை விடுங்க. இனி என்ன செய்யறதுன்னு பார்க்கலாம்.'' என்றான் ஓரிரு வினாடிகள் யோசித்தான். பிறகு ஏதோ கண்டு பிடித்தவன் போல.

''எங்க பெரியப்பா! இன்னைக்கு நைட்டா ஊருக்குப் போறார்?'' என்றான்.

''இல்லப்பா! நாளைக்கு மத்தியானம்தான்'' என்றார்.



''இப்ப எங்கே தங்கியிருக்கார்?'' என்றான்.

''யாரோ சொந்தக்காரங்க வீட்லயாம். அட்ரஸ் கூடக் கொடுத்தார்'' என்றார் ஞானமுத்து.

உடனே உமாசங்கர் உற்சாகமானான்.

''பெரியப்பா! விட்ராதீங்க! அமுக்குங்க! நைட் டின் னருக்கு நம்ம வீட்டுக்குக் கூப்பிடுங்க. நான் இப்பக் கிளம்பி வந்தர்றேன். கவலைப்பட வேண்டாம்.. பெரி யப்பா! மஸ்கா போட்டர்லாம்'' என்றான்.

உமாசங்கரின் உற்சாகம் ஞானமுத்துவுக்கும் தொற்றிக் கொண்டது.

''சரிப்பா! சரிப்பா!'' என்றார்.

''எட்டு மணிக்கு ஃபிக்ஸ் பண்ணிடுங்க. நான் ஏழு மணிக்கு அங்க இருப்பேன். நல்ல நார்த் இண்டியன் ஐட்டம்ஸ் பிரிப்பேர் பண்ணச் சொல்லுங்க..'' என்றான். சொன்னது போலவே வந்தான்.

ஏழு மணிக்கு வந்தவன் தனது பங்களாவுக்குப் போய் ஃப்ரெஷ் செய்து கொண்டு உற்சாகமாக வந்தான்.

யாழினியிடமும், ஞானமுத்துவிடமும் மூல்சந்த் என் னென்ன விவரங்கள் கேட்டார் என்று விவரம் கேட்டுக் கொண்டான். மனதில் வாங்கிக் கொண்டான்.

''ஏம்பா! பைல் ஏதாவது ஆபீஸ்க்குப் போய் எடுத் திட்டு வந்தியா?'' என்றார் ஞானமுத்து.

அவன் ஆட்காட்டி விரலால் தன் தலையைத் தொட் டுக் காண்பித்தான்.

''எல்லா விவரமும் இங்க இருக்கு. பெரியப்பா!'' என்றான்.

ஞானமுத்து புன்னகைத்தார் மெதுவாகத் திரும்பி யாழினியைப் பார்த்தார்.

''நீ இந்த அளவுக்கு இன்ட்ரஸ்ட் காட்ட மாட்டேங் கறியே..'' என்ற குற்றச்சாட்டு அதில் தொனித்தது.

யாழினி அதைப் புரிந்து கொண்டவள் போல் குழந் தையிடம் கவனம் செலுத்துவதை உமாசங்கர் சிந்தனை யோடு பார்த்தான்.

மூல்சந்த் ஏழு ஐம்பதுக்கு வந்தார். முகத்தில் உற்சாகம் பேச்சில் சரளம் எல்லாமும் இருந்தாலும் ஆள் பிஸினஸ் விஷயத்தில் கெட்டியாகவே இருந்தார்.

''இன்னா.. பேட்டா! நீதானா உமாசங்கர்?'' எப்படியிருக் காரு உங்க அப்பா.'' என்றார்.

''ஹி இஸ் வெரி பைன்'' என்றான் உமாசங்கர். நட்புடன் கை குலுக்கினான்.

''சாரி.. சார்! நீங்க வந்த நேரத்துல நான் இருக்க முடியல இந்தக் கன்ஸர்ன்ஸ் இல்லாம என்னோட சொந்தப் பொறுப்புக்கள் சிலது இருக்கு. அதுகளையும் பாக்க வேண்டி இருக்கு'' என்றான்.

''நோ.. பிராப்ளம். நானும் சடனாத்தானே வந்துச்சு..'' என்றார்.

சற்று நேரம் ஹால் சோபாவில் அமர்ந்து அளவளாவி னார்கள். அதற்குப் பிறகு அன்னபூரணி சாப்பிட அழைக்க எழுந்தார்கள்.

யாழினியை நோக்கி அனுதாபப் பார்வையை வீசிய மூல்சந்த் சொன்னார்.



''ஏன்.. முத்து சார்! கலா கொஞ்சம் கோஃபுல்லா இருந் திருக்கலாம். இப்பப் பாருங்க! அம்மாவுக்கு வர்த்தம்! பாப்பாவுக்கு வர்த்தம்.. என்னா.. செய்யறது! கடவுள் நம்பள்கு சில நேரம் அப்படிச் சோதிக்கிறான்'' என்றார்.

அதே நேரம்!

''அங்கிள்!'' என்று ஓடி வந்தான் அருண்காந்தி. ''ஹாய்!'' என்று அள்ளிக் கொண்டான் உமாசங்கர். அந்த உணவின்போது தன் மடியிலேயே அமர்த்திக் கொண் டான்.

''இவனுக்கும் ஒரு பிளேட் கொடுங்க!'' என்று மெல்ல ஸ்பூனால் அவனுக்கு ஊட்டி விட்டான்.

அருண்காந்தி மிகவும் அமைதியாக அமர்ந்து உண் பதைத் தாத்தாவும், பாட்டியும் ஆச்சரியமாகப் பார்த் தார்கள்.

''தம்பி! இவனைப் பாரேன்! யாழினிகிட்டே சாப் பிடறதுக்குள்ளே.. என்ன பாடு படுத்துவான் தெரியுமா? இப்ப உன்கிட்டே எப்படி ஒழுங்கா சாப்பிடறான்?'' என்றார் அன்னபூரணி.

''சரி.. இனிமே நம்ம கூடவே சாப்பிடட்டும் அங்க அனுப்பிடுங்க'' என்றான்.

பேச்சு பிஸினஸ் பக்கம் திரும்பியது. மூல்சந்த் தனது விமர்சனத்தை வெளிப்படையாகவே முன் வைத்தார்.

''இன்னா.. முத்து சார்! பாப்பாவுக்கு இன்னமும் மேட்டர்ஸெல்லாம் தெரியமாட்டேங்குது'' என்று.

ஞானமுத்து பதில் சொல்வதற்குள்ளாக உமாசங்கர் குறுக்கிட்டான்.

''சேட்ஜி! அவங்க இப்பத்தான் பிஸினஸ் பக்கம் எட்டிப் பாக்கறாங்க. அதுவும் மாமாவோட வற்புறுத்த லுக்காக. இன்னும் இது சம்பந்தமான விஷயங்களை யெல்லாம் நான் அவங்களுக்கு பிரீஃப் பண்ணலே. ஃபிட் இன் ஆக கொஞ்சம் டைம் எடுத்துக்கட்டும்னு நானும் வற்புறுத்தறதில்லே'' என்றான்.

''ஓ..!'' என்று மூல்சந்த் சமாதானமானார். சாப்பிடும் வேலை பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தது.

''பரவால்லே! தால் ரொம்ப டேஸ்ட்டி'' என்று மூல்சந்த் சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டார்.

''பேட்டி! நான் சொல்லுதுன்னு தப்பா நினைக்காதே. எனக்கு பத்து வருஷத்துக்கு முன்னாலே ஒரு டாட்டர் இறந்து போச்சு. நானும் ரொம்பக் கஷ்டப் பட்டது. ஆனா.. அப்படியே சரி பண்ணிருச்சு. ஆனா.. உனக்கு ஹஸ் பென்ட்..! பெரிய விஷயம்தான்! என்னா செய்றது! இந்த பேட்டாவுக்காக நீ சரியாகிக்க வேண்டியதுதான்'' என்றார்.

யாழினி கீழுதட்டைக் கடித்துக் கொண்டு தலையாட் டினாள்.

உமாசங்கர் சாதுர்யமாகப் பேச்சை பிஸினஸ்க்குத் திருப்பினான். அத்தனை பேச்சுக்கும் நடுவே அவன் குழந்தையை கீழிறக்கி விடவே இல்லை என்பதையும் அவனுடைய தேவைகளையும் கவனித்துக் கொண்டான் என்பதையும், அவன் இயல்பாகவே கேட்ட கேள்வி களுக்கு பதில் சொல்லிக் கொண்டு மூல்சந்தையும் சமாளித்தான் என்பதையும் யாழினி கூட ஒரு ஆச்சரியத் தோடு கவனித்துக் கொண்டாள்.



குழந்தையைத் தோளில் ஏந்திக் கொண்டே மூல் சந்தின் காரை வழியனுப்பி விட்டு உள்ளே வந்தார்கள்.

ஞானமுத்துவின் முகத்திலும் திருப்தி மலர்ந்திருந்தது. ''என்ன.. பெரியப்பா! மத்தியானம் கொஞ்சம் வருத்தமாப் பேசினீகளே! இப்ப மனசு சமாதானமாச்சா?'' என்று சிரித் தான்.

''ஆமப்பா! நல்ல வேளையா நீ வந்தே! மனுஷன் திருப்தியாப் போறாரு'' என்றார்.

திரும்பவும் உள்ளே வந்தார்கள்.

''மாமா! கதை சொல்லுங்க!'' என்றான் குழந்தை.

''டேய்! கண்ணா! அங்கிள் ரொம்ப டயர்டா வந்திருக் காரு'' என்ற ஞானமுத்து தடுத்தபோது உமாசங்கர் குறுக்கிட்டான்.

''பரவால்லே! மாமா! இத பார் அருண். இப்ப அங்கிள் ஒரு சின்னக் கதை சொல்வேனாம். ஏன்னா அங்கிள்.. சேலத்துக்குக் கார்ல போயிட்டு வந்திருக்கேன். நாளைக்கு நம்ம வீட்டுக்கு வந்தீன்னா.. பெரிய கதை சொல்றேன். அப்புறம் கொஞ்ச நேரம் விளையாடலாம்'' என்றான்.

''ம்.. சரி..!'' என்று குழந்தை ஒத்துக் கொண்டான்.

வீட்டிற்கு முன்பாக இருந்த புல்வெளியில் குழந் தையைத் தோளில் சாய்த்துக் கொண்டு இந்தப்புறமும், அந்தப்புறமும் நடந்தபடி மெல்லிய குரலில் கதை சொன்னான். கதை கேட்டுக் கொண்டே குழந்தை உறங்கி விட்டான்.

யாழினியிடம் குழந்தையைக் கொடுத்து விட்டு விடை பெற்றுப் போனான்.

தங்கள் அறையில் வைத்து அன்னபூரணி கண்ணீருடன் கணவனிடம் சொன்னார்.

''ஏங்க! அந்த உமாசங்கர்.. குழந்தையைக் கொஞ்சுவதைப் பாத்தப்ப.. கலாதரோட ஞாபகம் வந்துச்சில்ல...'' என்றார்.

ஞானமுத்து கடுப்பாகச் சொன்னார். ''ஆமா! உன் பையன் இருந்தாலும் குழந்தையைக் கவனிக்கறதுக்கெல்லாம் அவனுக்கு நேரம் இருக்குமாக்கும்'' என்று.

அன்னபூரணி ஒன்றும் பேசவில்லை. அமைதியாகி விட்டார். தானும் கூட அப்படி பதில் சொல்லியிருக்க வேண்டாமோ என்று எண்ணிக் கொண்ட ஞானமுத்து பேச்சை மாற்றினார்.

அதே சமயம்!

தன் இடுப்பின் மேல் காலைப் போட்டுக் கொண்டு உறங்கிய குழந்தையின் முகம் பார்த்துப் படுத்திருந்த யாழினியின் கண்களிலும் கண்ணீர் நிறைந்திருந்தது. என்னதான் மகன் தன் ஜாடையில் இருந்தாலும் கலாதரிடம் இருந்த ஏதோ ஒன்று மகனது முகத்திலும் தெரியக் கண்டாள்.

''இவன் மட்டும் அவரைப் போல குணத்தில் இருந்து விடக்கூடாது'' என்று இறைவனை வேண்டிக் கொண்டாள்.

ஏதேதோ நினைவுகள் புரட்டிப் போட அவளும் உறங்க நேரமாகி விட்டது.

அடுத்த நாள் அலுவலகம் செல்லும்போது இலகுவான மனத்தோடுதான் போனாள். அதிலும் குழந்தையிடம்



உமாசங்கர் நடந்து கொண்ட விதம் பார்த்து சாதாரணமாகத்தான் இருப்பான் என்றுதான் நம்பினாள். அதனால்தான் அந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை!

அடுத்த நாள் அலுவலகம் நுழைந்ததுமே உமாசங்கரிடமிருந்து அழைப்பு!

போனாள்!

இறுக்கமான அவன் முகம் பார்த்தவுடனே வயிற்றுக்குள் ஏதோ செய்தது.

குரலை உயர்த்தாமல் ஆனால் அழுத்தமாகக் கேட்டான்.

''இல்லே! நீங்க மனசுல என்னதான் நினைச்சுகிட்டிருக்கீங்க..?'' என்று யாழினி அவனை வெறித்துப் பார்த்தாள்.

# 4

மென்று விழுங்கிக் கொண்டு நிற்கிற அவளைப் பார்த்த அந்தக் கணத்தில் அவனுக்குள்ளும் மென்மை தோன்றியதோ என்னமோ காட்டிக் கொள்ளவில்லை.

''நான் கேக்கிறது புரியலையா?'' என்றான்.

''புரியலை'' என்றாள்.

''பாருங்க.. யாழினி! நீங்க தொழில் பார்க்கணும்னு வந்தாச்சு. அப்புறம் விஷயங்களைத் தெரிஞ்சுக்கறதுல

ஆர்வம் காட்டணுமா வேண்டாமா?'' அவன் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றான். ''உட்காருங்க.. ப்ளீஸ்!'' என்றான்.

அமர்ந்தாள்.

''பாருங்க.. யாழினி! உங்களுக்கு வாழ்க்கையில பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கு. ஒத்துக்கறேன். ஆனா.. எப்ப அதுல இருந்து வெளிய வரப்போறீங்க? உங்க பையனுக்கு நீங்களாவது வேண்டாமா? போன விஷயங் களையே நினைச்சு, நினைச்சு உருகறதுனால என்ன நடக்கும்? எதுவும் மாறாது!'' அவன் குரலில் தெரிந்த கடு மையைக் கண்டு கொஞ்சம் திகைத்தவாறே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் யாழினி.

''சொல்லப் போனா.. இந்த மாதிரி ஒரு வாய்ப்பு உங்களுக்கு ஒரு நல்ல விஷயம். இதுல ஆழ்ந்து போயிட்டீங்கன்னா.. உங்களோட சொந்த சோகங்களை மறக்கலாம். வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் இருக்கிற மாதிரித் தெரியும்'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

''நான் சொல்றது புரியுதா?'' என்றான்.

அவள் இப்போது நேராக அவனைப் பார்த்தாள்.

''சார்! என்னோட பர்ஸனல் விஷயங்களை விட்டு டுங்க! வொர்க் சம்பந்தமா ஏதாவது விமர்சனம் இருந்தாச் சொல்லுங்க..'' என்றாள்.

உமாசங்கருக்கு ஏனோ பொட்டில் அறைந்த மாதிரி இருந்தது. உள்ளே தோன்றிய எரிச்சலை அடக்கிக் கொள்வதற்குள் அரும்பாடு பட்டான். அமர்த்தலான குரலில் சொன்னான்.



''பின்னே? வேற எதை சொல்லிகிட்டிருக்கேன்னு நினைக்கறீங்க! நேத்து நமக்கு முக்கியமான ஒரு கிளையன்ட் வந்திருக்காரு. அவரு கேக்கற விஷயங் களை உங்களால் குடுக்க முடியலேன்னா.. எப்படி? இதுக்காக நான் சேலத்துல இருந்து ஓடி வர வேண்டியதாப் போச்சு.''

''அந்த பைல்கள் உங்ககிட்டே இருந்துச்சே?''

''எந்த பைல்கள்?'' ''போன வாரமெல்லாம் ஒரு ஹாஃப் அன் அவர் வந்து உட்காருங்க.. விஷயம் சொல் லிடறேன்னு கூப்பிட்டுகிட்டிருந்தேனே.. அந்த பைல்.''

''ஓ..!''

''என்ன.. ஓ! இனிமேலாது இந்த ஆபீஸ்ல என்னென்ன விஷயங்கள் இருக்கு. என்னென்ன விஷயங்கள் நடக்கு துன்னு தெரிஞ்சுக்குங்க'' என்றான்.

அவள் மௌனமாகத் தலையாட்டிக் கொண்டாள். அறையை விட்டு வெளியேறினாள்.

அந்தக் கணத்தில் உமாசங்கருக்குக் கொஞ்சம் பாவ மாகத்தான் இருந்தது. ஆனால் நன்றாக யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருந்தான். சுய சோகத்தில் ஆழ்ந்து அவள் தன்னை ஒன்றுக்கும் உதவாதவளாக ஆக்கிக் கொள்ளக் கூடாது என்ற கவலை தோன்றியிருந்தது. கொஞ்சம் கடுமையாக நடந்து கொண்டாவது அவளைத் தேற்ற வேண்டும் என்று நினைத்திருந்தான்.

அன்று பிற்பகல் வரை யாழினி அவனிடம் அமர்ந்து பல விஷயங்களைக் கேட்டுக் கொண்டாள். ஆனால் மிகக் கவனமாகத் தொழில் தவிர வேறு விஷயங்களை

அவனிடம் பேசவில்லை. அவனும் புரிந்து கொள்ளாதவன் போலவே இருந்தான். ஆனால் அன்று பிற்பகல் புறப்படுவதற்கு முன்பாக யாழினி தன் அறைக்கு வந்து பேசிய வார்த்தைகளைத்தான் அவன் சற்றும் எதிர் பார்க்கவில்லை.

புறப்படுவதற்கு முன்பு வழக்கம் போல ''நான் கிளம்பறேன்.. சார்!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்புவாள் என்றுதான் நினைத்தாள் ஆனால் அவள்.

''நான் உங்ககிட்டே பேசணும்!'' என்று அமர்ந்தாள்.

உமாசங்கர் நிமிர்ந்து அமர்ந்தான். ''சொல்லுங்க'' என்றான்.

சொன்னாள்.

''எனக்குப் பிடிக்கலே!'' என்றாள்.

''என்ன பிடிக்கலே..!'' என்றான் உமாசங்கர்.

''சார்! இந்தத் தொழில்கள்ல எனக்கு ஆர்வம் இல்லே! நான் மாமாகிட்டே சொன்னேன். மாமா ஒத்துக்க மாட்டேங்கறாரு!'' என்றாள்.

''ஓ..!'' என்றான். பிறகு சொன்னான்.

''அப்ப நான் வந்ததும் பிடிக்கலே.. இல்லே..!'' என்றான்.

அவள் அவனைத் தீர்க்கமாகப் பார்த்தாள். பிறகு,

''ஆமா..!'' என்றாள்.

அவன் முகத்தில் எந்த பாவமும் காட்டாமல் தொடர்ந்து பார்த்தான். பிறகு சொன்னான்.

''ஓ.. கே..! எனக்குப் புரிஞ்சுது! ஆனா.. எடுத்துகிட்ட எந்தப் பொறுப்பில இருந்தும் விலகிப் போறது எனக்கு



வழக்கமில்லே! உங்களுக்கு வரப் பிடிக்கலேன்னா.. நீங்கதான் உங்க மாமனாரைக் கன்வின்ஸ் செய்யணும்'' என்றான்.

அவள் மறுபடியும் உதட்டைக் கடித்தாள். அவன் கைகளில் பேனாவை உருட்டிக் கொண்டே சொன்னான்.

''ஆனா.. நான் உங்க இடத்திலே இருந்தா இப்படி நடந்துக்க மாட்டேன். இந்த ஒரு சாலன்ஜா எடுத்துகிட்டுச் செய்வேன்'' என்றான்.

''தாங்க்ஸ்.. ஃபார் தி அட்வைஸ்..!'' என்றாள்.

அவன் தோளைக் குலுக்கிக் கொண்டான்.

''யாழினி! உங்களுக்குப் பிடிக்கலேங்கறதுக்காக நான் எதையும் மாத்த முடியாது. நீங்க உங்க மாமனார்கிட்டே பேசுங்க!'' என்றான்.

அவள் ''சரி நான் கிளம்பறேன்'' என்று வெட்டிக் கொண்டு கிளம்பினாள்.

காரை ஓட்டும்போது யாழினியின் கண்களில் கரகர வென்று கண்ணீர் வந்தது.

'இப்படிக் கல்லுப் பிள்ளையார் மாதிரி ஒருத்தர் கிட்டே வேலை செய்ய நேர்ந்ததே' என்ற எண்ணம் தோன்றியவுடனே பலவீனப்பட்ட மனதில் கடந்த கால நினைவுகள் சோகங்கள் எல்லாம் அலையலையாய் எழுந்தன.

நல்லவேளையாக ஏ.சி. கார் என்பதாலும் கதவுகள் மூடியே இருக்கும் என்பதால் அவள் அழுவது வெளியே தெரியப் போவது இல்லையென்றாலும் கண்களின் சிவப்பும் வீக்கமும் இருக்கத்தான் செய்தது.

அவள் இறங்கிச் செல்லும்போது கண்களையும் மூக்கையும் துடைத்தவாறு இறங்கிப் போனாள்.

மாமனாரும் அப்போதுதான் பண்ணைக்குப் போய் வந்தவர் ஹால் சோபாவில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்.

''வந்துட்டியாம்மா?'' என்று மலர்ச்சியாகப் பேசியவாறு அவள் முகம் பார்த்தவர் ஒரு கணம் துணுக்குற்றுப் போனார்.

''என்னம்மா?'' என்றார்.

''ஒண்ணும் இல்ல மாமா. தலைவலி!'' என்று சொல்லிவிட்டுப் போகிற மருமகளைச் சிந்தனையுடன் பார்த்தார்.

உடனே செல்போனை எடுத்தார். உமாசங்கருக்குத் தொடர்பு கொண்டார்.

சற்று நேரம் உமாசங்கர் பேசுவதைக் கேட்டவர் நெற்றியில் முடிச்சுக்கள் விழ போனை ஆப் செய்தார்.

* * *

உமாசங்கர் உணவு முடித்து விட்டுக் கொஞ்ச நேரம் அந்தப் பேச்சு வார்த்தை அறையில் ஓய்வெடுப்பான். அன்றும் அதே போல ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான்.

மனத்தில் சிந்தனைகள் மட்டும் ஓடிக் கொண்டேயிருந்தது.

'தன்னையே முழுத் தொழில்களையும் வாங்கிக் கொள்ளச் சொல்கிறாள் போலும் யாழினி' என்று தோன்றியது. அதே சமயம் ஞானமுத்துக்கு அந்த மாதிரி விருப்பம் எல்லாம் இல்லையென்று தோன்றியது.



ஞானமுத்துவுக்கு தொழில்களைப் பார்த்துக் கொள்கிற அளவுக்கு மருமகளைத் தயார் செய்ய வேண்டும். தொழில்களைக் காப்பாற்றி பேரனுக்கு சேருமாறு செய்ய வேண்டும் என்று நினைப்புதான். ஆனால் அதே சமயம் யாழினியின் துச்சத்தையும் அவர் புரிந்து கொள்ள வேண்டுமல்லவா?

கணவன் வேலை செய்த இடத்துக்கு அனுப்பி வைத்தால் அந்த இளம் பெண்ணுக்குக் கணவனின் நினைவு தொடர்ந்து வருமல்லவா? பெரியப்பா ஏன் இதை நினைக்க மறுக்கிறார் என்று கோபம் வந்தது. ஆனால் அதே சமயம் நடந்து விட்ட விஷயங்களையே நினைத்துக் கொண்டு வருத்தப்பட்டிருப்பதைக் காட்டிலும் இது மாதிரி ஏதேனும் விஷயங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டால் மன அமைதியாவது கிட்டும் என்பதும் அவனுக்குப் புரிந்தது. அதனால்தான் நேற்றெல்லாம் யோசித்து இன்றைக்கு இந்த மாதிரி நடந்து கொண்டான்.

சோகத்தையே வளர விடுவதால் ஆகப் போவதென்ன என்று அவர் கேட்டாரு. அதனாலேயே கோபமாகப் பேசினான். அது மட்டுமல்லாமல் ஞானமுத்துவிடம் அதையே சொல்லியிருந்தான்.

''பெரியப்பா யாழினிகிட்டே கோபமாப் பேசியிருக்கேன். ஏன்னா.. யாழினி இந்த சோகச் சூழல்லேயிருந்து வெளியே வரணும். எல்லாரும் அனுதாபத்தோடவே நடத்திகிட்டிருந்தோம்ன்னா.. அதுலயே ஒரு சுகம் கண்டு போகும். தன்னிரக்கத்தாலயும் சோகஉணர்வாலயும் எதுவும் ஆயிடப் போறதில்லே. நீங்களும் அவங்ககிட்டே பேசுங்க.. கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்டாவே பேசுங்க'' என்றான்.

ஞானமுத்து அதை ஒத்துக் கொண்டார். யாழினியை நினைத்தால் ஒரு பக்கம் பாவமாக இருந்தது. நாம் இப்படி தொல்லை கொடுக்கிறோமே என்ற வருத்தம் தோன்றியது. ஆனால் என்ன செய்ய முடியும்? புண்ணுக்கு வைத்தியம் செய்ய வேண்டுமென்றால் ரணசிகிச்சை செய்துதானே ஆக வேண்டும்? அதுவும் புரையோடிப் போகுமுன்னே செய்ய வேண்டாமா? என்று எண்ணிக் கொண்டான்.

மனதைத் தெளிவாக்கிக் கொண்டான்.

அன்று மாலை!

அலுவலகத்திலிருந்து சீக்கிரமாகவே புறப்பட்டு விட்டான். நேராக ஞானமுத்துவின் வீட்டுக்குப் போனான்.

பெரியப்பா!

''இன்னைக்கு நைட் டிபன் உங்க வீட்ல'' என்றான்.

''நல்லதுப்பா..!'' என்றார்.

இரண்டு பேருமாகக் கொஞ்ச தூரம் நடந்து விட்டு வந்தார்கள்.

''தம்பி! கொஞ்சம் பொறுமையாகப் போலாம்பா! யாழினி ரொம்பக் கஷ்டப்பட்டிருக்குப்பா..'' என்றார் ஞானமுத்து வருத்தம் தோய்ந்த குரலில்.

''பெரியப்பா! அது எனக்குப் புரியுது. ஆனா.. இனிமே பெரிய பொறுப்புக்கள் எல்லாம் இருக்கு. அதையெல்லாம் சந்திக்கணும். குழந்தையை உருப்படியாகக் கொண்டு வரணும். அதுக்காக மென்டலா அவங்க தைரியத்தை வளர்த்தே ஆகணும். பெரியப்பா..'' என்றான் அதே உறுதியுடன்.



ஞானமுத்து பெருமூச்சு விட்டார். தொண்டைக் குழி வரைக்கும் அடைப்பு மாதிரி விஷயங்கள் அவர் மனதிலும் இருந்தது. ஆனால் அதையெல்லாம் உமாசங்கரிடம் பகிர்ந்து கொள்ள முடியாத வேதனையில் அவர் மனது தவித்தது.

''தம்பி! நான் சில நேரத்துல நினைக்கறதுண்டு. நமக்கு ஒரு பொண்ணிருந்து அதுக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டா.. இப்படிப் பாத்துகிட்டிருப்பமான்னு.. ஆனா.. இந்தக் குழந்தை இருக்கே! சில நேரங்கள்ல குழந்தை பிறந்திருக்க வேண்டாமேன்னு கூட நினைப்பேன்'' என்றார்.

உண்மையாகவே உமாசங்கர் அவரை ஆச்சரியமாகப் பார்த்தான்.

''பெரியப்பா! உண்மையிலேயே உங்க மனசு விசாலமான மனசு..'' என்றான்.

''என்னத்தைப்பா.. விசாலம்! கையைக் கட்டிகிட்டு எல்லாத்தையும் வேடிக்கை பாக்க வேண்டியிருக்கு..'' என்றார்.

''கவலைப்படாதீங்க.. பெரியப்பா! என்னால உங்களுக்கு எவ்வளவு ஹெல்ப் பண்ண முடியுமோ பண்றேன். நான் கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்டா நடந்தாத்தான் யாழினியை இந்த மனச்சோர்வுல இருந்து வெளிய கொண்டு வர முடியும். நீங்க கொஞ்சம் மென்மையாப் பேசுங்க..'' என்றான்.

திரும்பி வரும்போது ஞானமுத்து அவனது இரு கைகளையும் தன் கையால் பிடித்துக் கொண்டார்.

"தம்பி! உண்மையாவே நீ இருக்கறது எனக்கு யானை பலம் வந்த மாதிரி இருக்கு.." என்றார்.

அவனும் கொஞ்சம் நெகிழ்ந்து போனான்.

"கவலைப்படாதீங்க பெரியப்பா!" என்று மேலும் ஆறுதல் சொன்னான்.

யாழினியிடம் வேண்டுமென்றே தானாகப் பேசினான். அலுவலகத்தில் அப்படியொரு விஷயம் நடக்காதது போலவே இயல்பாகப் பேசினான். முதலில் தயங்கினாள் மறுபடியும் இயல்பாகவே பேசினாள்.

குழந்தை வழக்கம் போல அவன் மடியில் தொற்றிக் கொண்டான்.

"அங்கிள்! சின்ட்ரெல்லா கதை சொல்லுங்க.." என்று கேட்டான் குழந்தை.

"உனக்கு சின்ட்ரெல்லா கதை தெரியுமா?" என்றான்.

"அம்மா.. சொல்லுங்க!" என்றான்.

உமாசங்கர் குழந்தையின் கன்னத்தில் அழுத்த முத்த மிட்டான்.

"நான் உனக்கு வேற மாதிரி கதை சொல்றேன். நல்லா போல்டா.. சண்டை போடற வீரர்களோட கதை! விக்ர மாதித்தன் - பீமன் கதையெல்லாம் சொல்றேன்" என் றான்.

"ஹை" என்று அவன் மடியில் குதித்தான் குழந்தை.

"டே..! டேய்! வலிக்குதுடா.. பயலே! இந்தக் குதி குதிக்கறே..!" என்று சிரித்தான் உமாசங்கர்.

"எப்ப சொல்லுவீங்க!"



"ம் இப்பவே சொல்வேனா? நீ தினமும் அங்கிள் வீட்டுக்கு வா.. நான் கதை சொல்றேன்" என்றான்.

விடைபெற்றுச் சென்றவன் அன்றைக்குச் சற்று நேரம் மொட்டை மாடியில் உலாவலாம் என்று வெளியே வந் தான்.

அப்போதுதான் அந்தக் காட்சியைக் கண்டான்.

## 5

இரவு உணவும் ஞானமுத்துவின் வீட்டிலேயே முடித்து விட்டதால் தனது அறைக்கு வந்தவுடன் கொஞ் சம் ரிலாக்ஸ்டாக அமர்ந்தான்.

மாடியில் ஒரு அறை இருந்தது. அந்த அறையை ஒழுங்கு படுத்தினால் ஆபீஸ் அறை போல் வைத்துக் கொள்ளலாமே என்று யோசித்தான். அறை கம்ப்யூட்டர் வைத்துக் கொள்வதற்கு வசதியாக இருந்தது மட்டுமல் லாமல் பக்கவாட்டில் ஒரு பால்கனியும் மொட்டை மாடியும் இருந்தது.

கொஞ்ச நேரம் அங்கே நடப்பதற்கும் வசதியாக இருக்கும் என்று தோன்றியது. போய்ப் பார்க்கலாம் என்று நினைக்கும்போதே அப்பாவிடமிருந்து போன் வந்தது.

"அப்பா! சொல்லுங்கப்பா!" என்று பேசிக் கொண்டே எழுந்து போனான்.

அன்றைய நடப்புக்களையும் அலுவலகத்தில் நடந்த விஷயங்களையும் சொன்னான். பேச்சினூடே தான் யாழினியிடம் கோபித்துக் கொண்டதையும் அதற்கான காரணங்களையும் சொன்னான்.

அப்பா அமைதியாக உள்வாங்கிக் கொண்டார். பிறகு சொன்னார்.

"தம்பி! சின்ன வயசுப் பொண்ணு. ரொம்பக் கடுமையா நடந்துக்காதே! நான் உன்னை அங்கே அனுப்பும்போது இந்தப் பிரச்சினையைப் பத்தி யோசிக்கலை. ஆனா தெரிஞ்சோ.. தெரியாமலோ காலை வச்சாச்சு. இனிமே அதைப் பத்தி யோசிச்சுப் பிரயோஜனமில்லை! எதுக்கும் பாத்து நடந்துக்க! மனசுல சங்கடத்தோட இருக்கும்போல இருக்கு" என்றார்.

"சரிப்பா!" என்றான்.

அவனுக்கும் ஒரு மாதிரியாகிப் போனது. "என்னடா.. இது! ஆளாளுக்கு அந்தப் பெண்ணின் மீதே அனுதாபம் வைத்துப் பேசுகிறார்கள். ஞானமுத்துப் பெரியப்பாவாவது பரவாயில்லை போல இருக்கிறது. அப்பா.. இப்படி யோசிக்கிறார்" என்று எண்ணிக் கொண்டான்.

மெதுவாக உலா வருவது போல நடந்து கொண்டிருந்தவன் இயல்பாக வலப்புறம் திரும்பிப் பார்த்தான்.

நேரம் அப்போது எட்டரை மணியிருக்கும்! நேற்றோ முன் தினமோ பௌர்ணமி இருந்திருக்க வேண்டும். நிலவின் தண்ணொளி எங்கும் பரவிக் கிடந்தது.

இரவு நேரம் அதிகக் குளிரில்லாமல் இனிமையாக இருந்தது. அந்த அழகுச் சூழ்நிலையில் அவனது பங்களாவுக்கு நேர் பின்னே இந்தத் தோட்டத்தில் இருந்து



பவழமல்லியின் மணம் மேல் நோக்கிக் கிளம்பி அவன் நாசியைத் தீண்டியது.

வெகு சுகமாக இருந்தது. இலேசாகப் புன்னகைத்துக் கொண்டே பார்த்தான்.

யாழினி சுடிதாரில் இருந்தாள். அவளது நீளக் கூந்தல் தழையத் தொங்கிக் கொண்டிருந்தது. வெண்ணிறம் அதிகம் கலந்த அந்த உடையில் நிலவொளியின் பாய்ச்சலும் சேர்ந்து ஒரு விதமான தேவதைத் தோற்றத்தைக் கொடுத்தது.

குழந்தையுடன் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தாள். சற்றுத் தள்ளி அன்னபூரணி நின்று அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

குழந்தை கொஞ்சம் வேகமாக ஓட முயற்சிப்பதும், அவள் போக்குக் காட்டுவதும் அதற்குப் பிறகு குழந்தை நின்ற இடத்திலே உதட்டைப் பிதுக்குவதும், அவள் ஓடித் தட்டிக் கொஞ்சுவதும், தூக்கிக் கொள்வதுமான அந்தக் காட்சி பார்ப்பதற்கு இதமாக இருந்தது.

தெளிவாக அவள் முகம் தெரிந்தது. அது மட்டுமல்லாமல் கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்தாள். அவன் சட்டென்று ஒரு காரியம் செய்தான். தனது சூட்கேஸில் இருந்த பைனாகுலரை எடுத்துக் கொண்டு வந்து பார்த்தான்.

ஒன்று புரிந்தது!

அலுவலகத்திற்கு வரும்போது யாழினி தனது அழகும், எழிலும் தெரிந்து விடக் கூடாது என்பதற்காகவே அடக்கி வாசிக்கிறாள் என்று தோன்றியது. அது மட்டுமல்ல மனம் விட்டுச் சிரிப்பதுமில்லை என்பதும்

புரிந்தது. ஆனால் தன் உயிரே இவன்தான் என்பது போலக் குழந்தையிடம் தன் வாய் கொள்ளாச் சிரிப்பை அவள் உதிர்ப்பது பார்த்துக் கொஞ்சம் திகைத்துத்தான் போனான்.

சிந்தனையிலாழ்ந்தான்!

ஏதோ ஒரு விஷயம் யாழினியைத் தின்று கொண்டிருந்தது என்பது அவனுக்குப் புரிந்தது. நல்ல பெண்ணாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மாமனார், மாமியார் இவ்வளவு பிரியம் வைத்துப் பார்த்துக் கொள்வார்களா என்று தோன்றியது.

இரவு உறங்கப் போகும்போது கூட அதே சிந்தனையிலாழ்ந்தான்.

சட்டென்று அவனது இன்னொரு மனது சொன்னது.

'வேண்டாம்! யாழினியுடைய சொந்த விஷயங்களில் இறங்குவது உனக்குத் தேவையில்லாதது. நீ செய்ய வேண்டியதெல்லாம் நிறுவனத்தை எப்படி முன்னேற்றுவது என்பது பற்றிச் சிந்திப்பதுதான்' என்ற எண்ணம் வர தனது சிந்தனைப் போக்குக்கு முற்றுப் புள்ளி வைத்து உறங்கப் போனான்.

அந்த சமயத்தில் விலகியிருந்தால் பின்னால் அவன் வாழ்க்கையில் நேர்ந்த குழப்பங்களில் இருந்தெல்லாம் தப்பியிருக்கலாம் என்பது அப்போது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

* * *

தனது புத்தக அலமாரியில் இருந்து கண்ணில் பட்ட புத்தகத்தை உருவினாள் யாழினி.



தினமும் படுக்கைக்குச் செல்லு முன் ஒரு மணி நேரமாவது புத்தகங்கள் படிப்பாள்.

எட்டு மணி வாக்கில் குழந்தை உறங்கிவிடுவான். அதற்குப் பிறகு அவளுக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைக்கும்.

நாள் முழுவதும் ஒரு இரண்டு வயதுக் குழந்தையோடு ஓடி விளையாடிக் கவனித்து என்று அவளது பொழுதுகள் நன்றாகவே கழிந்தன. இரவில் படுக்கையில் படுக்கும் போது பெரும்பாலான நாட்கள் அடித்துப் போட்டாற் போல உறங்கி விடுவாள்.

யாழினி நடுத்தரத்துக்கும் கீழே உள்ள குடும்பத்தில் பிறந்தவள் அவளுடைய அப்பா ஒரு பிரைவேட் கம்பெனியில் கிளார்க்காக வேலை பார்த்தார். அவளுக்கும் கீழே இரண்டு தங்கைகள்.

அம்மாவின் திறமையில்தான் குடும்பம் கௌரவமாக ஓடியது. நல்ல வேளையாக குடியிருப்பதற்கு பூர்வீகச் சொத்தாக ஒரு ஓட்டு வீடு இருந்தது. அதனால் வீடு வீடாக மாறுவது என்ற அவஸ்தை இல்லாமல் இருந்தது. ஆனாலும் வாய்க்கும், கைக்குமான ஒரு வாழ்க்கைதான். ஆனால் பாக்கியம் யாழினியின் அம்மா குழந்தைகளைச் செம்மையாக வளர்த்திருந்தார்.

பெரிய அளவில் பிடிவாதம் பிடிக்க மாட்டார்கள். தின்பண்டங்களை வீட்டிலேயே செய்து கொடுத்து விடுவார். கௌரவமாக நடமாடுவார்கள். இனிமையான பேச்சு. நல்ல உழைப்பு என்று அக்கம் பக்கத்தவருக்கும் கூட அந்தக் குடும்பத்தைப் பிடிக்கும்.

பிற்பட்டோர் நலத்துறை மூலமாக கிடைத்த ஸ்காலர் ஷிப்பில் அவள் பட்டப் படிப்பை முடித்தாள். அவள் அப்பா காமேஸ்வரன் வேலை செய்த அலுவலகத்து முதலாளிக்கு நன்றாகப் படிக்கிற குழந்தைகளைக் கண்டால் பிடிக்கும். அதனால் அவரும் உதவி செய்தார்.

பட்டப் படிப்பில் பி.பி.எம். முடித்தாள் யாழினி. மேற்கொண்டு மேற்பட்டப் படிப்புப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் யாழினிக்கு இருந்தது. அதற்காக அப்பாவிடம் பேசிக் கொண்டிருக்கையில் தான் அது நிகழ்ந்தது.

அப்பாவின் முதலாளி ஒரு வீட்டுக்கு வந்தார். பாக்கியமும் காமேஸ்வரனும் விழுந்து விழுந்து உபசரித் தார்கள்.

''காமேஸ்வரன், உங்ககிட்டே பேசணும்'' என்று அழைத்துப் போனார்.

திரும்பி வரும்போது அப்பாவின் முகமெல்லாம் சிரிப்பாக இருந்தது.

''பாக்கியம். முதலாளிக்கு நம்ம குடும்பத்து மேலே ரொம்ப அக்கறை.. பாரேன்.. நல்ல வரன் கொண்டு வந்திருக்கார்..'' என்று மகிழ்வோடு பேசினார்.

யாழினிக்கு 'திக்'கென்றது.

''வரனா?'' ஐயோ! தான் இன்னும் மேலே படிக்க வேண்டுமே'' என்ற பரிதவிப்பு எழுந்தது.

அப்பாவிடம் சொன்னாள். அப்பா அவளைப் பரிவுடன் தன் அருகில் அமர்த்திக் கொண்டு சொன்னார்.

''பாரு.. தங்கம்! புரிஞ்சுக்க! நான் எப்படியோ உன்னைப் பட்டப் படிப்பு படிக்க வச்சுட்டேன்..! உனக்குக் கீழே



இன்னும் இரண்டு பொண்ணுங்க.. இருக்குதுங்க! என் னமோ.. நம்ம நல்ல காலம்.. முதலாளி ஒரு நல்ல வரனாக் கொண்டு வந்திருக்காரு! எங்கோ கல்யாண வீட்ல உன்னைப் பார்த்து மாப்பிள்ளை பையன் பெத்தவங் களுக்கு உன்னைப் பிடிச்சுப் போச்சாம்! ஒரே பையனாம். நிறைய சொத்துக்கள் இருக்காம். குடும்பத்துக்கு ஏத்த பொண்ணா.. இருந்தாப் போதும்கறாங்க. தயவு செய்து ஒத்துக்கம்மா! யார் கண்டது! நீ அங்கே போனதுக்கப்புறம்.. தபால்ல மேல் படிப்புப் படிக்கலாம்..! இல்லே..! அவங்க ஒருவேளை ஒத்துகிட்டா காலேஜ்ல போய்க் கூட படிக்கலாம்'' என்றார்.

மகள் ஒத்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலை அவர் முகத்தில் தெரிந்தது.

'அப்பா பாவம்! தனக்கென்று எதுவுமே வேண்டு மென்று நினைக்க மாட்டார். இருபது வருஷமாக அந்த ஒரே டி.வி.எஸ். 50யை வைத்துக் கொண்டு தனது தேவை கள் மிகவும் சுருக்கிக் கொண்டு குடும்பம், குடும்பம் என்றே உழைத்தவர்..' என்று எண்ணியவுடன் அவளுக்கு மறுப்பு சொல்லவே முடியவில்லை.

''சரி.. இந்த மட்டில் ஒரு டிகிரியாவது முடித்தோமே..!'' என்று எண்ணிக் கொண்டாள். கலாதரனின் பெற்றோர்கள் வந்தார்கள். ஞானமுத்துவின் அன்பான பேச்சும், அன்ன பூரணியின் இயல்பான பிரியமும் அவளுக்குள்ளே இருந்த அச்சத்தையெல்லாம் ஓட்டியது.

தெம்பானாள்!

திருமணத்தைப் பற்றிக் கனவுகள் எதுவும் இல்லை யென்றாலும்... திருமணத்திற்கான ஏற்பாடுகளில் பெரி தும் ஒத்துழைத்தாள்.

செலவெல்லாம் மாப்பிள்ளை வீட்டாருடையது என்றாலும் காமேஸ்வரன் அவளுக்குப் பதினைந்து பவுன் நகை போட்டார்.

கல்யாண செலவு மிச்சம் என்ற போதிலும் மாப்பிள்ளைக்கு நல்ல விதமான துணிகள் எடுத்தார்.

மாப்பிள்ளையின் போட்டோவைத்தான் காண்பித்தார்கள்.

''அப்பா.. அம்மா.. பாத்தாப் போதும்'' என்று சொல்லி விட்டாள்'' என்றார்கள்.

காமேஸ்வரனுக்கு ஒரே மகிழ்ச்சி.. ''ஆஹா! இந்தக் காலத்தில் யார் இப்படியெல்லாம் சொல்வார்கள்!'' என்று பூரித்துப் போனார்.

திருமணம் நன்றாகவே நடந்தது!

திருமணத்துக்கு முதல் நாள் தான் மாப்பிள்ளையைப் பார்த்தாள். ஆள் நன்றாகவே இருந்தான்.

பெரிதாக அவனைக் கண்டு கொள்ளவில்லை. மாப்பிள்ளை அழைப்பு முடிந்தது எல்லாரும் உறங்கச் சென்ற பின் அவளது தங்கை சந்திரிகா ஓடி வந்து அவள் காதில் கிசுகிசுத்தாள்.

''அக்கா! மாப்பிள்ளை ரூமுக்குப் போய் எட்டிப் பார்த்தேன். அங்கே ஒரே மஜாதான். மாப்பிள்ளையும், பிரண்டுக்கும்.. அங்கே தண்ணிப் பார்ட்டிதான்'' என்றாள்.

யாழினி திடுக்கிட்டுப் போனாள்! அப்பாவிடம் கேட்டாள்.



அப்பா அவளைத் தேற்றினார். ''அம்மா! பெரிய இடங்கல்ல.. இதெல்லாம் சகஜம்..! எங்க ஆபீஸலயே பார்ட்டி நடக்கும்போது இதெல்லாம்.. நடக்கும்! நான் போட மாட்டேன். ஆனா எல்லாரும் அப்படி இருப்பாங்களா!'' என்றார்.

''அப்பா!'' என்று கலவரமாகப் பார்த்தாள்.

''கொஞ்சம் கொஞ்சமா.. மாற்ற முயற்சி செய்யம்மா..'' என்றார்.

மறுநாள் காலை!

தங்கை உண்மைதான் சொன்னாளா.. என்று ஆச்சரியப் படுகிற அளவுக்கு அவன் 'ட்ரிம்'மாக வந்து நின்றபோது அவள் கொஞ்சம் தெளிந்து விட்டாள்.

அடுத்து வந்த இரண்டு மூன்று நாட்களும் அவன் மதுவைத் தொடவேயில்லை என்ற போது அவளுக்கும் தெளிவு ஏற்பட்டது.

''ஓஹோ..! எப்போதாவதுதான் இந்தப் பழக்கம் போலும்'' என்று எண்ணிக் கொண்டாள்.

திருமண வாழ்வை ஆவலுடன் எதிர்பார்த்தாள். அது மட்டுமல்லாமல் அவளுடன் நன்றாகவே பழகினான். சிரிக்கச் சிரிக்கப் பேசினான். அதனால் அவளும் மனதில் எந்த பாரமும் இல்லாமல் இருந்தாள்.

அதற்குப் பிறகு...!

பெருமூச்சுடன் கையில் இருந்த புத்தகத்தைப் பார்த்தாள்.

''பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்கள்.''

புரட்டினாள்!

"ஆம்பளைக் கூட்டம் ஆடுற ஆட்டம் அத்தனையும் பார்த்தோம் கேட்டோம். அதை ஆரம்பிச்சாத் தெரியும் திண்டாட்டம். (ஆம்பளை)" என்று தொடங்கியது பாடல்.

**"மனைவி இறந்தபின் வயதான தாத்தாவும்**

**மறுமணம் பண்ணிட உரிமையுண்டு.**

**இளம் மங்கையை முடிப்பதுண்டு.**

**கணவனை இழந்தவள் கட்டழகானாலும்**

**கடைசியில் சாக மட்டும் உரிமையுண்டு இதில்**

**கதைகளும் கட்டிவிடும் ஊர்திரண்டு"**

என்று போனது பாடல்.

எரிச்சலும், கசப்புமாய் புத்தகத்தை மூடினாள்.

இதுவரை அழுந்திக் கிடந்த உணர்வுகளெல்லாம் பொங்கிப் பிரவாகமெடுத்து அவளையே மூழ்கடிக்கச் செய்தன.

## 6

"தம்பி! சீக்கிரம் வா! உன்கிட்டே பேசணும்!" என்றார் அப்பா அம்பலவாணன்.

நேரம் பார்த்தான்!

காலை எட்டு மணி!

"அப்பா எதற்கு இந்த நேரத்தில் கூப்பிடுகிறார்?" என்று யோசனையில் ஆழ்ந்தான்.



"என்னப்பா.. விஷயம்?" என்றான்.

"தம்பி! ருத்ரா விஷயம்!" என்றார் அப்பா.

"ஓ..!" என்றான் உமாசங்கர்.

ஆமப்பா! தம்பி கலைவாணன் போன் பண்ணினான். வீட்டுல ஒரே கலாட்டாவாம். ஒரே மானக்கேடாப் போச்சாம். நீ வந்து மிரட்டினாத்தான் சரி வரும்கறான்."

"அப்பா..! இங்க நிறைய வேலையிருக்கு..!" "இருக்கட்டும்பா! எனக்குன்னு இருக்கறது ஒரே தம்பி! விவகாரம் அவன் ஒரே பொண்ணு சம்பந்தப்பட்ட விஷயம்.." என்றார். அப்பா வேண்டுதல் போல. அதற்கு மேல் உமாசங்கரால் மறுக்க முடியவில்லை.

"சரிப்பா! புறப்பட்டு வரேன்" என்றான்.

அன்றைக்கு சனிக்கிழமைதான். பிற்பகலுக்கு மேல் கிளம்பலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தான். அதற்குள் இப்படி ஒரு விவகாரம்.

ருத்ராவால் அவர்கள் குடும்பத்தில் ஒரே பிரச்சினைதான். இரண்டு குடும்பங்களுக்கும் அவளால் தலைக் குனிவுதான்.

இத்தனைக்கும் அவனைவிட வயதில் மிகவும் மூத்தவள்.

ஏழெட்டு வயது மூத்தவள் வசதியான குடும்பத்தில் பிறந்திருக்கிறாள். வசதியென்றால் உமாசங்கரின் குடும்பத்து அளவுக்கு வசதியில்லை.

உமாசங்கரின் அப்பா அம்பலவாணன் 'செல்ஃப் மேட்' என்பார்களே அதுபோல் சுயமாக முன்னேறினார்.

சேலத்துக்கு வரும்போது ஒரு சிறிய வேலையில் அமர்ந்தார். அதற்குப் பிறகு டெக்ஸ்டைல் தொழிலின்

நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு அதில் இறங்கினார். அதில் ஓரளவு வளர்ந்த பின் அதை மட்டுமே நம்பி யிருக்காமல் அதில் வரும் லாபத்தைக் கொண்டு வேறு விதங்களில் முதலீடு செய்தார். ரியல் எஸ்டேட்டும் கூட செய்தார்.

தன் பங்குக்குக் கல்யாண மண்டபம் ஒன்று கட்டினார். ஆனால் உமாசங்கர் பங்கு வர்த்தகத்தில் கெட்டிக்காரனாக இருந்தான். வந்த லாபத்திலேயே அவனும் ஒரு கல்யாண மண்டபம் கட்டினான்.

சொத்துக்களாக உருவாக்குவது போலவே எந்தக் கால கட்டத்தில் எந்தத் தொழிலைச் செய்தால் லாபம் கிடைக் குமோ அதைச் செய்து அம்பலவாணன் பெரிய அளவில் வளர்ந்தார்.

ஞானமுத்துவுடன் கூட்டாகக் கோவையில் பம்புசெட் கம்பெனி, முறுக்குக் கம்பிகள் தயாரிக்கும் கம்பெனி என்று இரண்டு கம்பெனிகள் இருந்தன. ஆனால் கலை வாணன் தொழிலில் ஆர்வம் காட்டவில்லை.

விவசாயத்தில் ஆர்வம் காட்டினார். தோப்பு. நல்ல நிலம் என்று கவனம் செலுத்தினார். நல்ல அரசு வேலை யில் இருந்ததால் சொத்துக்கள் வாங்கி வைத்திருந்தார்.

ஒரே மகள் ருத்ரா என்று பெயர். மலைப் பிரதேசத்தில் ஒரு கான்வென்ட்டில் படிக்க வைத்தார்.

விடுதி வாழ்க்கையிலேயே இருந்ததோடு, மிக வசதியான குடும்பத்து வாரிசுகளோடேயே பழகியதன் விளைவாகவோ என்னவோ அவளிடம் தகுதிக்கு மீறிய நினைப்பு இருந்தது. கலைவாணரும் ஒரு மிகப் பெரிய தவறு செய்தார்.



தங்கள் குடும்பத்தின் உண்மையான வசதி நிலை என்ன என்பதைத் தன் மகளுக்குத் தெளிவாகப் புரிய வைக்கத் தவறிவிட்டார்.

பொய்யான கற்பனையிலேயே அதுவும் கோடீஸ்வரர் மகள் என்ற நினைவிலேயே அவள் வளர்ந்தாள்.

''சரி.. படிப்பை முடித்து விட்டு வந்தால் உண்மை நிலவரத்தை அவளுக்குப் புரிய வைக்கலாம்'' என்று நினைத்தார்.

ருத்ரா கான்வென்ட் படிப்பு முடித்த பின்பு கல்லூரிப் படிப்புக்குப் போனாள். அப்போதும் விடுதியிலேயேதான் தங்கிப் படித்தாள்.

இளமை அவளுக்கு அபரிமிதமான அழகைக் கொட்டிக் கொடுத்திருந்தது. தன் அழகின் வலிமை அவளுக்குப் புரிந்தும் இருந்தது.

நுனி நாக்கு ஆங்கிலமும் ஒப்பனை முறைகளும், கோடீஸ்வர வீட்டுப் பெண்ணைப் போன்ற அவளது நடத்தையும் பெரிய செல்வந்தர் வீட்டுப் பையன்களும் அவளை நாடுவதற்குக் காரணமாக இருந்தது.

ருத்ராவுக்கு அப்படிப்பட்ட இளைஞனின் பழக்கம் மிகவும் பிடித்திருந்தது.

படிப்பை முடித்து விட்டு மகள் வருவாள் என்று அம்பல வாணன் காத்திருக்க மகள் வந்தாள். ஆனால் தனியாக அல்ல. துணையோடு வந்தாள்!

ஒரு செல்வந்தர் வீட்டுப் பையனைத் திருமணமே செய்து கொண்டு வந்து நின்றாள்.

''அப்பா! ஊருக்கு வந்துட்டா.. என் மனசு மாறிடு மோன்னு அவருக்கு பயம். அதான் கல்யாணமே

பண்ணிகிட்டோம். என்னைக் கல்யாணம் பண்ணிக்கற துக்கு அப்படி ஒரு போட்டி..'' என்று பெருமையாகச் சிரித்தாள்.

கலைவாணர் வருத்தத்துடன் தன் மனைவியைப் பார்த்தார். மனைவி காமாட்சி ஒரு விதமாகப் பேசி அவரைச் சமாதானப்படுத்தினார்.

''ஆனது ஆச்சு! ஊரறிய ஒரு ரிசப்ஷன் வச்சர்லாம்'' என்றார்.

ஒரு வழியாகச் சமாதானம் ஆனார். ''அப்பா! இந்தப் பெரிய இடம் நல்லாச் செலவு செஞ்சு ரிசப்ஷன் வைக் கணும்'' என்று ஆணையிட்டாள் ருத்ரா.

இப்போதுதான் கலைவாணர் தன் தகுதிக்கேற்ப மகளை வளர்க்காத தன் தவறு குறித்துப் புரிந்து கொண் டார். குறைந்த பட்சம் தன் தகுதிக்கு மீறிச் செலவு செய்து தான் உன்னைப் படிக்க வைக்கிறேன் என்பதையாவது அவளுக்குப் புரிய வைத்திருக்க வேண்டும்.

ருத்ராவின் திருமணம் நடந்தபோது உமாசங்கர் டீன் ஏஜில் இருந்தான். இப்போதும் கூட இந்திரஜித்தை அவனுக்கு நினைவு இருந்தது. மிக ஆடம்பரமாக நடந்த அந்த ரிசப்ஷனும் நினைவில் இருந்தது.

இந்திரஜித் மிகப் பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அதைப் புரிந்து கொண்டு கலைவாணரும் தன் சக்திக்கு மீறிச் செலவு செய்துதான் வரவேற்பை நடத்தினார். ஆனால் பட்ட பாடெல்லாம் வீணாகப் போயிற்று.

இந்திரஜித் குடும்பத்திற்கு ருத்ராவின் குடும்பம் நினைத்த அளவுக்கு வசதியான குடும்பம் அல்ல என்று



தெரிந்தவுடனே இளப்பாகிப் போனது. இந்திரஜித்துக்குக் கூட அது ஏமாற்றமே. தனது பங்காளிக் குடும்பங்களில் எல்லாம் மிகப் பெரிய இடங்களில் பெண் எடுத்திருக் கிறார்கள் என்று இந்திரஜித்தின் அப்பாவிற்கு மகன் மேல் கோபம்.

''அப்பா! பணமா.. முக்கியம்! நமக்குத்தான் வேணும் கற சொத்து இருக்கே! பார்க்க அழகா, கான்வென்ட்ல படிச்ச பொண்ணா இருக்காளே.. அது போதாதா?'' என்று தந்தையைச் சமாதானப்படுத்தினான். தந்தையும் ஏற்றுக் கொண்டார். ஆனால் அதற்குப் பிறகு அந்த வாழ்க்கையை காப்பாற்றிக் கொள்ள துர்கா எந்த முயற்சியும் எடுக்க வில்லை.

நிலைமையை மேலும் மேலும் சிக்கலாக்கிக் கொண் டாள். மாமியார், மாமனாரை மதிக்காதது மட்டுமல்லாமல் ''சுதந்திரம்.. தன்னுரிமை'' என்று இந்திரஜித்தோடும் ஒத்துப் போகவில்லை.

திடீரென்று ஒரு நாள் கலைவாணரின் முன்னால் வந்து நின்றாள்.

''அப்பா! எனக்கும் இந்தருக்கும் ஒத்துப் போகலை. நாங்க டைவர்ஸ் அப்ளை பண்ணிட்டோம்'' என்றாள்.

''என்னம்மா.. பிரச்னை!'' என்றார் கலைவாணர் அதிர்ந்து போய்.

''வீட்டைக் கவனிக்கணுமாம்! அடிக்கடி வெளியே போகக் கூடாதாம். இப்பவே குழந்தை பெத்துக்கணுமாம்'' என்றாள்.

கலைவாணர் ஆழ்ந்த வருத்தத்துடன் மனைவியைப் பார்த்தார். சகோதரரிடம் பகிர்ந்து கொண்டார்.

அம்பலவாணரும் கலைவாணருமாக இந்திரஜித்தின் குடும்பத்தாரை சந்தித்துப் பேசினார்கள். இந்திரஜித்தின் குடும்பத்தினர் பெரிய பட்டியலே போட்டார்கள்.

''எப்போதும் பார்ட்டி, ஷாப்பிங் என்று நேரம் செல வழிக்கிறாள்.''

''வீட்டில் யாருடனும் ஒத்துப் போவதில்லை.''

''காசை வீணாக்குகிறாள் என்று.''

இந்திரஜித்தோ அவர்களிடம் தனியாகப் பேசும்போது இன்னும் பல குற்றச் சாட்டுக்களைச் சொன்னான்.

''எப்போதும் பிற ஆண்களோடு ஒப்பிட்டு தன்னை மட்டம் தட்டுகிறாள்.''

''எப்போது வேண்டுமானாலும் கொத்திக் கொண்டு போக தன் அழகுக்கு எத்தனையோ பேர் தவம் கிடக் கிறார்கள்'' என்றெல்லாம் பேசுவதாகச் சொன்னான்.

அவன் மனத்துக்குக் காயம் தெளிவாகத் தெரிந்தது.

''அங்கிள்! நானும் எவ்வளவோ விட்டுக் கொடுத்துப் போறேன். எங்க வசதிக்கு உங்க வசதி குறைவானாலும் நாம மனசார விரும்பிட்டமேன்னு பல விஷயங்கள்ல விட்டுக் குடுத்தேன். இவ சரியா இருந்திருந்தா நான் தனிக் குடித்தனமாவது போயிருப்பேன். ஆனா.. இவளை நம்பித் தனிக்குடித்தனம் போக முடியாதுன்னு எனக்கே பயம். அருமையான வாழ்க்கையைக் குடுத்தேன். தானும் அதைக் காப்பாத்திகிட்டு அவளும் சந்தோஷமா இருக்க லாம். அவளுக்குப் புரியலே..'' என்றான் வருத்தத் தோடு.

''இந்தக் கல்யாணத்தைக் காப்பாத்த முடியாதா?'' என்று அம்பலவாணர் கவலையோடு கேட்க அவன்



கசப்புடன் புன்னகைத்தான். டைவர்ஸ் நோட்டீஸை எடுத்துப் போட்டான்.

''நான் நோட்டீஸ் அனுப்பல. அவதான் அனுப்பி யிருக்கா. இப்ப இது எங்க குடும்பத்துல ப்ரெஸ்டீஜ் இஷ்யூ ஆயிருச்சு..! என்னை என்ன பண்ணச் சொல் றீங்க!'' என்றான்.

''ஒரே ஒரு வாய்ப்புக் குடுங்க'' என்றார் கலைவாணர்.

''அங்கிள்! இந்த ஆறு மாசத்துல நான் உங்க டாட் டரைப் புரிஞ்சிட்ட அளவுக்கு நீங்க புரிஞ்சுக்கலேன்னு நினைக்கிறேன். இந்தக் கல்யாணம் வொர்க் அவுட் ஆகும்கற நம்பிக்கை எனக்கே போயிருச்சு...'' என்றான்.

அம்பலவாணருக்கு விஷயம் புரிந்து திரும்பி வரும் போது சொன்னார்.

''தம்பி! பெரிய தப்புப் பண்ணிட்டே! மகளை நீயே ஸ்பாயில் பண்ணி வச்சிருக்கே. எனக்கென்னவோ இனி மேலே மேலே அவ பிரச்சினைகள்தான் பண்ணுவான்னு தோணுது. எக்காரணத்தைக் கொண்டும் எந்த சொத்தை யும் அவ பேர்ல எழுதி வைக்காதே'' என்றார்.

அப்போது இந்த விஷயங்கள் எல்லாம் உமாசங்கர் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் இப்போது அவனுக்கு விஷயங்கள் முழுமையாகப் புரிந்து போனது.

ருத்ரா அதற்குப் பிறகு டைவர்ஸ் வாங்கியே தீருவேன் என்று முடிவாக நின்றாள்.

வணங்கினார்கள்.

கலைவாணர் முடிவாகச் சொல்லிவிட்டார். ''வீட்ல இரு! செலவுக்குன்னு ஒரு தொகை அலவன்ஸாக்

குடுக்கறேன். ஆனா.. சொத்தெல்லாம் எங்க காலத்துக்குப் பின்னாலதான்..'' என்று.

ருத்ரா அதற்குப் பிறகு ஏதோ ஒரு கல்லூரிக்கு வேலை செய்கிறேன் என்று போனாள்.

அடுத்த ஆண்டிலேயே வேறு ஒருவரைக் கல்யாணம் செய்கிறேன் என்று வந்து நின்றாள்.

அந்த இளைஞன் அவளைப் பார்த்த பார்வையிலேயே அவளது அழகில் மயங்கிக் கிடக்கிறான் என்று தெரிந்தது.

கலைவாணர் ''என்னமோ.. செய்! ஆனா.. அதிலயும் எங்களைக் கூப்பிடாதே. எங்ககிட்டே எந்த உதவியும் எதிர்பார்க்காதே'' என்று சொல்லி விட்டார்.

அந்த இளைஞன் அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளவேயில்லை. அவன் ஒரு அரசாங்க அலுவலகத்தில் வேலை பார்த்தானாம் பெயர் ரமேஷ் என்றார்கள்.

சம்பளத்தை விட கிம்பளம் அதிகம் இருக்கிற துறை என்றார்கள். சொந்தத்திலும் கொஞ்சம் வசதி என்றார்கள்.

ருத்ரா வீட்டை விட்டு வெளியேறினாள். அந்தத் திருமணம் இரண்டு ஆண்டுகள் நிலைத்திருந்தது. அதுவும் முறிந்து போனது.

''அவன் ரொம்பவும் சந்தேகப் படுகிறான்'' என்றாள் ருத்ரா.

ரமேஷோ வீட்டுக்கு வருகிற மேலதிகாரிகளிடம் அளவுக்கு மீறி இழைகிறாள் என்று வெளிப்படையாகவே குற்றம் சாட்டினான்.

கலைவாணருக்கும், காமாட்சிக்கும் தங்கள் மகள் குணம் தெரிந்திருந்ததனால் எதுவும் பேச முடியவில்லை.



''வயசுப் பொண்ணை வெளியே அனுப்பாதப்பா.. எப்படியாவது மேனேஜ் பண்ணு'' என்று. அம்பலவாணன் கூறிய அறிவுரை காரணமாக அவர்களும் பொறுமை காத்தார்கள்.

இந்த முறையும் சென்னையில் வேலை கிடைத்தது என்று போனாள். ஏதோ ரிசப்ஷனிஸ்ட் வேலை என்றார்கள்.

மறுபடியும் ஒரு இரண்டு வருடம் அமைதியாக ஓடியது.

''என்னடா.. மகளிடம் இருந்து சத்தத்தையே காணோம்'' என்று நினைக்கையில் சென்னையிலேயே யாரையோ கல்யாணம் செய்து கொண்டு குடித்தனம் நடத்துகிறாள் என்று தெரிய வந்தது.

பெற்றோர்கள் நொந்து போனார்கள். காரை ஓட்டிக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்திருந்த உமாசங்கர் எதிரே ஒரு லாரி வேகமாக வரவும் சுதாரித்துக் கொண்டு திரும்பினான்.

தன் ஒன்றுவிட்ட சகோதரியின் மேல் சென்றிருந்த சிந்தனையைத் திருப்பித் தெருவின் மேல் கவனம் செலுத்தினான்.

# 7

''அப்பா.. தம்பி! இது நாலாவது கல்யாணம். அந்தப் பையன் கண்டிப்பாத் தொடர்ந்து வாழறேன்னுதான்

சொல்றான். வேற ஆனா.. இவளுக்கு என்னென்னவோ பயம்! வயசும் வேற ஆகுதா? அந்த விஷயத்தையும் ஏத்துக்கற தைரியம் வர்லே.. போல இருக்கு.. எனக்கே ஒண்ணும் புரியலே. சொந்தக்காரங்களுக்கு நடுவிலே. இது பெரிய அவமானமா இருக்கு'' என்று வருத்தப் படுகிற அப்பாவை பாசத்துடன் பார்த்தான்.

''அப்பா! இப்பக் காலம் மாறிட்டிருக்கு. கல்யாணம் என் சொந்த விஷயம்னு.. இன்னைக்கு இளைஞர்கள் பேசறாங்க..'' என்றவுடன் அதிர்ந்து போய்ப் பார்க்கிற அப்பாவிடம் அவன் அவசரமாகச் சொன்னான்.

''இல்லப்பா! நான் கண்டிப்பா.. அப்படியெல்லாம் செய்ய மாட்டேன். என்னைப் பெத்து வளர்த்தவங்க நீங்க. அதனால.. உங்க சம்மதம் இல்லாம எதுவும் நடக்காது..'' என்றான்.

அப்பா நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி உள்ளூர ஒரு திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

''அது மட்டுமில்லப்பா..! பெரிய சிட்டீஸ்ல சேர்ந்து வாழறதெல்லாம்.. என்னென்னமோ நடக்குது! அக்காவைப் பொறுத்தவரை எல்லாத்தையும் வெளிப்படையாக செய்யறா! மேரேஜ பண்ணி டைவர்ஸ் வாங்கினது..'' என்றார்.

''அது சரி.. போ.. இப்படி ஒரு பெருமையா?'' என்றார் அப்பா.

''இல்லப்பா.. உள்ள விஷயத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்..'' என்றான்.

அம்பலவாணர் பெருமூச்சு விட்டார். உமாசங்கர் தந்தையைச் சிந்தனையோடு பார்த்தான்.



''அப்பா! நாம இதுல என்ன செய்யப் போறோம்?'' என்றான்.

''தெரியலை! போய்ப் பார்ப்போம். ருத்ரா என்னதான் சொல்றான்னு கேப்போம். அந்தப் பையன்கிட்டயும் பேசுவோம். பையன் நல்லவன்தான்னு தம்பி சொல்றான். எப்படியாவது இந்தக் கல்யாணத்தையாவது தக்க வைக்கப் பாப்போம்'' என்றான்.

''எத்தனை நாளைக்கு!'' என்று எண்ணிக் கொண்டான் உமாசங்கர். ஆனால் சொல்லவில்லை.

போனார்கள்!

ருத்ராவிடம் முதலில் தனியாகப் பேசினான். சண்டை போடப் போகிறாள். கத்தல் போடுவாள் என்று எதிர்பார்த்த தற்கு நேர் மாறாக அழுதாள்!

பொங்கிப் பொங்கி அழுதாள்!

''எனக்குன்னு யாருமே.. இல்லை!'' என்று தேம்பி னாள்.

உமாசங்கர் திகைத்துப் போனான்.

''அக்கா! நீ ஏன் அப்படி நினைக்கறே? விஷ்ணுசாரதி.. என்ன சொல்றாரு..! உனக்கு நான் இல்லே! எங்கப்பா... அம்மா.. இருக்காங்க..! சித்தப்பா.. சித்தி.. இருக்காங்க..!'' அப்புறம் என்ன?''

''இல்லை! எல்லாருமே என்னை ஏதோ விசித்திரப் பிராணியைப் போலப் பாக்கறாங்க.! உள்ளூர வெறுக்க றாங்க..'' என்றாள்.

உமாசங்கர் ஒரு பெருமூச்சு விட்டான்.

''அக்கா..! யாரும் உன்னை வெறுக்கலே! யார் வெறுத் தாலும்.. பெத்தவங்க.. உன்னை நிச்சயமா வெறுக்க

மாட்டாங்க! எல்லாருக்கும் உன்னைப் பத்திக் கவலை! வாழ்க்கையில நிம்மதியா நீ செட்டிலானா.. எல்லாரும் நிம்மதியா இருப்பாங்க! ஆனா.. உன் விஷயத்துல அது நடக்க மாட்டேகுது..! உன் பிரச்சினை என்ன? என்கிட்டே சொல்லு!'' ஒரு பிரதர்ன்னு நினைக்காம பிரண்டா நினைச்சு.. எல்லாத்தையும் சொல்லு..'' என்றான்.

''தெரியலே..! ஆனா விஷ்ணுசாரதியும் என்னை விட்டுட்டுப் போயிடுவான்னு எனக்கு பயமா இருக்கு.''

உமாசங்கர் கொஞ்சம் அதிர்ந்து போனான்.

''ஏன்.. ஏன்.. அப்படி நினைக்கறே!''

''ஏன்னா..! ஏன்னா!'' என்றவள் மெல்லிய குரலில் வேறெங்கோ பார்த்துக் கொண்டு சொன்னாள்.

''எனக்கு வயசாச்சு..! இனிமே என் அழகு.. குறைஞ்சிடும்..'' என்றாள்.

உமாசங்கர் உண்மையிலேயே திகைத்துப் போனான். ''அட.. ராமா!'' என்று தலையில் கையை வைத்துக் கொள்ளாத நிலைதான்.

ஆரம்பம்தான் கடினம்! தொட்டு விட்டதற்குப் பிறகு எல்லாவற்றையும் கொட்டுவது கடினமான விஷயமல்ல என்பது போல் எல்லாவற்றையும் கொட்டினாள் ருத்ரா.

''நான் தப்புப் பண்ணிட்டேன்! இந்தரோடவே இருந்திருக்கணும். அப்ப என் அழகுதான். என் சந்தோஷம்தான் முக்கியமாத் தெரிஞ்சுது. ஆனா.. ஆறு மாசம் கழிச்சு.. நான் இந்தர்கிட்டே போய்க் கேட்டேன். இந்தா அதுக்கு ''சாரி.. ருத்ரா.. உனக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பை நீ இழந்



துட்டே! இப்ப நான் என்னோட பெத்தவங்க பொறுப்பிலே என் வாழ்க்கையை விட்டுட்டேன்னு சொல்லிட்டான்'' என்றாள்.

உமாசங்கர் முகத்தில் இரக்கமே தெரிந்தது. ''ருத்ராக்கா.. அப்ப எனக்கு விவரம் தெரியாது. இருந்திருந்தா.. எப்படியாவது ''பாட்ச் அப்'' பண்ணியிருப்பேன். அது முடிஞ்சு போன விஷயம். முடிந்து போன எந்த விஷயத்தையும் இனி நடைமுறைக்குக் கொண்டு வர முடியாது'' என்றான்.

''நானும் அப்படித்தான் நினைச்சேன். அதனால்தான் நான் ரீ மேரேஜ் பண்ணினேன். ஆனா.. அவங்க ரெண்டு பேருமே.. எப்பப்பாரு.. என்னைக் கண்காணிச்சுகிட்டே இருந்தாங்க! நான் சாதாரணமா.. யார்கிட்டயாவது சிரிச்சுப் பேசினாக்கூட சந்தேகப்பட்டாங்க! எனக்கு வாழ்க்கையே நரகமாய் போயிருச்சு..'' என்றாள்.

உமாசங்கர் மெல்லிய குரலில் கேட்டான்.

''அக்கா! ஒருவேளை ஏதாவது நல்ல காரணத்துக்காகக் கூட அவங்க உன்னைப் ப்ரொட்டக்ட்.. பண்ணணும்னு நினைச்சிருக்கலாம். உன் அழகாலேயே கூட நீ ஆபத்துக்களை வரவழைச்சுக்கலாம்கறது அவர்களோட கவலையா இருந்திருக்கலாம்'' என்றான்.

''இருக்குலாமோ!'' என்ற எண்ணம் அவள் மனத்தில் தோன்றியது. போலும்..! புதிதாக ஏதோ புரிந்து கொண்டவள் போல அவனைப் பார்த்தாள்.

''அக்கா! வாழ்க்கைங்கறது நம்பிக்கை சார்ந்த விஷயம்! எது அழகுங்கறது.. நம்ம மனசுல நாம உருவகிக்கற விஷயம் சிவப்பு அழகு. கறுப்பு அழகில்லேன்னு யாரு

சொன்னா அப்படியெல்லாம்.. இல்லே! உன் அழகு பிரச்சினையே இல்லே! நீ அழகா இருக்கேன்னு எப்ப வுமே நினைச்சுகிட்டே இருந்திருக்கியே அதுதான்.. பிரச்சினை..! அழகை நம்பியே நீ உன் வாழ்க்கையை அமைச்சுகிட்டதன்னாலயோ.. என்னமோ.. உனக்கு இப்ப.. ஒரு பீலிங் ஆப் இன் செக்யூரிட்டி வந்துருச்சு..'' என்றான்.

ருத்ரா இப்போது தம்பியை புது மரியாதையுடன் பார்த்தாள்.

''தம்பி..! இப்படியெல்லாம் யோசிக்கற..!'' என்றாள் ஆச்சரியமாக.

''ஆமா! பெரிய தொழில் நிர்வாகி ஆயிட்டேன் இல்ல!'' என்றான் குறுஞ்சிரிப்புடன்.

''அக்கா..! அழகுங்கறது உடல் சம்பந்தப்பட்ட விஷயம்! தோற்றம் சம்பந்தப்பட்ட விஷயம்! இப்ப எதுக்காக.. உனக்கு விஷ்ணுசாரதி மேல கோபம்.''

''கோபம் இல்லே! அவ நம்பிக்கை!''

''ஏன்?''

''ஏனா? என்னோட அழகு குறைய ஆரம்பிச்சிருச் சேன்னு ஒரு பயம்! விட்டுட்டுப் போயிருவாரோங்கற பயம்! அது மட்டுமில்ல..!'' என்று தயங்கி நிறுத்தினாள்.

''ம்..!'' என்றான் உமாசங்கர்.

''குழந்தை வேணுங்கறார்..!'' என்றாள்.

உமாசங்கர்.. விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.

''அக்கா..! அக்கா...!'' என்றான்.

''என்ன?'' என்றாள் கோபமாக.





''உன்னை விட்டுப் போறதுக்காக அவரு குழந்தை கேக்கலே..! உன்னோட உறவை இறுக்கப் பிடிச்சுக்கறதுக் காக.. தான் கேக்கறார்'' என்றான்.

ருத்ரா கொஞ்ச நேரம் மௌனத்தில் ஆழ்ந்து விட்டாள்.

''ஆமக்கா..! குழந்தைங்கறது அடுத்த ஸ்டெப்..!'' என்றான்.

ருத்ராவின் மனசில் தான் சொன்ன விஷயங்கள் இறங்க ஆரம்பித்து விட்டது என்று புரிந்தது.

தொடர்ந்து சொன்னான்.

''அக்கா! எனக்குத் தெரிஞ்சு ரிடையர் ஆனப்புறம் ஒருத்தர் கல்யாணம் பண்ணினாரு! என் பிரண்டோட மாமா! இதுல பியூட்டி என்ன தெரியுமா? அந்தம்மா நல்ல கறுப்பு..! குண்டு கூட! வயசுக் காலத்துல விருப்பப் பட்டாங்களாம்! ஆனா.. அவரோட குடும்பப் பொறுப்புக் காரணமா கல்யாணம் பண்ண முடியலே! அந்தம்மாவும் வேற கல்யாணம் பண்ணிக்கலே! கடைசியில ரிடைய ரானதுக்கப்புறம் பண்ணினாராம்! திருமணம்கற உறவுல.. மத்த எல்லாத்தைக் காட்டிலும் தோழமைதான்.. முக்கியம்! ப்ரண்ட்ஷிப்!'' என்றான்.

அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டாள்.

''அக்கா! நான் சாரதிகிட்டே பேசறேன்!'' நீ நினைக்கற அளவுக்குப் பெரிய பிரச்சினைகளோ, பிரிந்து போற அளவிற்குப் பெரிய விஷயமோ எதுவும் இருக்கற மாதிரித் தெரியலே..! புரியுதா?'' என்றான்.

விஷ்ணு சாரதியிடம் பேசினான். அப்போதுதான் ருத்ராவைப் பற்றிய வேறு சில விஷயங்களும் தெரிய வந்தன.

யோசனையில் ஆழ்ந்தான்.

* * *

''இவ்வளவும் உன்கிட்ட பேசினாளா?'' என்று அசந்து போனாள் காமாட்சி.

பராசக்தியும், காமாட்சியும் கூடிக் கூடிப் பேசினார்கள். பிறகு,

''தம்பி! உன்கிட்டேதான் இவ்வளவு ஃபிராங்காப் பேசியிருக்கா..! நீயே.. அந்தப் பையன்கிட்டேயும் பேசு..'' என்றார்கள்.

பராசக்தி இன்னொரு விஷயமும் சொன்னாள். ''காமாட்சி'' அவளுக்கு இன்னொரு பயமும் இருக்கு. முப்பத்தஞ்சு வயசிலே.. போய் குழந்தையா? டெலிவரி சேஃபா இருக்குமான்னெல்லாம்.. பயப்படறா..'' என்றார்.

காமாட்சி ''ஆமா.. கொஞ்சம் ரிஸ்க்தான். ஆனா.. இனிமே குழந்தைன்னு ஒன்று வந்தாத்தான். பிடிப்பிருக் கும்..'' என்றார்.

உமாசங்கர் விஷ்ணுசாரதியிடம் பேசினான்.

விஷ்ணுசாரதி.. மேல் நாட்டில் படித்து முடித்து விட்டு வந்திருந்தான். அவன் உண்மையாகவே ருத்ராவை நேசித்தான் என்பது தெரிந்தது.

''எனக்கென்னமோ.. ருத்ரா.. தன் அழகுங்கற பொம் மையைக் கையிலே வைத்துக் கொண்டு விளையாடற குழந்தையாத்தான் தெரியறா..! அதனால தான் அவளுக்கு பயம். ஒவ்வொருத்தருக்கு ஒரு ஹோல்ட். அது மாதிரி ருத்ராவுக்குத் தன்னோட அழகுதான் தன்னோட பலம்ன்னு எண்ணம். இனிமே அது குறையப் போகு



தோன்னு அவளுக்கு பயம். அதுக்காகத்தான் குழந் தைன்னு ஒண்ணு இருந்தா வாழ்க்கையில ஒரு பிடிப்பு வருமோன்னு ஒரு எண்ணம்'' என்றான்.

உமாசங்கருக்கு விஷ்ணுசாரதியை மிகவும் பிடித்தது. பொறுப்பாக இருந்தான். ருத்ராவின் தோற்றம் பார்த்துதான் திருமணம் செய்திருக்கிறான் என்றாலும் திருமணத் திற்குப் பிறகு அவளிடம் மிகவும் பொறுமையாகவே இருந்திருக்கிறான்.

''ஏன்.. உமா! ஒரு வேளை விடுதியிலேயே வளர்ந்த தால் இப்படி இருக்காளோ?'' என்றான்.

''இருக்கலாம்!'' என்றான் உமா. மேலும் தொடர்ந்து சொன்னான்.

''விடுதியில் வளர்ந்ததாலா.. வீட்டில் வளர்ந்த தாலான்னு தெரியலே..! ஆனா.. எல்லாக் குழந்தைக்கும் பெத்தவங்ககிட்டே.. ஒரு நட்பு இருக்கணும். இருந் தாத்தான் தங்களுடைய எல்லா உணர்வுகளையும் வெளிப்படுத்திக்க முடியும். நான் நினைக்கறேன். விடுதி வாழ்க்கையில ருத்ரா.. அந்த அழகுங்கற ஒரு எண ணத்தை ஏத்தி விட்ருக்காணு நினைக்கறேன். அதே காரணத்துனாலகூட அவகிட்டே யாரும் நெருங்காம இருந்திருக்கலாம். அல்லது அவ நெருங்காம இருந் திருக்கலாம். அதுதான் விஷயமாயிருக்கும்'' என்றான்.

''சங்கர்! எப்பவுமே ஒரே சந்தேகம்! இரண்டு மூன்று முறை ஏமாந்து போனதாலே.. ஒரு குழப்பம். அவ இதுவரைக்கும் வாழ்ந்த எல்லா வாழ்க்கையிலயும் ஒரு அவநம்பிக்கை இழையோடிக்கிட்டேதான் இருந்திருக்கு..'' என்றான் விஷ்ணுசாரதி.

விஷ்ணுசாரதியின் பேச்சைக் கேட்டவுடனே உமா சங்கருக்கு இனிமேல் ருத்ராவின் வாழ்க்கை செம்மையாகி விடும் என்ற நம்பிக்கை வந்தது. ருத்ராவை அவன் ஒரு குழந்தையாகவே எண்ணுகிறான் என்று புரிந்தது. அதனால் மறுபடியும் ருத்ராவிடம் பேசினான்.

''ருத்ரா! விஷ்ணுசாரதி உன்னோட இருக்கணும்னு நினைக்கறார். அதனாலதான் குழந்தை வேணும்னு நினைக்கறார். இது உனக்குக் கிடைக்கிற நல்ல வாய்ப்பு! கடைசி வாய்ப்புன்னு கூட எனக்குத் தோணுது'' என்றே சொல்லி விட்டான்.

''இரண்டு பேரும் கொஞ்ச நேரம் உட்கார்ந்து மனசு விட்டுப் பேசுங்க'' என்று. தனியாக ஒரு பார்க்குக்கு அழைத்துப் போனான்.

அவர்களைப் பேச விட்டு விட்டு அவன் பார்க் முழுதும் சுற்றி வந்தான்.

திரும்ப வரும்போது அவர்கள் இருவர் முகத்திலும் ஒரு மலர்ச்சி தெரிந்தது. இயல்பாகப் பேச ஆரம்பித்தார்கள்.

காரில் திரும்ப வரும்போது விஷ்ணுசாரதி திடீரென்று சிரித்தான்.

''என்ன மச்சான்!'' என்றான் உமாசங்கர்.

''இல்லே! உன்னை மாதிரி ஒரு ஆளைக் கோர்ட்ல வச்சுகிட்டா.. நிறைய லாயருங்களுக்கு பொழப்பு முடிஞ்சுது..'' என்றான்.

''ஏன்?'' என்றான்.

''ஆமா..! நீ டைவர்ஸ் கேஸெல்லாம் உடைச்சு விட்டுடுவியாச்சு..'' என்றான்.

உமாசங்கர் சிரித்தான்.



''மச்சான்! இந்தக் கேஸ் உடைஞ்சதுக்குக் காரணம் நான் இல்லே! நீங்க..! உங்க நல்ல மனசு!'' என்றான். மேலும் சொன்னான்.

''மச்சான்! இன்னொன்றும் சொல்றேன்.. கேளுங்க! இனிமே குழந்த பொறந்து ''எப்படி வளர்க்கப் போறோம் னெல்லாம் கவலைப் படாதீங்க! நாங்கள்ளாம் இருக் கோம்.. பாத்துக்குவோம்..'' என்றான்.

''அது சரி! நீங்க.. சீக்கிரம் கல்யாணம் பண்ணிடுங்க'' என்றான் விஷ்ணுசாரதி.

''இன்னும் ஆறு மாசம்.. மச்சான்!'' என்றான்.

''ம்.. பொண்ணு பார்க்க ஆரம்பிக்கலாமா?'' என்றான்.

''வேண்டாம்! நான் சொல்றேன்.. அப்புறம் பாத்துக் கலாம்'' என்றான்.

ருத்ரா அமைதியாகவே வந்தாள்.

''என்னக்கா..?'' ரொம்ப அமைதியா வர்றே!'' என்றான்.

''இல்லே.. உன்னை மாதிரி ஒரு தம்பி கிடைச்ச சந்தோஷத்தை அனுபவிக்கறேன்'' என்றாள்.

உமாசங்கரும் விஷ்ணுசாரதியும் ஒருவரையொருவர் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

## 8

ஏகாந்தத்தை அனுபவித்தபடி காரை ஓட்டிக் கொண் டிருந்தான் உமாசங்கர்.

''எல்லோருக்கும் வாழ்க்கையில் பிடித்துக் கொள்ள ஏதோ ஒன்று தேவை இருக்கிறது. சிலர் தவறான பிடிப்பை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அக்கா ருத்ரா.. அழகின் மேல் பிடிப்பை ஏற்படுத்திக் கொண்டு விட்டாள். மற்ற எல்லார் மேலும் நம்பிக்கை விட்டுப் போனது. அதே சமயத்தில் உள்ளுக்குள்ளே ஒரு சந்தேகம் தன்னைக் கல்யாணம் செய்து கொண்டவர்கள் எல்லாருமே தனக்காகத் திருமணம் செய்து கொள்ளவில்லை. தன் அழகுக்காகவே திருமணம் செய்து கொண்டார்கள். ஒரு வேளை அழகு குறைந்து விட்டால் விட்டுப் போய் விடுவார்களோ என்ற பயம். அவ நம்பிக்கை. வாழ்க்கை அழகுக்கும், தோற்றத்துக்கும் அப்பாற்பட்டது'' என்று அவளுக்குப் புரியவில்லை. ஆனால்.. இந்த யாழினி என்ன பிடிப்பில் வாழ்கிறாள். பாவம்! கணவன் இறந்து போனான். வாழ்க்கையில் பிடிப்பென்று நம்பியிருந்த கணவன். இனிமேல் மகனைப் பிடிப்பாகக் கொள்ளப் போகிறாளா? தனக்கென்று ஒரு வாழ்க்கை அவளுக்கு இருக்காதா? இருபத்து நாலு வயதுப் பெண் இனி வரப் போகிற நாட்களை எப்படி சமாளிக்கப் போகிறாள். அப்பாவிடம் பேச வேண்டும். ஞானமுத்து அங்கிளிடமும் பேச வேண்டும். அந்தப் பெண்ணுக்கு மறு வாழ்வுக்கு ஏதாவது செய்ய வேண்டும். விஷ்ணுசாரதியைப் போன்ற நல்லவர்களும் உலகில் இருக்கிறார்கள்'' என்று எண்ணிக் கொண்டான்.

ஒரே ஒரு விஷயம் மட்டும் யாழினியிடம் அவனுக்குப் பிடிக்கவில்லை.

வாழ்க்கையை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற எண்ணம் இல்லாததுதான் அது.



நடந்து போனவற்றை ஏற்றுக் கொள்ளவும் இனி வரப் போகிற நாட்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கான முயற்சிகளில் திட்டங்களில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணமும் அவளுக்கு இல்லையென்று தோன்றியது. 'அந்தப் பெண்ணிடம் ஒரு நட்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கொஞ்சம் கஷ்டம்தான். இயல்பான நட்புக்கு எதிராக மிகவும் போராடுகிறாள். சுருங்கிக் கொள்கிறாள். ஆமை ஓட்டுக்குள் சுருங்கிக் கொள்கிறாற் போல, மெல்ல மெல்ல வெளியே இழுக்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான்.

செல்போன் ஒலித்தது. எப்போதும் இயர்போன் மாட்டிக் கொள்வான். ஒரு காதில் இடுக்கிக் கொண்டு இரண்டு கைகளால் ஸ்டியரிங்கைப் பிடித்து கொண்டு ஓட்டி ஒரே சமயத்தில் மூன்று நான்கு செயல்களைச் செய்கிற வித்தைகளையெல்லாம் அவன் பயன்படுத்துவதில்லை. அந்த மாதிரி சாகசங்களைச் செய்கிற சந்தோஷங்களைக் காட்டிலும் வாழ்க்கை ரொம்பவும் விலைமதிப்பில்லாதது என்பதில் தெளிவாக இருந்தான். அதிலும் கலாதர் அப்படி ஏதோ விபரீதத்தில்தான் இறந்தான் என்பது தெரிய வர இன்னும் எச்சரிக்கையாக இருக்கத் தொடங்கினான்.

''ஹலோ..!'' என்றான்.

''ஹலோ!'' என்றது யாழினியின் குரல்.

''யாழினி.. மேடம்! இப்பத்தான் உங்களை நினைச்சேன் பாருங்க..!'' என்றான் உற்சாகமாக.

அந்தப் பக்கம் ஒரு சங்கடமான மௌனம் நிலவியது. உமாசங்கர் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். பிறகு தொடர்ந்து சொன்னான்.

''ஆமா மேடம்! நாம பாட்டுக்கு ரெண்டு நாளா இங்க வந்து உட்காந்துகிட்டமே.. யாழினி எப்படி சமாளிச் சாங்களோ தெரியலையே... அப்படீன்னு நினைச்சேன்..! ஐ ம் ஆன் த வே யாழினி மேடம்!'' என்றான்.

''ஓ!'' என்றாள் யாழினி. குரலில் ஒரு விடுதலை யுணர்வு தெரிந்தது. அது உமாசங்கருக்கும் நன்றாகப் புரிந்தது.

''என்ன விஷயம் மேடம்!'' என்றான்.

''இல்லே! மூல்சந்த் ஏதோ பார்ட்டிகுலர்ஸ் கேட்டாரு..! நான் என்கிட்டே இருந்த பைல்ல இருந்து குடுத்தேன். சரியாகக் குடுத்திருக்கேனான்னு தெரியலே..'' என்றாள் தயக்கமாய்.

''ஒண்ணும் பிரச்சினையில்லே! இன்னும் ஒன்றரை மணி நேரத்துல நான் அங்க இருப்பேன். செக் பண ணிரலாம். தப்பாக் குடுத்திருந்தாலும் ஒண்ணும் பாதகம் இல்லே! நாளைக்குள்ளே ஒண்ணும் பெருசா மாறிடப் போறதில்லே! நைட்டே கரெக்ஷன் சொல்லீரலாம்! அங்கிள்கிட்ட சொன்னீங்களா'' என்றான்.

''இல்லே.. மாமாவும், அத்தையும் கோயிலுக்குப் போயிருக்காங்க! வர இரண்டு மணி நேரமாகும்.''

''நோ பிராப்ளம்மா! பாத்துக்கலாம்மா..!'' என்றான்.

திடீரென்று அது மனத்தில் உதித்தது.

''யாழினியும் கூட அழகுதான். ஆனால் தன் அழகை எந்த விதத்திலும் வெளிச்சம் போடவோ. அதைத் தனது பலமாக வெளிக்காட்டவோ முயற்சிப்பதே இல்லை'' என்பது புரிந்தது. தன் வாழ்வில் சம்பந்தப்பட்ட இரு பெண்களில் ஒருத்தி அழகை வெளிகாட்டிக் கொண்டு



அழகையே பற்றுக் கோடாகக் கொண்டு திணறுகிறாள் என்றால் இன்னொருத்தி தன் அழகையே தனக்கு எதிராக நினைத்துக் கொண்டு அதை வெளிக்காட்டிக் கொள் ளாமல் இருக்கப் போராடுகிறாள்.

மறுபடியும் கலாதரை நோக்கி அவன் மனம் போனது.

கலாதருக்கும், யாழினிக்குமான திருமணத்தில் ஏதோ ஒன்று உறுத்தலாகவே இருந்தது உமாசங்கருக்கு.. அது என்னவென்று அப்போது அவனுக்குப் புரியவில்லை.

புரிந்தபோது..!

வெகுவாக அதிர்ந்து போனான்.

* * *

தளிர் நடையிட்டு ஆட்டம் காட்டினான் அருண் காந்தி. கோவிலின் வெளிப்பரப்பில் ஓடினான். அன்ன பூரணியாலும், ஞானமுத்துவாலும் அவனோடு கூட ஓடி முடியவில்லை. டிரைவர்தான் ஓடினான்.

''இந்தப் பையனைப் பாருங்க! என்ன பாடு படுத்த றான்'' என்று கொஞ்சம் பெருமையாகவே முனகிக் கொண்டார் அன்னபூரணி.

பேரூர் கோவிலுக்கு வந்திருந்தார்கள் முன்பெல்லாம் அடிக்கடி கோவில்களுக்குச் செல்வார்கள். கலாதருக்காக வேண்டிக் கொண்டு செல்வார்கள். கலாதரின் திருமணத் துக்குப் பிறகு யாழினிக்காகவும் வேண்டிக் கொள் கிறார்கள்.

கலாதரின் திருமணத்துக்குப் பிறகு அன்னபூரணி அடிக்கடி வந்து சொன்ன விவரங்களால் கொஞ்சம் கலங்கிப் போயிருந்தார் ஞானமுத்து.

யாழினியைக் கொண்டு வந்து தேவையில்லாமல் சிக்க வைத்து விட்டோமோ என்ற எண்ணம் கூட அவரைப் பாடாய்ப் படுத்தியது. அந்த உறுத்தலை மறைத்துக் கொள்ளத்தான் மனைவியையும் அழைத்துக் கொண்டு கோவிலுக்குப் போவார். சில வேளைகளில் யாழினியையும் அழைத்துக் கொண்டு போவார்கள். அந்த நேரங்களில்தான் அந்தப் பெண் கொஞ்சம் இயல்பாக இருக்கிற மாதிரிக்கூட அவருக்குத் தோன்றும்.

திருமணமாகி இரண்டே மாதத்தில் கருவுற்றாள் யாழினி. கருவுற்ற இரண்டாம் மாதம் முடிவிலேயே யாழினியை பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டார் ஞானமுத்து. அதற்காக கலாதர் அவரிடம் சண்டை கூடப் போட்டான்.

* * *

''ஏம்ப்பா! எல்லா வீட்லயும் ஆறாம் மாசம். ஏழாம் மாசம்தான் அனுப்பி வைப்பாங்க! நீங்க.. என்ன? இப்படிப் பண்ணிட்டீங்க!'' என்றான்.

சாதாரணமாகக் கேட்பவர்களுக்கு அவன் ஏதோ மனைவியைப் பிரிந்திருக்க முடியாமல்தான் ஏங்குகிறான் என்று தோன்றும். ஆனால் ஞானமுத்துவுக்கு மகனின் இன்னொரு பக்கம் தெரிந்திருந்தது. அதனால்தான் அப்படி அனுப்பி வைத்தார்.

மெல்லிய குரலில் அலட்டிக் கொள்ளாமல் சொன்னார்.

''இல்லடா.. தம்பி! புள்ளை கொஞ்சம் வீக்கா இருக்கா. கர்ப்பப்பை வேற வீக்கா இருக்குங்கறாங்க. கம்ப்ளீட் ரெஸ்ட்ல இருக்கணுமாம். அதான் அனுப்பினோம். இங்க இருந்த பரியா இருக்காது. ஏதோ வேலை செஞ்சுகிட்டே



இருக்கும். அங்கயாவது போல நிம்மதியா இருக்கட்டும்'' என்றார்.

''அங்கயாவது போய் நிம்மதியா இருக்கட்டும்'' என்ற சொற்கள் அவனைத் தாக்கின போலும். அப்பாவை அளவிடுவது போலப் பார்த்தான். அப்பாவும் அந்தப் பாடத்தைத் திரும்பிப் படிக்கவே மேற்கொண்டு பேச்சுத் தொடர்ந்தால் ஆபத்து என்பது போல் நகர்ந்தான்.

அப்போதுதான் சமையலறைப் பக்கம் போய் விட்டு வந்த அன்னபூரணி ஹாலுக்கு வராமலே இவர்கள் பேசிக் கொண்டதைக் கவனித்தார். தலையிடவில்லை.

தனது அறைக்குப் போகிற மகனை அன்னபூரணி ஆழ்ந்த வருத்தத்துடன் பார்த்தார். யாழினியைப் போன்ற ஒரு பெண் இவனுக்கு வாய்க்க வேண்டியவளே இல்லை என்று தோன்றியது.

ஹாலுக்கு வந்தவர் கணவரிடம் சொன்னார். ''நல்லா பதில் சொன்னீங்க! இதையே மெயின்டெய்ன் பண்ணுங்க! குழந்தை பிறந்து ஆறேழு மாசம் கழிச்சுக் கூட்டிட்டு வந்தாப் போதும். அதுக்கப்புறம் உங்க அண்ணனையோ, வேறு யாரையோ வச்சுப் பேசித்தான் ஒரு முடிவுக்கு வரணும். இவன் இஷ்டத்துக்கெல்லாம் விட முடியாது'' என்றார்.

எல்லா மாமியார்களையும் போல இல்லாமல் மனைவி நியாயத்தின் பக்கமே பேசுவது கண்டு ஞானமுத்துவுக்கு மகிழ்ச்சி.

எப்படியும் ஒரு வருஷகாலமாவது மருமகள் பிறந்த வீட்டில் இருப்பாள். அதற்குள்ளாக மகனிடம் பேச வேண்டும். சரி செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தார். அதற்குள்ளாக அவனே பேசினான்.

குழந்தை பிறந்து ஒரு மூன்று மாதம் போயிருக்கும்.

ஒரு நாள் தள்ளாடியபடி தந்தையிடம் வந்தான்.

''அதான் பெத்துப் பொழச்சாச்சில்லே..! அவளைக் கூட்டிட்டு வாங்க!'' என்றான்.

ஞானமுத்து அலட்டிக் கொள்ளாமல் சொன்னார். ''கூட்டிட்டு வரணும்னா.. அதுக்கு முதல்ல நீ எனக்கு சில விஷயங்கள்ல உறுதி தரணும்'' என்றார்.

''என்ன?'' என்றான் குழறலாக.

சொன்னார்.

கலாதர் இதை எதிர்பார்க்கவில்லை.

''இப்படியெல்லாம் அவ சொன்னாளா?'' என்றான்.

''இல்லே! அதான் சாட்சியெல்லாம் வெளிப்படையா இருக்கே'' என்றான்.

''அப்பா! இது இவளுக்கும் எனக்கும் உள்ள விஷயம். இவ்வளவு பெரிய வீடு, வசதி, காரு, பங்களா இதெல்லாம் இருக்கில்லே. அதுக்காக சில தியாகங்கள் செய்ய வேண்டியதுதான்'' என்றான் கெத்தாக.

''கிறுக்குத் தனமாப் பேசாதே! அந்தப் பொண்ணு படிச்ச பொண்ணு. ஒரே ஒரு ரிப்போர்ட் குடுத்தாப் போதும். எல்லாரும் கம்பி எண்ணனும்.''

''அதெல்லாம் குடுக்க மாட்டா?''

''ஏன் குடுக்க மாட்டா?''

''அவளுக்குப் பின்னால் ரெண்டு சிஸ்டர்ஸ். இருக்காங்க! அப்படி இப்படி இவ போலீஸ்ன்னு பேசினா மத்த ரெண்டு கழுதைங்களுக்கும் மாப்பிள்ளை கிடைக்காது'' என்றான்.



அசிங்கமாகச் சிரித்தான்.

ஞானமுத்து தன் மகனிடம் இருந்து இப்படி ஒரு நடத்தையை எதிர்பார்க்கவில்லை.

''இத பாருடா! இதுல எதுவும் நீ சம்பாதிச்ச சொத்து இல்லை! என்னோட சுயசம்பாத்தியம். நீ மட்டும் ஏதாவது லொள்ளு பண்ணினா எல்லாச் சொத்தையும் மருமக பேர்ல எழுதி வச்சுருவேன்'' என்றார்.

கலாதர் சுய நினைவு இல்லாத நிலையில் கோபத்தில் கத்த ஆரம்பித்தான்.

''அப்படியெல்லாம் செஞ்சுருவியாப்பா.. நீ!'' என்று ஏக வசனத்தில் இறங்கினான்.

''ஏன்.. செய்ய மாட்டேன்? செய்வேன்!'' என்றார்.

''முடிச்சுப் போடுவேன்..! எல்லாத்தையும் முடிச்சுப் போடுவேன். கூண்டோடு ஒழிப்பேன்'' என்று கத்த ஆரம்பித்தான்.

''போடா சரிதான்!'' என்ற அப்பா அலட்டிக் கொள்ளாமல் ஏதோ செய்தித்தாளைக் கையில் வைத்துக் கொண்டு அமர்ந்து விடவே காட்டுக் கூச்சல் போட்டபடி வெளியே போனான்.

ஞானமுத்து அப்போதைக்கு ஒன்றும் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால்.. அன்றிரவுதான்.. அந்தச் செய்தி!

உலுக்கினாற்போல விழித்தார் ஞானமுத்து. பேரன் ஓடுகிற அழகைப் பார்த்துக் கொண்டே பின்னால் வந்து கொண்டிருந்தவருக்கு பேரனின் முகத்தில் தெரிகிற மகனின் சாயல் பழைய நினைவுகளை மின்னல் போல மனத்தில் ஓட்டி விட்டுச் சென்றது.

'தொப்' என்று விழப் போனான் பேரன். ''டேய் டேய்!'' என்று பிடிக்கப் போனார் ஞானமுத்து.

விழுந்து விட்டு எழுந்து சிரிக்கிற பேரனைப் பார்த்த அவரின் உள்ளத்தில் எல்லையற்ற மகிழ்வு தெரிந்தது.

''படவா!'' என்று அள்ளிக் கொண்டார். அன்ன பூரணியை பார்த்துச் சிரித்தார்.

அன்னபூரணியும் சிரித்தார்.

ஆழ்ந்த அன்புணர்வு மனதில் தோன்ற அன்னபூரணி சொன்னார்.

''யாழினிப் புள்ளயும், இந்தப் பையனுமாவது நமக்கு ஆயுள் முழுக்க.. நம்மோட இருக்கணும்..'' என்றார்.

''பூரணி! நீ எப்ப இருந்து இப்படிச் சுயநலவாதியாய் போனே?'' என்று கேட்கிற கணவனைப் புரியாதவராகப் பார்த்தார் அன்னபூரணி.

அப்போதுதான் அந்த வார்த்தைகளை உதிர்த்தார் ஞானமுத்து.

## 9

''வாங்க.. வாங்க.. யாழினி!'' என்று அன்றைக்கு உற்சாகமாக வரவேற்ற உமாசங்கரைக் கொஞ்சம் ஆச் சரியமாகவே பார்த்தாள் யாழினி.

''என்ன ஆச்சரியமாப் பாக்கறீங்க! நான் ஒண்ணும் லியாண்டர்தால் மனிதன் இல்லே! சிரிப்பேன் சந்தோஷப் படுவேன்..!'' என்றான். கலகலவென்று சிரித்தான்.



யாழினி தன்னையும் மீறிப் புன்னகைத்தாள். 'அப் பப்பக் கோபமும் படறீங்களே!' என்றாள் மெல்லிய முணுமுணுப்புப் போல.

''ஹா ஹா'' என்று பெரிய ஜோக்கைக் கண்டவன் போல் அவன் மறுபடியும் சிரித்தான். அப்படி என்ன பெரிய ஜோக் அடித்தோம் என்று அவளுக்குப் புரியவில்லை.

''என்னடா! எதுக்கெடுத்தாலும் சிரிக்கறானேனு பாக் கறீங்களா? வேலையிலதான் கடுகடுப்பெல்லாம் மற்ற நேரம் ப்ரீயா இருக்கணும்.''

அன்றைக்குக் காலையில் தான் படித்த புத்தகத்தை நினைத்துக் கொண்டாள் யாழினி.

''இறுக்கமாக இருக்காதீர்கள்!'' என்று சொன்னது அந்தப் புத்தகம். 'கதவைத் திற காற்று வரட்டும்' என்ற புத்தகம்.

ஒரு கதை வேறு படித்திருந்தாள்.

''பாபரைப் பார்ப்பதற்கு ஒரு பெரிய அறிஞர் நேரம் கேட்டு வாங்கிப் போனாராம். போன நேரத்தில் பாபர் பணியாட்களோடு அமர்ந்து கும்மாளமாகப் பேசிக் கொண்டிருந்தாராம். வந்திருந்த அறிஞர் பாபரிடம் சொன் னாராம்.

''என்ன இவ்வளவு பெரிய சக்ரவர்த்தி இப்படி எளிய மனிதர்களிடம் அமர்ந்து சரிசமமாகப் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்'' என்று ஒருவித ஏமாற்றத்துடன் கிளம்பினார்.

பாபர் ''இருங்கள்! நான் சொல்கிற விளக்கத்தைக் கேட்டு விட்டுப் போங்கள்'' என்று சொல்லி நாணை முறுக் கிக் கட்டாமல் தான் வைத்திருந்த வில்லைக் காட்டி னாராம். விளக்கமும் சொன்னாராம்.

''எப்போதும் இறுக்கமாக நாணைக் கட்டி வைத்திருந்தால் வில் முறிந்து விடும்'' என்று அது போலத்தான் மனிதர்கள் இறுக்கமாகவே இருந்தால் நோய்கள்தான் வரும். இலகுவாக இருக்கலாம்'' என்று சொல்கிறார் என்றாள்.

மௌனமாக ஆழ்ந்து கேட்டுக் கொண்டவன் மறுபடியும் ''ஹாஹ்ஹா!'' என்று சிரித்தான்.

''சந்தடி சாக்கில் சிந்து பாடிட்டீங்க, லைட்டா எனக்கும் புத்தி சொல்லிட்டீங்க!'' என்றான்.

அவன் பிடிபட்டவன் போல விழித்தான். ''இல்லல்லே! யதார்த்தமாத்தான்!'' என்று தடுமாறினாள்.

அவன் புன்னகைத்தான். ''பரவால்லே! பரவால்லே! நல்ல விஷயமாத்தான் சொல்லியிருக்கீங்க! பாயிண்ட்டை நோட் பண்ணிகிட்டேன்'' என்றான்.

அவள் விடுதலையுணர்ந்தாற் போல உணர்ந்தாள். அப்படியொன்றும் உமாசங்கர் எப்போதும் எல்லாரிடமும் சிடுசிடுவென்று இருக்கமாட்டான்.

அலுவலகத்தில் ஒருவர் இருந்தார். அவர் எப்போது பார்த்தாலும் அங்கே இங்கே என்று நடமாடிக் கொண்டிருப்பார். தன்னுடைய வேலையை யார் தலையிலாவது கட்டி விடுவார். வெட்டிப் பொழுது போக்குவார்.

ஒரு நாள் அவரை அழைத்தான்.

''ஏன்.. சார்! ரொம்ப சீரியல் பாப்பீங்களா!'' என்றான்.

அவர் புரியாமல் விழித்தார். அவர் முக பாவத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு ''இல்லே! டி.வி. சீரியல்ல நிறைய அட்வர்டைஸ்மென்ட் காட்டுவாங்க! நடுவில



கொஞ்சமே கொஞ்சம் கதை காட்டுவாங்க இல்லே! அது போல நிறைய நடமாடறீங்க! அப்பப்ப வேலை செய்யறீங்க.. போல இருக்கு...'' என்றான்.

அப்போது யாழினி எதிரிலேதான் இருந்தாள். சிரிப்பை அடக்கிக் கொள்வதற்குள் பெரும்பாடு பட்டுப் போனாள்.

மாட்டிக் கொண்ட மனிதன் பேய்முழி முழித்துக் கொண்டு திணற.

''நீங்க நடமாடுங்க. நான் வேண்டாம்னு சொல்லலே! ஆப்டர் ஆபீஸ் அவர்ஸ் டேபிள் டேபிளாய் போய் நின்னு பேசுங்க! எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை'' என்றான்.

''அது.. ங்..க சார்!'' என்று அவர் திணற ''நீங்க போலாம்!'' என்று பட்டென்று முறித்துக் கொண்டு ''அப்புறம்.. யாழினி மேடம்!'' என்று அவள் பக்கம் திரும்பி ஏதோ முக்கியம் போல் பேச ஊழியர் திணறிக் கொண்டு அந்தப் பக்கம் போனார்.

'நல்லாக் குடுத்தீங்க.. சார்!' என்று பாராட்ட வேண்டும் போல இருந்தது யாழினிக்கு. ஆனால் சொல்லவில்லை.

கலகலப்பாகவே சிரித்துக் கொண்டு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போலவே விஷயங்களைச் சொல்லுவான்.

''ஆஹாஹா! ராமு! எப்படிப்பா.. இப்படி ஒரு விஷமம்.. கண்டு பிடிச்சே! ஐன்ஸ்டீனுக்கே இப்படி ஒரு மூளை இருக்காது..'' என்பான்.

அந்த ராமுவுக்கே தன்னை மீறிய சிரிப்பு வந்து விடும்.

இத்தனைக்கும் தனியார் கம்பெனி. அவன் 'காச்' 'மூச்' என்று கத்தினால் கூட எல்லாரும் பணிந்துதான் போக வேண்டும். ஆனாலும் அப்படி எல்லாம் 'காச்' 'மூச்' என்று கத்தி யாரும் பார்த்ததே இல்லை. ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் கோபம் வந்து விடும்.

வேலையில் தவறு செய்து விட்டு சமாதானம் சொல்லக் கூடாது. சொன்னால் பிடிக்காது. ''தப்பு.. நடந்துருச்சு.. சார்! பொறுப்பேத்துக்கறேன். இனிமே கரெக்டாப் பண்ணிடறேன்'' என்றால் ''சரி.. இனிமே கரெக்ட் பண்ணிக்குங்க!'' என்று சொல்லி விட்டு விடுவான். ஆனால் மறுப்புச் சொன்னால் மட்டும் வறுத்தெடுத்து விடுவான். வார்த்தைகள் கத்தியாய் வந்து விழும்.

வந்த இருபது இருபத்தைந்து நாட்களுக்குள்ளாகவே அலுவலகத்தில் அவனைப் புரிந்து கொண்டார்கள்.

மேனேஜர் யாழினியிடம் சொன்னார். ''அம்மா! நாலு அம்பலவாணரும், நாலு ஞானமுத்துவும் சேரணும். இவருகண்ல இருந்து சின்ன விஷயம் கூடத் தப்பறது இல்லே! ஆனா.. மத்த விஷயங்கள்ல அவ்வளவுக்குப் பெருந்தன்மை!'' என்று சொல்வார்.

ஒரு நாள் ஏதோ விருந்து நடந்தது.. ஒரு கடைநிலை ஊழியர் தட்டை வைத்துக் கொண்டு ஏதோ ஐட்டம் எடுப்பதற்காக வந்தார். அந்த நேரத்தில் பரிமாற வேண்டியவன் அந்தப் பக்கம் போயிருந்தான்.

சட்டென்று தானே வந்து கரண்டியை எடுத்துப் பரிமாறினான்.

''சார்.. நீங்க!'' என்று அவன் பதற ''ஏன்.. நாங்க பரிமாறக் கூடாதா?'' என்று, புன்னகைத்து விட்டு எதுவுமே



நடக்காதது போலப் பார்ட்டிக்கு வந்திருந்த பிஸினஸ் புள்ளியிடம் பேச ஆரம்பித்து விட்டான்.

இது ஏதோ ஆட்களைக் கவருவதற்காகச் செய்வதாக இல்லாமல் அவன் இயல்பாகவே செய்தான். திடீரென்று கேண்டீனுக்குள் நுழைவான்.

''என்னப்பா.. செய்றீங்க?'' என்பான் ஏதாவது ஒரு ஐட்டத்தை எடுத்துக் கொஞ்சம் வாயில் போடுவான். சமையலறைக்குள்ளே சென்று நோட்டம் விடுவான்.

இரண்டு நாட்கள் அந்த மாதிரி வந்தவுடனே கேண்டீன் சமையலறை மிகவும் சுத்தமாக மாறியது.

''பாருங்கப்பா! சுட்ட எண்ணெயை மிச்சப்படுத்தறேன்னு.. மறுபடியும் மறுபடியும் யூஸ் பண்ணாதீங்க! அவ்வளவும் கெடுதல்..!'' என்று அறிவுரை சொல்லி விட்டுப் போவான்.

எந்த நேரம், எங்கு நுழைவான் என்று தெரியாததால் எல்லா இடங்களிலும் ஒரு அலர்ட்னெஸ் இருந்தது. அதெல்லாம் இப்போது குறைவு வர யாழினி கொஞ்சம் அவனை உறுத்துப் பார்ப்பது விட்டு முணுமுணுத்தாள்.

''எல்லார் கிட்டயும் கலகலப்பாப் பேசறீங்க!'' திட்டறதைக் கூட கலகலப்பாத் திட்டறீங்க'' ஆனா.. என் கிட்டே மட்டும்தான்'' என்றாள் குறைப்பட்டுக் கொள்வது போல.

மறுபடியும் ''ஹாஹ்ஹா!'' என்று சிரித்தான்.

''இது என்ன சிரிப்பு!'' என்பது போல அவள் முறைக்க.

''முறைக்காதீங்க.. மேடம்! பயமாயிருக்கு!'' என்றவன் மேலும் சொன்னான்.

''அது ஒரு விதமான சைகலாஜிகல் ட்ரீட்மென்ட். நீங்க உங்க தன்னிரக்க மனப்பான்மையில இருந்து வெளிய வாங்க. அப்புறம் யு வில் எ ஸீ பிரண்ட் இன்.. மீ..'' என்றான்.

அவள் புன்னகைத்தாள். ''ட்ரை பண்றேன் சார்'' என்றாள்.

''அப்பாடா! அதுக்கும் போர்டு மீட்டிங் போட்டு முடிவு பண்ணலாம்னு சொல்லுவீங்களோ.. என்னமோன்னு நினைச்சேன்'' என்றான்.

அவள் சிரித்து விட்டாள்.

உடனேயே தனது முயற்சியை நடைமுறைப் படுத்துகிறவளைப் போல அவனைப் பார்த்துச் சிரித்தாள் யாழினி. பிறகு கேட்டாள்.

''என்ன சார்! இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க.. போல இல்ல!''

''ஹல்லோ மேடம்! யு கேன் கால் மீ சங்கர்..!'' என்றான்.

அவள் புன்னகைத்து தலையாட்டிக் கொண்டாள். அவன் தொடர்ந்து சொன்னான்.

''திடீர்னு அப்பா போன் பண்ணி ஒரு விஷயமா வரச் சொன்னார். சரி.. இந்த வீக் எண்ட் ஸ்பாயில்ட்தான்னு நினைச்சேன் நல்லவேளையா ஒரு பெரிய ப்ராப்ளம் தீர்ந்துச்சு...'' என்றான்.

''ஓ..!''

''ஆமா..! அதை நான் அப்புறமா உங்களுக்கு விளக்கமா சொல்றேன். இப்ப வேலை'' என்றான்.

''ஓ..கே..!'' என்றாள்.



அதற்குப் பிறகு அன்றைக்கு அனுப்ப வேண்டிய கடிதங்கள். ஆர்டர்கள். என்று பல விஷயங்கள் என்று பகிர்ந்து கொண்டார்கள்.

நேரம் ஓடியதே தெரியவில்லை.

அப்போது ஞானமுத்துவிடம் இருந்து போன் வந்தது. ''அம்மா... யாழினி..! நானும் உங்கத்தையும் வெளியே ஒரு விருந்துக்குப் போறோம். பையனையும் கூட்டிட்டுப் போறோம். நீ ஆபீஸ்ல இருந்து லேட்டா வந்தாப் போதும்'' என்றார்.

''மாமா.. படுத்துவானே!'' என்றாள் தயக்கமாய்.

''இல்லம்மா! நாங்க சமாளிச்சுக்கறோம். வேலைக்காரப் பொண்ணு ஜலஜாவையும் கூட்டிகிட்டுப் போறோம்'' என்றார்.

''சரி'' என்றாள். ஜலஜா இருந்தால் சமாளித்து விடுவாள் என்று தோன்றியது.

செல்போனை ஆப் செய்துவிட்டு அவனைப் புன்னகைத்தாள்.

''காந்தியை மாமாவும், அத்தையும் எங்கேயோ வெளியே கூட்டிட்டுப் போறாங்களாம். அப்ப நான் இன்னைக்கு லேட்டாப் போலாம்'' என்றாள்.

''மேடம்! இன்னைக்கு லேட்டாப் போகலை! இது வரைக்கும் இர்லியராப் போய்கிட்டிருக்கீங்க'' என்றான்.

அவள் ஒத்துக் கொண்டாள்.

''ரைட்.. யாழினி! இன்னைக்கு என்னோட லஞ்ச் சாப்பிடுங்க'' என்றான்.

ஆட்களை விட்டு நல்ல ஹோட்டலில் இருந்து ஒரு லஞ்ச் வரவழைக்க ஏற்பாடு செய்தான்.

''ம்.. அப்புறம்.. உங்களுக்காக ஒரு பர்ஸனல் பி.ஏ. ஏற்பாடு செய்யப் போறேன்'' என்றான்.

அவள் 'களுக்'கென்று சிரித்தாள்.

''நானே உங்களுக்குப் பி.ஏ.வா. இருக்கேன்'' என்றாள்.

அவன் முகம் திடீர் பாவத்துக்கு மாறியது.

''யாழினி! யு ஆர் நாட் மை பி.ஏ.! இந்தக் கம்பெனி யோட பார்ட்னர். உங்களை என் ரூமுக்குக் கூப்பிட்டு ஏன் வேலை சொல்றேன்னா.. நான் அடிக்கடி உங்க ரூமுக்கு வரக் கூடாது. இருந்தாலும் நான் ஒன்று ரெண்டு தடவை வந்திருக்கேன். யு ஹேவ் ஈக்வல் வெயிட்டேஜ் இன் திஸ் கம்பெனி'' என்றான்.

அவள் அதை உள்வாங்கிக் கொள்கையிலேயே அவன் தொடர்ந்து சொன்னான்.

''வெயிட்டேஜ் மட்டுமல்ல. ரெஸ்பான்ஸிபிலிட்டியும் கூட! ஆமா! எவ்வளவுக்கு உரிமையிருக்கோ.. அவ்வள வுக்கு.. பொறுப்பும்..'' என்றான்.

லஞ்சின் போது ஆட்கள் தொலைவிலிருக்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டான்.

மனம் திறந்து தன் சகோதரியைப் பற்றிச் சொன்னான்.

''ஏன்.. ருத்ரா இப்படியெல்லாம் நடந்துக்கறான்னே புரியலே...'' என்றான்.

அவள் புரிந்து கொண்டாள்.

''அது என்னா.. அவங்களோட உண்மையான வசதி யென்பது அவங்களுக்குத் தெரியலே! அது மட்டுமல் லாம அழகுதான் தன்னோட சொத்து... ஆயுதம்னு நினைக்க ஆரம்பிச்சுட்டாங்க! அதனால ஒவ்வொரு



ஸ்டேஜ்லயும் தன்னோட வாழ்ந்தவங்க எல்லாரும் தன் அழகுக்காக மட்டுமே விரும்பறாங்க! அழகுன்னு ஒண்ணு மட்டும் இல்லேன்னா தன்னை விட்டுட்டுப் போயிடு வாங்கன்னு ஒரு பயம் மாதிரி ஆரம்பிச்சுருச்சு..'' என்றாள் யாழினி.

''ம்..'' என்றான்.

''சார்! இந்த மாதிரி ஃப்ரஸ்ட்ரேஷன் நிறையப் பெண்களுக்கு நடுத்தர வயசுக்கப்புறம் வருதுங்கறாங்க! பொதுவா பெண்களுக்கு வயசாகற விஷயத்தை ஏத்துக்க முடியாது. அதிலயும் அழகான பெண்களுக்கு..!'' என்றாள்.

அவன் தான் என்ன கேட்கிறோம் என்பதை உணராதவன் போலக் கேட்டான்.

''யாழினி..! நீங்ககூட அழகுதான்! ஆனா.. எனக்கென்னமோ அந்த அழகைக் குறைச்சுக் காட்டவும். அதை ஒரு விஷயமாவோ நினைக்காம இருக்கவும் முயற்சிக்கற மாதிரித்தான் எனக்குத் தோணுது'' என்றான்.

அவள் ஒரு நிமிடம் திகைத்துப் போனாள். பிறகு முகம் வெளிறிப் போய்ச் சொன்னாள்.

''என் அழகை நான் வெறுக்கிறேன். என் வாழ்க் கைக்கே.. என் அழகுதான் எதிரியாப் போச்சு..'' என்றாள்.

கண்களை அழுந்த மூடிக் கொண்டாள். உணர்வுகளை அடக்கப் போராடுவது போலத் தெரிந்து.

புரிந்து கொண்டவன் போல.

''சாரி! ஏதோ ஒரு சென்சிடிவ்வான விஷயத்தைத் தொட்டுட்டேன் போல இருக்கு.. நாம வேற பேசுவோம்!'' என்றான்.

பேசினான்! அவள் மறுபடியும் கலகலப்பாகச் சிரிக்கும் வரை.

# 10

யாழினி குழந்தையைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே படுத்திருந்தாள்.

''அம்மா! தாத்தா.. பலூன் வாங்கித் தந்தாங்க'' என்று மழலையில் அம்மாவிடம் கொஞ்சிப் பேசிய அருண் காந்தி அப்போதுதான் மெல்லக் கண்ணயர்ந்தான்.

''ம்மா..! பெரிய.. கோவில்'' என்று தான் பார்த்த விஷயங்களை சொல்வதற்குக் குழந்தைக்கு நிறைய இருந்தது.

யானை பற்றி அதன் துதிக்கை பற்றி அது தன் தலையில் 'டொம்' என்று வைத்த துதிக்கை பற்றி என்று நிறைய நிறையச் சொல்ல வேண்டியிருந்தது.

கேட்டாள். முகத்தில் பல நாட்களுக்குப் பிறகு ஒரு மகிழ்ச்சி மலர்ந்திருந்தது.

பார்ட்னராக யாரோ ஒரு பெரியவர் இருந்த வரைக்கும் அவளுக்குப் பெரிதாக கவலை இருக்கவில்லை. தன்னையும் வியாபாரத்திற்குள் இழுப்பார்கள் என்பதே அவள் எதிர்பாராதது. ஆனால் மாமனாரின் முகம் சில நேரம் சோர்வாக இருப்பதைப் பார்க்கும்போது அவளுக்கே மனசு உறுத்தும். மாமியாருக்கும் பெரிய அளவில் படிப்பு



இல்லை. அதனால் அவரையும் பிஸினஸில் இழுத்து விட முடியாது என்ற மாமனார் பக்கத்து நியாயம் அவளுக்குப் புரிந்தது. ஆனால் தன்னால் அவரளவுக்கு வியாபாரத்தில் ஈடுபட முடியுமா என்ற கவலையும் இருந்தது.

வேறு வழியில்லை என்றபோதுதான் ஒத்துக் கொண்டாள். ஆனால் அவள் எதிர்பாராத திருப்பம் என்னவென்றால் திடீரென்று பார்ட்னர் என்ற பெயரில் இளைஞர் ஒருவர் முளைப்பான் என்பதுதான்.

பள்ளியிலும் சரி. கல்லூரியிலும் சரி அவள் கோஎட் என்கிற இரு பாலர் கல்வி நிலையங்களில் தான் படித்திருந்தாள். அதனால் ஆண்களைக் கண்டு வெட்கப்பட்டு ஒதுங்கி ஒளிகிற ரகம் இல்லை. ஆனால் வாழ்க்கை பற்றிய அவளுடைய எல்லாக் கண்ணோட்டத்தையும் என் நம்பிக்கையிலும் கூட உடைத்துப் போட்டு விட்டான் கலாதர்.

உமாசங்கர் முற்றிலும் வேறுவிதமாக இருந்தான். ஒரு தவறான பார்வை. தேவையற்ற வழிதல் எதுவுமே இருக்கவில்லை. நேராகப் பார்த்தான். நேராகப் பேசினான். அவளிடம் மட்டுமல்ல அலுவலகத்தில் பணிபுரிகிற எல்லாப் பெண்களிடமும் அவன் அப்படித்தான் நடந்து கொண்டான்.

மிக ஆரோக்கியமான அணுகுமுறை. இன்றைக்குக் கூட அப்படித்தான் ஒரு விஷயம் சொன்னான்.

''யாழினி! உங்களுக்காக ஒரு பி.ஏ. போட்டாலாம்னு நினைக்கறேன்'' என்று சொன்னபோது அவளுக்கு ஆச்சரியம்.

மெயின் அலுவலகத்தில் அவளைத் தவிர சுற்றிலும் ஆண்கள் என்பதோடு. யாழினிக்கு ஒரு துணை வேண்டும் என்றும் எண்ணியிருக்கிறான். அதோடு மட்டு மல்லாமல் தானும் ஒரு இளைஞன் என்ற முறையில் அடிக்கடி அவள் அறைக்குப் போனாலும் ஒரு பேச்சு வரும். ஆனால் எப்பவும் அவளைத் தன் அறைக்கு அழைத்துப் பேசுவதும் அவ்வளவுக்கு அவளுக்கு மரி யாதை தருவதாக இருக்காது என்றும் நினைக்கிறான்.

ஒரு விஷயத்தின் எல்லாக் கோணங்களையும் யோசிக்கிறான் என்பது புரிந்தது. அதைக் காட்டிலும் தனது சகோதரியின் நடத்தை குறித்துத் தன்னிடம் பகிர்ந்து கொண்டது, அவளுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

திடீரென்று அவளுக்கு விஷ்ணுசாரதியின் நினைப்பு தோன்றியது. முகமறியாத அந்த இளைஞனைக் குறித்து அவள் மனம் பெருமையாக எண்ணியது.

''அப்படி ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்கே ஒரு துணிச்சல் வேண்டும். திருமணமும் செய்து கொண்டதோடு அந்தத் திருமணத்தைத் தக்க வைப்பதற்காகவும், அந்தப் பெண்ணை சைகலாஜிகலாக ஹேண்டில் பண்ணுவதற்காகவும் அவன் எடுக்கிற முயற்சிகள் குறித்து ஆச்சரியமாகவும் இருந்தது. அந்த எண்ணங்களை உமாசங்கரிடமும் பகிர்ந்து கொண்டாள். அவனும் அதை மனதாரப் பாராட்டிக் கொண்டான்.

'திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றன வாம்' கசப்புடன் எண்ணிக் கொண்டாள். அப்படியானால் தன்னுடைய திருமணம் எங்கே நிச்சயிக்கப்பட்டதாம்?



மீண்டும் பழைய நினைவுகளை நோக்கி ஓடியது மனம்.

திருமணமான புதிதில் கொஞ்ச நாட்கள் தனது சுயரூபத்தை அடக்கி வைத்திருந்தான் கலாதர். ஆனால் மெல்ல மெல்ல அவன் தன் இயல்பைக் காட்ட ஆரம் பித்தபோது யாழினிக்கு அதைத் தாங்கும் சக்தியில்லாத போயிற்று.

புகுந்த வீட்டில் பொதுவாக மாமனார், மாமியாரால் பிரச்சினைகள் வரும் என்பார்கள். ஆனால் யாழினிக்கு மாமனாரும், மாமியாரும் தெய்வம் போல இருந்தார்கள். அதிலும் யாழினியின் மாமியார் அன்னபூரணி யாழினியைச் சொந்த மகள் போலவே நேசித்தார்.

மகள் இல்லை என்கிற குறையைத் தீர்க்க வந்தவள் என்றே எண்ணினார். அதே போல நடத்தினார். அவர் களிடம் போய்த் தன் கணவனைப் பற்றி எப்படிச் சொல் வது என்றே யாழினிக்குப் புரியவில்லை. சொன்னால் மிகவும் நொந்து போவார்கள். அப்படிப்பட்ட பெற் றோருக்கு எப்படி இப்படி ஒரு மகன் பிறக்க முடியும் என்பதே புரியவில்லை. இடைப்பட்ட நாட்களில்தான் இவன் மாறியிருக்க வேண்டும். சரியான நண்பர்களின் சேர்க்கை இல்லை என்பது ஒரு காரணமாக இருக்கலாம் என்று தோன்றியது.

திருமணமான முதல் மாதம்! அவ்வளவு ஏன்? திரு மணமாகிப் பத்துப் பதினைந்து நாட்கள்தான் போயி ருக்கும்.

இரவு வரும்போது நன்றாகத்தான் வந்தான். ஆனால் அரை மணி நேரத்துக்கு மேல் அருகில் உள்ள சின்ன அறையில் போய் உள்ளே அமர்ந்து கொண்டிருந்தான்.

யாழினி சமையல் அறையில் வேலையாட்களை மேற்பார்வை செய்து சாமான்களை ஒழுங்குபடுத்தி விட்டு அறைக்கு வருவதற்குள்ளாக அவன் தனக்குத் தேவையான வேலைகளை முடித்து வைத்திருந்தான்.

படுக்கையறைக்குத் தள்ளாடிக் கொண்டு வந்த அவனைக் கவனித்தாள் யாழினி.

தன்னையுமறியாமல் அவள் முகம் இருண்டது. அவளது குடும்பத்தில் யாருக்கும் இந்த மாதிரி விஷயங்களில் பழக்கம் கிடையாது. தந்தை இருக்கும் இடம் தெரியாது என்பது போல் போவதும் வருவதுமாக இருப்பார். சிகரெட், பீடி கூடக் கிடையாது. ஆனால் தன் கணவன் மது அருந்துகிறான் என்பதே அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''என்னடி.. முகச் சுளிப்பு!'' என்றான் கலாதர்.

யாழினியின் கண்களில் மிரட்சி தெரிந்தது.

''இல்லை.. இல்லையே!'' என்றாள் குழறலாக.

''என்...னடி..! நான்.. இப்படித்தான் இருப்பேன். நீ பிச்சைக்காரக் குடும்பத்துல இருந்து வந்தவ. உனக்கு இந்த மாதிரிப் பெரி..ய்..ய.. வூடு.. கா..ரு.. பங்களா.. இதெல்லாம்.. சு..ம்..மா. கிடைச்சிருக்கே.. அதுக்கு.. நீ என்ன வேண்ணா.. தர்லாம்..'' என்று உழறலும், குழறலுமாக அவளை அணுகினான்.

யாழினியின் கண்களில் நீர் திரள்வதை என்ன முயன்றும் அவளால் தடுக்க முடியவில்லை. எந்த விதமான இதமான வார்த்தைகளும் நெகிழ்வும் இல்லாத அவனது ஆக்கிரமிப்புக்கு அவள் முழு மனதாக இடம் கொடுக்கவில்லை என்பது அந்தக் குடி போதையிலும் அவனுக்குள் ஆத்திரத்தைக் கிளப்பியது.



வார்த்தைகளால் இல்லாவிட்டாலும் வருத்தமான முகபாவத்தால் அவள் காட்டுகிற எதிர்ப்புணர்வு அவனுக்குள் இன்னும் ஆக்ரோஷத்தைக் கிளப்பியது போலும்.

''என்னடி.. ரொம்ப ஷோ காட்டறே!'' என்று சிகரெட்டைக் கையில் எடுத்துக் கொண்டு அணுகினான்.

யாழினியின் வாயிலிருந்து எழுந்த அலறல் மாமனார், மாமியாரின் அதிர்ச்சிகரமான முகத்தை எண்ணிய போது அப்படியே தொண்டைக் குழிக்குள்ளேயே அடங்கிப் போனது.

எல்லாம் முடிந்து கையைக் காலைப் பரப்பிக் கொண்டு உறங்குகிற கணவனை ஒருவித பயத்தோடு பார்த்துக் கொண்டு கண்ணீர் வடிய சோபாவில் படுத்துக் கிடந்தாள் யாழினி.

மறுநாள் காலை!

முற்றிலும் வேறு முகம் காட்டினான் கலாதர். ''சாரி.. சாரி.. யாழினி! மிருகம் நான்!'' என்று தன்னைத் தானே அடித்துக் கொண்டான்.

''ப்ளீஸ்! ப்ளீஸ்! அம்மா அப்பாகிட்டே சொல்லிடாதே..'' என்று கெஞ்சுவான்.

''சரிதான்.. மாறிவிட்டான்'' என்று எண்ணிக் கொண்டாள் யாழினி.

ஒரே வாரம்!

மறுபடியும் அதே பாவம்! அந்தக் குடி போதையிலும் வெளியே தெரியாத இடங்களாகத்தான் வைப்பான். தன்னையும் மீறி ஒரு நாள் கழுத்தின் பின்புறம் வைத்து விட்டான்.

மறுநாள்!

எப்போதும் சமையலறையில் புழங்குகையில் முடியைத் தூக்கி முடிந்து கொள்வாள். ஆனால் அப்படி முடிந்தால் தெரியுமே என்று இருந்தது. ஆனால் முடி படுகிற போதெல்லாம் எரிச்சலாகவும் இருந்தது.

இரண்டொரு முறை 'ஸ்' என்று முகம் சுருங்குகையில் மாமியார் கவனித்து விட்டார்.

''என்னம்மா!'' என்று கேட்க.

''இல்லங்கத்தே! சிகரெட்டை மறந்து போய் டேபிள்ல வச்சுட்டார். தெரியாம..!'' என்று அவள் திணற அழகாகவும், அழுத்தமாகவும் பொய் சொல்ல அவளுக்கு வரவில்லை என்பதைப் புரிந்து கொண்ட மாமியார் தனியறைக்கு அழைத்துப் போய் விசாரித்தார்.

யாழினி அழுத்தமாக மௌனம் சாதித்தாள்.

''யாழினி! பெரிய நளாயினியாட்டமா நெனச்சுகிட்டு அவனைக் காப்பாத்தாதே! ஆரம்பத்துலயே சரி பண்ணினாத்தான்.. உண்டு..'' என்று பதறினார்.

வருத்தம் தோய்ந்த முகத்துடன் மாமியாரின் வெளிறிய முகத்தைக் காணச் சகியாதவளாக மெல்லத் தன் மேனியில் பட்டிருந்த வடுக்களைக் காட்டினாள்.

இடுப்புப் பகுதியிலும், முதுகுப் பகுதியிலுமாக ஏழெட்டு இடங்களில் வடு தெரிந்தது.

''ஐய்யோ!'' என்று கதறிய அன்னபூரணி மருமகளை வாரி அணைத்துக் கொண்டார்.

''எம்மா.. முத நாளே என்கிட்டே சொல்லலே..!'' என்று தேம்பி அழுதார்.



''அத்தே! அழாதீங்க! சுய நினைவில் இருக்கும்போது வருத்தப்படறாரு. அம்மா.. அப்பாகிட்டே சொல்லிடாதேன்னு கெஞ்சறாரு..'' என்றாள் தானும் அழுகையினூடே.

''கேப்பாரில்லைன்னு நினைச்சுட்டானா! எப்ப இவனுக்கு விவரம் தெரிஞ்சுதோ.. அப்ப இருந்தே ஆட்டம் தான்..! நான் தான் யாழினி தப்புப் பண்ணிட்டேன். அவரு கொஞ்சம் கண்டிப்பு. அவருக்குத் தெரியாம நான்தான் காசு குடுப்பேன். என்னோட செல்லத்துனாலதான் கெட்டான். இப்ப நான் எப்படி அவருகிட்டே சொல்லுவேன்'' என்று கதறினார்.

யாழினி அதிர்ந்து போனாள். ''ஐயோ.. அத்தே மாமா கிட்டே சொல்லாதீங்க!'' என்று கெஞ்சினாள்.

அன்னபூரணி அப்போதைக்கு ''சரி'' என்றார். ஆனால் தன்னால் இந்த விஷயத்தில் எதுவும் செய்ய முடியாது. கணவரிடம் சொன்னால்தான் இதற்கு ஒரு முடிவு கிடைக்கும் என்ற எண்ணமும் இருந்தது.

தயங்கித் தயங்கிக் கணவரிடம் சொன்னார். ஞானமுத்து சுத்தமாக அதிர்ந்தே போனார்.

வெகு நேரம் மௌனமாக அமர்ந்து விட்டார்.

அன்னபூரணி மௌனமாக கரைந்து கரைந்து அழுவதை வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்து விட்டார்.

''ஐயோ! இப்படிப் பாத்துகிட்டு உட்கார்ந்திருக்கிறீங்களே! ஏதாவது சொல்லுங்க! திட்டுங்க!'' என்று மேலும் அழுதார் அன்னபூரணி.

ஞானமுத்து பெருமூச்சு விட்டார்.

''அன்னபூரணி..! இப்ப அழுது என்ன செய்ய! பாவம்.. ஏழைப் பொண்ணைக் கொண்டு வந்து இப்படி சிக்க வச்சுட்டமே..'' என்று மிகவும் வருத்தப்பட்டார்.

இரண்டு பேரும் வருத்தம் காட்டி ஒருவருக்கொருவர் தேற்றிக் கொண்டு மேலே என்ன செய்வதென்று யோசித்தார்கள்.

ஞானமுத்து சொன்னார் ''பூரணி..! நான் இப்பத் தலையிட வேண்டாம். நீயே ஏதோ பார்த்ததாய் சொல்லி அந்தப் பொண்ணுக்கும் தெரியாத மாதிரிக் கேக்கறதா சொல்லிகிட்டு அவனைக் கண்டிச்சு வை..'' என்றார்.

கலாதர் கோபம் முழுவதையும் மனைவியிடம் காட்டினார். ஆனால் வேறு விதமாக!

''ஏண்டி..! எங்கம்மாகிட்ட சொன்னயா?'' என்றான்.

அன்னபூரணி ஏற்கனவே எச்சரித்திருந்தார். அதனால் யாழினி.

''இல்லைங்க! அத்தையாத்தான் கழுத்துல இருந்த காயம்.. பாத்து..'' என்று குடிக்கு முன்னே அவன் கத்தினான்.

''எல்லாருமா.. சேர்ந்துகிட்டு என்னை மிரட்டறீங்களா? என் பிரண்ட்ஸ் எல்லாரும் கோடீஸ்வர பொண்டாட்டிகளை கல்யாணம் பண்ணியிருக்காங்க! ஆனா.. எனக்கு.. எனக்கு.. பிச்சைக்கார சம்பந்தம்'' என்று வெறி பிடித்தாற் போலக் கத்தினான்.

''இப்ப.. என்னடி செய்வே'' என்று தன் புறங்கையில் சுட்டுக் கொண்டான்.



யாழினி அவன் முகத்தில் தெரிந்த கொலை வெறியைப் பார்த்துப் பயந்து போய் கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடினாள்.

''அத்தை! அத்தை! அவரு.. அவரு'' என்று அலறினாள்.

சத்தம் கேட்டு ஓடி வந்த மாமியாரின் மேல் மயங்கிச் சரிந்தாள்.

அன்னபூரணி அதிர்ந்து போய் மருமகளைத் தன் இரு கைகளாலும் தாங்கிக் கொண்டார்.

# 11

மெல்லக் கண் விழிக்கையில் மிரண்டு பார்த்தாள்!

சுற்றிலும் நிற்கிறவர்களைப் பார்த்து மெல்ல எழ முயற்சித்தாள்.

''படு.. படு..! எழுந்திருக்க வேண்டாம்'' என்று உபசரித்தார்கள்.

அவள் மெல்லப் படுத்துக் கொண்டாள். அசௌகரியமான உணர்வைத் தவிர்ப்பதற்காகவோ என்னவோ கண்களை மூடிக் கொண்டாள்.

சுற்றிலும் எல்லாரும் பேசிக் கொள்வதிலிருந்து ஒரு விஷயம் புரிந்தது.

''உண்டாகியிருக்கிறாளாம்.''

யாழினிக்கு அதைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ச்சியும் இருக்கவில்லை. வருத்தமும் இருக்கவில்லை.

தான் இரண்டு மாத அனுபவங்கள் அவளுக்குள் ஒரு மரத்துப் போன தன்மையை உருவாக்கி இருந்தது. "அது நல்ல செய்தியா. இல்லையா?" என்றே அவளுக்குப் புரியவில்லை.

அப்போதுதான் அவளது மாமனாரும், மாமியாரும் பேசி ஒரு முடிவெடுத்தார்கள்.

பெற்றுப் பிழைக்கும் வரை மருமகளைப் பிறந்த வீட்டிலேயே விடுவது என்று கலாதருக்குக் கோபம்! ஆனால் தந்தை நடந்து கொண்ட முறை குறித்து வருத்தமும் இருந்தது.

"தம்பி கலாதர்! இந்த மாசத்துல இருந்தே யாழினி அம்மா வீட்ல இருக்கட்டும்" என்றார் அப்பா.

"ஏன்!" என்றான் சற்றே அதிர்ச்சி அடைந்தவன் போல.

"பூரணி..! அதைப் பத்தி அப்புறம் பேசலாம்" என்றார் ஞானமுத்து.

பேசினார்கள்!

இருவருமாக அல்ல. தாய் மட்டும் தனியே பேசினாள்.

"பாருடா! உன் மனசில எந்தப் பேய் பிசாசு பிடிச்சிட்டு ஆட்டுதோ.. தெரியலை! இப்படியெல்லாம் நடந்துக்கறே! அந்தப் பொண்ணோட உடம்பில இப்படியெல்லாம்.. சுட்டு..! சே..!" என்று அருவறுப்புக் காட்டினார்.

அவன் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

பிறகு மெல்லிய குரலில் முணுமுணுத்தான்.



"எனக்கு தண்ணி போட்டா.. என்ன நடக்குதுன்னே.. தெரியலை.." என்றான்.

"அதான்! வயத்துல குழந்தைன்னு ஆனதுக்கப்புறம் அதிர்ச்சியில்லாம இருக்கணும். அவகிட்டே முரட்டுத் தனமா நடந்துக்கறேனா.. நீயும் இப்படி உன் கையைச் சுட்டுகிட்டு நிக்கறியே! இந்த கண்றாவியை எல்லாம் நாங்க யாருகிட்டே போய்ப் பகிர்ந்துக்க! அதனால.. உனக்கு நல்லதுக்குத்தான் சொல்றோம் குடும்பத்தோட வாரிசு.. நல்ல சூழ்நிலையில உருவாகணும். அதுக்கு அந்தப் பொண்ணு நிம்மதியா இருக்கணும். அம்மா வீட்டுக்குப் போகட்டும்" என்றார்.

அவன் அம்மாவைக் கோபமாகப் பார்த்தான். "நீங்க சொல்ற கணக்கு கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் ஆயிடும்.." என்றான்.

"பரவால்லே! பொண்ணு கொஞ்சம் உடம்பு வீக்கா இருக்கா! அதனால பெட் ரெஸ்ட்ல இருக்கணுமாம். அதான் அம்மா வீட்டுக்கு அனுப்பி இருக்கு! அப்படீன்னு நாங்க சொந்தக்காரங்களுக்கெல்லாம் சொல்லிக்கறோம்" என்றார்.

"என்னவோ.. செய்ங்க!" என்றான் விட்டேத்தியாக.

அம்மா அதோடு நிறுத்தவில்லை.

"அது மட்டுமில்லடா தம்பி! தண்ணி போட்டாத்தானே உனக்கு இந்த மாதிரியெல்லாம் நடந்துக்கத் தோணுது. அவ திரும்பி வர்றதுக்குள்ளே இந்த மாதிரிப் பழக்கத்தையெல்லாம் நிறுத்திக்க. இப்பவே அவ உடம்புல இருக்கிற தழும்பையெல்லாம் பாத்தா எனக்கு வயிறு வாயெல்லாம் பத்திகிட்டு எரியுது. அவங்க அம்மாவுக்கு எப்படி

இருக்கும்? என்னென்ன கேள்விங்க வருமோனு பயம்மா இருக்கு! புரிஞ்சுக்க..! வசதியில்லாத பொண்ணுங்கறது னால என்ன வேண்ணா செய்யலாம்..! எப்படி வேண்ணா நடத்தலாம்னு நினைச்சுக்காதே..'' என்று கடுமையாக எச்சரித்தார்.

அவன் அமைதியாக வாங்கிக் கொண்டான்.

யாழினியின் தாய் தன் மகளின் உடம்பில் இருக்கற வடுக்களைப் பார்த்து விட்டு சம்மந்தியம்மாவிடம் நியாயம் கேட்டார். சம்மந்தியம்மாவும் சேர்ந்து அழுத அழுகையைப் பார்த்து செய்வதறியாமல் திகைத்துப் போனார்.

கலாதர் அடிக்கடி வந்து பார்த்து விட்டுப் போனான். ஆனால் ஒரு நாளும் இரவுத் தங்களுக்கு மகனை அனுப்பவேயில்லை.

தனியாக இருக்கும்போது தன் நடத்தைக்காக வருந்தினாலும் தனிமை உணர்வில் சிக்கினான் கலாதர். அதற்கு மருந்து போல மீண்டும் மதுவையே நாடினான்.

அப்போதுதான் கடைசி ஆயுதத்தை ஏவினார் ஞான முத்து.

''பாரு தம்பி! இப்படியே தண்ணி அடிச்சிகிட்டுத் திரிஞ்சே.. சொத்து பூராவையும் நான் மருமக பேர்ல எழுதிடுவேன்'' என்றார்.

அவனது கோபத்தையும் வெறியையும் தூண்டி விடுகிறோம் என்பது அவருக்குத் தெரியவில்லை.

''ஓஹோ! இன்னைக்கு வந்த மருமக பெருசாப் போயிட் டாளா?'' என்று குரலெடுத்துக் கத்தினான்.



''நீ கத்தறதுனால எந்தப் பிரயோசனமும் இல்லை! சொத்தெல்லாம் பேரக் குழந்தைக்கு எழுதி அவளைக் கார்டியனாய் போட்டுடுவேன்'' என்றார் தீர்மானமாக.

ஒரு வாரம் கோபமாக அலைந்து கொண்டிருந்தான். ஆனால் அவனது கோபம், முறைப்பு எதையுமே தந்தை லட்சியம் செய்யவில்லை என்பது அவனுக்குள் இன்னும் கோபத்தை மூட்டியது.

அன்றைக்கு!

நிறையக் குடித்து விட்டுக் கண் மண் தெரியாமல் காரை ஓட்டினான். அந்த விபத்து நிகழ்ந்தது!

எல்லாரும் அதிர்ந்து போனார்கள்!

என்னதான் மகன் மேல் கோபம் இருந்தாலும் ஞான முத்துவும், அன்னபூரணியும் இதை எதிர்பார்க்கவில்லை.

கொஞ்சம் ஒடிந்துதான் போனார்கள்!

நெட்டையோ குட்டையோ சொத்தையோ சொள் ளையோ மகன் உயிரோடு இருந்திருந்தால் கொஞ்சம் கொஞ்சமாகத் திருந்தியிருக்கலாமோ என்று எண்ணி வருந்தினார்கள். ஆனால் இன்னொரு பக்கம் யோசிக்கும் போது மருமகளை அழைத்து வந்து வாழ வைப்பது குறித்து அவர்களுக்கு அச்சமாகவும் இருந்தது.

அந்தரங்கமான நேரங்களில் அந்தப் பெண்ணை அவன் கொடுமையாக நடத்தினால் என்ன செய்வது என்ற கவலை இருந்தது.

எதுவானாலும் மகனின் உயிர் மிக அதிகமான விலை என்று உணர்ந்தார்கள். ஆனால் குழந்தையைப் பார்த்து கொஞ்சம் மனதைத் தேற்றிக் கொண்டார்கள்.

மருமகளின் பெற்றோரிடம் போய் நின்றார்கள்.

''அவன் வாழ்ந்த முறை சரியில்லாதது போலவே அவன் போன விதமும் ஆயிப் போச்சு! புள்ளைய நாங்க கூட்டிட்டுப் போறோம். அனுப்பி வைங்க'' என்றார்கள்.

யாழினியின் பெற்றோர்களுக்கும் வேறு வழி இருக்க வில்லை. அடுத்த இரண்டு பெண்களுக்கும் திருமணம் பார்க்க வேண்டுமே என்றிருந்தது.

யாழினியின் மாமனாரும், மாமியாரும் உண்மை யாகவே யாழினியைத் தாங்கி வைத்துக் கொண்டார்கள். அது மட்டுமல்லாமல் யாழினியின் பெரிய தங்கையின் திரு மணத்துக்குப் பெரிய அளவில் பண உதவி செய்தார்கள்.

யாழினியும் குழந்தையே தன்னுடைய உலகம் என்பது போல அமைதியாக இருந்தாள். புயல் போலத் திருமணம்! அதை விடக் கொடுமையான சூறாவளி போன்ற திருமண வாழ்க்கை, கணவனின் அதிர்ச்சிகரமான மரணம் என்று இரண்டு ஆண்டுகளில் ஏகமாக அனுபவித்து இருந்தாள்.

கணவன் இருந்த போதும் அவனோடு வாழப் போகிற வாழ்க்கை குறித்து பயமாகத்தான் இருந்தது. இப்போதும் வாழ்க்கை வெறுமையாகத்தான் இருந்தது. ஆனால் எல்லாவற்றையும் குழந்தை மறக்கடித்தான்.

இரண்டு ஆண்டுகள்!

அருண்காந்தியே உலகம் என்று வாழ்ந்தாள். தனது துக்கங் களை மறைத்து வைத்து விட்டு தன் மாமனார், மாமி யாரைப் பெற்றோர்களைப் போலப் பார்த்துக் கொண்டாள்.

அப்போதுதான்!

மாமனார் அந்த இடியைத் தூக்கிப் போட்டார்.

''அம்மா! தொழில் பழகு!'' என்றார்.



யாழினி பயந்து போனாள்.

''ஐய்யோ! அதெல்லாம் வேண்டாம்.. மாமா!'' என்றாள்.

''அம்மா.. இந்த விஷயத்துல நான் உனக்கு எந்தச் சாய்ஸும் குடுக்கலே! ஆர்டர்தான் போடறேன்'' என்றார்.

யாழினி திகைத்துப் போனாள். ''மாமா!'' என்றாள் திணறலாக.

''ஆமாம்மா! நல்லாப் புரிஞ்சுக்கோ! இந்தக் குடும் பத்துக்குன்னு ஒரு வாரிசு வந்தாச்சு. இன்னொரு பக்கம் எங்களுக்கும் வயசாகிட்டே போவுது. எத்தனை நாளைக்கு நாங்க பாரம் சுமக்க முடியும்? நீயும் வாழ்க்கையை சந்திக்கணும். தயாராகிக்கம்மா..!'' என்றார்.

யாழினிக்குப் பேசுவதற்கு ஒன்றும் இருக்கவில்லை. அச்சத்துடன் பார்த்தாள்.

''மாமா..! எனக்கு இதுல ஒண்ணுமே தெரியாது..!''

''அம்மா! நானும் ஒரு நாள் எதுவுமே தெரியாமத்தான் இதுல நுழைஞ்சேன். எனக்குப் பெரிய படிப்பறிவு கூட இருக்கலே. உனக்குப் பட்டப் படிப்பு இருக்கே! அது மட்டுமில்லே! என்னைக் காட்டிலும் உனக்குப் பொறுமை யிருக்கு! கத்துக்கற அளவுக்கு சுட்டிப்பு இருக்கு.. கத்துக்குவே'' என்றார் ஆறுதலாக.

அப்போதும் கூட தனது பார்ட்னர் சார்பாக இளைஞன் ஒருவன் வரப் போகிறான் என்பதைச் சொல்லவில்லை.

அது இன்னொரு அதிர்ச்சியாக இருந்தது. மாமாவிடம் அதையும் சொன்னாள்.

''பாரும்மா! அவன் நல்ல குடும்பத்துப் பையன் அம்பலவாணன் எனக்கு நெடுநாளைய நண்பன்.

இருபத்தஞ்சு வருஷமா ஒரு பார்ட்னர்ஷிப் சிதைவடையாம இருக்கணும்னா எங்களுக்குள்ளே எவ்வளவு அண்டர்ஸ்டான்டிங் இருக்கும்னு தெரிஞ்சுக்கோ. அது மட்டுமல்ல..ம்மா! உமாசங்கர் ரொம்பக் கெட்டிக்காரன். அவன்கிட்டே வேலை கத்துக்க..! நீ பொண்ணு அவன் ஆம்பளைன்னு நினைக்கறதை விட்டாலே மத்த எல்லாமும் ஈஸியாயிடும்'' என்றார்.

வேறு வழியில்லை என்ற நிலையில்தான் அவள் அலுவலகத்திற்கு வந்தாள். ஆனால் உமாசங்கரோ அவளுக்குள் ரோஷம் கிளப்பினான்.

தெளிவாக முடிவெடுத்தாள்.

''எப்படியோ குழந்தைக்காகவாவது தான் இந்தக் காரியத்தில் தொடர்ந்து ஈடுபடத்தான் வேண்டும். முடிந்தால் உமாசங்கரிடம் நல்லபடியாகப் பழகி மெதுவாக அவனே இந்தப் பார்ட்னர் ஷிப்பையும் வாங்கி விடுமாறு செய்ய வேண்டும்'' என்று எண்ணிக் கொண்டாள்.

அதே நேரம்!

உமாசங்கரும் அவளைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தான்.

''பாவம்! அந்தப் பெண்! தான் இந்தக் கம்பெனிக்கு வந்த இரண்டு மாதங்களுக்குள்ளாக இன்றைக்குத்தான் மனம் விட்டுச் சிரித்தாள். இளம் பெண்! எத்தனை நாட்களுக்குத் தனியாக இருப்பாள். அப்பாவிடமும், மாமாவிடமும் பேசி அவளது எதிர்கால வாழ்க்கைக்கு ஏதாவது செய்ய வேண்டும்'' என்று எண்ணிக் கொண்டான்.

நேர் மாறாக யாழினி தான் அந்த அலுவலகத் தொடர்பிலிருந்தே கழன்று கொள்வதற்காகத் திட்டம் போட்டுக்



கொண்டிருக்கிறாள் என்று தெரிந்தால் அதிர்ந்து போயிருப்பாள்.

தனது ஒன்று விட்ட சகோதரி ருத்ராவை விட யாழினி எவ்வளவோ தேவலை என்று தோன்றியது.

உள்ளுக்குள் எத்தனை வேதனை இருந்தாலும் காட்டிக் கொள்ளாமல் நடமாடினாள். பெரியவர்களை நன்றாக கவனித்துக் கொண்டாள். இப்போது மகிழ்ச்சியும் கண்களில் தெரிகிறது.

பாவம்! இளம் வயதில் கணவனை இழந்து விட்டாள். அவள் கணவன் வேலை செய்த அலுவலகம். அதிலும் அவனது அலுவலகத்தில் வந்து வேலை செய் என்றால் அவன் நினைப்பு எடுக்காதா? அது தெரியாமல் தானும் அவளை வாட்டி விட்டோம்.

இனிமேல் அப்படி எல்லாம் அவளை நடத்தக் கூடாது. கொஞ்சம் பொறுமை காட்டி வேலை கற்றுக் கொடுக்க வேண்டும்.

தன்னைத் தானே சார்ந்து நிற்க அவளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். எதிர் காலத்தில் அவள் சமாளிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்று எண்ணினான். அவன் மனத்தில் அவள் மேல் ஆழ்ந்த பரிவு தோன்றியது.

''நாமும் இனிமேல் நல்ல நண்பன் போல நடந்து கொள்ள வேண்டும். அதுதான் ஞானமுத்துவுக்கு மாமாவுக்கு மனதில் நிம்மதியைத் தரும்'' என்று எண்ணிக் கொண்டான்.

மறுநாள் அப்பாவிடம் பேசிய போது தனது எண்ணத்தைத் தந்தையிடம் பகிர்ந்து கொண்டான்.

''செய்யப்பா! ரொம்ப நல்ல காரியம்! முத்துவுக்கும் இதே கவலைதான்'' என்றார்.

மறுநாள் முதலாக அவன் நடத்தையில் ஏற்பட்ட மாற்றம் கண்டு யாழினி முதலில் தடுமாறினாலும் இயல்பாகவே ஏற்றுக் கொண்டாள்.

# 12

''வேண்டாம் தொப்புன்னு குதிக்காதே! டேன்ஜரஸ்'' என்று எச்சரித்துக் கொண்டிருந்தான் உமாசங்கர்.

''அங்கிள்..! இன்னொரு தடவை'' என்றான் குழந்தை.

கலாதரின் வசதிக்காக ஒரு நீச்சல் குளம் ஒன்று ஞானமுத்துவின் பங்களாவில் பின்புறம் இருந்தது. அவன் மறைவுக்குப் பிறகு அது கேட்பாரற்றுக் கிடந்தது.

பங்களாவின் பின்புறம் சற்று இடம் அதில் தோட்டம் இருந்தது. அதற்கும் பின்னால் வேலையாட்களுக்கான வீடுகள் ஐந்தாறு இருந்தது. அவர்கள் போக்குவரத்துக்காக தனியாக வழியும் இருந்தது. அதற்கும் பின்னால் நீச்சல் குளம் இருந்தது.

சுற்றிலும் மறைப்பிடம் இருந்ததால் அது இத்தனை நாள் உமாசங்கருக்குத் தெரிந்திருக்கவில்லை. ஞானமுத்து பெரும்பாலும் இப்போதெல்லாம் வெளியே வாக்கிங் போவதில்லை.

யாராவது மகனைப் பற்றி விசாரிக்கிறார்கள் என்பதால் வாக்கிங் போவதைத் தவிர்த்தார். ஆனால் கிட்டத்தட்ட



உமாசங்கர், பங்களா அவர்களுடைய பங்களா சுற்றிலும் இடம் என்று பார்த்தால் கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் இடம் இருந்தது.

உமாசங்கர் பங்களாவைச் சுற்றிலும் கார்டன் போலவும் நடைபாதை போலவும் அமைத்திருந்தார். அதில்தான் அதிகாலையில் எழுந்து ஜாகிங் செய்வான்.

அவனும் அவ்வப்போது வீட்டைச் சுற்றி ஓடி வருவான். ஞானமுத்து இரவு நேரத்தில் ஏழு மணி வாக்கில் ஒரு உலா மாதிரித் தங்கள் பங்களாவைச் சுற்றிலும் ஒரு நடை போகுவார். அதிலும் அதற்கேற்றாற் போல் நடைபாதை போலப் போட்டு வைத்திருந்தார். ஒரு நாள் உமாசங்கரும் இணைந்து கொண்டான்.

அப்படி நடக்கும்போதுதான் அந்த நீச்சல் குளத்தைக் கவனித்தான். அது அவர்கள் பார்த்தபோது ஏதோ பெரிய தொட்டியை போல வாயைப் பிளந்து கொண்டு கிடந்தது.

உமாசங்கர் ஆவலுடன் நின்று கவனித்தான். ''பெரியப்பா! இது என்ன?'' என்று விசாரித்தான்.

ஞானமுத்து உச்சுக் கொட்டினார். ''அது கலாதர் செஞ்ச தண்டச் செலவுல இன்னொன்னு'' என்றார்.

''பெரியப்பா! என்ன இப்படிச் சொல்றீங்க! ஸ்விம்மிங் நல்ல எக்சர்சைஸ் தெரியுமா?'' என்றான்.

''நல்ல எக்சர்சைஸ்தான். இப்ப யூஸ் இல்லாமக் கிடக்கே...!'' என்றார்.

''நீங்க பர்மிஷன் குடுத்தா யூஸ் பண்ணிடுவோம்'' என்றான் ஆர்வமாக.

''செய்யப்பா!'' என்றார், அவரும் தயங்காமல்.

''செய்யப்பா! ரொம்ப நல்ல காரியம்! முத்துவுக்கும் இதே கவலைதான்'' என்றார்.

மறுநாள் முதலாக அவன் நடத்தையில் ஏற்பட்ட மாற்றம் கண்டு யாழினி முதலில் தடுமாறினாலும் இயல்பாகவே ஏற்றுக் கொண்டாள்.

# 12

''வேண்டாம் தொப்புன்னு குதிக்காதே! டேன்ஜரஸ்'' என்று எச்சரித்துக் கொண்டிருந்தான் உமாசங்கர்.

''அங்கிள்..! இன்னொரு தடவை'' என்றான் குழந்தை.

கலாதரின் வசதிக்காக ஒரு நீச்சல் குளம் ஒன்று ஞானமுத்துவின் பங்களாவில் பின்புறம் இருந்தது. அவன் மறைவுக்குப் பிறகு அது கேட்பாரற்றுக் கிடந்தது.

பங்களாவின் பின்புறம் சற்று இடம் அதில் தோட்டம் இருந்தது. அதற்கும் பின்னால் வேலையாட்களுக்கான வீடுகள் ஐந்தாறு இருந்தது. அவர்கள் போக்குவரத்துக்காக தனியாக வழியும் இருந்தது. அதற்கும் பின்னால் நீச்சல் குளம் இருந்தது.

சுற்றிலும் மறைப்பிடம் இருந்ததால் அது இத்தனை நாள் உமாசங்கருக்குத் தெரிந்திருக்கவில்லை. ஞானமுத்து பெரும்பாலும் இப்போதெல்லாம் வெளியே வாக்கிங் போவதில்லை.

யாராவது மகனைப் பற்றி விசாரிக்கிறார்கள் என்பதால் வாக்கிங் போவதைத் தவிர்த்தார். ஆனால் கிட்டத்தட்ட



உமாசங்கர், பங்களா அவர்களுடைய பங்களா சுற்றிலும் இடம் என்று பார்த்தால் கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் இடம் இருந்தது.

உமாசங்கர் பங்களாவைச் சுற்றிலும் கார்டன் போலவும் நடைபாதை போலவும் அமைத்திருந்தார். அதில்தான் அதிகாலையில் எழுந்து ஜாகிங் செய்வான்.

அவனும் அவ்வப்போது வீட்டைச் சுற்றி ஓடி வருவான். ஞானமுத்து இரவு நேரத்தில் ஏழு மணி வாக்கில் ஒரு உலா மாதிரித் தங்கள் பங்களாவைச் சுற்றிலும் ஒரு நடை போகுவார். அதிலும் அதற்கேற்றாற் போல் நடைபாதை போலப் போட்டு வைத்திருந்தார். ஒரு நாள் உமாசங்கரும் இணைந்து கொண்டான்.

அப்படி நடக்கும்போதுதான் அந்த நீச்சல் குளத்தைக் கவனித்தான். அது அவர்கள் பார்த்தபோது ஏதோ பெரிய தொட்டியை போல வாயைப் பிளந்து கொண்டு கிடந்தது.

உமாசங்கர் ஆவலுடன் நின்று கவனித்தான். ''பெரியப்பா! இது என்ன?'' என்று விசாரித்தான்.

ஞானமுத்து உச்சுக் கொட்டினார். ''அது கலாதர் செஞ்ச தண்டச் செலவுல இன்னொன்னு'' என்றார்.

''பெரியப்பா! என்ன இப்படிச் சொல்றீங்க! ஸ்விம்மிங் நல்ல எக்சர்சைஸ் தெரியுமா?'' என்றான்.

''நல்ல எக்சர்சைஸ்தான். இப்ப யூஸ் இல்லாமக் கிடக்கே...!'' என்றார்.

''நீங்க பர்மிஷன் குடுத்தா யூஸ் பண்ணிடுவோம்'' என்றான் ஆர்வமாக.

''செய்யப்பா!'' என்றார், அவரும் தயங்காமல்.

ஒரே வாரத்தில் ஆளை விட்டுச் சுத்தம் செய்து தயார் படுத்தினான். அது மட்டுமல்லாமல் அவன் வந்ததற்குப் பிறகு தோட்டப் பகுதி புத்துயிர் பெற்றது.

கம்பெனியில் தோட்டம் பார்க்கிற ஆட்களிடம் சொல்லி விட்டுத் தோட்டத்துக்கென்று புதிதாக ஆட்களைப் போட்டு விட்டான்.

செடிகள் ஆங்காங்கே உயிர் பெற்றுச் சிரித்தன. காம்பவுண்டுச் சுவரோரமாக செம்பருத்திப் பூக்கள் மலர்ந்து சிரித்தன.

இடைவெளிகளில் ரோஜாச் செடிகள் வைக்கச் செய்தான்.

''ஆறே மாசம்! பெரியப்பா! ஏரியாவே பார்க் மாதிரி ஆயிடும் பாருங்க!'' என்றான் ஆர்வமாக.

உமாசங்கர் தொடங்கியதுதான் தாமதம் வீட்டில் எல்லாருக்கும் அந்தக் காய்ச்சல் தொற்றிக் கொண்டது. அன்னபூரணி காலையிலும் மாலையிலும் தோட்டக்காரர்கள் ஒழுங்காகத் தண்ணீர் விடுகிறார்களா என்று பார்க்க ஆரம்பித்தார். யாரும் சொல்லாமலே தோட்டப் பராமரிப்பில் மேற்பார்வையை அவர் எடுத்துக் கொள்வதைக் கண்டு அவ்வப்போது உமாசங்கரும் ஞானமுத்துவும் பொருள் பொதிந்த பார்வையைப் பரிமாறிக் கொண்டனர்.

அடுத்த கட்டமாக நீச்சல் குளத்தைப் பயன்படுத்த ஆரம்பித்தான்.

மாலை நேரங்களில் அவன் அவ்வாறு நீந்துவதை ஞானமுத்துவும் ஒரு கூடை சேரில் அமர்ந்து வேடிக்கை



பார்ப்பார். ஒன்றிரண்டு சமயங்களில் அருண்காந்தியும் மடியில் அமர்த்திக் கொண்டு வேடிக்கை பார்ப்பார்.

உமாசங்கர் வேண்டுமென்றே குழந்தைக்கு வித்தையெல்லாம் செய்து காண்பிப்பான். அருண்காந்தி கலகலவெனச் சிரிப்பான்.

குழந்தைக்கும் சின்னதாக இரப்பரில் ஒரு சிறிய குளம் போல ஏற்பாடு செய்து கொடுத்தான்.

விடுமுறை நாட்களில் காலையில் கொஞ்ச நேரம் அவனைக் குதிக்க விட்டுக் கொண்டு வந்து வீட்டில் விடுவான்.

அன்று சனிக்கிழமை!

அருண்காந்தி உறங்கிக் கொண்டிருப்பான் என்ற எண்ணத்தால் அவன் மட்டும் நீந்தப் போய் விட்டான்.

கொஞ்ச நேரம் போயிருக்கும்! அருண்காந்தியின் அழுகுதலும் ''பொறுடா.. கண்ணா'' என்று யாழினி சமாதானப்படுத்தும் குரலும் கேட்டது.

சற்றும் யோசிக்காமல் பதட்டத்துடன் மேலே வந்து துவாலையைச் சுற்றுகிற நேரத்துக்குள்ளாக யாழினி வந்து விட்டாள். அவன் இடுப்பில் முடிச்சைப் போட்டுக் கொண்டே.

''என்ன என்ன?'' என்றான் பதட்டத்துடன்.

யாழினி ஒரு கணம் தயங்கினாள். என்னவென்று யோசிக்காமலே பையன் ஆரவாரத்துடன் வழிகாட்ட வந்து விட்டான். இப்போது தயக்கமாகப் போய் விட்டது. அதிலும் தலையில் ஈரம் சொட்டச் சொட்ட அவன் எம்பிக் குதித்த விதமும், ''வாடா.. ராஜா!'' என்று வாங்கிக்

கொண்ட விதமும். அப்படி வாங்கும்போது அவன் அருகில் நிற்க வேண்டிய அவசியமுமாக அவளுக்குள் ஒரு கூச்சத்தை ஏற்படுத்தியது.

''ஷை! தண்ணி!'' என்று அருண்காந்தி உமாசங்கரின் முடியைப் பிடித்து மெல்ல இழுக்க.

''டேய்! வலிக்குதுடா!'' என்று அவன் கொஞ்ச அவள் தன்னை மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அருண்! நானும்..'' என்று அவன் குதிக்க அவன் அந்தச் சிறிய ரப்பர் மேக் ஷிப்ட் நீச்சல் குளத்தில் அவனை இறக்கி விட குழந்தை 'தொப்' 'தொப்' என்று குதிக்க யாழினியும் கூடத் தன்னை மறந்து சிரித்தாள்.

''அம்மா.. நீயும்.. ஈச்சல்..!'' என்று அவன் மழலையில் கூற,

''நீச்சல்டா! ஈச்சல்.. இல்லே!'' என்று உமாசங்கர் திருத்த யாழினி சிரித்தாள்.

''உமா! யூ ஆர் ஸ்பாயிலிங்.. ஹிம். அப்புறம் உங் களுக்குக் கல்யாணமாகிப் போனா.. ஹி வில் மிஸ்.. ஆல் திஸ்'' என்றாள்.

''கவலையே வேண்டாம்.. யாழினியாரே! இன்னும் ஐந்தாறு வருஷங்களுக்கு இந்த மாதிரிப் பந்தங்களில் சிக்கிக் கொள்ளப் போறதே இல்லை'' என்றான் அவன்.

''காபி கூட சாப்பிடாம வந்துட்டீங்க.. போல இருக்கு.''

''நோ பிராப்ளம்!'' உங்க கையாலே போட்டுக் குடுங்க.. குடிக்கறோம்'' என்றான்.

''இதோ.. அஞ்சே நிமிஷத்துல'' என்று போனாள்.

உமாசங்கருக்கு வேலைப் பளுவுக்கும், டென்ஷனுக் கும் நடுவே அருண்காந்தியுடன் நேரம் கழிப்பது மிகவும் விருப்பமாக இருந்தது.



நிர்வாகத்தில் பலவிதமான மனிதர்களை அவன் சமாளிக்க வேண்டியிருந்தது. மாங்கு மாங்கென்று வேலை செய்கிறவர்கள், திறமையாகவும் மேற்பார்வை செய்தால் வேலை செய்கிறவர்கள், வேலை செய்கிறாற் போல நடிப்பவர்கள் என்று வித விதமானவர்கள்! தன் தொழிலை நேசித்தாள்! அதனால் விதவிதமான மனிதர் களைப் பற்றி அறிந்து கொள்வதை அவன் ரசித்துக் கொள்வான்.

முன்பெல்லாம் தந்தையிடம் மாலை நேரங்களில் வேடிக்கையாகப் பகிர்ந்து கொள்வான். இப்போது ஞானமுத்துவிடம் பகிர்ந்து கொண்டான். அவனுடைய 'அப்ஸர்வேஷன்' திறமையை அவர் மிகவும் மெச்சிக் கொண்டார்.

குழந்தையின் நடை, உடை, பாவனைகளை அவன் மிகவும் ரசிப்பதை உணர்ந்து கொண்டார். தந்தை இல்லாத குறையை இவனுடன் ஒட்டிக் கொள்வதன் மூலமாக குழந்தை இட்டு நிரப்பிக் கொள்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான். அவரும் புரிந்து கொண்டார். அதனால் எத்தனை வேலையாயிருந்தாலும் குழந்தைக் கென்று ஒரு மணி நேரமாவது ஒதுக்கினான்.

யாழினியும் அவனது பாசம் புரிந்து கொண்டவள் போலக் குழந்தை அவனிடம் நேரம் செலவழிப்பதை அனுமதித்தாள்.

ஒரு தட்டில் காபிக் கோப்பையோடு வந்தாள்.

''அங்கேயே கலந்து தரவா?'' என்று அவள் காபி கலக்க அவன் அதைப் பெரிய 'டப்'பில் நின்று கொண் டிருந்த குழந்தையிடம் பொய்யாகக் குத்துச் சண்டை போட்டுக் கொண்டிருந்தான்.

தண்ணீர் 'தளக்' 'புளக்' என்று அவன் கும்மாள மடித்தான்.

யாழினியும் 'டேய்! டேய்! என்னடா.. தம்பி!'' என்று தடுக்க முயன்றாள்.

''விடுங்க.. யாழினி! லெட் ஹிம் என்ஜாய்'' என்று அவனும் சேர்ந்து கொண்டு கும்மாளமடிப்பதை அவள் சிரிப்புடன் பார்க்க அந்தக் காட்சி ரம்மியமாக இருந்தது.

''உங்க பையன் இருக்கானே! பயங்கரமான ஆளு! நேத்து 'சாக்லெட்' குடுடான்னு கேட்கறேன். அந்த பாக்ஸ்ல அவனுக்குத் தேவையானதை எடுத்து வச்சுகிட்டு அப்புறம் எனக்கு இத்தனூண்டு பிச்சுத் தரான்'' என்று அவன் சிரிக்க அவளும் சிரித்தாள்.

சிரித்துக் கொண்டே திரும்ப நீச்சல் குளம் இந்தப் பகுதியின் நுழைவாயிலில் ஞானமுத்து நின்று அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆழமான அவர் பார்வை பார்த்து யாழினி கொஞ்சம் திடுக்கிட்டுப் போனாள்.

சட்டென்று சிரிப்பை நிறுத்தினாள்.

உமாசங்கர் அந்த மாதிரியெல்லாம் எதுவும் அலட்டிக் கொள்ளவேயில்லை.

''வாங்க.. பெரியப்பா!'' என்று இயல்பாய் வரவேற்றான்.

''சுகமான நீச்சல் ஒன்று போட்டேன் பாருங்க! கரும்பு தின்னக் கூலியாகற மாதிரி யாழினி காபி வேற கொண்டு வந்து தந்துட்டாங்க'' அவரும் இயல்பாகப் பேச ஆரம் பித்தார்.

''இவன் என்ன காலையில் இந்த ஆட்டம் போடறான்'' என்று பேரனை பற்றிக் கொண்டார்.





''ஆமா.. பெரியப்பா! நீச்சல் கத்துக்கணுமாம்'' என்றான்.

''இந்த வயசுலயா?''

''லைட்டா சொல்லிக் கொடுக்கலாம் பெரியப்பா! தப்பில்லை..!'' என்றான்.

யாழினியைப் பார்த்து ஞானமுத்து இயல்பாகப் புன்ன கைக்கவும்தான் யாழினிக்குள் படபடப்பு அடங்கியது.

''இளைய ஆண் மகனுடன் அலுவலகத்தில் வேலை செய்கிறோம். அது வேறு விஷயம். அன்று அவன் நீச்சல் குளத்தில் அருகில் இருக்கும்போது இப்படி வந்து நிற்க வேண்டுமா? அதிலும் இப்படி சிரிக்க வேண்டுமா?'' என்று மாமனார் எண்ணி விட்டால் என்ன செய்வது என்ற குழப்பம் தோன்றியது.

அவள் மனதில்தான் அந்தக் குழப்பம் போலும். ஞான முத்துவும் சரி. உமாசங்கரும் சரி இரண்டு பேரும் இயல்பாகத் தொடர்ந்து பேசவும் அவளுக்குள்ளும் அமைதி ஏற்பட்டது.

''சே.. சே! நாம்தான் எல்லாவற்றையும் தவறாகவே எண்ணிக் கொள்கிறோம்'' என்று தோன்றியது.

''மாமா! எனக்கு கொஞ்சம் வேலையிருக்கு'' என்றாள் முணுமுணுப்பாக.

''சரிம்மா.. நீ போ! நான் பையனை எடுத்துட்டு வரேன்'' என்றார் ஞானமுத்து.

பையனின் பொறுப்பை மாமனார் ஏற்றுக் கொள்ளவும் அவள் சமையலறை நோக்கிப் போனாள். மாமனாருக்கும், மாமியாருக்கும் கொஞ்சம் காரம் குறைவாகச் சமைக்கச் சொல்வாள்.

சமையற்காரம்மா அடிக்கடி மறந்து விடுவார். அதனால் மேற்பார்வை பார்க்க வேண்டும். தானும் அலுவலகம் செல்லத் தயாராக வேண்டும்.

காலை நேரம் முழுவதும் மாமனாரும், மாமியாரும் ஆட்களின் துணையோடு குழந்தையைப் பார்த்துக் கொள்வார்கள். இரண்டு வயதுக் குழந்தையின் துறு துறுப்புக்கு ஈடு கொடுப்பது சில வேளைகளில் அவர் களுக்குக் கவனமாக இருக்கும். அதனால்தான் அவள் பிற்பகலில் வந்து விடுவாள். அவர்களுக்கு ஓய்வு கொடுப்பாள்.

'கிரச்'சில் சேர்க்கலாம் என்ற பேச்சு வந்தபோது மாமனாரும், மாமியாரும் மறுத்து விட்டார்கள்.

''வேண்டாம்மா! அங்கயும் ஆட்கள்தானே பார்த்துக் கொள்வார்கள். இங்கயும் ஆட்களைத் துணைக்கு வச்சுகிட்டு நாங்க பாத்துக்கறோம்'' என்றார்கள்.

அடுத்த ஆண்டு பள்ளிக்குப் போக ஆரம்பித்து விட்டால் அவள் இன்னும் கொஞ்ச நேரம் அலுவல கத்தில் இருக்கலாம் என்று இப்போதைக்கு முடிவு செய்து வைத்திருந்தாள்.

யாழினி அவசரமாக நகர்ந்தாள். இன்னும் கொஞ்ச நேரம் நின்றிருந்தால் உமாசங்கர் தன் மாமனாரிடம் கேட்ட கேள்வியில் அதிர்ந்து போயிருப்பாள்.

அப்படி ஒரு கேள்வியைத்தான் உமாசங்கர் ஞான முத்துவிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

குழந்தையின் முகத்தோடு முகம் உரசிக் கொண்டு அவன் கொஞ்சுவதையும், வயிற்றில் வாயை வைத்துக் காற்றுக் கொடுத்து உளர குழந்தை கிளுகிளுவென்று



சிரிப்பதையும், அவன் உடன் சேர்ந்து சிரிப்பதையும் ஒருவித நிறைவோடு ஞானமுத்து பார்த்துக் கொண டிருக்கையில்தான் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

''ஏன்.. பெரியப்பா! யாழினி தொழில் கத்துக்கறதெல லாம் சரிதான். ஆனா.. ஒரு விஷயம் யோசிச்சீங்களா?'' என்று அவன் தொடர்ந்து கேட்ட கேள்வியைக் கேட்க ஞானமுத்து உறைந்தாற் போல நின்றார்.

நெஞ்சுக் கூட்டில் உறைந்து கிடக்கிற ஏதோ ஒரு வேதனையை அவனிடம் பகிர்ந்து கொள்ள முடியாதவர் போல அவர் தவிப்பதைப் பார்த்த அவன் மனத்தில் இரக்கம் தோன்றியது.

''என்கிட்டே என்ன தயக்கம் பெரியப்பா'' என்றான்.

''நானும் நினைக்கறேம்ப்பா! ஆனா என்ன செய்ற துன்னு தெரியலயே!'' என்றார்.

அவன் சொன்னான்!

தான் இதுவரை நினைக்கத் தயங்கிய விஷயத்தை உமாசங்கர் தடாலடியாகக் கேட்டு விட்டான் என்று ஞானமுத்துவுக்குப் புரிந்தது.

திணறிக் கொண்டு நின்றார்.

## 13

''ஏன் பெரியப்பா!'' என்றான் உமாசங்கர்.

''சொல்லுப்பா!'' என்றார் ஞானமுத்து.

''யாழினியைப் பற்றி ப்யூச்சர் பிளான் என்ன?'' என்றான்.

கேட்டதற்குப் பிறகு அவனுக்குள்ளேயே ஆச்சரியம் கிளம்பியது. இப்படியெல்லாம் ஞானமுத்து பெரியப்பா விடம் கேட்க வேண்டுமென்று அவன் நினைத்ததே யில்லை. ஆனால் ஆழ் மனதில் இருந்த கேள்வி வெளி வருகிறது போலும் என்று எண்ணிக் கொண்டான்.

ஞானமுத்து நின்று அவனைத் திரும்பிப் பார்த்தார். பிறகு திரும்பி நீச்சல் குளத்தை வெறித்துப் பார்த்தார்.

''தெரியலை தம்பி! இந்தப் பையன் மட்டும் இல்லாம இருந்தா, இந்த சொத்து பத்து இல்லாம இருந்தா நானே அவளுக்கு இன்னொரு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி வைப்பேன்'' என்றார்.

ஞானமுத்து பெரியப்பாவிடம் இப்படி ஒரு பரந்த மனம் இருக்குமென்று அவன் நினைக்கவேயில்லை.

''கிரேட் பெரியப்பா! நீங்க இப்படி யோசிப்பீங்கன்னு நான் நினைக்கவேயில்லை'' என்றான்.

''எப்படி?''

''யாழினிக்கு ரெண்டாம் கல்யாணம் பண்ணலாம்னு யோசிக்கறீங்களே.. அதுவே பெரிய விஷயம் இல்லையா?'' என்றான்.

''ஆமா..! தம்பி.. ஆனா.. சொத்துச் சிக்கல் இருக்கு! வர்றவன் இந்தக் குழந்தையை எப்படி நடத்துவானோ.. தெரியலியே! எங்களுக்கும் வயசாச்சு..'' என்றார்.

''ம்..!'' என்று உள்வாங்கிக் கொண்டான்.

அவன் மேலும் கேட்டான். ''யாழினி.. என்ன சொல்லுது?'' என்று.



''அந்தப் பொண்ணுகிட்டே இதைப் பற்றிப் பேசவே முடியலியேப்பா! எப்படி ஆரம்பிக்கறது. ஆனா.. அவங்க வீட்ல அது பற்றிச் சொல்லியிருக்காங்க போல இருக்கு. அப்ப 'எனக்கு எதுவும் வேண்டாம். எங்க மாமனார், மாமியாரை நான் அப்பா, அம்மா மாதிரிப் பாத்துக்கறேன். அவங்களும் என்னைப் பொண்ணு மாதிரி நினைக் கறாங்க..! என் பையன் நல்ல விதமா கொண்டு வந்தாப் போதும்னு சொன்னாளாம்''' என்றார்.

உமாசங்கர் உள்ளம் உருகினாற் போல உணர்ந்தான்.

''அது மட்டுமில்லப்பா! ஏற்கனவே நடந்த கல் யாணமும்..'' என்று ஏதோ சொல்ல வந்தவர்.. இரண்டாம் முறை யோசித்தவர் போல நிறுத்திக் கொண்டார்.

முகத்தில் சொல்லவொண்ணாத வேதனை படிந்தது. அவர் வேதனை பார்த்த உமாசங்கர் மேற்கொண்டு பேச்சை வளர்க்கவில்லை. பேச்சை வேறு திசை நோக்கித் திருப்பினான்.

''பாக்கலாம்.. பெரியப்பா! யோசிக்கலாம்! என்ன இருந்தாலும் இளவயசுப் பொண்ணு..! அதோட எதிர் காலத்தையும் யோசிக்கணும் இல்லே! எங்க ருத்ராக்கா செய்த கூத்தெல்லாம் தெரியும் இல்லே! அவளுக்கும் கூட ஒரு நல்ல மாப்பிள்ளை விஷ்ணுசாரதி மச்சான் கிடைச்சாரு. நம்ம யாழினிக்குக் கிடைக்காமலா போயி டும். நான் விஷ்ணுசாரதிகிட்டே பேசறேன். அவரோட பிரண்ட்ஸ் வட்டமும் அவரைப் போலத்தான். ரொம்ப நல்லவங்க..! கண்டிப்பா.. ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைப்பாரு..'' என்றான்.

''அது சரிப்பா! யாரு யாழினிகிட்டே பேசறது?'' என்றார்.

''நான் பேசறேன் பெரியப்பா! இப்பத்தான் யாழினி என்கிட்டே கொஞ்சம் ப்ரீயாப் பேசறாப்பல...'' நான் பேச றேன்..'' என்றான்.

ஞானமுத்துவின் மனதில் பல நாட்களுக்குப் பிறகு ஒரு நிம்மதியுணர்வு தோன்றியது.

உமாசங்கர் தங்கள் கம்பெனிகளின் பொறுப்பில் வந்து சேர்ந்தவுடனே எல்லா நிலைகளிலும் மாற்றம் ஏற்பட் டிருந்ததை உணர முடிந்தது.

எவ்வளவுதான் கண்கொத்திப் பாம்பு போலப் பார்த் தாலும் தன்னை ஏமாற்றி விடுவார்கள். ''வயதில் பெரிய வர்தானே. கவனிக்க மாட்டார் என்று நினைப்பார்கள். அம்பலவாணரும் வந்து பார்ப்பதற்குப் பிரியப்பட வில்லை.

''பாக்க முடிஞ்சாப் பாரு! இருக்காட்டி வந்துடு'' என்றார்.

ஞானமுத்துவுக்கு இவ்வளவு கஷ்டப்பட்டு உருவாக்கி வளர்த்ததற்குப் பிறகு ''விற்பதா என்ற எண்ணம்'' அதனால்தான் மெல்ல மெல்லப் பேசிப் பேசி மகனை அனுப்பி வைக்கச் சம்மதிக்கச் செய்தார்.

அம்பலவாணரின் மகன் என்பதால் கண்டிப்பாக மருமகளுக்குப் பாதுகாப்பு இருக்கும் என்று எண்ணித் தான் மருமகளையும் அனுப்பினார்.

வந்த ஓரிரு நாட்களிலேயே எதையும் நேரடியாகச் செய்பவன் உமாசங்கர் என்று புரிந்தது.

முதலில் கூடித் தானும் அரை நாள் போய் விட்டு வரலாம் என்று எண்ணியிருந்தார். ஆனால் இப்போது நிம்மதியாக விட்டிருந்தார். உமாசங்கர் இப்போது யாழினி



பற்றியும் யோசிப்பது கண்டு இன்னும் மனதில் மகிழ்ச்சி கூடியது.

உமாசங்கர் எதிர்பார்க்காத ஒன்றும் இருந்தது. ஞான முத்து மிகவும் ஆவலாக அவனிடம் திரும்பினார்.

''ஏன் தம்பி! நீயே அதைப் பற்றிப் பேசிப் பாரேன். பொண்ணோட நண்பர்கள்னாலே கொஞ்சம் ப்ரீயாப் பேசுவாங்க.. இல்லே..!'' என்றார்.

உமாசங்கர் இதை எதிர்பார்க்கவில்லை. ''இல்ல.. பெரியப்பா! இது கொஞ்சம் டெலிகேட்டான விஷயம்.'' என்றான் தயக்கத்துடன்.

''டெலிகேட்டான விஷயம்தான்..! ஆனா.. நாங்க இதைப் பத்திப் பேச முடியாதில்லே! நீ தொழிலை நிர்வாகம் செஞ்சு பழகினவன். எதை எப்ப எப்படி யார் கிட்டே பேசணும்னு தெரிஞ்சவன். அதனால் எனக்கென் னவோ.. நீ தான் யாழினிகிட்டே பேச முடியும்னு தோணுது'' என்றார்.

அவன் யோசிப்பது கண்டு அவர் கெஞ்சலாகப் பார்த்தார்.

''தம்பி! ஒண்ணும் அவசரமில்லே! மெது மெதுவாப் பேசி அவ மனசு தெரிஞ்சு சொல்லுப்பா! பேசிப் பாத்த தாத்தான் அவ மனசுல என்ன இருக்கு..? மேற்கொண்டு என்ன செய்யலாம்னு நாம யோசிக்கலாம்'' என்றார்.

ஒரு மாமனாராக இல்லாமல் ஒரு தந்தையைப் போல அவர் யோசிப்பதே அவனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதிலும் இப்படிக் கெஞ்சுகிறாரே என்று தோன்றவும் மனம் இளகியது.

''சரிங்க! பெரியப்பா நீங்க ஒண்ணும் வொரி பண் ணிக்காதீங்க.! நான் என்னால என்ன செய்ய முடியும்னு

பாக்கறேன்'' என்றான். ஆனால் அப்போது அவனுக்குத் தெரியவில்லை. ''இந்தப் பிரச்சினையில் ஏண்டா இறங்கினோம்?'' என்று பின்னொரு நாளில் வருத்தப்பட நேரிடும் என்று.

★ ★ ★

நீலகிரி மலைப் பகுதி!

சிற்றூருக்கு அருகேயுள்ள ஒரு சிறிய மலைப் பகுதி கிராமம்.

ஞானமுத்துவின் நண்பருக்கு அங்கே எஸ்டேட் இருந்தது. பல நாட்களாக வருந்தி வருந்தி அழைத்துக் கொண்டிருந்தார்.

''சரி.. இந்த முறை வரோம்'' என்றார்.

ஜனவரி மாத இறுதியில் ஒரு இரண்டு மூன்று நாட்கள் இருந்து விட்டு வரலாம் என்று கிளம்பினார்கள்.

ஞானமுத்து அன்னபூரணி இரண்டு பேரும் வற்புறுத்தி அழைக்கவே யாழினியும் குழந்தையுடன் புறப்பட்டான்.

ஞானமுத்து ''தம்பி! அட்லீஸ்ட் நீ சண்டே அன்னைக் காவது வாப்பா!'' என்று வருந்தி அழைக்கவும் உமாசங்கர் வேறு வழியில்லாமல் ஒத்துக் கொண்டான்.

ஞாயிற்றுக்கிழமை ஒன்பது மணியளவில் அங்கே போய்ச் சேர்ந்தான்.

எல்லாருமாக கிம்ஸ் பார்க் போனார்கள். அருண் காந்திக்கு அவனைப் பார்த்தவுடன் மிகவும் மகிழ்ச்சி.

''அங்கிள்... அங்கிள்'' என்று எம்பி எம்பிக் குதித் தான்.

பெரியவர்கள் எல்லாரும் ஒரு பக்கம் அமர்ந்து கொண்டார்கள். யாழினியும், ஞானமுத்துவின் நண்பர்கள்



மருமகளுமாக நிறைய தின்பண்டங்கள் கொண்டு வந்திருந்தார்கள்.

வெகு அருகில் குரங்குகள் வந்து போயின. குட்டிக் குரங்குகள் பார்க்க மிகவும் அழகாக இருந்தன.

நண்பர் வீட்டிலும் ஒரு பத்து வயதுப் பையன் இருந் தான். அவன் வளைத்துக் கொண்டு அருண்காந்தியுடன் பார்க்கச் சுற்றி வந்தான் உமாசங்கர்.

குழந்தைகளுக்குச் சரியாக அவன் விளையாடுவதை அவர்கள் எல்லாரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

பிற்பகல்!

விருந்து முடிந்து எல்லாரும் ஓய்வெடுக்கையில் ஞானமுத்துவின் மருமகள் லேகா.

''யாழினி! பின்னாலே நிறைய பூச்செடிகள் இருக்கு! அப்படியே எஸ்டேட்டுக்குள்ளே வேண்ணாப் போயிட்டு வா..!'' என்றாள்.

ஞானமுத்துவும் உமாசங்கரிடம் திரும்பி ''ஏப்பா! நீதான் கூட்டிட்டுப் போயேன்'' என்றார்.

உமாசங்கரும் யதார்த்தமாகத்தான் கிளம்பினான்.

விதவிதமான ரோஜாப் பூக்களைப் பார்த்து மகிழ்ந் தார்கள் அருண்காந்தி.

''அங்கிள்... இது என்ன பூ! இது என்ன பூ!'' என்று துளைத்து எடுத்தான்.

உமாசங்கரும் பொறுமையாகவே பதில் சொன்னான். யாழினிக்கு கூட அருண்காந்தி அவனைப் படுத்து கிறானோ என்று தோன்றியது. அவன் முகத்தை ஜாடை யாகப் பார்த்தாள். ஆனால் அவன் குழந்தையிடம் ஆழ்ந்து

பேசும்விதம் பார்க்கும்போது உண்மையாகவே அவனுக்கும் அருண்காந்தியைப் பிடிக்கிறது என்று புரிந்தது.

எஸ்டேட் ஓரமாகப் போனார்கள்.

''கொஞ்சம் உள்ளே போலாமா?'' என்று கேட்கையில் அங்கே வேலை செய்து கொண்டிருந்தவர்களில் ஒரு பெண்மணி குழந்தையை நோக்கிக் கை நீட்ட அருண்காந்தியும் அந்தப் பெண்மணியிடம் தாவிக் கொண்டான். அவரது தலைக் கட்டு அவனுக்கு வேடிக்கையாக இருந்தது போலும்.

உமாசங்கரும், யாழினியும் சற்று உள்ளே போனார்கள். பிறகு மெல்லத் திரும்பி வந்தார்கள். கிட்டத்தட்ட எஸ்டேட் பாதை முடிவுக்கு வருகிற போதுதான் அவள் கவனித்தான்.

''யாழினி..! நில்லுங்க!'' என்றான்.

யாழினி புரியாதவள் போல் நின்றாள்.

யாழினியின் புடவையின் இடுப்புப் பகுதியில் ஒரு அட்டை இருந்தது. இன்னும் கொஞ்சம் தாமதித்தால் அவள் இடுப்புப் பகுதியில் ஏறும் அபாயம் தெரிந்தது.

''யாழினி! அட்டை! அப்படியே நில்லுங்க'' என்றான் உமாசங்கர்.

அட்டை தொற்றிக் கொண்டால் நெருப்பை அருகிலே காட்டினால் 'பட்'டென்று விழுது விடும்'' என்று எங்கோ படித்திருந்தான். ஆனால் நெருப்பு புடவையில் பற்றிக் கொள்ளும் அபாயம் இருந்தது.

சட்டென்று அருகில் இருந்த ஆணிடம் கேட்டான். ''மூக்குப் பொடி போடுகிறவங்க யாராவது இருக்காங்களா?'' என்று.



அதற்குள்ளாக புரிந்து கொண்ட பெரியவர் மற்றொரு பெரியவரிடம் மூக்குப் பொடி கேட்டு வாங்கிக் கொண்டு ஓடி வந்தார்.

அதை உமாசங்கரிடம் கொடுத்து பக்கத்திலே ஒரு மறைவிடம் இருக்குது. ''அப்பா! அங்க போயிருங்க!'' என்றார்.

''யாழினி.. ஐ ம் சாரி! என்னை ஒரு டாக்டர் மாதிரி நினைச்சுக்குங்க..'' என்றபடி அவள் சேலையை விலக்கினான். பட்டென்று மூக்குப் பொடியைத் தூவினான். அட்டை மெல்ல நெளிந்தபடி விழுந்தது. அந்த இடைவெளியில் சற்றே கீழிறங்கியது சேலை. அந்தப் புடவையின மேலாக சிகரெட் நெருப்பால் சுடப்பட்ட அந்த அடையாளத்தைப் பார்த்தான்.

அதிர்ந்து போனான்.

கீழே விழுந்த அட்டையின் மேல் அந்தப் பெரியவர் கொண்டு வந்து கொடுத்திருந்த தீப்பெட்டியிலிருந்து குச்சியை எடுத்து உரசி தீயைக் காட்டிக் கொண்டே அவன் கண்கள் அவள் புடவை திருத்துவதை ஆராய்ந்தன.

கழுத்து வளைவில், ஜாக்கெட் வளைவில் ஓரத்தில் கூட அந்த மாதிரி ஒரு வடு தெரிந்தது.

உமாசங்கர் 'வெடுக்'கென்று திரும்பி நின்று கொண்டான்.

மனம் அதிர்ந்து போனது. அப்போது தோன்றியது. 'இந்தப் பெண்ணின் மணவாழ்க்கையில் ஏதோ அதிர்ச்சிகரமான சம்பவங்கள் இருந்திருக்கின்றன என்று.'

உமாசங்கருக்கு அதற்கு மேல் அங்கே இருப்புக் கொள்ளவில்லை. மாலை விடை பெற்றுக் கொண்டான்.

இரவின் தனிமையில் தன் வீட்டில் சிந்தனையில் ஆழ்ந்தான். எப்போதாவது சிகரெட் பிடிப்பான் அன்றைக்குத் தேவை இருந்தது போலும்.

சிகரெட்டைக் கையில் வைத்தபடியே மொட்டை மாடியில் நடந்து கொண்டிருந்தான். நான்காவதாகத் திருமணம் செய்து கொண்டு நம்பிக்கையில்லாமல் நடமாடிக் கொண்டிருக்கிற தன் சகோதரி நினைவுக்கு வந்தாள்.

இதுநாள் வரை யாழினி கலாதருடன் எப்படிப்பட்ட மணவாழ்க்கை வாழ்ந்திருப்பாள் என்றெல்லாம் அவன் யோசித்ததே இல்லை! அவனுக்கு அது அவசியமானதாகவும் தோன்றியதில்லை.

இளம்பெண்! ஒரு குழந்தையோடு கணவனை இழந்து நிற்கிறாள் என்ற அளவில் அவள் மேல் அவனுக்கு ஒரு இரக்கம். அனுதாபம் இருந்தது. ஆனால் அவளது மணவாழ்க்கையில் இப்படி ஒரு பகுதி இருக்கும் என்பது அவன் எதிர்பாராதது.

யோசனையுடன் நிற்கையிலேயே ''ஷ்.. என்று முணகினான் சிகரெட்டின் நுனி அவன் நடுவிரலைச் சுட்டது. கையை உதறிக் கொண்டான்.

உடனே வாஷ்பேசினின் குழாயைத் திறந்து விட்டு விரலை நீட்டினான். இனிமேல் அது கொப்பளிக்காது என்று தெரியும். ஆனால் உடம்பில் அந்த மாதிரி நிறைய யாழினி வாங்கியிருக்கிறாள் என்று நினைவு வர மனதில் வலித்தது.

மறுநாள் இரவு!

அலுவலகத்திலிருந்து வந்தவுடனே நேராக ஞானமுத்துவிடம் பேசினான். அவன் கேட்ட கேள்வியைப்



பார்த்து ஞானமுத்துவின் முகம் போன போக்கும். கண்களில் தெரிந்த சொல்லவொண்ணாத வேதனையும் அவனை என்னவோ செய்தன. ஆனால் பிடிவாதமாக நின்றான்.

ஞானமுத்து ஒரு பெருமூச்சு விட்டு விட்டுப் பேசத் தொடங்கினார்.

## 14

''தம்பி! கலாதருக்கு இப்படி ஒரு பக்கம் இருக்கும்னு நான் நினைக்கவே இல்லை! எப்பவுமே என் பேச்சை மீற மாட்டான். ஆனா உள்ளுக்குள்ளே ஒரு எதிர்ப்பு இருந்துகிட்டே இருக்கும் போல இருக்கு!'' என்றார்.

உமாசங்கருக்குப் புரிந்தது.

பெரும்பாலும் மனதளவில் கோழைகள் உள்ளுக்குள்ளே பொருமிக் கொண்டே இருப்பார்களே ஒழிய எதிர்ப்பை வெளிப்படையாகக் காட்ட மாட்டார்கள். அதிலும் அப்பாவுடைய சொத்து பூராவும் சுயமாகச் சம்பாதித்தது. பூர்வீகச் சொத்து என்று ஏதோ ஒரு வீடு மட்டும் இருந்தது. அதுவும் கிராமத்தில் என்று தெரியும்.

ஞானமுத்து யாழினியைப் பெண் பார்த்து விட்டு வந்து ''இவள்தான் பெண்'' என்று சொன்னவுடனே கலாதருக்கு கோபம்.

யாழினியை அவனுக்குப் பிடித்துத்தான் இருந்தது. ஆனால் ''இவள் தான் பெண்'' என்று அப்பா முடிவு செய்ததுதான் அவனுக்குப் பிடிக்கவில்லை.

அப்பா அப்படியொன்றும் அவன் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்காதவர் அல்ல. ஆனால் கருத்துக் கொடுத்தால் அவருக்குக் கோபம் வந்து விடுமோ என்ற அச்சம் அவனுக்குள்ளே இருந்தது. அதனால் அப்பாவை மறுத்துப் பேச மாட்டான்.

ஞானமுத்துவுக்கும் தன் மகன் எப்போதுமே தன் சொல் கேட்பவன் என்ற எண்ணம்தான் இருந்ததே தவிர அவனுக்குள் இப்படியொரு எதிர்ப்புணர்வு இருக்கும் என்ற எண்ணமே தோன்றவில்லை.

கலாதருக்கு உள்ளூர என்ன வருத்தம் என்றால் தன் - எல்லாரும் பெரிய இடங்களில் இருந்து பெண் எடுத் திருக்கிறார்களே. தனக்கு மட்டும் அப்பா இப்படி கீழ் நடுத்தரக் குடும்பத்தில் இருந்து பெண் எடுத்து விட்டாரே என்ற கோபம்.

அந்தக் கோபத்தையெல்லாம் யாழினியிடம் காட்டி யிருந்தான்.

ஞானமுத்து வருத்தத்தோடு அதைப் பகிர்ந்து கொண்ட போது உமாசங்கருக்கும் பாவமாகத்தான் இருந்தது.

குழந்தை உன்னை சமயத்தில் மருமகனா அனுப்பி வைத்ததையும், அவன் திரும்பி வந்ததற்குப் பிறகு என்னென்ன நிகழுமோ என்ற கவலையிலேயே இருந்த தையும் விதி வேறு விதமாக முடிவு கட்டியும் அவர் ஆழ்ந்த வருத்தத்தோடு பகிர்ந்து கொண்டபோதுதான் அவன் மறுபடியும் சொன்னான்.

''யாழினி பாவம் பெரியப்பா! வாழ்ந்த வாழ்க்கையும் சரியில்லை. இப்ப வாழ்ந்துகிட்டு இருக்கிற வாழ்க்கையும் முழுமையாவதில்லை. கண்டிப்பா.. நீ மேரேஜ் பண்ணிட லாம்ப்பா!'' என்றான்.

''பண்ணிடலாம்ப்பா! நானும் அதைத்தான் யோசிக் கறேன். ஆனா.. அந்தப் பொண்ணு வேண்டாகுது. ஜாடை மாடையா அதுகிட்டே பேசினோம். நான் இப்பவே நிம்மதியாத்தான் இருக்கேன். என் மாமனாரும், மாமி யாரும் அப்பா, அம்மாவை என்னை பாத்துக்கறாங்க. இந்த வாழ்க்கையே போதும்னு ஒரே பிடிவாதமா சொல்றாளாம்'' என்ன செய்யலாம்'' என்றார்.

உமாசங்கர் ஆழ்ந்த சிந்தனையுடன் கேட்டுக் கொண் டான்.

''அதோட பாயிண்ட்ல அது நியாயமா இருக்கலாம். ஆனா.. நமக்கு அது நியாயமில்லை. பாப்போம்! பெரி யப்பா! விஷ்ணுபாரதி மச்சான்கிட்டே பேசறேன்.''

ஞானமுத்துவும் அதை ஒத்துக் கொண்டார்.

அன்றிரவே விஷ்ணுபாரதியிடம் பேசினான் உமா சங்கர்.

''பாரு உமா! இன்னும் ஒரு ரெண்டு மூணு மாசம் போகட்டும். அதுக்கப்புறம் அதைப் பற்றிப் பேசுவோம். நீயும் அதுக்குள்ளே அந்தப் பொண்ணுகிட்டே நல்ல பிரண்ட்ஷிப் ஏற்படுத்திக்கோ. நீ சொன்னாக் கேட்கற அளவுக்கு அந்தப் பொண்ணு உன்கூட பழகட்டும் அப் புறம் ஏற்பாடு செய்வோம்'' என்றான்.

உமாசங்கர் கொஞ்சம் மன நிறைவட்டம்தான்.

யாழினியின் வாழ்க்கை குறித்த சரியான பாதையில தான் நாம் போகிறோம் என்ற நிறைவு அது. ஆனால் அன்றிரவு திடீரென்று விழித்தெழுந்து அமர்ந்தான்.

ஒரு தீப்பந்தம் யாழினியின் முகம் நோக்கிப் போனது போலவும் யாழினி அதைப் பார்த்து அலறுவது போலவும் ஒரு தோற்றம் மனதுக்குள் தோன்ற வேர்த்து விறு விறுத்து அமர்ந்து விட்டாள்.

உறக்கம் வர வெகு நேரமானது.

* * *

பெற்றோர் இருவரும் அதிர்ந்து போய் அமர்ந்திருப்பதை வருத்தத்துடன் பார்த்தான் உமாசங்கர்.

''ஆமாப்பா! ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கு.. யாழினி!'' என்றார் இரக்கத்துடன்.

''இப்படி ஒரு பிள்ளையா அதுவும் ஞானமுத்துவுக்கு! அவன் யாருக்கும் ஒரு கெடுதலும் பண்ண மாட்டானே!'' என்று புலம்பினார் அம்பலவாணர்.

அம்மாவும், அப்பாவும் மாற்றி, மாற்றிப் புலம்பிக் கொண்ட பிறகு தேற்றிக் கொள்வதை அன்புடன் பார்த்தான் உமாசங்கர்.

சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்த அம்பலவாணர் சொன்னார்.

''ஏம்ப்பா! ஏதோ ஒரு ரேட் போட்டு பூராத்தையும் வேண்ணா அவனுக்கே குடுத்துடு'' என்று.

உமாசங்கர் சிந்தனையுடன் தலையாட்டினான். ''வேண்டாம்ப்பா! அது சரி வராது'' என்று.

வேண்டா வெறுப்பாக அந்தத் தொழில்களை பார்க்கப் போன மகன் இப்படிச் சொல்லவும் அம்பலவாணருக்கே ஆச்சரியமாகப் போனது.

''ஆமப்பா! போனது... போயாச்சு! தொழில்களை நிமித்திக் குடுப்போம். அது மட்டுமில்லப்பா! பூராச்



சொத்தும் அவங்களதுண்ணா வர்றவன் பணத்துக்காக வர்றவனா இருந்தா யாழினி மறுபடியும் கஷ்டம்தான் படும்! நாம ஒரு குடும்பம் துணைக்குடுக்கோம்ன்னா அது அவுங்களுக்கும் நல்லதுப்பா!'' என்றான்.

அம்பலவாணர் சரியென்று தலையாட்டினார். ''ஆமப்பா! அதுவும் கரெக்ட்தான்'' என்றார்.

அடுத்தபடியாக விஷ்ணுபாரதியிடம் பேசினான்.

விஷ்ணுபாரதி உடனடியாக ''முதல்லே யாழினி கிட்டே பேசுங்கப்பா!'' என்றான்.

உமாசங்கர் உடனடியாக அதை மறுத்தான்.

''வேண்டாம் யாழினி எடுத்தவுடனே மறுத்துடுச் சுன்னா.. நாம முயற்சியே பண்ண முடியாது. நல்ல மாப்பிள்ளை கிடைச்சா.. அதுக்கப்புறம் பேசிக் கன்வின்ஸ் பண்ணலாம்..'' என்றான்.

விஷ்ணுபாரதி ''எனக்கென்னவோ இது அவ்வளவுக்கு சரி வரும்னு தோணல்லே..'' என்றான்.

''விடுக.. மச்சான்..'' என்றான் அவசரமாக.

விஷ்ணு ஏனோ உமாசங்கரை உற்று உற்றுப் பார்க்கறாற் போல இருந்தது. உமாசங்கர் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

அலுவலகத்தில் யாழினியிடம் இயல்பாகவே இருந்தான். ஆச்சரியம் என்னவென்றால் யாழினியும் இயல்பாகவே பழகினாள்.

''யாழினி! அந்த சர்வீஸ் டேக்ஸ் மேட்டர் என்னன்னு பாத்துடுங்க'' என்றான்.

''பாத்தர்றேன்'' என்றாள்.

போன வாரத்தில் சவிதா என்று ஒரு பி.ஏ.வையும் அவளுக்காக நியமித்திருந்தார்கள்.

சவிதா மிகவும் மிகவும் சுறுசுறுப்பாகவும், சூட்டிப் பாகவும் இருந்தாள்.

யாழினி கேட்கிற விஷயங்களைக் கேட்பதற்கு முன் பாகவே கொண்டு வந்து கொடுத்தாள். அதனால் யாழினி பிற்பகல் செல்வதற்குள்ளாகவே பெரும்பாலான முக்கியமான வேலைகளை முடித்துவிட்டுச் செல்வாள்.

சவிதா அதற்குப் பிறகு செய்ய வேண்டிய தயாரிப் புக்களைச் செய்து முடிப்பாள்.

''யாழினி! எப்பவும் வேலை வேலைன்னு இருக்கக் கூடாது'' என்றான் உமாசங்கர் திடீரென்று.

எதற்காக இப்படிச் சொல்கிறான் என்று தெரியாமல் விழித்தாள் யாழினி.

''இல்லே! உங்க மதர் பெரியம்மாகிட்டே ரொம்ப சங்கடப் பட்டாங்களாம். யாழினி வர்றதே இல்லைன்னு'' என்றான்.

''ஓ..'' என்றாள் யாழினி. பிறகு வேதனை படிந்த முகத் துடன் அவனைப் பார்த்துச் சொன்னாள்.

''போகணும்தான்! எனக்கும் அவங்களைப் பாக்க ணும்னுதான் இருக்கு! ஆனா.. என்னைப் பாத்தா.. அதுக் கப்புறம் அம்மா ரெண்டு மூணு நாள் சரியாத் தூங்கற தில்லையாம்'' என்றாள் வருத்தம் தோய்ந்த குரலில்.

''இருவரும்தானே! பொண்ணோட எதிர்கால் இனி எப்படி இருக்குமோங்கற கவலை இருக்கும்தானே!'' என்றான்.



யாழினி பதில் எதுவும் சொல்லவில்லை. அமைதி யாகவே இருந்தாள்.

''ஏன்.. யாழினி! நீங்க வேண்ணா இன்னைக்கு அம்மா வீட்டுக்குப் போயிட்டு வாங்க! நான் சீக்கிரமே கிளம்பிப் போய் அருணைப் பாத்துக்கறேன். போன வாரமெல்லாம்.. அருண் கூட இருக்கவேயில்லை'' என்றான்.

யாழினி நன்றியுணர்வு தோன்ற அவனைப் பார்த்தாள்.

''சரி!'' என்றாள்.

போனதற்குப் பிறகு ''ஏண்டா.. வந்தோம்'' என்பது போல் ஆகி விட்டது யாழினிக்கு.

''அம்மா.. உன்னை இப்படி வச்சுகிட்டு எப்படிம்மா.. நாங்க அடுத்தது ரெண்டுக்கும் மாப்பிள்ளை பார்ப்போம்'' என்றார்கள்.

''அம்மா! நான் நல்லா இருக்கேன். எனக்குத்தான் அருண்காந்தி இருக்கானே! வேறென்ன வேணும்? நீங்க புவனாவுக்கும், மாப்பிள்ளை பாருங்க!'' என்றாள்.

யாழினியின் அப்பா இடையில் புகுந்து மனைவியைக் கண்டித்தார்.

''அவதான். தொழில்ல ட்ரெயினிங் எடுக்கறாளே'' சும்மா.. அவ மனசைப் போட்டு வருத்தாதே..'' என்றார்.

அம்மா அதோடு பேச்சை மாற்றவும் சற்று நேரம் தங்கள் குடும்பத்தைப் பற்றியெல்லாம் சொல்லிக் கொண் டிருந்தாள்.

உமாசங்கரைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து சொன்னாள்.

''நல்லதாப் போச்சு! உனக்கு ட்ரெயினிங் குடுக்கற துக்கு இப்படி ஒருத்தர் கிடைச்சாரே. அவரை ஒரு நாள் கூட்டிட்டு வா'' என்றார்.

மேலும் சற்று நேரம் கழித்து விட்டு வந்தவள் தங்கள் வீட்டுக் காம்பவுண்டுக்குள் கார் நுழைந்தவுடனே ஆச் சரியப் பார்வை பார்த்தாள்.

மாமனார், மாமியார் பார்வையாளர்களாக அமர்ந்திருக்க அருண்காந்தி தன் பிஞ்சுக் கைகளால் ஒரு சிறிய பந்து எடுத்து விட, அவனுடைய விளையாட்டு பேச்சை வைத்துக் கொள்ள உமாசங்கர் தடுத்து விளையாடினான்.

சமையற்காரர்களும், வேலைக்காரர்களும் ஃபீல்டிய ருக்கு நின்றார்கள்.

யாழினிக்கு வாய் கொள்ளாச் சிரிப்பு. வேலைக்காரி யிடம் ஹேண்ட்பேக்கைக் கொடுத்து உள்ளே வைக்கச் சொல்லி விட்டுத் தானும் வேடிக்கை பார்க்க நின்றாள்.

அரை மணி நேரம் ஓடியதே தெரியவில்லை! மகன் ஓடி ஓடி ரன் எடுப்பதை மிக மகிழ்ச்சியோடு பார்த்துக் கலகலவென்று சிரித்தான்.

அந்தக் காட்சி மாமனார், மாமியார், உமாசங்கர் வேலைக் காரர்கள் என்று எல்லாரும் நெகிழ்ச்சியுடன் கவனிப்பதை அவள் அறியவில்லை.

''சரிடா! அங்கிள்தான் தோத்துப் போனேன்'' என்று கடைசியில் சரணடைந்தான் உமாசங்கர்.

''சரி.. டிரஸ் மாத்திட்டு வா!'' என்று யாழினியிடம் நிக்க.

''வேண்டாம்.. அங்கிள்! நீயே பண்ணி விடுக'' என்று பிடிவாதம் பிடித்தான்.

''சரி.. யாழினி! டிரஸ்சைக் கொண்டு வாங்க'' நானே.. பண்ணிவிடறேன்'' என்றான் உமாசங்கர்.



யாழினி வேறு வழியில்லாமல் உமாசங்கரின் பங்களா வுக்குப் போனாள்.

வேலைக்காரர்களின் உதவியோடு அவன் உடல் கழுவி உடை மாற்றி எல்லாவற்றையும் தானே செய்தான் உமாசங்கர்.

பவுடரைக் கொட்டித் தேய்த்து விட்டு அழுந்த ஒரு முத்தம் கொடுத்தான்.

''சரி.. வா! சாப்பிடப் போலாம் அங்கிள் டீ சாப் பிடட்டும்'' என்று யாழினி அழைக்க.

''நான் வர்லே.. போ! நான் அங்கிள் கூட வர்றேன்'' என்று அவன் மறுத்தான்.

''சரி.. யாழினி. நான் டிபன் சாப்பிட அங்கயே வர்றேன். நீங்க அங்கயே போய்த் தயார் பண்ணுங்க'' என்றான்.

யாழினி தனியாக அந்த பங்களாவுக்கு நடந்து போய்க் கொண்டிருக்கையில் திடீரென்று தனிமை உணர்வு தோன்றியது. இத்தனை நாள் தன்னை விட்டுப் பிரியாத மகன் திடீரென்று உமாசங்கருடன் ஒட்டிக் கொண்டு 'நான் வர்லே' என்றவுடன் ஒரு பக்கம் காலியானாற் போல உணர்ந்தாள்.

உறவுக்காரப் பெண் ஒருவர் அடிக்கடி சொல்வார்.

''குழந்தைங்க.. வளர்ந்து நாங்க தனியாளன்னு நடந்துக்க ஆரம்பிக்கும்போது நமக்குள்ளே ஒரு வலி வரும் பாருங்க. அது லேசான விஷயம் இல்லே!'' என்று.

முதல் முறையாக அவளுக்குள் தோன்றியது. இன்னும் பத்தாண்டுகள், பதிமூன்று, பதினாறு வயதில் மெதுவாக விலகுவான். அப்படி விலகும்போது வாழ்க்கையில் தனக்கு என்ன இருக்கும்.

'சே! எல்லாம் இந்த அம்மா கிளறி விட்டதால் வந்த கோளாறு' என்று தன்னைத் தானே மனதளவில் திட்டிக் கொண்டாள்.

அதே நேரம்! விஷ்ணுசாரதியிடம் இருந்து உமாசங்கருக்கு போன் வந்தது.

போனை எடுத்துப் பேசிய உமாசங்கரும் தன் மனத்தில் ஒரு வெறுமை தோணுவதாக உணர்ந்தான்.

## 15

அப்படி என்ன சொன்னார் விஷ்ணு?

''உமா..! உன் பிரண்டு யாழினிக்கு ஏத்த மாதிரி ஒரு ஆள் இருக்காரு! ட்ரை பண்ணுவமா?'' என்று தானே கேட்டார்.

உமாசங்கர்தானே அந்த முயற்சியைச் சொன்னார். முதலில் விஷ்ணுசாரதி இந்த முயற்சியில் இருக்கிற பிரச்சனைகளைத் தானே சொன்னார்.

கல்யாணமாகி இஷ்யூஸ் இல்லேன்னாக் கூடப் பரவால்லே! ஒரு குழந்தை இருக்கு! கொஞ்சம் நல்ல ஆளாப் பாக்கணும். அதுவுமில்லாம சொத்து வேற இருக்குப்பா! பணத்துக்காக வரவனா இருக்கக் கூடாது! அதுலயும் நீ ஜாடை மாடையாச் சொல்றதைப் பாத்தா பழைய மேரேஜ் லைப்பும் ஒண்ணும் அவ்வளவு சந்தோஷமா இல்லேங்கறே! பாத்துப் பொறுமையாப் பண்ணனும்ப்பா!'' என்று



பேசியது பூராவும் ஏதோ எச்சரிக்கை மாதிரித்தானே இருந்தது.

நியாயப்படி விஷ்ணு மச்சான் இவ்வளவு சீக்கிரம் ஒரு வரனைப் பார்த்ததற்காக நான் மகிழ்ச்சி தானே அடைய வேண்டும்? ஏன் உள்ளத்தில் இப்படிக் கவலை தோன்றியது.

நன்றாக விசாரிக்க வேண்டும். பேசிப் பார்க்க வேண்டும். யாழினி நிறையத் துன்பப்பட்டிருக்கிறது பாவம்! இனி மேலாவது வாழ்க்கையில் நிம்மதி கிடைக்க வேண்டும்.

முதலாவதாக யாழினி இந்த ஏற்பாட்டுக்கு சம்மதிக்க வேண்டும்.

சந்தோஷத்தைக் காட்டிலும் ஏனோ கவலையே தோன்றியது. இந்தக் காரியத்தை நடத்தி முடிப்பதில் மட்டுமல்லாமல், யாழினிக்கு இனிமேலாவது பிரச்சினைகள் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு தனக்கு இருக்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

விஷ்ணுவிடம் இரண்டு, மூன்று நாட்களில் ஒரு ஏழெட்டு தடவையாவது இதைப் பற்றிப் பேசினான். அந்த இளைஞனின் பெயர் கைலாஷ் என்று சொன்னான். கைலாஷைப் பற்றி பேசினான்.

பலர் மூலமாக விசாரித்தான். கொள்கைப் பிடிப்புள்ள பையன். பணத்தாசை இல்லாதவன் என்றெல்லாம் நன்றாகத் தெரிந்த பின்தான் அவனே சந்தித்தான்.

மனம் தெளிவான பிறகு அப்பா, அம்மாவிடம் பேசினான்.

''தம்பி! நீ சொல்றதெல்லாம் கேட்க நல்லாத்தான் இருக்கு. ஒரு குழந்தை வேற இருக்கேப்பா!'' என்று யோசித்தார் அம்பலவாணர்.

''அப்பா! பாவம்ப்பா! யாழினி..! ரொம்பக் கஷ்டப் பட்டிருக்கு..'' என்று அவன் மேலும் பேச அவரும் ''ம்.. சரி! நல்ல காரியம்..! செய்'' என்று பச்சைக் கொடி காட்டினார்.

மகன் சொன்ன இன்னொன்றும் அவன் மனத்தில் தைத்தது. ருத்ரா மாதிரி ஒரு பெண்ணுக்கு விஷ்ணுசாரதி மாதிரி ஒரு மனிதர் கிடைத்ததற்குப் பிறகுதானே குடும்பம் கொஞ்சமாவது தலை நிமிர்ந்து நடமாடுகிறது.

''உண்மைதான்! ருத்ராவுக்கே இப்படி ஒரு நல்ல வாழ்க்கை அமையும்போது யாழினி பாவம் பாவப்பட்ட பொண்ணு..'' என்ற எண்ணம் தோன்றியது.

ஓரளவு திருப்தியான பின்புதான் அவன் ஞானமுத்து விடம் விஷயம் சொன்னான்.

ஞானமுத்து உடனே ஏற்றுக் கொண்டார். அன்ன பூரணியும் அதை விட மகிழ்ந்தார்.

''ஏம்பா! சொத்து விஷயமெல்லாம்'' என்று இழுக்க..

''பெரியப்பா! கைலாஷ் ரொம்ப அருமையான பையன். என்னோடதான் அவங்க இருக்கணும். குழந்தையும் எங்களோட இருக்கலாம். என் குழந்தையாப் பாத்துக்கு வேன். இப்ப மாதிரியே அவங்க தொடர்ந்து கம்பெனிக்கே போகட்டும். அதுல வர்ற வருவாயில எனக்கு தம்பிடி கூட வேண்டாம். அது பூராவும் அந்தக் குழந்தைக்குத்தான் கறான். இந்தக் காலத்துல இப்படி ஒரு ஆள் எங்கே கிடைக்கும்?'' என்றான்.



''ஏம்ப்பா! நடிப்பாக் கிடிப்பா.. இருக்கப் போகுது'' என்றார் ஞானமுத்து.

''இல்லப்பா! விசாரிச்சேன்! கவர்ன்மெண்ட் உத்தி யோகம். ஆனா கை நீட்டி லஞ்சம் வாங்க மாட்டானாம்'' என்றான்.

''சரிப்பா! யாழினிகிட்டே எப்படிச் சொல்றது! நாம பாட்டுக்கு கட்டிடம் கட்டிகிட்டே போறோம். அந்தப் பொண்ணு சரின்னு சொல்லணும் இல்லே!'' என்றார்.

''பெரியப்பா! சும்மா என்னைப் பார்க்க வந்த மாதிரி வரட்டும். இரண்டு மூன்று தடவை வந்தப்புறம் நான் பேசறேன். விஷயத்தை ரொம்ப ஸ்மூத்தாக் கொண்டு போகணும்'' என்றான்.

''சரிப்பா...'' என்றார்.

முதல் முறையாக கைலாஷ் அலுவலகத்துக்கு வந்த போது இயல்பாக அறிமுகப் படுத்தினான்.

''யாழினி! என்னோட பெஸ்ட் பிரண்ட்ஸ்ல ஒருத்தர். ரொம்பக் கொள்கைப் பிடிப்புள்ளவன்'' என்றெல்லாம் அறிமுகப்படுத்தினான்.

''அப்படியா?'' என்பது போல விட்டேற்றியாகக் கேட்டுக் கொண்டாள் யாழினி.

அடுத்த வாரத்தில்!

மறுபடியும் வந்தான் கைலாசம். கைலாசம் வருகிற போதெல்லாம் உமாசங்கர் யாழினியை அழைத்து வைத்துக் கொண்டு ஏதோ ஒரு விவாதம் செய்வதையும், அவளைப் பேச வைக்க முயற்சிப்பதையும் கண்டவுடனே யாழினியின் மனத்துக்குள் சிந்தனை தோன்றியது.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து விஷ்ணுசாரதி வந்திருந்தான். விஷ்ணுசாரதியிடம் கலகலப்பாகப் பேசுவாள் யாழினி.

''என்ன அண்ணா! ருத்ரா அண்ணி இங்க வாறதுக்குப் பர்மிஷன் குடுத்துட்டாங்களா? ஒரு நாளைக்கு அவங்களைக் கூட்டிட்டு வாங்களேன்'' என்றாள்.

''வேண்டாம். யாழினி! அந்த விஷப் பரீட்சையெல்லாம் வேண்டாம். அப்புறம் ஷாப்பிங். அங்கே இங்கேன்னு உன்னை துளைச்சுகிட்டே இருப்பா'' என்றான் விஷ்ணுசாரதி.

உமாசங்கர் தலையிடாமல் பார்த்துக் கொண்டு இருந்தான். முகத்தில் லேசான புன்னகை.

''ஏம்மா..! யாழினி யாழ் வாசிக்கத் தெரியுமா? பேரு அழகா யாழினின்னு இருக்கே?'' என்றான்.

யாழினி கலகலவென்று சிரித்தாள். எப்போதாவது பார்க்க நேர்கிற அந்தக் காட்சியை உமாசங்கர் ரசித்துப் பார்த்தான்.

''அது சரி! இவரு உமாசங்கர்! அதுக்காக உமான்னு யாருக்காவது உடம்பிலே இடம் குடுத்திருக்காரா.. என்ன?'' என்றாள்.

உமாசங்கர் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது. யாழினி அதோடு நிறுத்தவில்லை.

''உங்க பேரு.. விஷ்ணுசாரதி..! அதுக்காக நீங்க என்ன யாருக்காவது தேர் ஓட்டறீங்களா என்ன?'' என்றாள்.

''என்னம்மா.. இப்படிச் சொல்லிட்டே! இவன் உமாவை சீக்கிரம் கண்டு பிடிக்கிறானோ.. இல்லியோ.. நான் ருத்ராவோட வாழ்க்கைத் தேரை ஓட்டிகிட்டுத்தானே இருக்கேன்.''



''அப்படிப் போடுங்க!'' என்றாள் யாழினி. ''சரண்டர் அண்ணா! ஆனா.. எனக்கு யாழ் வாசிக்கத் தெரியாது. அதோட யாழ்னு ஒரு வாத்தியமே இப்ப இல்லையே!'' என்றாள்.

''சரிம்மா! அப்ப நானும் தோத்தேன்..'' என்று புன்னகைத்தான் விஷ்ணுசாரதி.

''சரி.. ரெண்டு பேரும் தோத்துப் போய் ரொம்பக் களைச்சிருப்பீங்க!'' என்று அழைப்பு மணியை அழுத்தி வந்த ஆளிடம் எல்லாருக்கும் காபி கொண்டு வரச் சொன்னான் உமாசங்கர்.

விஷ்ணுசாரதி திரும்பி உமாசங்கரிடம் சொன்னான்.

''உமா! இனிமேலும் பொறுக்கறது நல்லால்லே! நீ கண்டிப்பா.. ஒரு உமாவைத் தேட வேண்டியதுதான்.''

''அது சரி! உங்க ரெண்டு பேரோட பொழுது போக்குப் பேச்சுக்காக நான் ஒரு உமாகிட்டேயோ, ரமாகிட்டயோ சிக்கிக்க முடியுமா?'' என்றான்.

''அது சரி! வாழ்க்கை முழுவதும் தனியா இருக்க முடியுமா! ஆணுக்கும், பெண்ணுக்கும் துணை வேணும்கறது இயற்கை நியதிப்பா! இல்லம்மா.. யாழினி..!'' என்றான்.

யாழினி ஒரு கணம் திகைத்துப் போனாள். உமாசங்கர் யாழினியை ஆழப் பார்த்தபடி சொன்னான்.

''யாழினி அதை ஒத்துக்கணுமே!''

''நான் ஏன் ஒத்துக்கணும்? உங்களுக்கு ஒரு பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிடுங்க'' என்றாள் முணுமுணுப்பாக.

''நான் அதைச் சொல்லலே! ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் துணையா இருக்கறது ரொம்ப அவசியம்கறாரே அதைச் சொல்றேன்'' என்றான்.

யாழினியின் முகம் இறுக்கமானது. மிக மெல்லிய குரலில் சொன்னாள்.

''சில சமயம் துணை இல்லாம இருக்கறதே நல்ல துன்னு கூட மனசுக்குத் தோணிடலாம்'' என்றாள்.

மேலும் மேலும் பேசி அவள் மனத்தைச் சங்கடப் படுத்த விரும்பாதவன் போல உமாசங்கர் விஷ்ணுசாரதி யிடம் கண்ணைக் காட்டி விட்டுச் சொன்னான்.

''மச்சான் கிடக்கறாரு. விடு.. யாழினி! அவரவருக்கு அவரவர் நியாயம்! உங்களுக்கு எது சரியோ அந்தக் கருத்தையே நீங்க வச்சுக்குங்க..'' என்றான்.

''ஓ.கேப்பா..! சமரசம்ப்பா!'' என்று கையை மேலே தூக்கினான் விஷ்ணுசாரதி.

யாழினிக்கு ஏதோ புரிகிறாற் போல இருந்தது. அடுத்து வந்த இரண்டு வாரங்களில் அவள் யோசிக்க ஆரம் பித்தாள். அதிலும் உமாசங்கர், விஷ்ணுசாரதி, மாமனார், மாமியார் எல்லோருமாக அடிக்கடி கைலாசத்தைப் பற்றிப் பேச அவளுக்கு சுத்தமாகப் புரிந்து போனது.

ஒரு நாள் அவளே உமாசங்கர் இல்லாத சமயம் விஷ்ணு சாரதிக்கு போன் செய்தாள்.

''அண்ணா! உமா.. இப்ப இல்லே! நீங்க இன்னைக்கு இங்க வர முடியுமா?'' என்றாள்.

''என்ன விஷயம்மா?'' என்றான்.

''உங்ககிட்டே பேசணும்!'' என்றாள்.



''சரிம்மா! ஆஃப்டர்நூன்.. வர்றேன்'' என்றான்.

வந்தான்!

சற்று நேர நல விசாரிப்புக்குப் பின் யாழினி நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்.

''இது யாரோட ஐடியா?'' என்றாள்.

''எதும்மா?'' என்றான் விஷ்ணுசாரதி தெரியாதவன் போல.

''அதான் இந்தக் கைலாசத்தை அறிமுகப்படுத்தறது. அவரைப் பற்றி எப்பவும் புகழ்ந்து என்கிட்டே பேசறது. இதெல்லாம் ஏதோ கொக்கு தலையில வெண்ணெய் வச்சுப் பிடிக்கற மாதிரி இருக்கு. யாரோட ஐடியா.. அண்ணா!'' என்றாள் அழுத்தமாக.

விஷ்ணுசாரதி இதை எதிர்பார்க்கவில்லை. ஒரு கணம் திகைத்துப் போனான்.

பிறகு மெல்லிய குரலில் சொன்னான்.

''உமாவோட ஐடியாதான்'' என்று.

''நெனச்சேன்!'' என்றாள் கடுப்பாக.

''இல்லம்மா..! உமா உன்னைப் பத்தி ரொம்பக் கவலைப் படறான். அதுவும்.. உன்னோட மேரேஜ் லைஃப்ல நீ சந்தோஷமா இருந்திருக்கலைன்னு அவனுக்குத் தோணுது. அதனாலதான் உனக்குன்னு ஒரு வாழ்க்கை அமையணும்னு நினைக்கறான்..'' என்றான் தயக்கத்துடன்.

யாழினி மௌனமாக சோக பாவத்தோடு அமர்ந்து விட்டாள்.

''விஷ்ணுசாரதி தொடர்ந்து சொன்னான். ''இல்லம்மா! நீ ரொம்ப நல்ல பொண்ணு இப்ப என் லைஃப்பேயே எடுத்துக்க. ருத்ராவே இதுக்கு முன்னாடி ரொம்ப இம்மெச்சூர்டா நடந்துகிட்டப்ப அவங்க குடும்பம் பட்ட வேதனையெல்லாம் வார்த்தைகள்னால சொல்ல முடியாது. ஆனா.. இப்ப நான் ருத்ராவைக் கல்யாணம் செஞ்சுகிட்டப்புறம் அவங்க குடும்பமே ரொம்ப நிம்மதியா இருக்காங்களாம். அது மாதிரி உனக்கும் ஒரு நல்ல துணை அமையணும்னு நினைக்கறான். தப்பில்லையேம்மா!'' என்றான்.

யாழினி ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் கனமான அமைதி நிலவியது. பிறகு ஒரு பெருமூச்சு விட்டு யாழினி சொன்னாள்.

''அண்ணா! உங்க ரெண்டு பேரோட நோக்கத்தையும் நான் தப்பா சொல்லலே. ஆனா.. இனிமே ஒரு மேரேஜ் லைஃப்பை எதிர் கொள்ற சக்தியோ தாங்கற சக்தியோ எனக்கில்லை..! ப்ளீஸ் என்னை விட்ருங்க'' என்று கை கூப்பினாள்.

''ஐயோ.. என்னம்மா இது!'' என்று திணறினான் விஷ்ணுசாரதி. பிறகு தயக்கத்துடன்.

''அம்மா! கைலாஷ்.. நல்ல பையன்ம்மா!'' என்று ஆரம்பிக்க.

''நானே அவர்கிட்ட பேசறேன். அவருக்குப் புரிய வைக்கறேன். அதுக்கப்புறம்.. நீங்க உமாகிட்டே சொல்லுங்க! அவர் மனசையும் நோகடிக்க நான் விரும்பலே..'' என்றாள்.

''சரிம்மா..!'' என்றான் சுரத்த இல்லாத குரலில்.



''சாரி.. அண்ணா! ஐ ம் வெரி சாரி'' என்றாள்.

''பரவால்லம்மா!'' என்றான் விஷ்ணுசாரதி.

சொன்ன மாதிரியே கைலாஷிடம் பேசினாள்.

''கைலாஷ்.. சார்! உமாவும், விஷ்ணு அண்ணாவும் எனக்கு நல்லது செய்யற மாதிரி உங்ககிட்டே ஏதேதோ பேசியிருக்காங்க! அப்படியான எந்த எண்ணமும் எனக்கு இல்லே! தயவு செய்து மன்னிச்சுக்குங்க. எங்க மாமனார் மாமியாரை விட்டுட்டு வர்ற எண்ணமோ, இந்தக் குடும்பத்தப் பிரியற எண்ணமோ எனக்கு துளிக்கூட இல்லை! அது மட்டுமில்ல, என் மகன் சம்பந்தமான பொறுப்புக்களும், கடமைகளும் எனக்கு முக்கியம்! ப்ளீஸ்! இந்த முயற்சியை இதோட விட்டுருங்க'' என்றாள்.

கைலாஷ் நல்ல விதமாகவே எடுத்துக் கொண்டான்.

''நீங்களே உமாகிட்டே சொல்லிடுங்க!'' என்றாள்.

அடுத்த வாரத்தில் ஒரு நாள் உமாசங்கரிடம் சொன்னான்.

உமாசங்கர் கைலாஷை அனுப்பிவிட்டு முகம் இறுகிப் போனவனாய் சற்று நேரம் அமர்ந்திருந்தான். அவன் முகத்தில் தோன்றிய மாற்றங்களை இந்நேரம் யாழினி பார்த்திருந்தால் திகைத்துப் போயிருப்பாள்.

அடுத்து வந்த நாட்களில் அலுவலக நடைமுறையில் எந்த மாற்றங்களும் இல்லையென்றாலும் உமாசங்கரின் நடத்தையில் பெரிய மாற்றம் தெரிவது கண்டு யாழினி திகைத்துப் போனாள்.

# 16

''ஏங்க! என்.. சங்கர் தம்பி சாப்பிட வரமாட்டேங்குது..'' என்று கவலையுடன் கேட்டார் அன்னபூரணி.

ஞானமுத்து உச்சுக் கொட்டினார்.

''விடு.. அன்னம்! எதுக்கு இப்ப அதைக் கிளறிக்கிட்டிருக்கே!'' என்றார்.

யாழினியும் சாப்பிட அமர்ந்திருந்தாள். அவள் முகம் வாடியது. மெல்லிய குரலில் சொன்னாள்.

''மாமா! அவருக்கு என் மேலே கோபம்!'' என்று.

இந்த முறை ஞானமுத்து ஒரு நீண்ட பெருமூச்சை எடுத்து விட்டார். பிறகு சொன்னார்.

''அவனையும் தப்பு சொல்ல முடியாது. உன்னையும் தப்பு சொல்ல முடியாது..'' என்று.

யாழினி மாமனாரை நேரடியாகப் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

''மாமா! இனிமே இந்த மாதிரியான முயற்சிகளை விட்டுடச் சொல்லுங்க! எனக்கு உங்க ரெண்டு பேரோடவும் இருக்கறதே மனசுக்கு நிறைவா இருக்கு! அவரோட நல்ல எண்ணத்தை நான் புரிஞ்சுக்கறேன். என்னையும் கொஞ்சம் அவரைப் புரிஞ்சுக்கச் சொல்லுங்க'' என்றாள்.

''பேசறம்மா..!'' என்றார் ஞானமுத்து.

இரண்டு மூன்று நாட்களும் அவன் சாப்பிட வரவில்லை. அந்த நாட்களில் வேறொன்றும் நடந்தது.



அருண்காந்தி ''உமா அங்கிள்கிட்டே போறேன்'' என்று அடம் பிடித்து அவனிடம் போய் விடுவான். ஆறு மணி ஏழு மணி என்று உமாசங்கர் வந்திருப்பது தெரிந்து போனால் தூங்கியதற்குப் பிறகு சமையற்காரர் தோளில் போட்டுக் கொண்டு வந்து விடுவார்.

உமாசங்கர் அந்தக் குழந்தையின் அருகாமையை மிகவும் விரும்பினான்.

கள்ளமற்ற முகத்தில் திராட்சைக் கண்கள் மின்ன கன்னத்தில் குழி விழ அவன் சிரிக்கையில் அவன் உலகம் மறந்தான்.

சமீப காலமாக ஞானிகள் எல்லாம் கூட வாழ்க்கையைப் பற்றி வேறு விதக் கோணங்களில் பேசுகிறார்கள் என்பது அவனுக்குப் புரிந்திருந்தது.

''வாழ்க்கையை இலகுவாக வாழுங்கள்! இயல்பாக இருங்கள்! நன்றாகச் சிரியுங்க. நிகழ்காலத்தில் இருங்கள்'' என்று தானே சொல்லுகிறார்கள்.

'அடுத்த வீட்டுக் குழந்தையானால் கூடப் பரவாயில்லை. எடுத்து வந்து கொஞ்சுங்கள். மனம் லேசாகும்' என்று சொல்கிறார் பரமஹம்ச நித்தியானந்தா.

அருண்காந்தி வராத மாலைப் பொழுதுகள் அவனுக்கு வெறுமையாகத் தோன்றியது என்பதால் அருண்காந்தியும் அவனை விட்டு விடுவதாக இல்லை.

அந்தப் பெரிய பங்களாவின் முன் ஹால் அல்லோல கல்லோலப்பட்டது.

சமையற்காரரும், வேலைக்காரர்களும் முதலில் கொஞ்சம் வித்தியாசமாகப் பார்த்தவர்கள் இப்போது சேர்ந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

கொஞ்ச நேரம் ஆடி, ஓடிக் களைத்த பின் உணவை அவனே ஊட்டி விடுவான். பிறகு தன் படுக்கையிலேயே படுக்க வைத்துக் கொள்வான்.

கொஞ்சம் ஆழ்ந்து உறங்கி விட்டான் என்று தெரிந்த தற்குப் பிறகுதான் சமையற்காரரிடம் கொடுத்து அனுப்பு வான். குழந்தையை தோளில் போட்டுக் கொண்டு போகிற சமையற்காரர் அடுத்த பங்களா போர்ட்டிகோ வழியாக உள்ளே நுழைவதை பார்த்த பின்பு தான் உள்ளே நுழைவான்.

அன்றைக்கும் அப்படித்தான்!

குழந்தையை அனுப்பி விட்டு உள்ளே நுழைந்த போது அவனுக்கும் களைப்பாக இருந்தது. சீக்கிரம் அம்மா, அப்பாவை அழைத்து வந்து விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

கைலாஷ் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு அலு வலகத்தில் வந்து அவனிடம் பேசினான்.

"சார்! நீங்க எடுத்த முயற்சியெல்லாம் தோத்துப் போயிருச் சுன்னு நினைக்கறேன்'' என்றான்.

''எம்ப்பா!'' என்றான் உமாசங்கர்.

''நேத்து நீங்க இல்லாத நேரமா என்கிட்டே மேடம் பேசினாங்க. ரொம்பத் தெளிவா இருக்காங்க. உங்க நாடகத்தையெல்லாம் நிறுத்திக்குங்க! யாரும் எனக்கு வாழ்க்கைப் பிச்சை போட வேண்டியதில்லை அப் படீன்னு சொல்லிட்டாங்க..'' என்றான்.

வருத்தம் தோய்ந்த புன்னகைதான். ஆனால் உடனே தெளிவாகிக் கொண்டான்.



எல்லாவிதமான சூழ்நிலைகளையும் எதிர் கொண்டு பழகியவன் என்பதால் அழுத்தமாகவே விஷயத்தை வாங்கிக் கொண்டான் உமாசங்கர்.

கைலாஷ்தான் மேலும் பேசினான்.

''சார்! எனக்குக் கொஞ்சம் வருத்தம்தானே ஒழிய பெரிய ஏமாற்றம் எல்லாம் இல்லே! ஏன்னா.. அப்படி யொன்றும் நான் அவங்களக் காதலிச்சு ஏமாறலே! ஒரு நல்ல காரியம்! நினைச்சோம்.. நடக்கலே! விட்டுடு வோம்'' என்று சமாதானமாகவே பேசினான்.

இரண்டு பேருமாக அந்த ரீதியிலேயே கொஞ்சம் பேசிய பிறகு அவன் விடை பெற்றுக் கொண்டான்.

அவன் போன பிறகு அவன் போன பாதையையே சற்று நேரம் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான் உமாசங்கர்.

அப்போது தன் மனத்தில் தோன்றிய உணர்வுகள் குறித்து அவனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. ஒரே சமயத் தில் விடுதலை உணர்வும், அதிர்ச்சியும் ஏற்பட்டது கொஞ்சம் திடுக்கிட்டுப் போனான்.

அடுத்த இரண்டு மூன்று நாட்களிலும் அவன் யாழினி யிடம் அதிகம் பேசவில்லை. பேச வேண்டிய விஷயங் களைப் பற்றி மட்டுமே பேசினான்.

யாழினி வித விதமாக அவனிடம் பேச்சுக் கொடுக்க முயன்றாள். வேறு விஷயங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.

யாழினி கிளம்புகிற நேரம் வரையிலும் ரவுண்ட்ஸ் வெளி வேலைகள் என்று வைத்துக் கொண்டான். அவள் கிளம்புகிற நேரம் சற்று தொழில் தொடர்பான விஷயங் கள் மட்டுமே பேசினான்.

''உமா!'' என்று அவள் ஆரம்பிக்கும் போதெல்லாம் ''ஏதாவது அஃபிஷியல்ன்னா சொல்லு பாஸனல்ன்னா.. அப்புறம் பேசலாம்'' என்று தெளிவாகச் சொன்னான்.

இரண்டு மூன்று முறை முயற்சித்த பின்னர் யாழினிக்கும் ரோஷம் கிளம்பியது.

''அப்படி என்ன மேலே போய் விழுவது?'' என்று அவளும் முயற்சியைக் கைவிட்டு விட்டாள்.

அதற்குள்ளாக அலுவலகத்தில் வேறு ஒரு விஷயம் நடந்தது.

யாழினியின் பி.ஏ. சரளா வேறு ஒரு விஷயம் உமாசங்கரின் கவனத்துக்குக் கொண்டு வந்தாள்.

''சார்!'' என்று வந்து நின்றாள்.

''என்ன மேடம்!'' என்று கேட்டு விஷயத்தை வாங்கிக் கொண்டான் உமாசங்கர்.

விஷயம் வேறொன்றுமில்லை! அலுவலகத்தின் அக்கவுண்ட்ஸ் செக்ஷனில் ராமானுஜம் என்று ஒருவர் இருந்தார்.

வயது நாற்பத்தாறு இருக்கும்! ஆனால் தன் வயதை மறைக்கிற நடவடிக்கைகளில் இருப்பார்.

தலைக்கு டையென்ன? பூப்போட்ட சட்டை என்ன? என்று பார்த்தாலே தெரியும். அலுவலகத்தில் எல்லோருமே ஒரு ரகசியச் சிரிப்போடு பார்வைப் பரிமாறலோடு விமர்சித்துக் கொள்வார்கள். ஆனால் மனிதர் சமீப காலமாக அதோடு நிற்பதில்லை.

அக்கவுண்ட்ஸ் செக்ஷன். அட்மினிஸ்ட்ரேடிவ் செக்ஷன் இவற்றில் மட்டுமல்லாமல் தொழிலாளர்களாகவும் நிறைய பெண்கள் பணி செய்தார்கள்.



ராமானுஜம் மனிதர் கலகலப்பாகப் பழகுவார். சிரிக்க சிரிக்கப் பேசுவார் என்பதால் எல்லாரும் இயல்பாகப் பழக ஆரம்பித்தார்கள். ஆனால் சமீப காலமாக மனிதர் சில சின்னச் சின்ன சேட்டைகளை ஆரம்பித்திருந்தார்.

''ஏம்மா.. ரீமா!'' என்று எதையாவது ஜோக்கைச் சொல்லுவார். பதிலுக்கு சின்ன வயசுப் பெண்களும் எதையாவது சொல்லுவார்கள். உடனே ''ஹாஹ்ஹா..'' ''ஹாஹ்ஹா! என்று சிரிக்கிற சாக்கில் அந்தப் பெண்ணின் தோளைத் தொடுவார்.

முதலில் யாரும் இதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் பெண்களைத் தொட்டு அழைப்பது. தொட்டுப் பேசுவது, கன்னம் தடவுவது, தலையில் தட்டுவது என்று பேச்சு அதிகமாக அதிகமாகப் பெண்களுக்குள்ளே லேசான குமுறல் இருந்தது.

நேரத்துள்ளாக ஆபீஸுக்குள் நுழைந்து கார்டு பதிவு செய்ய வேண்டுமென்பதற்காக லிப்ட் கொடுப்பார். ஆனால் வேண்டுமென்றே குலுக்கல்கள் நிகழ்த்துவார். அதனால் பெண்கள் இப்போதெல்லாம் அவர் வருவது தெரிந்தாலே,

''வருதுடி.. ஜொள்ளுப் பார்ட்டி'' என்று சிரிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

இந்த மாதிரி சில சில்லரைத் தொந்தரவுகள் எல்லா அலுவலகங்களிலும் இருந்தாலும் இப்போதெல்லாம் கொஞ்சம் வேறு மாதிரியாகப் பேச ஆரம்பித்திருந்தான்.

''ஏம்மா! ஒரு மாதிரியாயிருக்கே! உடம்பு சரியில்லயோ! மூன்று நாளாவே டல்லா இருக்கே?'' என்று கேட்கும்போது ''அந்த மூன்று நாளோ'' என்று கேட்கிறார்

என்று புரிய சின்னப் பெண்கள் கொஞ்சம் அசௌகரிய மாக உணர்ந்தார்கள்.

டிபன் பாக்ஸைத் திறந்து "என்னம்மா! ஐட்டம்!" என்று கொஞ்சம் வாயில் போடுவது. திடீரென்று எதிர்பாராத விதமாக வெகு அருகில் வந்து நிற்பது போன்ற விஷயங் களையும் செய்ய ஆரம்பித்திருந்தார்.

சாப்பாட்டு நேரத்தில் பெண்கள் சரளாவிடம் சொன் னார்கள். ஒரு புதுப் பெண் சொன்னாள்.

"என்னதான்.. ஜொள்ளுப் பார்ட்டின்னு சொன்னாலும் திடீர்ன்னு எங்காவது எதிர்பாராத இடத்துல தொட்டா கேவலம்தானேக்கா?" என்று கவலைப்பட சரளா கோப மாக,

"பயமே.. படாதே! ஓங்கி கன்னத்துல விடு.. அப்புறம்.. பாத்துக்கலாம்.." என்றாள்.

மேரி சொன்னாள். "வேண்டாம்.. கலா! அப்புறம் எம்.டி. காதுக்குப் போனா வருத்தமாகும். ஏன்.. என்கிட்டே முன்னயே சொல்லலே..ன்னு கோபிச்சுக்குவார். பாக்கப் போனா.. அவரு யங் மேன் அவரு ரொம்ப டீசன்ட்டா.. நடந்துக்கறாரு! ஆனா.. இந்த மனுஷன்.." என்று பொரு மியபடி மேலும் சொன்னாள்.

"ஏதுக்கும்.. நீ காதுல போட்ரு! எம்.டி. காதுக்குப் போக வேண்டியது அவசியம்" என்றார் மேரி.

சரளாவுக்கும் அது சரியென்றே பட்டது. அதனால்தான் கொட்டி விட்டாள்.

எப்போதுமே எந்த அதிர்ச்சிகரமான விஷயத்தையும் கூட மிக இயல்பாக கேட்டு உள் வாங்கிக் கொள்வான் உமாசங்கர்.



பிறகு ஒரு யோசனை சொன்னாள்.

இதுவெல்லாம்.. தெரியாத ராமானுஜம் அன்றைக்கு மிக உற்சாகமாக அந்த இளம் பெண் ரீமாவிடம் போய் நின்றார்.

"ஹாய்.. ரீமா!" என்றார்.

"என்ன சார்!" என்றாள் ரீமா கடுப்புடன்.

"புது சுடிதாரா? சூப்பர்!" என் மககிட்டே கூட இப்படி ஒன்று இருக்கு. ஆனா.. அதுக்கு இப்படியெல்லாம் உடுத்திக்கத் தெரியறதில்லே.. நீ பாரு! எவ்வளவு அழகா இதை போட்டுகிட்டிருக்கே!" என்றார்.

"ஷால் இல்லே.. சார்! துப்பட்டா" என்றாள் ரீமா.

"அதானே! இங்க.. பாரு.. ஏதோ குப்பை" என்று அவர் துப்பட்டாவைத் தொட ரீமா சங்கமாகப் பார்த்தவளின் பார்வை அப்படியே நிலை குத்தி நின்றது.

"சார்.. வந்து.. வந்து.." என்று நெளிய ராமானுஜம் மெல்லத் திரும்பினார்.

நேர் பின்னால் உமாசங்கர் நின்றிருந்தார். சற்றுத் தள்ளி யாழினி பக்கத்து மேஜையில் ஏதோ கேட்க வந்தவள் போல நின்றிருந்தாள்.

சரளா.. ஒரு ஓரமாக ஒன்றுமே தெரியாதவள் போல நின்றிருந்தாள்.

"ஏன்.. ராமானுஜம்.. சார்! இங்கென்ன பண்றீங்க! ரீமா மேடம் சீட்டுக்கும், உங்க வேலைக்கும் சம்பந்தமே இல்லையே! ப்ளீஸ்.. கோ டு யுவர் ப்ளேஸ்" என்றான்.

"அது.. வந்து.. இந்த ஜெம் கிளிப்... அங்கே தீந் துருச்சு.. அதான் வாங்கலாம்னு.. வந்தேன்" என்று குழறி னார் ராமானுஜம்.

''அதுக்கு எதுக்கு நீங்க வரணும்? ஓ.ஏஸ்ஸி அனுப்ப வேண்டியதுதானே? அவங்கவங்க அவங்கவங்க சீட்டுதானே இருக்கணும். அதுவுமில்லாம நீங்க சீனியர். எதுக்கு டேபிள் பிளாப் போயிட்டிருக்கீங்க! என்ன வேணுமோ அவங்களை வரவழைச்சு.. எதிர்ல உட்கார வச்சுக் கேளுங்க'' என்றவன் ஏதோ கேட்க வந்தவன் போல,

''ரீமா.. மேடம்! அந்த பைல்'' என்று பேச ஆரம்பிக்க ராமானுஜம் அடி வாங்கினாற் போல நகர்ந்தார்.

உமாசங்கர் மெல்லிய குரலில் ''ரீமா மேடம்! தொட்டுப் பேசாதீங்க.. அழுத்தமா சன்னமான குரல்ல சொல்லுங்க.. கத்தாதீங்க'' என்றான்.

திரும்பிப் போனான்.

ரீமா வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டார். யாழினி வியப்பாய்ப் பார்த்துக் கொண்டு தொடர்ந்தாள். ஆனால் அறைக்குப் போனவள் உடனடியாக இல்லாமல் ஒரு மணி நேரம் கழித்து ராமானுஜத்தை அழைத்து வாங்கு வாங்கென்று வாங்கினான்.

''சார் ரிட்டன் கம்ப்ளெயின்ட்ஸ் நிறைய வந்துருக்கு! குடும்பத்துல ரெண்டு பொண்ணுங்க இருக்காங்களேன்னு பாக்கறேன்.. இல்லே? டிஸ்மிஸ்தான்..'' என்று எச்சரிக்கை கொடுத்தான்.

குரலை உயர்த்தாமல் ஆனால் வார்த்தைகளில் கடுமை இருக்கிறாற் போல அவன் பேசவும் ராமானுஜம் திகைத்துப் போனார்.

இரண்டு நாட்கள் இந்த விஷயத்தில் கழிந்தது. இதை எண்ணிக் கொண்டே இருந்த யாழினி இரவு எட்டு



மணியாகியும் குழந்தை வரவில்லை என்றவுடன் நேராக உமாசங்கரின் பங்களாவுக்குப் போனாள்.

உமாசங்கரும் அருண்காந்தியும் பொய்ச் சண்டை போட்டுக் கொண்டு கிளுகிளுவென்று சிரித்தார்கள்.

''அருண்.. வாடா!'' என்று இவள் போய் நின்றாள்.

''வர்லே.. போ! நான் அங்கிள் கூடவே படுத்துக் கறேன்'' என்று அலட்சியமாக அவன் சொல்லவும் யாழினி ஒரு கணம் திகைத்துப் போனாள்.

சட்டென்று கதவு மேல் சாய்ந்து கொண்டு தேம்பி அழ ஆரம்பித்தாள்.

உமாசங்கர் சட்டென்று குழந்தையை எடுத்து கட்டிலின் மேல் நிறுத்தி விட்டுத் திகைத்துப் போய்ப் பார்த்தான்.

# 17

''யாழினி..!'' என்றான் உமாசங்கர் ஆழமான குரலில்.

யாழினி அவனை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. தனது அழுகையிலேயே ஆழ்ந்திருந்தாள்.

உமாசங்கர் இதை எதிர்பார்க்கவில்லை. ருத்ராவிடம் பல சமயம் அவனுக்குக் கோபம் வரும். ஆனால் அவள் அழுதால் மட்டும் இளகி விடுவான். அதே போல் இப்போதும் யாழினி தேம்பியழவும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

''யாழினி ப்ளீஸ்! அழாதே..!'' என்றான்.

யாழினி மெல்ல மெல்ல அழுகையை நிறுத்தினாள்.

''ப்ளீஸ்! உட்காரு..!'' என்று ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டான்.

அமர்ந்தாள்.

''யாழினி! நான் எது செய்தாலும் உன் நன்மைக்குத்தான் செய்யறேன். இப்படி அழுது மனசைச் சங்கடப் படுத்தறியே?'' என்றான் இறங்கிய குரலில்.

அவள் மெல்ல நிதானத்துக்கு வந்தாள். பிறகு தேறிக் கொண்டு சொன்னாள்.

''எனக்குன்னு இருக்கற வாழ்க்கையே இவன்தான். இப்பத்திக்கு நான் நிம்மதியாத்தான் இருக்கேன். இப்படி இவனையும் வளைச்சுப் போட்டு என் நிம்மதியைக் கெடுக்காதீங்க..'' என்றாள்.

பேசப் பேசவே குரல் மறுபடியும் மாறியது. தேம்பினாள்.

குழந்தைகூட திகைத்துப் போய் பார்ப்பதைக் கண்ட உமாசங்கர் தன் அணுகுமுறையை மாற்றினான்.

''இத பாரு! பையன் கூடத் திகைத்துப் போய்ப் பாக்கறான். அழுகையை நிறுத்து.. லெட்ஸ் டாக்..! எதுவும் உன் விருப்பத்துக்கு மாறா நடக்காது.. ம்..!'' என்று தேற்றினான் குழந்தைக்குச் சொல்வது போல.

யாழினி மறுபடியும் கன்னத்தைத் துடைத்துக் கொண்டாள்.

''வா.. நாம் ஹால்ல உட்கார்ந்து பேசலாம். இப்படி நீ அழுதா.. எல்லாரும் என்னைத் தப்பா நினைப்பாங்க..'' என்றான்.



அவள் கன்னத்தை துடைத்துக் கொண்டாள். சமையற்காரரை அழைத்தான்.

''அய்யா! பையனைக் கொஞ்ச நேரம் பாத்துக்குங்க! ஒரு முக்கியமான விஷயம்.. யாழினி மேடத்துகிட்டே பேச வேண்டியிருக்கு'' என்று ஒப்படைத்தான்.

''யாழினி..! என்ன பிரச்சினை.. உனக்கு?'' என்றான்.

யாழினி மறுபடியும் இறைஞ்சுபவன் போல அவன் முகம் பார்த்தாள்.

''இப்படி.. தினமும்.. பையனையும் கூப்பிட்டுக்கறீங்க! என் கூட அவன் இருக்கறதேயில்லை'' என்றாள்.

அவன் பெருமூச்சு விட்டான்.

''யாழினி..! என் மேல இப்படி அபாண்டமான குற்றச்சாட்டெல்லாம் வைக்காதே! பையன்தானே அழுது அடம் பிடிச்சு என்கிட்டே வர்றான்'' என்றான் புகார் சொல்வது போல.

அவன் சொல்வதில் உண்மை இருந்ததால் மேற்கொண்டு என்ன பேசுவதென்று யாழினிக்குத் தெரியவில்லை.

''ரிலாக்ஸ்! யாழினி.. ரிலாக்ஸ்!'' என்றான். அவனும் சோபாவில் சாய்ந்து கொண்டான்.

''நாம் இன்னைக்கு சில விஷயங்களைப் பேசி முடிவு பண்ணிரலாம்'' என்றான்.

யாழினி கொஞ்சம் வேகமாக நிமிர்ந்தாள்.

''என்ன பேசணும்? எல்லாரும் என்னமோ திடீர்னு எனக்கு ஒரு வாழ்க்கை அமைச்சுக் குடுக்கறதுல ரொம்ப ஆர்வம் காட்டறீங்களே! நானும் போயிட்டா, குழந்தையும்

இல்லேன்னா.. அந்தப் பெரியவங்க ரெண்டு பேரும் தனிமையில நொந்து போவாங்கன்னு புரியலியா.. உங்களுக்கு..!'' என்றாள்.

உமாசங்கர் அழுத்தமாகவும், அமைதியாகவும் அந்தக் கருத்தை வாங்கிக் கொண்டான்.

''சரி.. அவங்க காலத்துக்குப் பிறகு?'' என்றான்.

''அவங்க காலத்துக்குள்ளேயே எனக்கும் நடுத்தர வயசாயிடும். அப்புறம் எனக்கெதுக்கு வாழ்க்கை?'' என்றாள் காட்டமாக.

உமாசங்கர் முகத்தில் புன்னகை அரும்பியது. அப்படி ஒரு புன்னகையை யாழினி எதிர்பார்க்கவில்லை.

சற்று நேரம் கனத்த மௌனம் நிலவியது.

''சரி.. உன்னோட.. நிபந்தனை என்ன? அவங்களைப் பிரியக் கூடாது.. அதுதானே?'' என்றான்.

அவள் மறுபடியும் ஒரு விதக் கையாலாகாத் தனத்துடன் அவனைப் பார்த்தாள்.

''ப்ளீஸ்! உமா.. புரிஞ்சுக்குங்க! எனக்குக் கிடைச்ச ஒரு கல்யாண வாழ்க்கையே போதும். அதுலயே நான் போதும்கற அளவுக்கு வாழ்ந்தாச்சு. இன்னொரு கல்யாண வாழ்க்கையை சந்திக்கிற தைரியம் எனக்கில்லே..'' என்றாள்.

''ஏன்.. அந்தக் கல்யாணத்திலேயே ரொம்பக் கஷ்டப் பட்டுட்டியா?'' என்றான் அலட்டிக் கொள்ளாமல்.

யாழினிக்கு அப்போதுதான் புரிந்தது. உமாசங்கர் ஓரளவு விஷயத்தைத் தெரிந்து கொண்டுதான் கேட்கிறான் என்று.



''உமா..!'' என்றாள் திகைத்துப் போய்.

''உனக்கு நேர்ந்தது கல்யாணம் இல்லே! கவனிக்கறியா..! நேர்ந்ததுன்னு சொல்றேன். நடந்துச்சுன்னு சொல்லலை! நேர்ந்தது கல்யாணம் இல்லை! விபத்து! அந்த விபத்துக்கப்புறம் உனக்குக் கிடைச்சது வாழ்க்கையில்லை.. சித்திரவதை!'' என்றான்.

யாழினி வெறித்துப் பார்த்தபடி அமர்ந்து விட்டாள்.

''ஒருவேளை நீ கலாவோட சந்தோஷமா வாழ்ந்திருந்தா கூட பெரியப்பா இதைப்பற்றி யோசிக்கவே மாட்டார்! ஆனா.. எங்க குடும்பம் அந்தப் பொண்ணுக்கு நியாயம் செய்யலேன்னு ரொம்பக் குத்த மனப்பான்மையில வருந்திச் சாகறாரு..'' என்றான்.

யாழினி அமைதியாக அமர்ந்திருந்தாள்.

''எங்க நல்லதையே பார்த்தா.. அந்தப் பொண்ணுக்கு ஒரு நல்லது அமையணுமில்லே. இதுவே எங்க பொண்ணா இருந்தா இப்படி விடுவோமான்னு பலவிதமா யோசிக்கறாரு..'' என்றான்.

''அப்படியெல்லாம்.. யோசிச்சு.. அவஸ்தைப் பட வேண்டாம்னு.. அவங்ககிட்டே....'' என்று அவள் முடிக்கு முன்னே அவன் குறுக்கிட்டான்.

''நீயே.. சொல்லு..!'' என்றான்.

யாழினி சற்று நேரம் தன் கை விரல் நகங்களைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

''ப்ளீஸ்! உமா இதுல நிறைய சிக்கல் இருக்கு! வந்தவங்க.. என் பையனை ஏத்துக்கணும். திடீர்னு நாளைக்கு மாறலாம். வேண்டாம்.. உமா..!'' என்றாள்.

''யாழினி! விசயத்தை ஆரம்பிக்கறதுக்குள்ளேயே மனக்கதவை மூடிக்காம நான் சொல்வதை கொஞ்சம் நல்லாக் கேளு..! எல்லா விதத்திலயும் உன்னுடைய நிபந்தனைகளுக்கு ஏத்த மாதிரி ஒரு மாப்பிள்ளை பாத்தா.. ஒத்துக்குவியா?''

''அது நடக்கவே நடக்காது!''

''நடந்தா?''

''முதல்லே.. நடக்கட்டும்.. அப்புறம்.. பாக்கலாம்!''

''நடக்கும்.. யாழினி..!'' என்றான்.

''எப்படி.. நடக்கும்? எப்படி இவ்வளவு உறுதியாய் சொல்றீங்க?'' என்றாள்.

''எனக்குத் தெரியும் யாழினி..! நல்லாத் தெரியும்! என்னா.. அந்த மாப்பிள்ளையே நான்தான்..!'' என்றான்.

யாழினி திடுக்கிட்டுப் போய் எழுந்தாள். ''உங்களுக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கா?'' என்றாள்.

உமாசங்கர் எந்த பதிலும் சொல்லவில்லை. ஆனால் அழுத்தமாக அமர்ந்திருந்தான்.

யாழினி வெடுக்கென்று நகர்ந்தாள். உமாசங்கர் அவளை நிறுத்தவோ மேற்கொண்டு பேசவோ முயற்சிக்க வில்லை.

சற்று நேரம் அமர்ந்திருந்தான்.

கைலாஷ் வந்து தன் அலுவலகத்தில் பொரிந்து தள்ளி விட்டுப் போனவுடனேயே விஷ்ணுசாரதியிடம் பேசினான்.

''ஆமா.. மச்சான்! அந்தப் பொண்ணு என்கிட்டயும் தான் பேசிச்சு..! தெளிவா.. இருக்கு.. அது சொல்ற



நிபந்தனையெல்லாம் பாத்தா.. அப்படி ஆள் கிடைக்காது கஷ்டம். அப்படி ஆள்ன்னு பாத்தா... நீதான். உன்னைப் போய் குழந்தையோட இருக்கற விதவைப் பொண்ணைக் கட்டிக்கன்னு சொல்ல முடியுமா?'' என்றான் விஷ்ணு சாரதி.

உமாசங்கர் திகைத்துப் போனான். விஷ்ணுசாரதி அதை அறியாமல் தொடர்ந்து பேசினான்.

''ஆமா.. மச்சான்! மாமனார், மாமியாரையும் பிரியக் கூடாதாம்! இதெல்லாம் நடக்கிற காரியமா? பாக்கலாம். யாராவது கிடைப்பாங்களான்னு அதுக்குள்ளே மறுபடியும் பேசிக் கீசி அந்தப் பொண்ணையும் கொஞ்சம் தயார் படுத்து..!'' என்றான்.

''சரி மச்சான்!'' என்று ஆப் செய்தான். அப்போதுதான் அந்தக் கேள்வி அவனுக்குள் எழுந்தது.

''அதானே! எந்த இளிச்சவாயன் கிடைப்பானோ என்று ஊருக்குள்ளே தேடுவதற்கு முன்னாலே நீயே ஏன் அந்த தியாகத்தை செய்யக் கூடாது?'' என்ற கேள்வி அவன் மனத்துக்குள் எழுந்தது.

கொஞ்ச நேரம்.. போல் அமர்ந்து விட்டான்.

கடந்த இரண்டு நாட்களாக அது குறித்துத்தான் யோசித்துக் கொண்டிருந்தான். கைலாசம் வந்து போன வுடனே தன் மனதில் ஏன் அப்படியொரு விடுதலை யுணர்ச்சி தோன்றியது என்று யோசித்தான்.

அது விடுதலையுணர்வா இல்லை கவலையா என்றும் யோசித்தான். அவனுக்கே புரியவில்லை. இந்தப் பிரச்சினையில் தான் இறங்க வேண்டியது அவசியமா என்ற எண்ணமும் தோன்றியது.

''இல்லையில்லை.. இறங்கத்தான் வேண்டும். ஒரு பார்ட்னர் என்ற முறையில் மட்டுமில்ல! தன்னைப் போலவே இன்னொரு எம்.டி.யாக அமர வேண்டியவள் யாழினி! அவள் சோகத்தைச் சுமந்து கொண்டு அலையும்போது தொழிலில் எப்படி கவனம் செலுத்த முடியும்?'' என்றெல்லாம் சொல்லிக் கொண்டான்.

விஷ்ணுசாரதி ''பட்'' என்று அப்படிச் சொல்லவும் உமாசங்கர் முதலில் கொஞ்சம் அதிர்ந்து போனான். ஆனால் பிறகு யோசிக்கும்போது அது நல்ல யோசனையாகக் கூடத் தோன்றியது.

யாழினி எழுப்புகிற எல்லாக் கேள்விகளுக்கும் விடை கிடைத்து விடும்.

அப்பா.. அம்மாவிடம் பேச வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் யாழினி வந்து இப்படி ஆகக் கூடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

இயற்கையாகவே அருண்காந்தியை அவனுக்குப் பிடித்தது. அந்தக் குழந்தையும் இப்படி ஒரு அப்பாவை தனக்குள் தேடுகிறான் என்பதும் புரிந்தது. இரண்டு வயதுக்கு அவன் பேசுகிற பேச்சு கேட்கக் கேட்க இனிமையாக இருந்தது. சிரிப்பும், சிணுங்கலும் ரம்மியமாக இருந்தன.

ஏழெட்டு விஷயங்களை ஒரேயடியாக நிர்வகிப்பவனுக்கு அந்தக் குழந்தையின் அருகாமை மிகவும் இதமாக இருந்தது. இதெல்லாம் சரிதான்! ஆனால் அப்பா.. அம்மா ஒத்துக் கொள்ள வேண்டுமே!

ஏன் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்? ருத்ராவை உதாரணம் காட்டிப் பேசிப் பார்க்க வேண்டியதுதான். ருத்ராவின் குணத்துக்கே பாசம் காட்டினார்கள் என்றால் யாழினிக்காக அட்லீஸ்ட் ஒரு பரிதாபமாவது எழாதா?



இதெல்லாம்.. சரி!

யாழினி ஒத்துக் கொள்ள வேண்டுமே! மற்றவர்களையெல்லாம் கூட சமாளித்து விடலாம் போலிருக்கிறதே! யாழினி..யைச் சமாளிப்பதுதான் கடினமாக இருக்கும் போலிருக்கிறது.

இன்னும் கொஞ்சம் ஆலோசித்து தீர யோசித்து முடிவெடுக்கலாம் என்றிருந்தான். ஆனால் இப்போதே உளறிக் கொட்டி விட்டோம்.

ஏன் இப்படி உளறிக் கொட்டினோம் என்று கொஞ்சம் கோபம் கூடத் தோன்றியது. அதற்கான விடையை ஆராய்ந்து பார்க்கிற துணிவும் இப்போதைக்கு இல்லை.

மாடியில் உள்ள அறையில் போய்க் கொஞ்ச நேரம் கம்ப்யூட்டரில் அமர்ந்தான். அலுவலகப் பணியில் ஈடுபட்டான். முடித்து நிமிர்ந்தான்.

மணி பதினொன்று.

தூக்கம் வருவேனா என்றது.

அன்றைக்குப் போலவே மேலும் கீழும் நடந்தான்.

அந்தப்புறம் பங்களாவை நோட்டமிட்டான். யாழினி இருக்கக் கூடுமோ என்று.

இருந்தாள். இல்லையில்லை..! மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தாள்.

புன்னகையும், வருத்தமும் ஒரு சேர அவன் முகத்தில் தோன்றியது.

பாவம்! நிறையச் சோதனைகளைச் சந்தித்து விட்டாள்.

இரண்டே மாதத் திருமண வாழ்க்கை அவளுக்கு எவ்வளவு அதிர்ச்சிகரமாக இருந்திருக்கக் கூடும் என்று யோசிக்கும்போது கலாதரின் மேல் கோபம் கூட வந்தது.

யாரிடமும் சொல்ல முடியாமல் அந்தச் சின்னப் பெண் எவ்வளவு வேதனைப் பட்டிருக்கக் கூடும் என்று எண்ணியபோது உள்ளமே உடைந்தாற் போல உணர்ந்தான். ஆனால் திருமண வாழ்க்கைக்கு இந்த அனுதாபம் மட்டும் போதுமா? என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே யாழினி உள்ளே போய்விட்டாள்.

மறுநாளிலிருந்து தான் வேறு விதமான சிக்கல்களைச் சந்திக்கப் போகிறோம் என்பது அவனுக்கு அப்போது தெரியவில்லை.

## 18

தொலைபேசி ஒலிக்கவும் எடுத்தான் உமாசங்கர். வழக்கம் போல் அவன் ஒன்பது மணிக்கே அலுவலகம் வந்து விட்டான்.

பத்து மணி வாக்கில் யாழினி வருவாள்! மணி பத்தரை ஆகி இருந்தது. யாழினி இன்னும் வரவில்லையே என்று யோசித்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் போன் மணி ஒலித்தது.

''அப்பா.. உமா! என்னன்னு தெரியலை. யாழினி ஆபீஸ் வேலைக்கு வரமாட்டேங்கறா! எம்மா இன்னும் புறப்படலையான்னு பத்து மணிக்குக் கேட்கறேன்..



தேம்பித் தேம்பி அழறா..! எனக்கே ஒண்ணும் புரிய மாட்டேங்குது..'' என்றார் ஞானமுத்து அந்தப் பக்கம்.

உமாசங்கர் அமைதியாகி விட்டான்.

''எம்ப்பா.. லைன்ல இருக்கியா?'' என்றார் அந்தப் பக்கம்.

''இருக்கேன்.. பெரியப்பா!'' என்றான் சுரத்தே இல்லாமல். பிறகு தெளிந்தவன் போல.

''பெரியப்பா! வற்புறுத்தாதீங்க முடிஞ்சா.. நீங்க ஆபீஸ்க்கு வாங்க..! நான் உங்ககிட்டே பேசணும். அங்க வச்சுப் பேச முடியாது. ப்ளீஸ்.. பெரியப்பா..'' என்றான்.

எப்போதும் அவன் இறங்கிய குரலில் பேசிக் கேட்டவர் இல்லை என்பதால் அவரும் உடனே புறப்பட்டு வந்தார்.

போனை வைத்த உமாசங்கர் சற்று நேரம் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான். பிறகு பெரியப்பாவை எதிர்கொள்ளத் தயாரானான்.

ஞானமுத்து வந்தவுடன் பக்கத்திலிருக்கும் கான்ஃபரன்ஸ் அறைக்குப் போனார்கள். புதிரான முகபாவத்துடன் ஞானமுத்து அவன் முகத்தைப் பார்த்தபடி அமர்ந்தார்.

''என்னப்பா.. நடக்குது?'' என்றார் கவலை தோய்ந்த குரலில்.

''பெரியப்பா!'' என்று ஆரம்பித்தவன் சங்கடமாகத்தான் ஆரம்பித்தான். ஆனால் பேச்சு தொடங்கியவன் முழுமையாகக் காட்டி விட்டான்.

பெரியப்பாவின் முகத்தில் மகிழ்ச்சி. கவலை, சந்தேகம் போன்ற உணர்வுகள் மாறி, மாறி மின்னவும் அவனும் யோசனையில் ஆழ்ந்தான்.

''ஓஹ்ஹோ..!'' என்றார்.

''ஆமா.. பெரியப்பா! நானே உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னேன்'' என்றான்.

''அதாவது, நீயும் அவளும் கல்யாணம் பண்ணிகிட்டா அவளோட நிபந்தனைகளுக்கும் ஒத்துவரும். உனக்கும் பலவிதத்துல வசதி... அதாவது... ''எ மேரேஜ் ஆஃப் கன்வீனியன்ஸ்'' இல்லே!'' என்றார்.

குரலில் இருந்து எதையும் கண்டுபிடிக்க முடிய வில்லை. உமாசங்கரின் முகம் சிவந்து போனது.

மேஜையின் மேல் இருந்த பேப்பர் வெயிட்டை சற்று நேரம் உருட்டிக் கொண்டு அமர்ந்திருந்தான். பிறகு ஒரு பதிலைச் சொன்னான்.

அந்த பதில் அவரது முகத்தில் சிந்தனையைத் தோற்று வித்தது. சற்று நேரம் அமைதி காத்தார். பிறகு சொன்னார்.

''உமா.. நீ நினைக்கிறது மாதிரி சுலபமான தீர்வு இல்லே... இது! இதுக்கு இன்னொரு கோணம் இருக்கு..! உங்கப்பா.. என்னைத் தப்பா நினைக்கலாம். ஏதோ தொழிலை உருப்படி பண்ண மகனை அனுப்புன்னு கேட்டான்னு அனுப்பினோம். இப்ப கதையே வேற மாதிரிப் போகுது. அதுவும் ஏற்கனவே கல்யாணமான விதவைப் பொண்ணை, அதுவும் குழந்தையோட தலையில கட்டப் பாக்கிறானே.. இந்த ஞானமுத்துங்கற எண்ணம் வந்துறக் கூடாது...'' என்றார் கவலை தொனிக் கும் குரலில்.

உமாசங்கரும் கொஞ்சம் திகைத்துத்தான் போனான். இப்படியொரு கோணத்தை அவன் எதிர்பார்க்கவில்லை. ஆழ்ந்த பெருமூச்சு விட்டான்.



''சரி... மாமா! சும்மா ஒரு பேச்சுக்காகத்தான் சொன்னானாம் உமா...! இனிமே இந்தப் பேச்சே எடுக்க மாட்டேன்னு சொல்லியிருக்கான்னு யாழினியை ஆபீஸுக்கு அனுப்புங்க'' என்றான்.

''சரிப்பா!'' என்று கிளம்பினார்.

''இன்னைக்கு வேண்ணா.. விட்டுடுங்க... மாமா! ரெண்டு பேருக்குமே ஒருத்தரை ஒருத்தர் பாத்துக்கறது சங்கடமா... இருக்கும். நாளைக்கு வரட்டும்..'' என்றான்.

ஞானமுத்து கிளம்பிப் போனதற்குப் பிறகு நீண்ட சிந்தனையிலாழ்ந்தான். சரளா எட்டிப் பார்த்து.

''சார்... ஒரு முக்கியமான.. பைல்! கையெழுத்து'' என்றாள்.

''கொண்டு வாங்கம்மா..!'' என்று சுறுசுறுப்பானான்.

* * *

'போக வேண்டுமா?' என்றிருந்தது யாழினிக்கு. ஆனால் மாமனார் ரொம்பவும் வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

''வழக்கம் போலப் போம்மா! இவ்வளவு கஷ்டப்பட்டு ஒரு மாப்பிள்ளை பிடிச்சோம். ஆனா.. இப்படியாயிடுச் சேன்னு ஒரு கடுப்புல பேசிட்டான். அவ்வளவுதான்.

''ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக்கோனே
காரியத்துல கண்வையடா தாண்டவக்கோனே''

ஒரு நாட்டுப்பாடல் இருக்கு. நம்மளோட எய்ம் நீ தொழில் கத்துக்கணும். அதுல மனசு வை. இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்காமே.. போயிட்டே இரு..'' என்று ஏகமாக ''அட்வைஸ்'' செய்தார்.

ஒருவாறு மனம் தெளிந்து கிளம்பினாள். அவள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக விஷயங்கள் நடந்தன.

இதுவரை எதுவுமே நடக்காதது போல வரவேற்றான் உமாசங்கர்.

''யாழினி...! அந்த சர்வீஸ் டாக்ஸ் மேட்டர் என்னனு... பாரு! கொஞ்சம் டைம் ஆனாலும் பைன் போட்டுடு வாங்க...'' என்றான்.

கடுமையான வேலையில் ஆழ்ந்தார்கள். வழக்கம் போல அவள் பிற்பகல் கிளம்பினாள்.

அன்றிரவு அவன் வீட்டுக்கு வரவில்லை. ஞானமுத்துவே பேரனை அழைத்துக் கொண்டு போய் ஒரு மணி நேரம் அவனோடு செலவு செய்து விட்டுக் குழந்தையை அழைத்து வந்தார்.

மறுநாள்!

அலுவலகத்திற்குப் போனாள்!

திரும்பிப் பார்த்தாள்! அறையில் உமாசங்கரைக் காணவில்லை. யோசனையுடன் தனது அறைக்குப் போனாள்.

''நான் எனது கம்பெனிக்குப் போக வேண்டியிருக்குது. நாளைக்கும் இருக்க மாட்டேன். ஏதாவது தேவையென்றால் போனில் தொடர்பு கொள்ளலாம்'' என்பது போல குறிப்பு எழுதி வைத்து விட்டுப் போய் இருந்தான்.

சராளாவிடமும் சில செய்திகள் சொல்லியிருந்தான்.

யாழினிக்கு ஒரு மாதிரியாகிப் போனது. தன்னிடம் நேற்று சொல்லியிருக்கலாம் என்று எண்ணும் போதே ஆபீஸ் போன் ஒலித்தது.



''யாழினி! சேலம் வரைக்கும் கொஞ்சம் வர வேண்டியதாப் போச்சு. கொஞ்சம் பிராப்ளம். நாளைக்கும் நான் இங்கதான். நீதான் மேனேஜ் பண்ணனும். ஏதாவது தேவைன்னா.. கூப்பிடு..'' என்றான்.

மிகச் சுருக்கமாகப் பேசித் துண்டித்தான். ''சரிங்க.. உமா..'' என்றாள் யாழினி. ஆனால் பழைய இயல்பு நிலை அவளுக்குள் வரவில்லை.

ஏதோ காலுக்குக் கீழே இருக்கிற நிலத்தில் சூடு பரப்பிக் கிடந்தாற் போல ஒரு பரபரப்பிலேயே இருந்தாள்.

வேலை தொடங்கியதும் ஆழ்ந்து போனாள். வீட்டிற்கும் கூட போன் செய்து தான் வரத் தாமதமாகும் என்று தெரிவித்தாள்.

ஒரு நாள்.. ஒரே.. நாள் முழுமையாக எல்லாவற்றையும் பார்த்த போதுதான் அவளுக்கு ஒன்று புரிந்தது. பெரும் பகுதிச் சுமையை உமாசங்கரே தாங்கிக் கொண்டிருந்தான்.

பத்திரிகைகளில் பார்த்திருக்கிறாள். பெரும் தலைவர்களுக்கு ரோஜாப்பூ மாலை போடுவார்கள் மிகப் பெரிதாக இருக்கும். கண்டிப்பாக அந்த சுமையை ஒரு ஆணால் தாங்க முடியாது. சுற்றிலும் மூன்று நான்கு பேர் அந்த ரோஜா மாலையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நிற்பார்கள். நடுவிலே தலையைக் கொடுத்தபடி, சுமையில்லாமல், கவர்ச்சியாகச் சிரித்தபடி தலைவர் நிற்பார். அப்படித்தான் இதுநாள் வரை தன்னை நடத்தியிருந்தான் என்பது புரிய மனம் நெகிழ்ந்தது.

ஈடு கொடுத்தாள்!

ஐந்து மணிக்குப் புறப்படும் முன்பாக அவனுக்கு போன் செய்து முடித்து வைக்கப்பட்ட வேலைகளைப்

பற்றி அவனுக்கு ரிப்போர்ட் கொடுத்து விட்டு ஜி.எம்.மிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு கிளம்பினாள்.

என்னென்ன வேலை முடிந்தது என்று அவனிடம் சொல்லி முடித்தபோது,

''ரியலி! இத்தனை வேலை முடிச்சயா? ரியலி. குட்.. வெரிகுட்....'' என்று அவன் மகிழ்ச்சியாகக் குறிப்பிட்டதற்குப் பிறகுதான் கொஞ்சம் மனம் தெளிந்தது. கொஞ்சம் மகிழ்ச்சியாகப் புறப்பட்டாள்.

ஞானமுத்துவிடம் தான் முடித்த வேலைகளைப் பற்றி ஒப்பித்தாள்.

''குட்..மா! இப்படித்தான் கொஞ்சம் வேலையில முழுகிட்டா... மனசு தெளியும். அது மட்டுமில்ல.. இன்னும் ஆறு மாசம் போனா.. பையனையும் ப்ரீ.. ஸ்கூல் மாதிரி அனுப்பிரலாம்..'' என்றார்.

ஏதோ உருப்படியாகச் செய்தோம் என்ற எண்ணம் மனதில் ஓடிக் கொண்டிருந்தது. சாதனையாளர்கள் என்று சொல்லப்படுபவர்கள் எல்லாம் இந்த நிறைவை நோக்கித்தான் ஓடிக் கொண்டிருக்கிறார்களோ.. என்று தோன்றியது.

இரவு ஏழு மணிக்கு மேல்தான் பிரச்சினை ஆரம்பமானது.

''உமா... அங்கிள்.. வேணும்..!'' என்று தரையில் புரண்டு அழுதான் அருண்காந்தி.

ஞானமுத்து, அன்னபூரணி யார் சொல்லியும் அவன் அழுகை நிற்கவில்லை. கடைசியில் ஞானமுத்துதான் ஒரு காரியம் செய்தார்.



''டேய்... கண்ணா! அங்கிள்... வேலையா வெளியூர் போயிக்காரு..! வேண்ணா.. செல்போனில் பேசுறயா'' என்றார்.

''ம்...!'' என்றான்.

''உமாசங்கர் உடனே குழந்தையிடம் பேசினான். ''இரண்டே.. ரெண்டு நாள்.. அட்ஜஸ்ட் பண்ணிப்பியாம்..! அப்புறம் அங்கிள் வந்துடுவேனாம்'' என்றான்.

''ம்.. போ. அங்கிள்.. நீ.. உன் கூட டூ'' என்றான் குழந்தை.

''சரிடா.. கண்ணா...! இந்த ஒரே ஒரு தடவை'' என்று கெஞ்சினான். ''அம்மாகிட்டே போனை குடு..'' என்றான்.

யாழினி வாங்கினாள்.

''யாழினி! என்னோட ரூம்ல.. ஒரு கேசட்ல ரெண்டு மூன்று.. நாளைக்கு முன்னாடி கதை சொன்னது.. டேப் பண்ணியிருக்கும்! விளையாட்டாய்ப் பண்ணினது. அதை எடுத்துப் போடு.. கேட்டுட்டே தூங்கிடுவான். ஹி லைக்ஸ் ஸ்டோரீஸ். அதுலயும் பீமனைப் பத்திக் கதைகள் சொன்னா... ரொம்ப லைக் பண்ணுவான்'' என்றான்.

யாழினி குழந்தையை எடுத்துக் கொண்டு போய் அவன் அறையில் தேடினாள்.

ஒரு மர டேபிளின் உள்ளறையில் இருந்தது. எடுத்தாள். எடுக்கும் போதே இரண்டு மூன்று போட்டோக்களும் விழுந்தன.

அன்றைக்கு ஆபீஸ் நிகழ்ச்சி ஒன்றில் அவளும், அவனும் அருகருகில் நிற்கிற போட்டோவை இரண்டு மூன்று பிரதிகள் இருந்தன. பார்த்து விட்டு வைத்து விட்டாள்.

தங்கள் அறைக்கு வந்து டேப் ரெக்கார்டரில் அந்தக் கேசட்டைப் போட்டவுடனே குழந்தை அமைதியாகி விட்டான். போன வாரத்தில் ஒரு நாள் விளையாட்டாகப் பதிவு செய்திருந்தார்கள்.

''ம்...'' என்று குழந்தை கேட்டதும் கூடப் பதிவாகி இருந்தது. குழந்தை கிளுகிளுவென்று சிரித்துக் கொண்டு அவள் மடியில் முகம் தேய்த்துக் கொண்டு புரண்டு புரண்டு படுத்துக் கொண்டே கேட்டவன் நிம்மதியாக உறங்கிவிட்டான். அவனைப் படுக்கையில் படுக்கச் செய்து விட்டு அவள் சற்று நேரம் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே அமர்ந்திருந்தாள்.

குழந்தைக்கு அவன் அன்பு பிடிக்கிறது என்று புரிந்தது. அவளுக்கு இன்னொரு விஷயமும் புரிந்தது. உமாசங்கர் குழந்தையிடம் காட்டுகிற அன்பு பாசாங்கற்றது என்று.

நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

தன்னிடம் உமாசங்கர் அப்படிக் கேட்கக் கூடும் என்பது அவள் எதிர்பாராதது. அவனும் ஆழமாக யோசித்து அப்படிக் கேட்கவில்லை என்று தோன்றியது. ஆழமாக யோசித்துத் தீர்க்கமாகக் கேட்டிருந்தால் கூட அவள் சம்மதம் சொல்லியிருப்பாளோ?''

தன் சிந்தனை போன போக்கைப் பார்த்து அவள் திடுக்கிட்டுப் போனாள்.

'என்னதிது.. பாழும் மனம் இப்படி எல்லாம் யோசிக்கறது? ஒரு கல்யாணம் நடந்து அதிலே காயப்பட்டது எல்லாம் போதாதா?' ''காயப்படுவது'' என்றால் ஃபிகரட்டிவ் ஸ்பீச் என்பார்களே அதுபோல இல்லை! உண்மையாகவே அவள் காயப்பட்டிருக்கிறாள். இதற்குப் பிறகும் இன்னொரு வாழ்க்கையா?



ஒரு நாள்.. ஒரு நாள் கூட கலாதர் சுய நினைவோடு அவளை அணுகுவதில்லை. அந்த வேதனையாலேயே நொந்து வருந்தியது போதாதா? சேச்சே! உமா அப்படியில்லை...! எவ்வளவு கண்ணியமாகப் பேசுகிறார்! பழகுகிறார்.

தனக்காக எவ்வளவு தூரம் யோசித்தார். ஏதோ ஒரு புத்தகத்தில் படித்திருந்தாள் குழந்தைகளிடம் இயல்பாகவும், அன்பாகவும் பழகுகிற எந்த ஒரு மனிதனிடமும் உள்ளே ஒரு அன்புள்ளம் ஒளிந்திருக்கிறது என்று.

'வேண்டாம்! உமாசங்கர்... அழகான ஒரு நல்ல மனைவியை அடைந்து வாழ வேண்டியவர். தன்னைப் போல ஒரு அதிர்ஷ்டக் கட்டை அவருக்கு வேண்டாம்' என்று என்னென்னவோ மனதுக்குள் சிந்தனை ஓடியது.

திடீரென்று அவளுக்குள் அது உதித்தது. இந்த இரண்டு நாட்களும் உமா அலுவலகத்தில் இல்லாமல் இருந்தது தனக்கும் வெறுமையாகத்தான் இருந்தது என்று.

அப்போது அவளுக்கு தெரியவில்லை. வரும்நாட்களில் உமாசங்கர் இன்னும் எவ்வளவு விலகப் போகிறான் என்றும், அதனால் அவள் வாழ்க்கையில் ஏற்படுகிற மாற்றங்கள் பற்றியும்...

# 19

சரளாவும், உமாசங்கரும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். யாழினி உள்ளே நுழைந்தாள்.

யாழினி உள்ளே நுழைந்துவிட்டாள் என்பதற்காக அவர்கள் அந்தச் சிரிப்பை நிறுத்தவும் இல்லை.

ராமானுஜம் பிரச்சினைக்குப் பிறகு அவள் ராமானுஜத் துக்கு "ஹி.. ஹி.. ராமானுஜம்" என்றே பெயர் வைத் திருந்தாள்.

கம்பெனியின் எல்லாப் பிரிவுகளிலும் நடைபெறக் கூடிய எல்லா விஷயங்களையும் லாவகமாக விசாரித்துக் கொண்டு வந்து சொல்கிற திறமை சரளாவுக்கு இருந்தது.

இரண்டு எம்.டிக்களுக்குமே அருகே இருக்கிறாள் என்பதால் செய்திகள் அவளை நேரடியாக வந்தும் அடைந்தன. அதில் எந்தெந்த செய்திகள் முதலாளி களுக்குத் தெரிய வேண்டும் என்பதை அவள் வடிகட்டி அவர்களிடம் தெரிவிக்கிற திறமையையும் இந்த சில நாட்களிலேயே பெற்றிருந்தாள்.

உமாசங்கர் அவளது சுறுசுறுப்பையும் திறமையையும் புரிந்து கொண்டவனாக தேவையான செய்திகளை அவ ளிடமிருந்து பெற்றுக்கொண்டதோடு மட்டும் அல்லா மல் அதை வேறு விதங்களிலும் சரி பார்த்துக் கொண் டான். அப்படி சரிபார்க்கும்போதுதான் தன்னுடைய எந்தக் கருத்துக்களையும் திணிக்காமல் பாரபட்சமற்ற முறையிலேயே அவள் செய்திகளைக் கொடுக்கிறாள் என்று புரிந்து அதனால் சரளாவின் மேல் அவனுக்கு நல்ல எண்ணமும் ஏற்பட்டது. சரளாவிடம் இயல்பாகச் சிரித்துப் பேசவும் ஆரம்பித்தான்.

இரண்டு மூன்று நாட்களாக வெளியூர் போயிருந்த சங்கர் நேற்று வரும்போது ஒரு பெரிய விஷயம் நடந் திருந்தது.



சங்கர் மட்டுமல்லாமல் அவனது பெற்றோர்களும் உடன் வந்திருந்தார்கள்.

இந்த மாதம் முழுவதும் இங்கே இருப்பார்களாம். அடுத்த மாதத்தில் சேலத்துக்கு அருகில் உள்ள அவர்கள் கிராமத்துக்குச் சென்று வீட்டைக் காலி செய்து விட்டுக் கோயம்புத்தூருக்கே வருவதாக ஏற்பாடாம்.

இத்தனை விஷயங்களையும் அவன் ஞானமுத்து விடம் பேசித் தீர்மானித்துக் கொண்டிருக்கிறான் என்பதும், எதுவுமே அவளுக்குச் சொல்லப்படவில்லை என்ற போதும் யாழினிக்கு ஏனோ தன்னை ஒதுக்கிறார் களா என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் இத்தனைக் கும் தான்தானே காரணம் என்ற எண்ணமும் தோன்றியது.

பெயர்ப்பொருத்தம் போலவே அம்பலவாணரும், பராசக்தியும் மனதால் இணைந்த ஜோடியாக இருந்தார்கள். திருநீற்று நிற்றோடு, அந்தக் நீற்றுக்கு நடுவில் குங்குமப் போட்டு வைத்துக் கொண்டு பார்ப்பதற்கு மிகவும் களையோடு இருந்தார் பராசக்தி.

"சக்தி.. சக்தி.." என்றுதான் அழைத்தார் அம்பல வாணர். அவரும் அமைதியான சுபாவமாக நடமாடினார்.

கடந்து போன பிரச்சினைகள் எந்த அளவுக்கு தெரி யுமோ தெரியவில்லை. அவர்கள் அதைப் பற்றி எதுவுமே பேசவில்லை. ஞானமுத்துவும், அன்னபூரணியும் எதுவும் தெரிந்தாற் போலக் காட்டிக் கொள்ளவில்லை.

வந்தவுடனே இரவு உணவுக்கு அவர்கள் வீட்டுக்குத் தான் வந்தார்கள். கலகலப்பாகப் பழகினார்கள்.

உமாசங்கர்தான் வழக்கத்துக்கு மாறாக அமைதியாக இருந்தான். வழக்கம் போல அருண்காந்தி அவனிடம்

ஒட்டிக் கொண்டான். அவர்கள் வீட்டுக்கு வந்தது முதல் போகும்வரை அமைதியாக அருண்காந்தியைத் தன்னோடு வைத்துக் கொண்டான். யாழினியிடம் கூட ஞானமுத்துதான் உமாசங்கரின் பெற்றோர்களை அறிமுகப்படுத்தினார்.

இன்று அலுவலகத்திற்கு வந்தால் இங்கே சரளாவோடு அரட்டை அடிக்கிறான்.

ஏனோ அவளுக்குக் கோபம் வந்தது! ஆனால் அந்த கோபத்தில் நியாயம் இல்லையென்று தோன்றியதால் அடக்கிக் கொண்டாள்.

''குட்மார்னிங்.. மேடம்!'' என்று சுறுசுறுப்பாகவும், பதவியாகவும் ''விஷ்'' செய்த சரளாவுக்கு பதில் வணக்கம் சொல்லி விட்டு உமாசங்கரிடம் அன்றைய வேலைகளின் விவரம் கேட்டாள்.

உமாசங்கர் உடனே வெகு தீவிரமான பாவத்துக்கு மாறினான். எப்போதுமே யாழினிக்கு அது ஒரு ஆச்சரியமான விஷயம்தான்.

கலகலவென்று சிரித்துக் கொண்டிருப்பான். ஆனால் முக்கியமான விஷயம் என்று ஏதாவது வந்தால் உடனே தீவிர பாவத்துக்கு மாறி விடுவான்.

யாழினிக்கு எப்போதுமே அது ஆச்சரியம்தான்.

சமீப காலமாக சரளாவிடம் கொஞ்சம் அதிகமாகவே பேசுகிறானோ என்ற எண்ணம் யாழினிக்குத் தோன்றியது. ஒருவேளை அவன் தன்னிடம் பேசுவதைக் குறைத்துக் கொண்டான் என்பதால் அப்படித் தோன்றுகிறதோ என்றும் எண்ணிக் கொண்டாள்.



பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். மனம் ஏனோ அவர்கள் சிரிப்பிலேயே உழன்று கொண்டிருந்தது. கிடைத்த ஒரு இடைவெளியில் மெல்ல சரளாவிடம் கேட்டாள்.

''சரளா... என்ன காலங் காத்தாலே சார்கிட்டே சிரிச்சுகிட்டிருந்தே?'' என்று.

சரளா இயல்பாகப் புன்னகைத்தாள்.

''மேடம்! நேத்து ஒரு ஜோக் சார்கிட்டே சொன்னேன். எப்பவுமே உங்ககிட்டே ரிலே பண்ணுவாரே...! சொல்லலியா?'' என்றாள்.

யாழினி சட்டென்று, ''சாருக்கு என் மேல கோபம் அஃபீஷியிலா மட்டும்தான் இப்பல்லாம் பேசறது'' என்றாள்.

சரளா மேடம் இப்படித் தன்னிடம் வெளிப்படையாகப் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. ஏன் யாழினியே எதிர்பார்க்கவில்லை. ஒரு வேளை தன் வயதொத்த யாரிடமாவது நட்புத் துணை வேண்டுமென்று அவளுக்குள் ஒரு எண்ணம் இருந்ததோ... என்னவோ.. தெரியவில்லை. தன் மனதில் இருந்ததைச் சொல்லிவிட்டாள்.

''ஓ...!'' என்றாள் சரளா.

''அப்புறம்.. டைம் கிடைக்கும்போது விவரமாச் சொல்றேன்..'' என்றாள் யாழினி.

கிடைத்தது.

உமாசங்கர் எங்கோ வெளியே போயிருந்தபோது யாழினி சரளாவிடம் கொட்டினாள்.

''சரளா.. சாரும், அவரோடு மாமாவும் என் எங்க மாமனார், மாமியாரும் கூட அவரோட சேர்ந்துகிட்டு எனக்கு

மறுகல்யாணம் பண்ணி வைக்கணும்னு பிளான் பண்றாங்க'' என்று ஆரம்பித்து நடந்ததையெல்லாம் சொன்னாள்.

சரளா பொறுமையாகக் கேட்டுக் கொண்டு பிறகு சொன்னாள்.

''மேடம்! அவங்க நோக்கமும் தப்பில்லே! உங்க முடிவும் தப்பில்லே! அவங்கவங்க பிரச்சினையை அவங்கவங்கதான் சரியான கோணத்துல புரிஞ்சுக்க முடியும்'' என்றாள் ஆறுதலாக.

''அதுசரி...! உன்னோடது என்ன விஷயம்! சொல்லு'' என்றாள் யாழினி.

சொன்னாள்.

சரளாவுக்குத் திருமணமாகி ஓராண்டுதான் ஆகியிருந்தது. சரளாவின் கணவன் கல்யாணராமன் எப்போதும் கொஞ்சம் ரொமான்டிக்காக இருப்பான்.

போனமாதம் நடந்த நிகழ்ச்சி!

தினமும் பஸ்ஸை விட்டு இறங்கி வீட்டுக்குப் போகும்போது யாரோ பின் தொடர்கிறார்கள் என்று தோன்றியது.

கவனித்துப் பார்த்தாள்;

உண்மைதான் என்று தெரிந்ததும் கணவனிடம் சொன்னாள்.

கல்யாண் கொஞ்சம் டென்ஷனாகிவிட்டான். உடனே தன் நண்பன் ஒருவனுக்கு போன் செய்தான். அவன் பெயர் பீட்டர். அவன் அன்று இரவே அவர்கள் வீட்டுக்கு வந்து விட்டான்.

''டேய்...! இதை விடக் கூடாதுடா!'' என்று இருவரும் திட்டம் போடுவதைப் பார்த்தவுடன் சரளாவுக்கு பயமாகப் போனது.





''ஐயய்யோ! ரொம்பப் பெரிசு பண்றீங்க! நல்ல விதமா சொல்லிரலாம்'' என்றாள்.

''என்னத்தை.. நல்ல விதமா சொல்றது? நீ போய் அவன்கிட்டே பேசாதே! அப்புறம் நீ எனகரேஜ் பண்றேன்னு நினைச்சுப்பானுங்க'' என்று குதித்தான் கல்யாண்.

இவர்களிடம் ஏன்டா சொன்னோம் என்றாகிவிட்டது சரளாவுக்கு.

இரண்டு பேரும் பெரிதாகத் திட்டம் போட்டார்கள்.

''டேய்! இவ பஸ்ஸை விட்டு இறங்கற நேரத்துக்கு ''மிஸ்ட் கால்'' குடுக்கட்டும். நீ பஸ் ஸ்டாண்ட் பக்கமே நில்லு. ஏன்னா.. அந்த நேரத்துக்கு எங்க ஆபீஸ்ல இருந்து பர்மிஷன் கிடைக்காது'' என்றான் கல்யாண்.

''நீ விடு.. அதெல்லாம் நான் பாத்துக்கறேன்... நண்பன்னு எதுக்கு இருக்கறது.. மச்சி!'' என்றான் பீட்டர்.

''ஆமடா! சரளா பாட்டுக்கு நடந்து வரட்டும். நீ கொஞ்சம் இடைவெளி விட்டு பின்னாடி போ! சரளா வீட்டுக்குள்ளே போனவுடனே நீ அவன்கிட்டே விசாரி..'' என்றான்.

''சரி..!'' என்றான் பீட்டர் உற்சாகமாக.

''டேய்! இந்தத் திட்டத்துக்கு நல்லதா பேரு வக்கணும்டா!'' என்றான் பீட்டர்.

''பேரா?'' என்றாள் சரளா ஆச்சரியமாக.

''நீ சும்மாயிரு'' என்ற கல்யாணராமன் திரும்பி... ''ஆமடா! வைப்போம்! என்ன பேர் வைக்கலாம்! ''பஸ்ஸோ.. பின்னாடி'' அப்படீன்னு வைப்போமா?'' என்றான் கல்யாண்.

''பஸ்ஸோ பின்னாடி!'' என்று குபீரென்று சிரித்தாள் சரளா.

கல்யாண் முறைத்தான்.

''ஏய்! அவனவன் என்ன டென்ஷன்ல இருக்கானுன்னு புரிஞ்சுக்காம சிரிக்கறியே'' என்றான்.

சரளா கப்பென்று வாய மூடிக் கொண்டாள். சரளா இப்போது சுவாரசியமாகச் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த யாழினியின் முகத்திலும் புன்னகை அரும்பியது.

சரளா தொடர்ந்தாள்.

''மேடம்! மேலே நடந்ததைக் கேளுங்க..'' என்று தொடர்ந்தாள்.

அடுத்த நாள் ''பீட்டர் அண்ணா வந்தாரு'' எப்ப தெரியுமா?

நான் பஸ்ஸை விட்டு இறங்கி சுற்று முற்றும் பாக்கறேன். பீட்டர் அண்ணாவைக் காணலை. அது ஒரு மாதிரி அவுட்ஸ்கார்ட் ஏரியா. ரொம்ப நேரம் நிக்கவும் முடியாது.

''நான் பாட்டுக்கு நடக்க ஆரம்பிச்சுட்டேன். அந்த ஃபாலோயரும் பின்னாடியே வர்றான். நல்ல வேளையா எதிர்ல என் அண்ணனோட பிரண்டு வந்தாரு. அவரைத் துணைக்கு கூப்பிட்டுகிட்டு வீடு போய்ச் சேர்ந்தேன். இதுக்கு நடுவில இவரு வேற போன்ல ''என்ன ஆச்சு? பீட்டர் வந்தானா? வர்லையானு'' ஒரே டென்ஷன். எனக்கே ஏண்டா இவர்கிட்டே சொன்னோம்னு ஆயிடுச்சு. அதைப் பாத்துட்டு எங்கண்ணா பிரண்டு என்னம்மான்னு கேட்டார். நான் விஷயம் சொன்னேன். ''அப்படியா நான் பாத்துக்கறேன்னு'' சொன்னாரு. ''வேண்டாம்னா.. அவருக்குத் தெரிந்தா கோபிச்சுப்பாரு...ன்னேன்'' அவருக்குத் தெரியாமயே விஷயம் முடிக்கலாம்னாரு! நான் வீட்டுக்குப் போய் காபி போட்டுக் குடிச்சு முடிச்சதுக்கப்புறம் பீட்டரண்ணா.. வந்தாரு.''



''அப்புறம்.. என்ன ஆச்சு?''

''என்ன ஆகறது? எங்க வீடு மாடி போர்ஷன் அதுல நின்னு பார்த்தப்ப எங்க அண்ணனோட பிரண்டு அந்தப் பையன்கிட்டே போய் தோள்மேல கையைப் போட்டுட்டு ஏதோ பேசிக்கிட்டிருந்தாரு.. அப்புறம் அவன் போயிட்டான். அவரைப் பாத்ததை நான் பீட்டரண்ணாகிட்டே சொல்லலை. ஏன்னா.. எங்க வீட்டுக்காரர் ''எதுக்கு உங்கண்ணன்கிட்டேயெல்லாம் சொன்னே?ன்னு!'' அவரு வேற டென்ஷனாயிடுவாரு. ஆனா... அடுத்த நாள்ல இருந்த அவன் வர்லை. பீட்டரண்ணா.. பேசினாரோ.. எங்கண்ணனோட பிரண்டு பேசினாரோ.. இல்லை எங்கண்ணனுக்கு விஷயம் தெரிஞ்சு பேசினாரோ... அவன் வர்லை. நேத்திக்கு எங்கயோ போகும் போது எதிர்ல அந்த ஆள் வந்தாரு. என்னைப் பார்த்தவுடனே பேயைக் கண்ட மாதிரி விலகி ஓடிட்டாரு. அதான் ஞாபகம் வந்துருச்சு. ''பஸ்ஸோ பின்னாடி ஆபரேஷன்'' பேரை நினைச்சு சிரிச்சுகிட்டிருந்தேனா.. சார் என்னதுன்னு கேட்டாரு.. சொன்னேன்...'' என்றாள்.

யாழினியும் சிரித்தாள்.

சரளா வேறு ஒரு யோசனையும் சொன்னாள். யாழினி அதை அன்றே செயல்படுத்தினாள்.

அன்று பிற்பகல் புறப்படும் முன்பு உமாசங்கரிடம் நின்றாள்.

''உமா.. உங்ககிட்டே பேசணும்..''என்றாள்.

''பர்ஸனல்ன்னா...!'' என்று அவன் ஆரம்பிக்கும் முன்பே அவள் குறுக்கிட்டாள்.

''பர்ஸனல்தான்..! ஆனா.. பேசணும்..'' என்றாள். உமாசங்கர் இதை எதிர்பார்க்கவில்லை. அவனுக்குப் பேசுகிற வாய்ப்புக் கொடுக்காமல் அவள் தொடர்ந்தாள்.

''நீங்க.. எனக்காக ஒரு ஏற்பாடு செஞ்சிங்க. அது என் மனசுக்குப் பிடிக்கலே. அதுக்காக.. என்னையே உங்களுக்கு எப்படிப் பிடிக்காமப் போகலாம்! நீங்க என் வெல்விஷர்ன்னு எனக்குத் தெரியும். அது மாதிரி நீங்களும் என்னை ஒரு பிரண்டா ஏத்துக்கலாம்.. அதுல ஒரு தப்பும் இல்லே..!'' என்றாள்.

ஏதோ அந்தச் செய்தி உள்ளே இறங்குவதற்கு நேரம் கொடுத்தாற் போல ஒரிரு வினாடிகள் அமர்ந்திருந்தான் உமாசங்கர். பிறகு மெது மெதுவாக இதழ்கள் விரிய அவளைப் பார்த்து சிரித்தான்.

''ஓ.கே.. பிரண்ட்!'' என்றான். யாழினியின் முகம் மலர்ந்தது.

பாரம் இறங்கினாற் போல உணர்ந்தாள். இலேசான மனத்துடன் அவள் விடை பெற்றுப் போனதைப் பார்த்த உமாசங்கர் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''நான் உன்னிடம் பேசாமல் இருப்பதற்குக் காரணம் கோபம் இல்லை! பெண்ணே!'' என்று எண்ணிக் கொண்டே திரும்ப, சரளா அருகே நின்று குறுகுறு வென்று பார்த்துக் கொண்டிருந்தாள்.



உமாசங்கர் பிடிப்பட்டவன் போல ஒரு நிமிடம் திணறினாலும் உடனே தன்னுடைய கம்பீரத்தை வரவழைத்துக் கொண்டான்.

''சொல்லுங்க.. சரளா!'' என்றான்.

# 20

முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டே நடமாடிக் கொண்டிருந்தான் உமாசங்கர்.

தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

இன்றைக்கு அப்படியொரு கேள்வியை சரளா கேட்டிருந்தாள். இல்லை எழுப்பியிருந்தாள்.

யாழினி கிளம்பிப் போனதற்குப் பிறகு, ஒரு குறுஞ் சிரிப்புடன் அவனிடம் சொன்னாள்.

''சார்! இப்பல்லாம் ஜோக்ஸ் எல்லாம் யாழினி மேடம் கிட்டே சொல்றது இல்லை போல இருக்கு..'' என்றாள்.

அவன் முகம் தீவிர பாவத்துக்கு மாறியது. ''ஆமா...!'' என்றான்.

''மேடம் என்கிட்டே விசாரிச்சாங்க!''

''என்ன?!'' என்று போலப் பார்த்தான்.

என்னத்துக்கு உமாசாரும், நீயும் அப்படி சிரிச்சுகிட்டிருந்தீங்கன்னு கேட்டாங்க'' என்றாள்.

அவன் சற்று வியப்பாக அவளைப் பார்த்தான்.

''சார்! யாழினி மேடம்... எல்லாம் சொன்னாங்க!'' என்றாள்.

அவன் கொஞ்சம் திடுக்கிட்டுப் போனான். உடனே சரளா அவசரமாகச் சொன்னாள்.

''சார்! அவங்க ரொம்பத் தனிமையான ஃபீலிங்கல இருக்காங்க... போல! மே பி.. என்கிட்டே ஒரு உண்மையான நட்பைத் தேடியிருக்கலாம்'' என்றாள்.

உமாசங்கர் ஒரு மெல்லிய பெருமூச்சுவிட்டான். தொடர்ந்து மௌனமாகவே அவளைப் பார்த்தான். ஒரு வினாடி கனத்த மௌனத்திற்குப் பிறகு அவன் கேட்டான்.

''எல்லாம்ன்னா...!'' என்று.

''எல்லாம்தான்! நீங்க அவங்களுக்காக மாப்பிள்ளை பார்த்தது. அவங்க மறுத்தது.. எல்லாம்.. சொன்னாங்க...''

அவன் சரளாவின் முகம் பார்க்கவில்லை. மேஜையின் மேல் இருந்த பேப்பர் வெயிட்டை உருட்டியபடியே மெல்லிய குரலில் சொன்னான்.

''அவங்க ஃப்யூச்சர் பற்றி பெரியப்பா ரொம்பக் கவலைப் பட்றார். அதான்..''

சரளா மறுபடியும் வாஞ்சையான புன்னகையுடன் அவனைப் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

''சார்...! ஒரு வேளை நான் எல்லை மீறனோ.. என்னமோ... தெரியலை! இது ஒருவேளை இம்பர்ட்டினன்ஸா கூட நீங்க நினைக்கலாம். ஆனா... சொல்ல வேண்டியது என் கடமைன்னு எனக்குத் தோணுது. யாழினி மேடத்துக்கு என்ன வேணும்னு அவங்களுக்குத் தெரியலை. ஆனா.. உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. யாழினி மேடம் அதைப் பத்தி யோசிக்கறதுக்கு மறுக்கறாங்கன்னா.. நீங்க...



மறைக்கறதுக்குப் போராடறீங்க. ரொம்ப எளிமையா முடியக் கூடிய விஷயத்தைச் சிக்கலாக்கிங்கறீங்களோன்னு தோணுது...'' என்றாள்.

உமாசங்கருக்கு அவளுடைய புத்திசாலித்தனத்தின் மீது எப்போதுமே ஒரு நல்ல எண்ணம் உண்டு. இப்போது கண்கள் மின்ன அவளைப் பார்த்தான். பிறகு சொன்னான்.

"இப்ப வெளிய சொன்னாலும் போராடத்தான் வேணும். யாழினி அவ்வளவு சீக்கிரம் ஒத்து வரப் போறதில்லே...''

''அதுக்காக.. அப்படியே விட்டுரப் போறீங்களா?'' அவன் மறுபடியும் மௌனம் காத்தான்.

சரளா மேலும் சொன்னாள்.

''சார்! சில நேரத்துல குழந்தைக்கு மருந்து ஊட்டறதுக்காக அதோட கையைக் காலை அழுத்திப் பிடிச்சுக்கறோம். அதுக்காக அதை வன்முறைன்னு சொல்லிடுவோமா?'' என்றாள்.

உமாசங்கர் உள்வாங்கிக் கொண்டான். அவள் மேலும் கேட்டாள்.

"மேடத்தை உங்களுக்கும் பிடிக்குதுதானே?''

''ம்...! யாழினியை விட அருண்காந்தி என்கிட்டே ரொம்ப ஒட்டிருப்பான். நானும் ரொம்ப பாசம் வளத்துட்டேன்..'' என்றான்.

சரளா புன்னகைத்தாள். உமாசங்கர் மேலும் தொடர்ந்து சொன்னான்.

''சரளா.. உங்களுக்கு யாழினி கடந்த காலத்துல பட்டிருக்கிற கஷ்டம் எல்லாம் தெரியாது. அதையெல்லாம் சொல்ல எனக்கு ரைட்ஸ் இல்லே! அந்த அதிர்ச

சிகள்தான் இப்ப இன்னொரு வாழ்க்கை வேணுமாங்கற அளவுக்கு யாழினியை யோசிக்க வைக்குது...'' என்றான்.

''ஓ...! அதெல்லாம் எனக்கு தெரியாது. நீங்க சொல்ற விஷயங்களோட ஆழத்துக்கெல்லாம் நான் போக விரும்பலே. ஆனா.. ஒன்று நிச்சயம்..'' அவங்க கடந்த கால வாழ்க்கையில அவங்களுக்கு நிம்மதி கிடைக்க லேங்கிற பட்சத்துல... கண்டிப்பா நீங்க அவங்களுக்கு நிழல் குடுக்கணும். அதுலயும் உங்க மனசுல அவங்க மேல அன்பாயிருக்கும்போது.. கண்டிப்பா நல்ல வாழ்க்கையை நீங்க அவங்களுக்குக் குடுக்கணும்....'' என்றாள் இறைஞ்சுவது போல.

''பாக்கறேன்.. சரளா..! என்ன செய்ய முடியும்ன்னு.. பாக்கறேன்'' என்றான் உமாசங்கர்.

சரளா நிம்மதியான ஒரு முகபாவத்தோடு கிளம்பிப் போவதைப் பார்த்த போது அவன் மனமும் நெகிழ்ந்தது.

கொஞ்ச நாள் பழகிய இந்தப் பெண்ணே யாழினிக்காக உருகுகிறாளே என்று தோன்றியது. நன்றாக விசாரித்து சரளாவின் திறமைகளை உணர்ந்த பின்தான் சரளாவை யாழினிக்கு பி.ஏ.வாகப் போட்டான்.

நடுத்தரக் குடும்பத்தில் இருந்து வந்தவள் சரளா. இந்த அலுவலகத்தில் வேலைக்கு வந்து இரண்டு ஆண்டு களாகி இருந்தது.

பொதுவாக ஒரு பெண்ணை எல்லாப் பெண்களுமே ''நல்ல டைப்'' என்று சொல்ல மாட்டார்கள். இரண்டு பெண்கள் இருந்தால் மூன்று கட்சி இருக்கும். ஒரு பக்கம் திறமையுள்ளவர்கள் ஒரு குழுவாக ஒன்று சேர்ந்து கொள்வார்கள். மற்றொரு பக்கம் திறமையில்லாதவர்கள்



ஒன்று சேர்ந்து கொள்வார்கள். இல்லையென்றால் இரண்டு திறமைசாலிகளுக்குள்ளே பாலிடிக்ஸ்'' இருக்கும். இரண்டு பேரும் இரண்டு குழுவை வைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் சரளாவை எல்லாருக்கும் பிடித்திருந்தது.

யாரிடம் எந்த எல்லை தெரிந்து பழக வேண்டும் என்று அறிந்தவளாக இருந்தாள். அப்படிப்பட்ட பெண்தான் யாழினிக்கு ஏற்ற பி.ஏ.வாக இருப்பாள் என்று முடிவெடுத் தான். அந்த செக்ஷன் மேலாளர் சரளா மேடம்...! நல்ல வொர்க்கர்.. சார்'' என்று புலம்பியதிலேயே அவனுக்குத் தெரிந்தது. வேலையிலும் கெட்டிக்காரி.. என்று.

சரளா இருப்பது உமாசங்கருக்குப் பல விதத்திலும் வசதியாக இருந்தது. வம்பு பேசும் வழக்கம் இல்லாதவள் என்றும் அவனுக்கு தெரியும். மேலதிகாரிகளின் அருகில் இருக்கிறாள் என்பதாலேயே விஷயங்கள் சேகரிக்க என்று மொய்ப்பார்கள் சிலா. ஆனால் எந்த முக்கிய விவரத்தையும் வெளியிடவே மாட்டாள். பரிசோதிப்பதற் காகவே அவன் சில செய்திகளைச் சொல்லுவதுண்டு. எந்தச் செய்தியும் வெளியே போகாது.

இத்தனை நல்ல இயல்புகளும் இருந்தால்தான் அந்தப் பெண்ணிடம் கொஞ்சம் விளையாட்டாகப் பேசுவான். திருமணமானவள் என்பதால் கொஞ்சம் தைரியமாகவும் பேசுவான்.

நேற்றிரவு கூட அவளது ''பஸ்ஸோ பின்னாடி'' ஜோக்கை நினைத்துச் சிரித்துக் கொண்டிருந்தான். முன்பெல்லாம் இடைவேளை கிடைக்கும் போது அலுவலக தமாஷ்களையெல்லாம் பகிர்ந்து கொள்வான். ஆனால் கடந்த வாரத்தில் யாழினியிடம் அந்த மாதிரி

விஷயங்களையெல்லாம் பகிர்ந்து கொள்ள முடிய வில்லை.

வீட்டில் இப்போது அம்மாவும், அப்பாவும் இருப்பதால் கொஞ்சம் நன்றாக இருந்தது. யாழினியுடன் ஏற்பட்ட அந்த எண்ணக் கருத்து வேறுபாட்டுக்குப் பிறகு அங்கேயும் சுதந்திரமாகப் போக அவனுக்கு விருப்பம் எழவில்லை. அதனால்தான் அம்மாவையும் அப்பா வையும் வற்புறுத்தி அழைத்து வந்திருந்தான்.

அப்பா வந்ததிலிருந்து ஞானமுத்து பெரியப்பா கொஞ்சம் மகிழ்ச்சியாகி இருந்தார். அதே போல அன்ன பூரணி பெரியம்மாவும், அம்மாவும் கொஞ்சம் நெருங்கிப் பழக ஆரம்பித்திருந்தார்கள்.

நடந்து கொண்டிருந்த உமாசங்கர் நின்றான். திடீ ரென்று முடிவெடுத்தான்.

கீழே போய் அப்பாவின் முன் நின்றான். ''அப்பா..!'' என்றான்.

அப்பா சுந்தரகாண்டம் படித்துக் கொண்டிருந்தார். திரும்பி ''என்னப்பா...!'' என்றார்.

''உங்ககிட்டே பேசணும்!'' என்றான்.

''சொல்லுப்பா'' என்றார் அப்பா.

தன் மனதில் இருந்ததையெல்லாம் கொட்டிவிட்டான். அப்பாவின் முகத்தில் முதலில் லேசான கோபம், திகைப்பு, ஆச்சரியம் என்று பலவிதமான உணர்வுகள் மாறி மாறி எழுந்தன. கவனித்த போதும் எதனாலும் பாதிக்கப்படாதவன் போல முழுமையாகச் சொல்லி முடித்தான்.



அப்பா இப்படியொரு விஷயத்தை எதிர்பார்க்கவில்லை என்றாலும் மிகவும் அழுத்தமான முக பாவத்தோடு வாங்கிக் கொண்டார்.

''ஞானமுத்து இதைப்பத்தி ஒண்ணுமே சொல்ல லையே'' என்றார்.

''சொல்ல மாட்டாருப்பா!'' என்றான் உமாசங்கர்.

''ஏன்?!'' என்றார் அம்பலவாணர்.

''ஏன்னா... திட்டம் போட்டு என்னை வரவழைச்சு எல்லாத்தையும் நடத்திகிட்ட மாதிரி நீங்க நினைக் கக்கூடாதில்லே... அதான்...!'' என்றான்.

''ஓ... அது வேற இருக்கோ?'' என்றார்.

பிறகு ''தம்பி! ரெண்டு நாள் டைம்குடு! யோசிச்சுச் சொல்றேன்.''

''நீங்க.. யோசிச்சுச் சொல்றதுக்கு இதுல எதுவுமே இல்லே! நான் முடிவெடுத்தாச்சு...'' என்று சொல்லி விடலாமா என்று நினைத்தான்.

என்ன இருந்தாலும் பெற்ற தந்தை! உலக நடப்புக் களைப் புரிந்து கொண்டவர். சகோதரி ருத்ராவின் விஷயங்களில் முற்போக்காகக் கூட முடிவெடுத்தவர். அதனால் அவர் கேக்கிற நாட்கள் கொடுக்க வேண்டியது அவசியம் என்று நினைத்தான்.

* * *

யாழினி திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்!

தன்னை நடு நாயகமாய் அமர வைத்து விட்டுத் தன் திருமணம் பற்றிப் பேசுகிற அந்த நான்கு பெரியவர்களின் அன்பு நிறைந்த முகங்களைப் பார்த்தாள். என்ன செய்வது என்றே தெரியவில்லை.

அம்பலவாணர் தம்பதிகள், ஞானமுத்து தம்பதிகள் ஆக இரண்டு ஜோடிகளும் மாற்றி மாற்றி அவளிடம் பேசினார்கள்.

''எங்களுக்குப் பூரண சம்மதம்! உமாசங்கர் தீவிரமா இருக்கான்'' என்ற செய்தியையே விதவிதமாகச் சொன்னார்கள்.

''எங்க அம்மா.. அப்பா..'' என்று அவள் ஆரம்பிக்கும் முன்னே..

''நாங்க பேசியாச்சு! அவங்களுக்கு ரொம்ப சந்தோஷம்'' என்றார்கள்.

இப்படியே அவளுடைய எல்லாக் கேள்விகளுக்கும் அவர்கள் சரியாக பதில் வைத்திருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் அவளுக்கே ''நீ என்ன பெரிய இவள்...!'' என்று இவர்கள் கெஞ்சுகிறார்கள் என்று கூடத் தோன்றியது.

கடைசியில் எழுந்து நின்றாள். தரையைப் பார்த்துக் கொண்டு சொன்னாள்.

''உங்க எல்லாருடைய விருப்பத்துக்காவும்தான் ஒத்துக்கணும்...! அதுக்கு முன்னாடி உமாகிட்டே பேசணும்..'' என்றாள்.

உமாசங்கர் வந்தான். தனியாக அல்ல. அருண் காந்தியை கையில் ஏந்திக் கொண்டு வந்தான்.

யாழினி தனது இரண்டு கைகளையும் மடியில் வைத்துக் கொண்டு சற்று நேரம் தலைகுனிந்து அமர்ந்திருந்தாள். பிறகு நிமிர்ந்து பார்த்தாள்.

''உமா..! இதுல ஏன் இவ்வளவு பார்ட்டிகுலரா இருக்கீங்க?'' என்றாள்.



அவன் அலட்டிக் கொள்ளாமல் அவளைப் பார்த்தான்.

''இது நல்ல ஏற்பாடு..!'' யாழினி என்றான்.

''ஆமா..! நல்ல ஏற்பாடு! கல்யாணமில்லே!'' என்றாள் கசப்பான உணர்வோடு.

''யாழினி நீ நினைக்கிற மாதிரி இது பிஸினஸ் ஏற்பாடு இல்லே! கொஞ்ச நாள்ல புரிஞ்சுக்குவே! என்னைப் பொறுத்தவரை இது கல்யாணம். ஆனா.. உனக்கு இது ஒரு நல்ல ஏற்பாடு..!'' என்றான்.

அவள் புரியாமல் விழித்தாள்.

''புரியலியா? நான் விருப்பப்பட்டுத்தான் இந்தக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செஞ்சிருக்கேன். ஆனா இது கல்யாணம்னு நீ ஏத்துக்கற வரைக்கும், உனக்கு எந்த விதமான இடைஞ்சலும் இருக்காது.''

''ஒரு வேளை.. நான் எப்பவுமே ஏத்துக்கலைன்னா..?'' என்றாள் யாழினி.

''அப்பப் பாக்கலாம்! அப்ப உனக்கு எது நன்மையோ உனக்கு எது விருப்பமோ அதைச் செய்யலாம்'' என்றான்.

யாழினிக்கு ஒத்துப் போக முடியவில்லை.

அப்போது மட்டுமல்ல!

திருமண ஏற்பாடுகள் நன்றாக நடந்து திருமணமும் நடந்து முடிந்ததற்குப் பிறகும் கூட.

சடங்கு என்றார்கள்.

பத்து மணிக்கு மேல்தான் அறைக்கு வந்தாள் யாழினி. ஒரு விதமான அச்சம் நிறைந்த முகபாவத்துடன் அமர்ந்திருப்பதைப் பார்த்தான்.

யாழினி திரும்பிப் பார்த்தவள் கொஞ்சம் திகைத்துத் தான் போனாள். ஏனென்றால் உமாசங்கர் தனியாக வரவில்லை. குழந்தையைத் தோளில் தட்டித் தூங்க வைத்துக் கொண்டேதான் வந்தான்.

அவள் எழுந்து குழந்தையை வாங்கிக் கொண்டாள். எப்போதும் போலத் தன்னிச்சையாகக் குழந்தையின் முகத்தில் முத்தமிட்டான்.

படுக்க வைத்தான்!

''யாழினி? நீ தூங்கு! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு..'' என்றான்.

யாழினி எதிலிருந்தோ தப்பிப்பவள் போலக் குழந்தையை இறுகப் பிடித்துக் கொண்டு கண்களை இறுக மூடிக் கொண்டு அவனுக்கு முதுகு காட்டிக் கொண்டு படுப்பதை ஒரு வித ரசனையுடன் பார்த்தான்.

பிறகு அடுத்த அறைக்குப் போய்விட்டான்.

காலையில் வழக்கம் போல ஐந்து மணிக்கே விழித்த யாழினி கட்டிலின் அந்தப் புறத்தில் அவன் படுத்திருப்பதையும், குழந்தை அவன் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டு உறங்கிக் கொண்டிருப்பதையும் நின்று பார்த்தாள்.

கலாதர் குழந்தையிடம் இப்படி அன்பு காட்டியிருப்பானா என்ற கேள்வி எழுந்தது. ''ஆனால் உடனே இன்னொரு மனது எல்லாமே ஏற்பாடுதான்! வசதிக்கான ஏற்பாடு'' என்று சொன்னது.

மெல்ல அறையை விட்டுப் போனாள். ஆனால் ஒன்று புரிந்தது. தனக்கும், குழந்தைக்குமான அந்த இனிமையான தனிமை முடிந்து போனது. இனிமேல் இந்த வீட்டில் எல்லா இடத்திலும் அவன் இருப்பை அவள் நிஜத்தில் ஜீரணிக்கப் பழகிக் கொள்ள வேண்டும் வாழ்க்கை அவளுக்கு நீண்டதாகத் தெரிந்தது.



# 21

''அப்பா..! அள்ளகா இருக்கு!'' என்றான் அருண் காந்தி மழலையில்.

மைசூரில் உள்ள விலங்குக் காட்சியகத்தில் இருந்தார்கள் உமாசங்கரும், யாழினியும்.

யாழினி இப்போது இயல்பாகியிருந்தாள். உமாசங்கர் உடனிருப்பதைத் தவிர அவளை வேறு எந்த விதத்திலும் தொல்லை செய்யவில்லை.

சொல்லப் போனால் அவன் எதற்காக இப்படி ஒரு கல்யாணம் செய்து கொண்டு அல்லாட வேண்டும் என்று அவன் மேல் அவளுக்கு அனுதாபமே தோன்றும் அளவில்தான் நடந்து கொண்டான்.

நடைமுறைகளில் பார்க்கும்போது, அவன் இந்தப் பொதுச் சொத்துக்களின் மேல் ஆர்வம் காட்டாதவனாகவே இருந்தான். பார்ட்னர்ஷிப் உள்ள இந்த நிறுவனங்களில் கணக்கு வழக்குகளில் மிகவும் கறாராக இருந்தான். பத்து ரூபாய் கூட கணக்கில் தவறு நேராமல் இருக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தான்.

ஞானமுத்துவிடம் தெளிவாகச் சொல்லிவிட்டான். கலாதரின் பங்கு அருண்காந்திக்கே போய்ச் சேரும். அது

மட்டுமல்லாமல் சட்டப்படி அவனை தத்தெடுத்துக் கொண்டான். யாழினி தன்னுடைய மனைவி என்ற முறையில் அவளுக்குத் தான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்த்துக் கொள்வதாகவும் சொல்லிவிட்டான்.

ஞானமுத்து முற்றிலும் வியந்து போனார். அவரிடம் தனியாகச் சொன்னான்.

''பெரியப்பா! யாழினிக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் சொத்துக்காகத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்தேன்னு எண்ணம் வரக்கூடாது..'' என்று.

ஞானமுத்து அவனை கூர்மையாகப் பார்த்தார். பிறகு சொன்னார்.

''உமா! நான் இந்தக் கல்யாணத்துல ஏன் ரொம்ப சந்தோஷமா எல்லாம் செஞ்சேன். தெரியுமா? உன்னோட பார்வைகள்லயே எனக்கு நீ அந்தப் பொண்ணை எவ்வளவு தூரம் நேசிக்கறேங்கறது புரிஞ்சுது. அதனால தான் நான் அந்தப் பொண்ணையும் என் பேரனையும் உன்கிட்டே நம்பி ஒப்படைச்சேன். நீ உன்னோட பெருந்தன்மையைக் காமிச்சுட்டே. கலாதருடைய சொத்து எதுவும் உன் வைஃப்புக்குத் தேவையில்லேன்னு நீ நினைக்கறது நல்ல விஷயம்தான். ஆனா.. நானும் அன்னபூரணியும் சேர்ந்து ஒரு சில சொத்துக்களை அவ பேருக்கு எழுதி வச்சிருக்கோம். மருமகளா இல்ல.. மகளா! ஏன்னா.. என் மகன்..'' என்று தழுதழுத்தார். பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''அந்த நாய்ப்பய செய்த கொடுமையெல்லாம் மௌனமா அந்தப் பொண்ணு தாங்கிட்டு எங்களுக்கு அழகான ஒரு வாரிசையும் கொடுத்திருக்கே! அதுக்கு நாங்க என்ன கைம்மாறு செய்றது. அதான்.. நாளைக்கு



நீயே.. கைவிட்டாலும்.. கூட..'' என்று முன்னே உமா சங்கர் குறுக்கிட முயன்றான்.

''இல்லப்பா..! நீ அப்படிச் செய்ய மாட்டே! இருந்தாலும் எல்லாச் சூழ்நிலைகளையும் யோசிச்சு.. வைக்கணும் இல்லே! அவள் வாழ்க்கைக்குத் தேவையான பாதுகாப்பை நாங்க பண்ணியிருக்கோம்'' என்றார்.

''நல்லது.. பெரியப்பா!'' என்றான் உமாசங்கர்.

ஒரு குறிப்பிட்ட காலம் தான் சந்திக்க நேர்ந்த கொடுமைகளுக்காக கடவுள் இத்தனையெல்லாம் பலன் தரக் கூடுமா என்பது யாழினிக்கே ஆச்சரியம்தான். இப்போது அவள் பக்கத்து பங்களாவுக்கே வந்து விட்டாலும் அடிக்கடி போய் பெரியவர்கள் இருவருடைய தேவைகளையும் கவனித்துக் கொண்டாள். அந்த பங்களாவைக் கூட யாழினியின் பெயருக்கே எழுதி வைத்து விட்டார் ஞானமுத்து.

பலதையும் யோசித்தபடியே பல்வேறு விதமான விலங்குகளையும் பார்த்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தார்கள் உமாசங்கர் எந்த விதமான முறுக்கும் இல்லாமல் அவன் மிகவும் ஜாலியாக நடமாடுவதைக் காண யாழினிக்கும் முதலில் ஆச்சரியம். பிறகு மெல்ல மெல்ல அவளும் இயல்பானாள்.

''சும்மா.. ஒரு நாலு நாள் எங்காவது போயிட்டு வாங்கப்பா..'' என்று அனுப்பி வைத்திருந்தார்கள் பெரியவர்கள். அப்படி அவன் தேர்ந்தெடுத்த இடம்தான் மைசூர், பெங்களூர் பயணம்.

காலை முழுவதும் இந்தக் காட்சியகத்தில் செலவு செய்வதாக முடிவு. அருண்காந்திக்கு ஒரே மகிழ்ச்சி.

சிங்கங்கள் இருந்த பகுதிப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். சிங்கத்தை வெளியே விட்டிருந் தார்கள் பெரியதொரு சிங்கம்!

பிடரி மயிர் நிறைந்து கம்பீரமாக மூச்சு விட்டுக் கொண்டு கூண்டின் மேலே அமர்ந்திருந்தது.

''வேண்டாம் உமா! அந்தப் பக்கம் வேண்டாம்'' என்றாள்.

''ஹேய்! மேல இருக்குது! அது இருக்கற தூரம் பாரு! என்னதான் பாஞ்சாலும் இந்த நடைபாதைக்கு தாவ முடியாது'' என்று சிரித்தான் உமாசங்கர்.

போனார்கள்!

அதென்னமோ.. அந்த நேரம் பார்த்து குடும்பங்கள் ஒன்றிரண்டு மட்டும் அந்தப் பாதையில் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் கிட்டத்தட்ட அந்தச் சிங்கம் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகில் போயிருப் பார்கள். யாரும் எதிர்பாராத விதமாக அந்தச் சிங்கம் குரலெடுத்துக் கர்ஜனை செய்தது.

உமாசங்கரே ஒரு கணம் அதிர்ந்து போனான். அருண்காந்தி ''அப்பா..! நான் வரமாட்டேன்!'' என்று ஓட ஆரம்பித்தான். எதிர்த்திசையில்.

உமாசங்கருக்கு சிரிப்பு வந்து விட்டது.

''டேய்! டேய்!'' என்று பின்னால் ஓடினான்.

யாழினியும் ஓடி வந்தாள்.

உமாசங்கர் குழந்தையை அள்ளித் தோளில் போட்டுக் கொண்டான்.

''அப்பா... பெருசாக் கத்துது..'' என்று மறுபடியும் மறுபடியும் கூறினான்.



''சிங்கண்டா! வீரமானது! அதைப் பார்த்து நாமளும் பயப்படக் கூடாது...'' என்று தேற்றினான்.

சற்று தூரம் வந்து ஒரு திட்டின் மேல் அமர்ந்தார்கள் யாழினியும், உமாசங்கரும் அப்போது கற்றே கலக்கம் தெளிந்து இடியிடி என்று சிரித்தார்கள்.

''யப்பா! எனக்கே ஒரு நிமிடம் அடிவயிறு கலங் கிருச்சு...'' என்றாள் யாழினி.

''ஆமா.. எனக்கும்தான்!'' என்றான் உமாசங்கர் ஆங்கிலத்தில், மகனுக்குத்தன் பயம் தெரியக்கூடாதாம். அதற்குப் பிறகும் கூட அடிக்கடி அதைப் பற்றிப் பேசிச் சிரித்துக் கொண்டார்கள்.

அன்றிரவு!

மைசூர் பேலஸ் விளக்கொளியில் பார்த்தார்கள். சற்று முன்னேயே போய் உள்ளே சுற்றிப் பார்த்தார்கள்.

உள்ளே இருக்கற வேலைப்பாடுகளைப் பார்த்து யாழினி மயங்கிப் போய் நின்றாள்.

''அப்பா! என்ன வேலைப்பாடுகள்!'' என்று அதிசயித் தாள்.

உமாசங்கர் சிரித்தான். ''எவ்வளவு சொகுசா இருந்திருக் காங்க... பாத்தியா!'' என்றான்.

ஒவ்வொரு ஹாலாக, ஒவ்வொரு தூணாக நின்று ரசித்து அதற்குப் பிறகுதான் வெளியே வந்தார்கள். விளக்கொளியில் அந்த மாளிகையின் அழகை ரசித் தார்கள். அதற்குள்ளாகவே மகன் கண்களில் உறக்கம் தெரிய ஆரம்பித்தது.

ஹோட்டலுக்கு வந்து சேர்ந்த போது களைப்பாக இருந்தார்கள்.

உணவு முடித்து வந்தபின் மகனை படுக்க வைத்தாள் யாழினி. இரவில் அவன் கேட்டால் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஃப்ளாஸ்கில் பால், பிஸ்கட் என்று எல்லாம் தயார் செய்து வைக்கிற மனைவியை அவன் ஆழமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று சிரித்தான்.

''யாழினி! அந்தச் சிங்கம் திடீர்னு போட்ட கர்ஜனையில் உன் மகன் பயந்து ஓடிட்டான். நான் ஒடலையே தவிர ஒரு நிமிஷம் ஆடிப் போயிட்டேன்'' என்றான்.

''ஆமாங்க! எப்படி வாயைப் பிளந்துச்சு.. பாத்தீங்களா?'' என்றாள்.

யாழினி புன்னகைத்தாள்.

''இது மாதிரி நான் காலேஜ்ல படிக்கும்போது நாங்க சென்னைக்குப் போயிருந்தோம். கோல்டன் பீச்ல சுத்திகிட்டிருந்தப்போ.. அந்த வாயில் காவலர்போல் இருப்பாரே..'' என்று சிரித்தாள்.

உமாசங்கர் அவள் இயல்பாகச் சிரிப்பதை சாதாரணமாகப் பார்ப்பவன் போல பார்த்துக் கொண்டிருந்தாலும் உள்வாங்கிக் கொண்டிருந்தான்.

''அந்த காவலாளிக்கு முன்னாடி நின்னுகிட்டு. நாங்கள்ளாம் ''எப்படி.. இப்படி இவங்க அசையாம நிக்கறாங்கன்னு ஆச்சரியப்பட்டுகிட்டிருந்தோம். திடீர்னு அசைஞ்சு.. ஊன்னு'' ஒரு சத்தம் குடுத்தாரு.. பாருங்க! எல்லாம் அலறிட்டோம். ஆனா அதுக்கப்புறம் இவரா.. இப்படிங்கற மாதிரி நின்னுகிட்டாரு.... பாருங்க'' என்று மறுபடியும் சிரித்தாள்.

சற்று நேரம் அவளைப் பேச விட்டு அவளது கல்லூரி நாட்களின் அனுபவங்களையெல்லாம் கேட்டுக் கொண்டான்.



''திடீர்னு.. கல்யாணமோ?'' என்றான் குரலில் எந்த வித்தியாசமும் காட்டாமல்.

''ஆமா! நான் மேல படிக்கனும்னு ஆசைப்பட்டேன். ஆனா.. மாமாவும் அத்தையும்..'' என்று தயங்கினாள்.

''திடீர்னு.. முடிவு பண்ணிட்டாங்க...!'' என்றான் இயல்பாகக் கேட்டது போல.

''ம்..!'' என்றான்.

''இப்ப வேண்ணாப் படிக்கறியா?'' என்றான். அவள் வியப்பாகப் பார்த்தாள்.

''இல்ல.. வேண்டாம்! அருண்காந்தி ஸ்கூலுக்குப் போகட்டும். அப்படியே படிச்சாலும் போஸ்டல்லதான்'' என்றாள்.

''படி! கம்ப்யூட்டர்ல கொஞ்சம் நாலேட்ஜ் வளத்துக்க..'' என்றான்.

''ஆமா.. செய்யணும்..!'' என்றாள்.

படிப்படியாக தங்களுக்கிடையே நட்பு பூப்பதை உணர்ந்தார்கள். அன்றைக்கென்னவோ படுக்கையில் படுத்தற்கும் பிறகும் கூட சிரிப்பாக இருந்தார்கள்.

இரவில் ஒருமுறை எப்போதும் விழிப்பான் அருண் காந்தி அன்றைக்கு அசதியோ என்னவோ நன்றாக உறங்கிவிட்டாள் யாழினி.

அதிகாலையில்தான் விழித்தாள்.

விழித்துப் பார்க்கும் போதுதான் தெரிந்தது. அருண் காந்தி அந்தப் படுக்கையின் ஓரத்துக்குப் போயிருந்தான். உமாசங்கர் இந்தப் பக்கமாகத் தன் முகம் தெரிகிறாற் போலப் படுத்திருந்தான்.

யாழினிக்குக் கொஞ்சம் படபடப்பாகப் போய் விட்டது. ஆனால் அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் என்பதும் புரிந்தது. குழந்தையை எடுத்து மறுபடியும் சரியாகப் படுக்கச் செய்துவிட்டு அவள் மீண்டும் சற்று நேரம் உறங்கினாள்.

மறுநாளைக்கு வேண்டுமளவுக்கு சுற்றுவதற்கு அவன் திட்டம் வைத்திருந்தான். பிருந்தாவனக்கார்டன் போக வேண்டுமாம்.

காலையில் புறப்படும்போது, அவள் ஃபிளாஸ்கை கழுவி விடலாம் என்று எடுத்தாள். அதில் பால் இருக்க வில்லை.

தலைவாரிக் கொண்டிருந்த உமாசங்கர் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''நீ அசந்து தூங்கிட்டிருந்தே! நானே அவனுக்கு பாலைக் கலக்கிக் குடுத்துட்டேன்'' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

''சாரி'' என்றாள்.

அவன் தலை வாருவதை நிறுத்தி விட்டு வியப்பாகப் பார்த்தான்.

''எதுக்கு?'' என்றான்.

''இல்லே! உங்களுக்கு சிரமம்'' என்றாள். அவன் அவள் அருகே வந்தான்.

''யாழினி! நேத்து ஏதோ கொஞ்சம் நார்மலாய்ட்டு வர்றேன்னு நினைச்சேன். ஆனால் இப்ப மறுபடியும் தேங்க்ஸ். கீங்ஸ்னு ஆரம்பிச்சுட்டே'' என்றான்.

அவள் விழித்தாள்.



''பாரும்மா! நான் உன்னை மனசார விரும்பிக் கல்யாணம் பண்ணிட்டேன். இவனை நான் என் தத்து மகனா ஏத்துகிட்டிருக்கேன். ஆனா.. நீ இன்னும் ஒரு அடி தள்ளியே நின்றுகிட்டு பார்மாலிட்டீஸ் கீப் அப் பண்ணி கிட்டிருக்கே! போதும்.. யாழினி! கடந்த காலத்துல இருந்து வெளிய வா! இல்லே.. நான் என்ன செஞ்சா.. என் மேல நம்பிக்கை வரும்னு சொல்லு..!'' என்றான்.

குரல் குழைந்து போய் இருந்தது. அப்போதுதான் விழித்து அமர்ந்த நிலையிலும் லேசாகக் கலைத்திருந்த அவள் கூந்தலை அவன் கைகள் தன்னிச்சையாகச் சரி செய்தன. அவள் மெல்ல முணுமுணுத்தாள்.

''என்னால நம்ப முடியலே!'' என்று முணுமுணுத்தாள்.

அவன் மௌனமாக ஒரு வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''கலாதர்கிட்டே அப்படியொரு குணத்தை நான் எதிர்பார்க்கலே.. ஆனா.. நேர் மாறா நீங்க எப்படி இவ் வளவு நல்லவரா இருக்க முடியும்னு எனக்குப் புரியலே..'' என்றாள்.

''நான் மனுஷன்தான்! யாழினி! எனக்கும் கோபம் வரும்! கத்துவேன்! ஆனா.. அதையெல்லாம் இயல்பா ஏத்துக்கற அளவுக்கு நமக்குள்ளே இன்னும் நமக்கு நட்பு வர்லையே.. யாழினி!'' என்றான்.

அவள் ஒரு கையாலாகாத்தனத்துடன் அவனைப் பார்த்தாள்.

''ப்ளீஸ்! உமா! என்னை மீறிய பயம் எனக்குள்ளே இருக்கு..! அதை எப்படி.. எப்படி'' என்று தேம்பியவள் சற்றும் எதிர்பாராத விதமாக அவன் மார்பில் சாய்ந்து

கொண்டாள். அவன் மௌனமாக மெல்ல அவள் தலையைக் கோதிவிட்டான். பிறகு சொன்னான்.

''டேக் யுவர் ஓன் டைம்! அப்படி உன்னாலே ஜீரணிக்க முடியலேன்னா.. ஓ.கே.! நாம இப்படியே கூட இருக்கலாம்! நமக்கு அருண்காந்தியே குழந்தையா இருக்கட்டும்! ஆனா.. நீ வாழ வேண்டியவ யாழினி வாழ்வதற்கான தகுதியும், அவசியமும் உனக்கு இருக்கு! மரபு சார்ந்த நெறிகள்தான் உன்னைப் பயமுறுத்துது. ஆனா.. எல்லா விதிகளுக்கும் விலக்கு இருக்கு யாழினி. நீ கலாவோட சந்தோஷமா ஒரு வாழ்க்கையே வாழ்ந்திருந்தா கூட மறுமணம் இளம் வயசு விதவைக்குத் தப்பில்லே.. யாழினி! அதுக்காக எதுக்கும் உன்னை வற்புறுத்த மாட்டேன். காத்திருப்பேன்..! அட்லீஸ்ட்.. என்னை உன் காலேஜ் மேட்டாக் கற்பனை பண்ணிக்கோ! ஒரு ஆத்மார்த்தமான தோழனா..!''

''உங்களுக்குத் தெரியாது.. உமா! ஒரு நேரம் சித்திர வதை.. அப்புறம்.. நாலு நாளைக்குக் கெஞ்சல்.. நான் செய்தது தப்புன்னு அழுகை..! மாறி.. மாறி.. சுடு தண்ணியிலயும். பச்சைத் தண்ணியிலயும் போட்ட மாதிரி..'' என்று கதறினாள்.

முதல் முறையாக மனம் திறக்கிறாள் என்பது புரிந்து அழவிட்டான்.

''வேண்டாம்..! யாழினி.. மறந்துரு! கடந்த காலத்தைச் சுமந்துகிட்டே அலையக் கூடாது! எதிர்காலத்தைப் பற்றியும் நினைக்க வேண்டாம். இப்பத்திக்கு நாம பிரண்ட்ஸ் ஓ.கே.'' என்றான்.

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டே தலையாட்டினாள்.



''ஓ.கே..! ஓ.கே.! கெட் ரெடி!'' என்றான்.

அவள் குளியலறைக்குள் சென்றதற்குப்பிறகு விழித்த மகனின் முகத்தில் முத்தங்கள் பதித்துத் தன் மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டான் உமாசங்கர். அது கடவுளுக்கே பொறுக்கவில்லை போலும்.

## 22

''டேய்.. இப்பல்லாம் ரொம்பப் படுத்தறடா..'' என்று புலம்பினாள் யாழினி.

அருண்காந்தி அப்படி ஓடிக் கொண்டிருந்தான். காலை நேரங்களில் தாத்தா பாட்டியோடு செலவழிப்பான். பிற்பகலில் அம்மாவைக் கண்டவுடனே குஷியாகி விடுவான். ஆறு மாத காலத்திற்குள்ளாகக் கொஞ்சம் குறும்பு அதிகரித்திருந்தது.

வேலையாட்களுக்கெல்லாம் பிற்பகல் ஒரு மணி நேரம் ஓய்வு கொடுப்பாள் யாழினி. அந்த நேரத்தில் அவளே அவனைப் பார்த்துக் கொள்வாள். அன்றைக்கும் அப்படித்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வீட்டிலிருந்தே கிளம்புகிற அந்த மாடிப் பின்கட்டில் ஏறி விளையாடிக் கொண்டிருந்தான். நான்கைந்து படிகள் ஏறுவது பிறகு இறங்குவது என்று ஓடிக் கொண்டிருந்தவன் எதிர்பாராத தருணத்தில் விழப் போனான். அவன் விழுவதைத் தடுப்பதற்காக ஓடிய யாழினியின் கையைக் கைப்பிடியின் மேல் ஊன்றினாள்.

சற்று சாய்ந்தாள்.

அவள் விழுந்த சத்தம் கேட்ட ஆட்கள் ஓடி வந்தார்கள்.

''அம்மா.. விளுந்துட்டியா?'' என்று மகன் கூடக் கவலையுடன் பார்த்தான்.

வலக்கையை உயர்த்திய வேகத்தில் மற்றொரு கை மேல் அழுத்திக் கொண்டது.

வலியில் ''ஐயோ!'' என்று கத்திவிட்டாள். உமாவின் அம்மாவும் அப்பாவும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவர்கள் வந்தார்கள்.

''என்ன.. என்னம்மா.. ஆச்சு?'' என்று பதறினார்கள்.

''இல்ல.. இவன் விழப் போனான். பிடிக்கப் போனேன்..'' என்று பற்களை அழுந்த உதடுகளில் அழுத்திக் கொண்டாள்.

கண்களில் கண்ணீர் சாசரவென்று இறங்கியது. கையில் லேசாக வீக்கம் தெரிய ஆரம்பித்தது.

எலும்பில் ஏதாவது அடி பட்டிருக்குமோ என்று சந்தேகப்பட்ட அம்பலவாணன் மகனுக்கு போன் செய்தான்.

பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குள்ளாக உமாசங்கரின் கார் வந்து கிறீச்சிட்டு நின்றது. வரும்போதே டாக்டரிடம் அப்பாயிண்ட்மெண்ட் வாங்கியிருந்தான்.

உடனடியாக மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பினான். பெற்றோர்கள் வேறொரு காரில் தொடர்ந்தார்கள்.

பரிசோதித்துப் பார்த்தார் டாக்டர். பிறகு புன்னகைத்தார்.

போகும் வழியில் அருண்காந்தி வேறு ''அம்மா.. சாரிம்மா..! மன்னிச்சுக்கம்மா!'' என்று தாடையைப் பிடித்துக் கெஞ்சத் தொடங்கியிருந்தான்.



''ஒண்ணும் இல்லடா.. கண்ணா!'' என்று வலியோடு அவனையும் தேற்றினாள் யாழினி. இப்போதும் உமாசங்கரிடம் தோளில் தொற்றிக் கொண்டாள்.

''அம்மா.. பாவம்!'' என்று அழுவது போலக் குழந்தையின் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டிக் குடுத்தார் டாக்டர்.

''ஒண்ணும் இல்லடா உங்கம்மாவுக்கு..!'' நீ எதுக்கு விழ விட்டே!'' என்றார்.

எல்லாரும் புன்னகைத்தார்கள்.

டாக்டர் உமாசங்கரிடம் சொன்னார். ''ஒண்ணும் பயப்பட வேண்டியதில்லே! சும்மா மொக்கையடிதான். நான் கூட வீக்கம் பாத்து ஹேர்லைன் ஃப்ராக்ஸ் மாதிரியிருக்குமோன்னு நினைச்சேன். எதுக்கும் எக்ஸ்ரே எடுத்துடுவோம்'' என்றார்.

எடுத்தார்கள்!

ஒன்றும் இருக்கவில்லை. எனவே வீக்கத்துக்கும், வலிக்கும் மருந்து கொடுத்தார்கள். சதைப் பகுதியில் வலுவாக இரத்தம் கட்டியிருக்கிறது. இரத்தக் கட்டு சரியாக இரண்டு மூன்று நாளாகும் என்றார்கள்.

''நாங்க ஆபீஸுக்குப் போறோம்.. நீ கூட இருப்பா'' என்றார்கள் அம்பலவாணரும் ஞானமுத்துவும் கோரஸாக.

* * *

''ப்ளீஸ்! விடுங்க! நானே பாத்துக்கறேன்'' என்றாள் யாழினி கூச்சத்துடன்.

''நாங்க பெண்களுக்குப் பணிவிடை செய்றதே.. எப்பவாவது ஒரு தடவைதான். அதையும் ஏம்ப்பா... வேண்டாங்கறீங்க..'' என்று சிரித்தான் உமாசங்கர்.

''வேண்டாம்..! என் சிஸ்டர்ஸ்கிட்டே சொன்னா...'' அவள் இழுக்க.

''இல்லை! யாழினி.. நானே பாத்துக்கறேன்'' என்று உறுதியாகச் சொல்லிவிட்டான் உமாசங்கர்.

அம்பலவாணரும், பராசக்தியும் ஏதோ முக்கியமான உறவுக்காரர்களின் விசேஷத்திற்காகப் போக வேண்டு மென்று மனமில்லாமல் கிளம்பிப் போனார்கள்.

''உமா.. நீ உன் வைஃப்பை கவனி..! காந்தியை நாங்க பாத்துக்கறோம்'' என்று குழந்தையைத் தாங்கள் பொறுப் பில் வைத்துக் கொண்டார்கள் ஞானமுத்துவும், அன்ன பூரணியும்.

உமாசங்கர் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். அவனுக்கு ஏனோ.. பெரியவர்கள் எல்லாரும் திட்டம் போட்டுக் கொண்டு இப்படியெல்லாம் செய்கிறார்களோ என்று தோன்றியது. ஆனால் அவன் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

நல்லவேளையாக அடிபட்ட நாள் வெள்ளிக்கிழமை யாகப் போனதால் சனி, ஞாயிறு இரண்டு நாளும் அவ னால் முழுமையாகக் கூட இருக்க முடிந்தது.

யாழினிதான் தவித்துப் போனாள். சமீப காலமாக அவனிடம் திறந்த மனதுடன்தான் பழகினாள். ஆனால் உமாசங்கர் வாழ்க்கையில்தான் பாரமாக சேர்ந்து விட் டோம் என்ற தாழ்வு மனப்பான்மை துளைக்கத் தொடங்கி யிருந்தது. அதிலும் உமாசங்கரும், அவனது பெற்றோர் களும், ஞானமுத்து தம்பதியரும் தன்னைத் தாங்கு வதைப் பார்த்து இதெல்லாம்.. நமக்கு கிடைக்கக் கூடிய அதிர்ஷ்டமா?'' என்று கூடத் தோன்றியது.



உமாசங்கர் அதைப் புரிந்து கொண்டாலும் அதற்காக எந்த விளக்கங்களும் அளிக்கவில்லை. நடத்தையில் தான் புரிய வைப்பது என்றிருந்தான் போலும்.

இப்போது அதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது போல மிக உற்சாகமாகப் பயன்படுத்திக் கொண்டான்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகலிலேயே இரத்தக் கட்டு ஓரளவு குறைந்து விட்டது. உமாசங்கர் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தான்.

''ப்ளீஸ்! ஜலஜாகிட்டே சொன்னா..'' என்று அவள் ஆரம்பிக்க அவன் கடுப்பானான்.

''தயவு செய்து.. இந்தப் புலம்பலை நிறுத்திறியா..'' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தாள். ''பின்னே..? சும்மா.. என்ன எனக்கு என்னமோ தொந்தரவு.. மாதிரியே பேசறே! எனக்கு இதெல்லாம்.. பிடிச்சுப் போய்த்தான் செய்யறேன்..'' என்றான்.

அவள் மலங்க மலங்க விழித்தாள். அவன் சட்டென்று அவளைத் தன்புறம் இழுத்தான். ''நான் ஒண்ணும் உன்னை அனுதாபத்துக்காகக் கல்யாணம் பண்ணலே! உன்னை நேசிச்சுத்தான் கல்யாணம் பண்ணினேன்..'' என்றான் வேகமாக.

தன் முகம் நோக்கிக் குனிந்து தன் அன்பையும் காதலை யும் வெளிப்படுத்துகிற அவன் தோள்களை இறுகப் பற்றிக் கொண்டு அவள் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தாள்.

* * *

''யாழினி!'' என்று முகம் நிமிடத்தினான் உமாசங்கர். ''நிஜம்தான்.. யாழ்!'' என்றான்.

இரவு பத்து மணி இருக்கும். இன்று மாலை நேர்ந்த அந்த உணர்ச்சி வெடிப்புக்கு பிறகு விலகிக் கொண்டான் உமாசங்கர்.

அந்த நேரம் ஞானமுத்துவும், அன்னபூரணியம்மாவும் பேசிக் கொண்டு வருகிற குரல் கேட்டது. கூடவே அருண் காந்தியின் மழலைக் குரல் வேறு.

உமாசங்கர் விலகிக் கொண்டான். சிவந்து கிடந்த மனைவியின் முகம் பார்த்து அவனுக்குச் சிரிப்பு.

''அப்பா!'' என்று தாவிக் கொண்டான் குழந்தை! மகிழ்ச்சி நிறைந்த முகத்தோடு அள்ளிக் கொண்டான்.

இரண்டு பேருக்கும் பேசுவதற்கு நிறைய இருந்ததை பெரியவர்கள் இருவரும் ஆசையாகப் பார்த்துக் கொண்டார்கள்.

''ரெண்டு மூன்று நாளா உன்கிட்டவே இவனை விடலையா உமா. ஒரே ரகளை! அதான்..'' என்று முடிக்கு முன்னே உமா சங்கர் குறுக்கிட்டான்.

''இருக்கட்டும் பெரியப்பா! யாழினி..க்கு இப்பக் கை ஒரு மாதிரி நல்லாத்தானே இருக்கு! நாங்களே பாத்துக் கறோம்..'' என்றான் உமா.

அதற்குப் பிறகு மகனிடம் கவனம் திரும்பியது போலக் காட்டிக் கொண்டாலும் ஓரக் கண்ணால் மனைவியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் உமாசங்கர்.

அன்னபூரணிக்கு மருமகளின் முகம் பார்த்து ஏதோ புரிகிறாற் போல இருந்தது. விரைவில் கணவனை நகர்த்திக் கொண்டு புறப்பட்டார்.



மகனை உறங்க வைத்து விட்டுத் திரும்பினாள் யாழினி.

வெகு அருகில் நின்று கொண்டிருந்தான் உமாசங்கர். மேஜை இழுப்பறையில் இருந்து எதையோ எடுக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

''யாழினி! கல்யாண மண்டபம் சம்பந்தமான பைல் ஒன்று இங்க வச்சிருந்தனே..'' என்றான்.

''இருந்துதே..'' என்றபடி அவள் குனிந்தாள். நிமிர்கிற தருணத்தில் இருவரும் மோதிக் கொண்டார்கள்.

''அப்பா!'' என்று தலையைத் தடவிக் கொண்டே ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''பைலும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம்! அதெல்லாம் அப்புறம் பார்க்கலாம். நீ இங்கே வா சொல்றேன்'' என்று அவளை இழுத்து அருகில் அமர்த்திக் கொண்டான்.

''மகன் முழிக்கப் போறான்'' என்றாள்.

''ஹேய்..! கதை விடாதே! மகன் முழிச்சா.. ஒரு மணிக்கு மேலே ஒரு தடவை முழிப்பான். அதுவும் இப்பல்லாம்.. அய்யா.. ரொம்ப ஆடி ஓடிக் களைச்சுட்டாரு.. எங்க முழிக்கறது?'' என்றான்.

கட்டிலில் சாய்ந்து அமர்ந்தான் யாழினியைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அவளும் சாய்ந்து கொண்டாள். பிறகு மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''உமா..! அப்பவே என்னவோ சொன்னீங்களே! அது நிஜமா?'' என்றாள்.

''எது?'' என்றான். பிறகு ''ஓ..! அதைச் சொல்றியா? இன்னும் நம்பிக்கை வர்லையா?'' என்றான்.

அவள் தலையைப் பார்த்தாள். பிறகு நிமிர்ந்து ஒருவித வருத்தம் தோய்ந்த பயத்தோடு சொன்னாள்.

''இதுவரையிலும் என் வாழ்க்கையில நடந்த சம்பவங்கள் எல்லாத்துலயும் எனக்கென்று யோசிக்கறதுக்கு யாருமே இருக்கலை. கலாதரோடு..'' என்று ஆரம்பித்தவள் திடுக்கிட்டு நிறுத்தினாள்.

''ம்..! கொட்டிரு..'' டோன்ட்.. ஸ்டாப்'' என்றான். அவள் தொடர்ந்தாள்.

''அந்தக் கல்யாணத்துல பெரிய இடத்துல சம்பந்தம்னு எல்லாரும் நினைச்சாங்களே தவிர வேற எதையும் யோசிக்கலை. அத்தையும் மாமனாரும் எனக்காக வருத்தப்பட்டாங்க.. ஆனா.. எதுவும் செய்ய முடியலே! கலா முதல் நாள் காயப் படுத்துவாரு. அடுத்த நாள் கெஞ்சுவாரு.. அழுவாரு! இதெல்லாம்.. பார்த்து எனக்கு வாழ்க்கை மேலே பிடிப்பே இல்லாமப் போயிடுச்சு..'' என்றாள்.

தன் வலக்கையில் அவள் தோள்களை இறுக்கி விலக்கினான்.

''யாழ்! வந்த முதல் மாசமெல்லாம் நான் உன்னைப் பத்திப் பெரிசா... நினைக்கலே.. இது ஒண்ணும் கண்டதும் காதல் இல்லே! ஆனா உனக்கு ஒரு வாழ்க்கை இனி மேலும் இருக்குன்னு மட்டும் நினைச்சேன். பெரியப்பா கிட்டே பேசினேன். பெரியப்பாவும் உனக்காக வருத்தத்துல இருந்தாரு. ஆனா.. உன் வாழ்க்கையை எப்படிச் சீரமைக்கறதுன்னு தெரியலே. அதனாலதான் என்கிட்டே பொறுப்பைக் கொடுத்தாரு. ஆதரவில்லாத ஒரு பையனாப் பாருப்பா வீட்டோட வச்சுக்கலாம்..! எங்களுக்கும்





ஒரு ஆதரவு..'' அப்படீன்னாரு! அதுதான் எனக்கும் நல்ல யோசனையாத்தான் தோணுச்சு..'' என்றான்.

அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் தொடர்ந்தான்.

''ஆனா... அன்னைக்கு ஊட்டிப் பக்கம் போயிருந்தமே'' அப்ப. உன் முதுகுல நெருப்புச் சுட்ட தழும்பைப் பாத்த அன்னைக்கு நான் தூங்கவே இல்லை. அது வரைக்கும் நீ வரமாட்டேங்கறே! அங்க வந்து பாக்கும் போதெல்லாம் கலாதரோட ஞாபகம் வரும். அப்படீன்னு தான் நான் நினைச்சுகிட்டிருந்தேன். ஆனா.. அந்த வடுவைப் பார்த்தவுடனே..'' என்று பற்களைக் கடித்துக் கொண்டான். இப்போது கூட அவன் முகத்தில் வேதனையின் வலி தெரிந்தது.

தனக்காக அவன் படுகிற வேதனையைப் பார்த்த யாழினிக்குள் ஆச்சரியம் பொங்கியது. கண்கள் மலர, விழியோரத்தில் நீர் சேர ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அதுக்கப்புறம்தான். நான் தீவிரமா மாப்பிள்ளை தேடினேன். மே..பி என் மனசுல நாமே பொண்ணுக் கேட்டா. அது நியாயமா இருக்காதுன்னு தோணுச்சோ.. என்னமோ.. அப்ப.. அந்த மாதிரி எண்ணமும் வர்லே.. ஆனா.. கைலாஷைக் கூப்பிட்டு நீ பேசியிருக்கே.. செஞ்சதெல்லாம் வீணாப் போச்சேன்னு ஒரு கோபம் வந்துச்சு.. அதோட விஷ்ணுசாரதி மச்சான் வேறு ரொம்ப வருத்தப்பட்டாரா.. எனக்கும் ஒரு மாதிரி ஆயிடுச்சு..'' என்றான். நிறுத்தி அவள் முகம் பார்த்தான்.

''அப்பத்தான் அந்த விஷயமே எனக்குப் புரிஞ்சுது?'' என்றான்.

குறும்பாகச் சிரித்தான். மெல்லக் குனிந்து அவள் முகத்தில் தன் பரிசுகளைக் கொடுத்தான். அந்த நாள் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவள் மனத்தில் அலை மோதியது.

யாழினியின் தலையை மெல்லக் கோதிக் கொடுத்துக் கொண்டே சொல்ல ஆரம்பித்தான்.

## 23

''என்னப்பா.. சொல்றே! ஏற்கனவே ருத்ரா செஞ்ச காரியத்துனால நம்ம குடும்பத்து மானமே கப்பலேறிகிட்டிருக்கு இப்ப செட்டிலாயிட்டா. இருந்தாலும் முதுகுக்குப் பின்னால் ஜனங்க பேசத்தான் செய்யறாங்க'' என்றார்.

அப்பாவின் அதிர்ச்சி அவன் எதிர்பார்த்ததுதான் மிகவும் பொறுமையாகவே எதிர்கொண்டான்.

''அப்படி என்னப்பா.. உலக மகா பேரழகியா.. அந்தப் பொண்ணு!'' என்று கேட்டார் கடுப்புடன்.

அவன் அப்பாவின் முகத்தைச் சிந்தனையுடன் பார்த்தான். ''அப்பா.. இத்தனை நாள் பழகி வெறும் அழகுக்காக மட்டுமே.. ஒரு பெண்ணை விரும்புவேன்ன.. நினைச்சீங்க?'' வருத்தம் அந்த முகத்தில் தெரிந்தது.

அப்பாவின் முகத்தில் சங்கடமான ஒரு பாவம் தோன்றியது. அதன் பிறகுதான் அவன் யாழினி தன் வாழ்க்கையில் பட்ட கஷ்டங்களையும் இப்போதும் வெறுமை



நிரம்பிய ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பதையும் விவரமாகச் சொன்னான். அப்போதும் அப்பா ஒன்றும் விவரமாக எடுத்துக் கொள்ளவில்லை.

மாறாக ஞானமுத்து திட்டம் போட்டே தன் மகனை அங்கே வரவழைத்திருந்தானோ என்று கூடப் பேசினார். அப்போதுதான் உமாசங்கர் மறுபடியும் சொன்னான்.

''அப்பா! நீங்க இப்படி நினைச்சிருவீங்களேன்னுதான் பெரியப்பா.. உங்ககிட்டே இதைப் பத்திப் பேசவே மாட்டேன்னுட்டார்'' என்றான்.

''ஓ..!''

''அது மட்டுமில்லப்பா! இந்த யோசனை நடைமுறைக்கு ரொம்ப நல்ல யோசனையா இருந்தாலும் சொத்துக்காகவே திட்டம் போட்டு நான் இந்த வேலையைச் செய்திருக்கேன்னு அம்பலவாணன் நினைச்சா.. எங்க நட்புக்கே களங்கமாக ஆயிடும்'' அப்படீனுதான் சொன்னாரு'' என்று மகன் சொன்னவுடனே கோபம் தணிந்தது. ஆனாலும் மனது இந்த விஷயத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது.

மனைவியிடம் பேசினார்.

''என்ன.. பராசக்தி..! இவன் இப்படிப் பேசறான்..'' என்றார் கவலையுடன்.

பராசக்தியும் யோசனையில் ஆழ்ந்தார். அம்பலவாணர் மேலும் சொன்னார்.

''நல்லா யோசி! ஏற்கனவே கல்யாணம் ஆன பொண்ணு. அதுவும் ஒரு குழந்தை வேற...'' என்றார்.

பராசக்தியிடம் ஏற்கனவே மகன் பேசியிருந்தான்.

''அம்மா! ரொம்பவும் வாழ்க்கையில கஷ்டப்பட்டிருக்கா அந்தப் பொண்ணைப் பாரு! பூ மாதிரி இருக்கா! அது மட்டுமில்ல.. இன்னொரு வாழ்க்கையை நினைக்கவே அந்தப் பொண்ணு பயப்படுது. சுயநலமா சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்ள. நினைக்கலேங்கறதே எவ்வளவு பெரிய விஷயம்..!'' என்றான்.

மகன் மனத்துக்கு இப்படியொரு பெண்ணைத்தான் பிடிக்க வேண்டுமா.. என்ற வருத்தம் இருந்தாலும் மகனுக்குப் பிடித்திருக்கிறது என்பதனாலேயே வேறு விதமான கருத்துக்களைச் சொல்லவும் யோசனையாகவும் இருந்தது.

இரண்டு பேரும் மாற்றி மாற்றி ஆலோசித்தார்கள். அதற்குப் பிறகுதான் முடிவு சொன்னார்கள். பேச்சு வார்த்தைகளையெல்லாம் விவரமாகச் சொல்லி முடித்த கணவனின் முகம் பார்த்து கனிந்து போன மனத்தோடு சொன்னாள் யாழினி.

''என்னால.. உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்..! அவன் புன்னகைத்தான்.

''ஆமா.. ரொம்பக் கஷ்டம்தான்!'' என்றான். ''எப்பக் கைலாஷ் மேட்டர் ஒரு முடிவுக்கு வந்துருச்சுன்னு தெரிஞ்சவுடனே என் மனசுல சந்தோஷம் ஏற்பட்டுச்சோ.. அப்ப இருந்தே கஷ்டம்தான்'' என்றான்.

அவள் பதில் சொல்ல இயலாமல் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''குட்.. இப்படித்தான் இருக்கணும்'' என்று அவன் சிரிக்க அவள் மேலும் ஆழமாக முகம் புதைத்துக் கொண்டாள்.



''யாழ்..!'' என்று அவன் குழைய அவன் மேலும் வெட்கத்தில் ஆழ்ந்தாள்.

''பையன் இருக்கான்!'' என்றாள்.

''என் மகன்தானே..! அவரு தூங்கறாரு.. காலையில தானே எழுவாரு.. தெரிஞ்ச விஷயம்தானே..!'' என்றான்.

மெல்ல அவன் முகம் பார்த்த யாழினியின் முகத்தில் லேசான ஒரு பீதி தோன்றி மறைந்தது.

உமாசங்கருக்குப் புரிந்தது கடந்த கால அனுபவங்கள் திருமண வாழ்க்கையைப் பற்றிய ஒரு விதமான பயத்தை அவளுக்குள்ளே ஏற்படுத்தியிருக்கிறது என்று.

மனைவி என்ற அந்தஸ்து கொடுத்திருப்பது மட்டுமல்ல அவளுக்கு மிகவும் சரியான முறையில் விஷயத்தைப் புரிய வைக்க வேண்டிய பொறுப்பும் அவனுக்கு இருந்தது என்று அவனுக்குப் புரிந்தது.

''யாழ்..!'' என்றான்.

''ம்..!''

''யாழ்..! உனக்கு மனசில ஏதாவது.. வெறுப்போ.. பயமோ.. இருந்துச்சுன்னா.. இந்த விஷயத்தையே விட்ரலாம்! எனக்கு உன் மேல இன்ட்ரஸ்ட் ஏற்பட்டதுக்குக் காரணம்.. உன் அழகோ.. இளமையோ.. அல்ல..! உனக்குப் பாதுகாப்புக் கொடுக்கணும்கிற எண்ணம்.. என்னை கிட்டத்தட்ட பைத்தியமா ஆக்கிடுச்சு.''

''............!''

''இந்த அன்பு.. காதல் அப்படீங்கற விஷயம் ஒரு மனசுல பூக்கும்போதுதான் தன்னைப் பக்கி யோசிக்

கறதை விட்டுட்டு.. அந்த இன்னொரு உயிரை பத்தியே நினைக்கறோம். உன்கிட்டே எனக்கு அந்த மாதிரி ஏற்பட்ட அக்கறைதான் உன்னைக் கல்யாணம் செஞ்சுக் கணும்கறதுல.. நான் பிடிவாதமா இருந்ததுக்குக் காரணம்'' என்று குழந்தைக்குச் சொல்வது போல சொன்னான்.

''அதுக்காக.. நீங்க வாழ்க்கையைத் தியாகம் செய்ய முடியுமா?'' என்றாள்.

''எது.. வாழ்க்கைடா.. தங்கம்?'' என்றான்.

அவள் விழிக்க அவன் புன்னகையுடன் அவள் காதோடு முடிகளை ஒதுக்கினான்.

''எது... வாழ்க்கைன்னு நாமதான் முடிவு பண்ணனும்! எனக்கு உன்னோட கம்பெனி பிடிக்கும்! உன்னோட இருக்கறப்ப.. நிம்மதியா உணர்றேன்.. உனக்கும் அந்த உணர்வு இருந்தாலே.. போதும்..'' என்றான்.

அவள் புன்னகையுடன் அவனைப் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

''உமா! உண்மையாச் சொல்றேன்! என்னோட வயசுக்கு இவ்வளவு பாதுகாப்பா.. நான் உணர்ந்ததே இல்லை..'' என்றாள்.

''தாங்க்ஸ்டா! அது போதும்..! அந்த நம்பிக்கை உனக்கு என் மேல இருந்தா.. போதும். மத்ததெல்லாத்தையும் நாம வரவழைச்சுக்கலாம். இப்பத்திக்கு இப்படி வச்சுக் கலாம். நான் உன்னை விரும்பறேன். நீ என்னை ஏத்துக் கறே.''

''ஐயோ..! பெரிய.. பெரிய வார்த்தையெல்லாம்.. சொல்லாதீங்க.. உமா..! நான் உங்களை ஏத்துக்கறதா..''



''ஆமா..! நீதான் பெரிய மனசு பண்ணி ஏத்துக்கணும்.'' என்று சிரித்தான். அப்படியே மெல்ல மெல்ல வாழ்க்கைப் பாடத்தை சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தான்.

* * *

ஒரு வாரம் போயிருக்கும்!

காலையில் சோம்பலுடன் படுக்கையில் திரும்பிப் படுத்தான் உமாசங்கர்.

யாழினியை அருகில் காணவில்லை! இன்னமும் எதையும் நம்ப முடியாதவள் போலவே நடமாடிக் கொண் டிருக்கும் மனைவியைப் பார்க்கும் போதெல்லாம் அவன் நெஞ்சில் கருணை மலர்ந்தது.

பெரியவர்கள் முகத்திலும் இப்போதெல்லாம் ஒரு நிம்மதி தெரிந்தது.

தான் இந்த ஊருக்கு வந்த புதிதில் நடந்த ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.

வந்த வாரத்தில் அவன் ஞானமுத்துவை 'அங்கிள்' என்றுதான் அழைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் வருத்தம் தோய்ந்த முகபாவத்துடன் சொன் னார்.

''ஏம்பா..! உமா.. முன்னேயெல்லாம்.. சின்ன வயசுல ''பெரியப்பா''ன்னுதான் கூப்பிடுவே. இப்பவும் அப் படியே கூப்பிட்டேன்னா.. மனசுக்கு கொஞ்சம் நெருக்கமா.. இருக்கும்'' என்றார்.

மகனை இழந்து அதற்காக துக்கப்பட்டுக் கொண்டு அவன் நடத்தைக்காக வேதனைப்பட்டுக் கொண்டும் இருக்கும் அந்த நொந்த உள்ளத்துக்குத் தன்னால்

கொடுக்க முடிந்த ஆறுதல் என்று உணர்ந்து அப்படியே அழைக்க ஆரம்பித்திருந்தான்.

எப்போது ஒரு மகனாக தன்னை நினைக்க ஆரம்பித்தாரோ அப்போதிருந்தே அவனுக்கும் உள்ளார்ந்த அன்பு மலர்ந்தது. அவர்களின் வேதனை அவனுக்கும் புரிந்தது.

மகன் மேல் வைத்த பாசமும், அவன் வாழ்ந்த விதம் குறித்த வருத்தமுமாக அவர்கள் பட்ட வேதனைக்கு அவன் வடிகாலாகவே இருந்தான். அதனால் வேறு ஏதோ ஒரு மாப்பிள்ளை வருகிற நிலையைக் காட்டிலும் உமாசங்கரே யாழினிக்கு மாப்பிள்ளையானது அவர்களுக்கு நிம்மதியையே தந்தது.

இந்த ஒரு வாரத்தில் யாழினியும் மெல்ல மனம் திறந்திருந்ததோடு, அவனை இயல்பாக ஏற்றுக் கொள்ளவும் ஆரம்பித்திருந்தாள்.

சுகமான அந்த இளங்காலைப் பொழுதின் அமைதியை அனுபவித்தபடி எழுந்து ஜன்னல் பக்கம் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

ஒரேயடியாக அவளை பயமுறுத்தாமல் மெல்ல மெல்ல அவள் மனத்தில் மாற்றங்கள் கொண்டு வரச் செய்ததில் தன் வெற்றி குறித்து மகிழ்ச்சியோடுதான் இருந்தான் உமாசங்கர்.

திரும்பிப் பார்த்தான்!

குழந்தை உறங்கிக் கொண்டிருந்தான்.

யாழினி குளித்து முடித்து விட்டு மிகவும் மலர்ச்சியுடன் வந்தாள். ஞானமுத்துவின் வீட்டுக்கும் அவ்வப்போது



போய் அங்குள்ள நிர்வாகத்தையும் கவனித்துக் கொண்டாள். மகனையும் பிற்பகலில் அங்கே விட்டு விடுவாள்.

''யாழ்! இன்னைக்கு போர்ட் மீட்டிங் இருக்கு! அப்பா.. பெரியப்பா.. நீ எல்லாருமே வர வேண்டியிருக்கும். அம்மாவும், பெரியம்மாவும் ஃபுல் டே பையனைப் பாத்துக்கற மாதிரி ஏற்பாடு பண்ணிட்டு.. வா..'' என்றான்.

''சரி..'' என்று போய் சொல்லிவிட்டு வந்தாள்.

மெல்லிய பச்சை நிறத்தில் அழகிய பூக்கள் போட்டாற் போன்ற சுடிதாரில் வெகு அழகாக இருந்தாள். அவனுக்கு காபி கொண்டு வந்து கொடுத்து விட்டுத் திரும்பினாள். அவன் காபி கப்பை டேபிளின் மேல் வைத்து விட்டு எட்டி அவளைத் தன்னருகில் இழுத்தான்.

''ஐயோ! நீங்க குளிக்கலை!'' என்றாள்.

''நான் ஒண்ணும் செய்யப் போறதில்லை! சும்மா பக்கத்துல நில்லு..'' என்று நின்றான்.

நின்றாள். அவளை ஆழமாகப் பார்த்துக் கொண்டே காபியைக் குடித்தான்.

''காலங் கார்த்தாலே என்ன இப்படிப் பார்வை வேண்டியிருக்கு..'' என்றாள் முணுமுணுப்பாக.

''காபிக்கு.. சைட் டிஷ்..'' என்றான். அவள் சிரித்தாள்.

''ஹேய்..! எங்காவது ஒரு வாரம் போயிட்டு வர்லாமா?'' என்றான். அவள் யோசனையுடன் பார்த்தாள்.

''அப்புறம்.. ஆபீஸ் வொர்க் எல்லாம்..!'' என்று இழுத்தாள்.

''அதைப் பத்தி நீ ஏன் கவலைப் படறே'' எல்லா ஏற்பாடும் பண்ணிடறேன். ஒரு வாரம்தானே..! ஜி.எம்.

கிட்டே சொல்லியிருக்கேன். சேலம் கம்பெனிகள்லயும் சொல்லியிருக்கேன்'' என்றான்.

''உங்க வேலை கெடாதுன்னா.. எனக்கும் ஒண்ணும் இல்லே..'' என்றாள்.

''சரி..! ஏற்பாடு செய்வோம்'' யாழினி.. எட்டு மணிக்கெல்லாம் ரெடியாயிடணும்'' என்றான்.

அவசரமாகக் குளித்துத் தயாரானான். இரண்டு பேருமாகப் புறப்பட்டார்கள்.

ஒரு திருமண வாழ்க்கை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று யாழினிக்குத் தோன்றியது.

திடீரென்று நினைத்துக் கொண்டவன் போலச் சொன்னான்.

''யாழ்! இந்த சனிக்கிழமை உங்க அம்மா வீட்டுக்கு விசிட் அடிச்சர்லாம்'' என்று.

யாழினி உற்சாகமாகத் தலையாட்டினாள். எப்படியும் வாரம் ஒரு முறையாவது அவளது பிறந்த வீட்டுக்கு அழைத்துப் போனான்.

எல்லாவற்றையும்,திட்டமிட்டுக் கொள்வதில் கெட்டிக்காரனாக இருந்தான்.

''இனிமேல் தன் வாழ்க்கையைப் பற்றித் தான் கவலைப்பட வேண்டியதில்லை'' என்ற மனநிறைவில் இருந்தாள் யாழினி.

கலகலவென்று சிரித்துக் கொண்டு போய் அலுவலகத்தில் இறங்கினார்கள்.

ஒரு ஜோடிக் கண்கள் விஷத்தைக் கக்கியபடி பார்த்துக் கொண்டிருந்ததை அவர்கள் அறியவில்லை.



மனைவியின் மலர்ந்த முகம் பார்த்த உமாசங்கர் கூட இனிமேல் எப்போதுமே அவள் அப்படித்தான் இருக்கப் போகிறாள் என்று நினைத்துக் கொண்டான். ஆனால் ஓரிரு நாட்களிலேயே நிலைமை மாறியவுடன் கொஞ்சம் திகைத்துத்தான் போனான்.

# 24

'என்ன ஆயிற்று இவளுக்கு?' என்று பார்த்தான் உமாசங்கர்.

கடந்த வாரமெல்லாம் மகிழ்ச்சியாக நடமாடிக் கொண்டிருந்தாள். திடீரென்று இப்போது இரண்டு நாட்களாக ஒரு விதமான வாட்டத்துடன் நடமாடிக் கொண்டிருக்கிறாள்.

நேற்றிரவு!

''ஏன்.. யாழ்! வெளியூர் போற ஐடியா.. பிடிக்கலயா?'' என்றான்.

''ம்.. அதில்லே!'' என்று இழுத்தாள். பிறகு திடீரென்று ஏதோ நினைவு வந்தவள் போல.

''ஏங்க.. இந்தக் கல்யாணத்துனால உங்களுக்கு எதுவும் வருத்தம் இல்லையே!'' என்றாள்.

அவனுக்கு உண்மையாகவே கோபம் வந்து விட்டது.

''நீ முதல்ல இந்த மாதிரி அபத்தமான ஐடியாவுல இருந்து வெளியே வா!'' என்று கடுகடுத்தான். அதற்கு மேல ஏதும் பேசவில்லை.

அவள் மனத்தில் திடீரென்று ஏதோ வருத்தம் தோன்றியிருந்தது. வீட்டுப் பெரியவர்களிடம் ஜாடை மாடையாக விசாரித்தான். எதுவும் இல்லை என்றார்கள்.

இரண்டு நாள் பொறுத்துப் பார்த்து விட்டு பிற்பகல் நேரம் யாழினி இல்லாத நேரமாய் சரளாவை அழைத்தான்.

விசாரித்தான். இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியை சரளா விவரித்தபோது கொஞ்சம் அதிர்ந்து தான் போனான்.

* * *

யாழினியும் சரளாவும் பேக்டரியில் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள்.

அலுவலகத்திற்குப் பின்புறமாக வந்து கொண்டிருந்த போதுதான் பேச்சுக் குரல் சற்று பலத்ததாகவே கேட்டது.

அந்த இடத்தில்தான் அலுவலக ஆட்கள் உணவருந்துவார்கள்.

ராமானுஜத்தின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

''அட போங்கப்பா! நான் எதைச் சொன்னாலும் உங்களுக்குத் தப்பாத்தான் தெரியும்.''

''சும்மாயிருங்க.. ராமா..னுஜம் அண்ணா! அன்னைக்கு உங்களை எம்.டி. செமயாக் கலக்கிட்டாரு! அன்னையில இருந்தே.. நீங்க கடுப்புலதான் இருக்கீங்க..!'' என்றான் செல்வம் என்ற கிளார்க்.

''போடா.. நீ! அவரு எம்.டி. நான் சூப்பரின்டென்ட்! அவருகிட்டே நான் லொள்ளுப் பேசினா.. சரி வருமா?'' என்றார் அப்பாவி போல.

''ஆஹா! இந்த நடிப்புத்தானே வேண்டாம்கறது?'' என்றான் யாரோ.



''சரிய்யா! நான் எது சொன்னாலும் அது தப்புத்தான். அவரு செஞ்சா.. மட்டும் ரைட்டா!''

''ஏன்.. என்னத்தை அப்படிச் செய்யறாரு..?''

''என்ன இப்படிக் கேக்கறேள்! எப்படி பெரிய திட்டமெல்லாம்.. போட்டுக் காரியம் பண்றா! உம்மாலயும்.. என்னாலயும்.. முடியுமா? நடக்குமா?'' என்றார் ராமானுஜம்.

''நடக்காதில்லே! பின்னே விட்டுட்டு வேற வேலையைப் பாரும்'' என்றார்கள் அந்த இருவரும்.

''இரப்பா! சார்.. என்னவோ.. பெரிசா.. சொல்ல வந்தார். அதை என்னனு கேட்போம்..'' என்றான் செல்வம்.

''ஆமாப்பா! இப்படி வாயப் பிடுங்குவேள்! நான் எத்தையாவது சொல்லுவேன்..'' அப்புறம் ராமானுஜம் அப்படிச் சொன்னார்.. இப்படிச் சொன்னார்னு.. என் வேட்டு வைப்பேன்...'' என்றார் அலட்டலாக.

சரளாவும், யாழினியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''சரி.. சொல்லுங்கோ.. அண்ணா! கேட்போம்..'' என்றான் செல்வம்.

''சொல்றேன்! இப்ப நம்ம எம்.டி. ஒரு மேரேஜ் பண்ணியிருக்கார். எத்தனாம் பெரிய சாணக்கியத் திட்டம் தெரியுமா?'' அது..!'' என்றான்.

''என்னண்ணா.. சாணக்கியத்தனம்! எம்.டி. சாருக்கு.. நம்ம மேடத்தைப் பிடிச்சுது கல்யாணம் பண்ணிகிட்டார். இதுல போய் சும்மா சொல்லிக்கறதுக்கு என்ன இருக்கு? அந்தக் காலத்துலயாவது விதவை. மணம்.. சீர்திருத்தம்

அது இதுன்னு பேசலாம். இப்போ.. அப்படியெல்லாம் இல்லே! போன வருஷம் கல்யாணம் இந்த வருஷம் டைவர்ஸ்ங்கறாங்க!'' இதுல என்னத்தைப் பெரிசாக் கண்டீங்க?'' என்றான் செல்வம்.

''இது வெறும் கல்யாணம் இல்லப்பா! மேரேஜ் ஆஃப் கன்வீனியன்ஸ் அந்தக் காலத்துல பொண்ணு வெளியே போகப் பிடாதுன்னு செய்வாளே.. அது மாதிரி!''

''ஆமா.. தாய் மாமாவைக் கல்யாணம் பண்ணிட்டா! அப்புறம் குழந்தைங்க ஊனமாய் பொறக்கும்! இப்பத் தான் அப்படியெல்லாம் கூடாதுங்கறாளே!'' என்றான் கிருஷ்ணன்.

''அதை விடப்பா! யாழினி மேடத்துக்கு என்ன குறைச்சல்! நன்னா.. அழகா இருக்கா கல்யாணம் பண்ணிண்டார். பையனையும் தத்தெடுத்துண்டார். மொத்த சொத்தும் இப்ப அவர் பொறுப்பிலயோன்னா..!'' என்றார்.

வழக்கம் போல ''ஹி.. ஹி..'' என்று சிரித்தார்.

''அண்ணா! நீங்க வில்லங்கமான ஆள்! உங்ககிட்டே பேசறதே.. ஆபத்து கேட்டேளா?'' என்று கிருஷ்ணன் கேலியாகச் சொன்னான்.

செல்வம் மட்டும் ஒருவிதக் கடுப்புடன் சொன்னான்.

''அண்ணா! நீங்க இனிமே யாரோட பர்சனல் மேட்டரையும் பேசாதீங்க! வீணா.. வம்புல மாட்டிப்பீங்க! அது எம்.டி.யோட பர்சனல் மேட்டர் அதைப் பத்திப் பேசறதுக்கு நமக்கு எந்த ரைட்டும் இல்லே! புரியுதா?'' என்றான்.

எல்லாரும் கலைந்து சென்றார்கள்.



யாழினியின் முகம் வாடிவிட்டது. சரளாவைப் பார்க்கவே கூச்சப் பட்டவள் போலே நடந்தாள்.

அறைக்குப் போனதற்குப் பின் சரளாவே வாய் திறந்தாள்.

''மேடம்! அந்த ஆள் கிடக்காரு! வக்கிரம் பிடிச்ச ஆள்! அந்த ஆள் எப்பவுமே இப்படித்தான். அவரை யாருக்குமே பிடிக்காதே! பாத்தீங்களா.. யாருமே.. நின்னு அவர் பேச்சைக் கேக்கலே..'' என்றாள்.

யாழினி வருத்தமான முகபாவத்துடன் சரளாவைப் பார்த்தாள். சரளா மறுபடியும் சொன்னாள்.

''மேடம்! யார் எது சொன்னாலும் காதுல போட்டுக் காதீங்க! இதெல்லாம் பொறாமைக்காரர்கள் பேசற பேச்சு! சார் தங்கம்! அவரை மாதிரி ஒருத்தர் கிடைக்கறது கஷ்டம்..'' என்றாள்.

யாழினி "ஆம்" என்பது போல் தலையாட்டினாள். ஆனால் உடனே வேறு வேலையைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

* * *

சரளா சொல்லி முடித்தும் உமாசங்கர் சிந்தனையில் ஆழ்ந்தாள். பிறகு செல்வத்தை வரவழைத்துக் கேட்டாள்.

செல்வத்துக்கு உதறல் எடுத்து விட்டது.

''சார்.. அவர்தான்..!'' என்று உளற ஆரம்பித்தான்.

''இல்லப்பா! உன்னை ஒண்ணும் தப்புச் சொல்லலே! அவர் என்ன சொன்னார்னு மட்டும் சொல்லு..'' என்றான்.

அன்று மாலையே ராமானுஜத்தைத் தனது அறைக்கு வரவழைத்தான். அதற்குள்ளாக ராமானுஜத்துக்கு செய்தி போய் விட்டது.

பயந்து போய் வந்தார்.

''உட்காருங்க! சார்!'' என்றான்.

''இல்ல.. பரவால்ல..'' என்று தடுமாற.

''பரவால்ல..! மரியாதை மனசுல இருக்கணும்..! அது இல்லாதப்ப.. வெறும் போலி மரியாதை எதுக்கு?'' என்றான்.

ராமானுஜம் சீட்டின் நுனியில் உட்கார்ந்தான். ''இது என்னோட பர்ஸனல் விஷயம்! இதைப் பத்திப் பேச உங்களுக்கு உரிமை இல்லே! ஆனாலும் பேசியிருக்கீங்க! உங்ககிட்டே இதையெல்லாம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லே! ஆனாலும் சொல்றேன். இந்தக் கம்பெனியின் பங்குதாரா் ஆக இந்த கலாதருடைய பங்கில் வந்த வருமானம் எல்லாம் அவருடைய மகன் அருண்காந்திக்குப் போய்ச் சேரும்! என் மனைவி யாழினியைக் காப்பாத்தக் கூடிய தெம்பும், சக்தியும் எனக்கு இருக்கு! இதை நான் ஏன் இப்ப உன்கிட்டே சொல்றேன்னா.. நீங்க பேசின ஏதோ விஷயம் காதுல விழுந்து என் மனைவி ரொம்ப வேதனைப்படறாங்க! உங்களுக்கும் மூணு பொண்ணுங்க.. இருக்கு! நாளைக்கு அவங்களுக்கும் வாழ்க்கைன்னு ஒண்ணு இருக்கு! என்னோட வாழ்க்கையில நான் செட்டிலாயிட்டேன். அதைப் பாத்துக்கற தெம்பு எனக்கிருக்கு. ஆனா.. உங்க நடத்தையப் பொறுத்து உங்களுக்கு மாப்பிள்ளைகள் வரணும். ஆபீஸ்ல ஜாடை மாடையா விசாரிச்சா.. ''ஐயோ.. அந்த ஆளா..!'' அப்படின்னா.. உங்க குழந்தைகளோட வாழ்க்கைதான்.. கெடும்.. யோசிச்சுக்கோங்க..'' என்றான்.



ராமானுஜம் திகைத்துப் போனார்.

''நீங்க சொல்ற மாதிரி நான் திட்டம் போடறதிலே கெட்டிக்காரன்தான். ஆனா.. என்னோட திட்டமெல்லாம். பாசிட்டிவவாத்தான் இருக்கும். இப்பக்கூட.. ஏதோ ஒரு திட்டம் போட்டு உங்கக் கம்பெனியில இருநதே வெளியேத்த முடியும்! ஆனா.. அதனால எனக்கென்ன.. ஆகப் போகுது!'' என்றான்.

ராமானுஜம் மென்று விழுங்கினாற் போல அமர்ந்து இருந்தார்.

''போங்க.. சார்! போய் உருப்படியா.. வேலை பாருங்க!'' என்றான்.

மேற்கொண்டு அவர் முகத்தைப் பார்க்கவே பிடிக்காதவன போல பைலை நோக்கிக் குனிந்து கொண்டான்.

எப்போதும் பின்னாலேயே பேசிப் பழக்கப்பட்ட ராமானுஜத்துக்கு இந்த நேரடித் தாக்குதலை எதிர்கொள்ள முடியவில்லை. திகைத்துப் போய்த் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போனார்.

பார்வையாளராக அமர்ந்து கொண்டிருந்த செல்வமும் மௌனமாக எழுந்து போனான்.

* * *

''உன் பிரச்சினையை சரி பண்ணியாச்சு!'' என்று சிரித்த கணவனை ஒரு ஆழமான பார்வையுடன் பார்த்தாள் யாழினி.

''என்ன பார்வை?'' என்றான் உமாசங்கர்.

''இல்லே! ஒரு ராமானுஜம் வாயை அடைப்பீங்க'' என்றாள்.

"குட்!" என்றான் உமாசங்கர்.

"என்ன.. குட்?!" என்றாள் யாழினி கடுப்புடன்.

"இல்லே! மனசுக்குள்ளயே வச்சு புழுங்கிக்காம.. வாய் விட்டுப் பேச ஆரம்பிச்சிருக்கியே.. அதுக்கு!" என்றான்.

யாழினி ஒரு பெருமூச்சு விட்டாள். கொஞ்ச நேரம் தன் கைவிரல்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு சொன்னாள்.

"எல்லாந்தானே பேசுவாங்க!" என்றான்.

"பேசிட்டுப் போறாங்க!" என்றான்.

"என்ன இப்படிச் சொல்றீங்க?" என்றாள் யாழினி ஆற்றாமையுடன்.

"யாழினி.. ப்ளீஸ் அன்டாஸ்டான்ட்! உலை வாயை மூடலாம். ஊர் வாயை மூட முடியாதுன்னு.. சொல்வாங்க..! மனிதர்கள் எல்லாரும் எதைப் பத்தியாவது பேசத்தான் செய்வாங்க! நல்லவங்க.. நல்ல விஷயம் பத்திப் பேசுவாங்க..! அப்படியில்லாதவர் மத்த விஷயம் பேசுவாங்க! மனிதர்களுக்குப் பேசறதுல ஒரு ஆர்வம் இருக்கு! நாலு பேர் சேந்தா.. அரசியல் பேசுவாங்க..! சினிமா பேசுவாங்க..! இல்லே அடுத்தவனைப் பத்திப் பேசுவாங்க! அதுக்கெல்லாம் பயந்தா வாழ்க்கையே நடத்த முடியாது. தெரியுமா?"

"அது உண்மைதான்..!" என்று முணுமுணுத்தாள்.

"தெரியுதில்லே..! அப்புறம்.. என்ன?" என்றான்.

"இல்லே! உங்க நல்ல மனசைப் புரிஞ்சுக்காம உங்களைப் பத்திக் குத்தம் சொல்லும்போது எனக்குக் கஷ்டமா இருக்கு!" என்றாள்.

"தாங்க்ஸ்!" என்றான்.



பட்டென்று அருகில் இழுத்தான்.

"என்ன? எதுக்கு தாங்க்ஸ்!" என்றாள் யாழினி.

"என்னை நல்லவன்னு ஒத்துகிட்டியே... அதுக்கு..!" என்றான்.

அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"யாழினி..! ஒரு விஷயம் புரிஞ்சுக்க..! தலைவலியும், காய்ச்சலும் தனக்கு வந்தாத்தான் தெரியும்பாங்க! ஒண்ணுமில்லே! உன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் எடுத்துக்க..! உன்னோட கடந்த கால வாழ்க்கையில நடந்த விஷயங்கள் யார்கிட்டயாவது உன்னால ஷேர் பண்ணிக்க முடிஞ்சுதா? முடியலே! அதனால என்ன ஆச்சு? உலகத்துக்குக் கலாதர் ரொம்ப நல்லவன்.. பாவம்! ஆனா.. உண்மையில பெரியப்பாவும், பெரியம்மாவும் மகனைப் பத்தி வெளிய சொல்லவும் முடியாம, மருமகளுக்காகவும் எத்தனை வேதனைப் பட்டிருப்பாங்க! அதனால எல்லாத்தையும் எல்லார்கிட்டயும் சொல்லிகிட்டிருக்க முடியாது. அதே போல நான் நல்லவன் கிறதையோ, நீ இப்பத்தான் உண்மையான வாழ்க்கை வாழ்றேங்கறதையோ யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியமும் இல்லே!" என்றான்.

"ம்..!" என்றாள்.

"யப்பா! குழந்தைக்குச் சொல்ற மாதிரி சொல்ல வேண்டியிருக்கு..!" என்றான்.

"உங்களுக்கு மனதுக்குக் கஷ்டமாயில்லையா?"

"நான் கேர் பண்ணிகிட்டதில்லே! ஏன்னா.. எங்க வீட்ல இந்த அனுபவமெல்லாம் ஏற்கனவே நிறையப் பட்டிருக்கோம்.." என்றான்.

அவன் குரலிலும் முகத்திலும் தெரிந்த வேதனை அவளை என்னவோ செய்தது. நிமிர்ந்து பார்த்தாள். அவன் கண்கள் எங்கோ தொலைவில் பார்த்தாற் போலப் பார்த்துக் கொண்டிருந்தன.

முகம் தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருந்தது.

## 25

''எங்க அப்பாவுக்கு ஒரே பிரதர் எங்க சித்தப்பா! எங்க அப்பாவுக்கு நான் மட்டும்தான்! சித்தப்பாவுக்கு ருத்ராக்கா. எங்க வீட்ல நான் பொறக்கறதுக்கு முன்னாடி ரெண்டு தடவை அம்மா கன்சீவ் ஆயி பிராப்ளம் ஆயிடுச்சு. அதுக்கப்புறம் நான் பொறந்ததாலே என் மேல ரொம்பப் பிரியம். ரெண்டு வீட்டுக்கும் சேர்ந்து ஒரே பெண் குழந்தைன்னு எங்க எல்லாருக்கும் ருத்ராக்கா மேல பிரியம். ஆன..'' என்றான்.

சற்று நேரம் நிறுத்தினான்.

யாழினி அவசரமாக நிமிர்ந்து சொன்னாள். ''ரொம்ப வேதனையா இருந்தா.. விட்டுருங்க..!'' என்று.

''இல்லல்லே! உன்கிட்டத்தானே நான் விவரமாப் பேச முடியும்!'' என்றான். தொடர்ந்து சொன்னான்.

''கேட்கறவங்க எல்லாருக்கும். இது ரொம்பச் சீப்பான விளக்கம் போலத் தெரியும். ருத்ராக்கா.. ஒரு கல்யாணம் பண்ணினா.. முறிஞ்சுது. அப்புறம் மறுபடியும்.. மறுபடியும்! அந்த சமயத்துல சித்தப்பாவும் சித்தியும் பட்ட வேதனை இருக்கே! குடும்பத்துக்கு மூத்தவங்கங்கற முறையிலே அப்பாவும், அம்மாவும் படு வேதனைப் பட்டாங்க! எந்த விசேஷத்துக்கும் போக முடியாம.. முதுகுக்குப் பின்னால வீசப்படற ஏளனப் பார்வையைத் தாங்கிக்க முடியாம..! ஆனா.. இதுல எங்க தப்பு.. என்ன?''



யாழினி வாஞ்சையாவும் பாசமுமாய் அவன் தலையைக் கோதிக் கொடுத்தாள்.

அவன் தொடர்ந்தான்.

''மேலை நாடுகள்ல வேணும்னா திருமணம் ஒரு தனிப்பட்ட விஷயமா இருக்கலாம். ஆனா.. இங்கே.. நம்ம சொஸைட்டியில அது ஒரு குடும்பத்திற்கான அந்தஸ்து சார்ந்த விஷயமாத்தான் இருக்கு! அப்புறமாத்தான் ருத்ராவோட சைக்காலஜிக்கலா பேசி.. அவளுக்குப் புரிய வச்சு..'' என்று நிறுத்தினான்.

''போகட்டும் விடுங்க! நாம யாருக்கும் எதையும் விளக்க வேண்டியதில்லே..!''

''தட்ஸ்.. தி.. பாயிண்ட்! அதைத்தான் நாம புரிஞ்சுக்கணும். இன்னமும் ருத்ராக்காவோட விஷயம் முடியலே! அட்லீஸ்ட் விஷ்ணுசாரதியோட அவ முழுமையா வாழணும். விஷ்ணுசாரதி அவளோட வாழ்க்கையில வந்ததுக்கப்புறம்தான் நான் நிம்மதியா இருக்கேன். ரெண்டு வீட்லயும் கொஞ்சம் பழைய நிலை வந்திருக்கு..'' என்றான்.

''சரி! நல்லதே நினைப்போம்!'' என்றாள்.

''ஆமா..! நினைப்போம்..! நடத்துவோம்!'' என்றான்.

மெல்ல அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

''நாளைக்கு நாம வெளியூர் போறோம்..?'' என்றான்.

* * *

முன்பு ஒரு முறை.. வந்திருந்த அதே மலைப் பிரதேசப் பகுதிக்கு வந்திருந்தார்கள்.

கெஸ்ட் ஹவுஸின் முன் பகுதியில் வந்திருந்தார்கள். கோடைக் காலமாக இருந்ததால் குளிரும் லேசான வெயிலுமாக ஆர்வத்துடன் அமர்ந்திருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''நான் சின்னப் பையனா.. இருந்தப்போ.. இன்னும் நிறைய மரங்கள் இருக்கும். ஆனா.. இப்ப எல்லா இடங்கள்ளயும் மரங்கள் காணாமப் போயிட்டே இருக்கு..! இது நல்லதுக்கில்லே..!'' என்றான்.

''ஆமா..! நம்ம அடுத்த சந்ததிக்கு நாம ரொம்பத் துரோகம் பண்றோம்'' என்றான்.

அவள் ஆமோதித்துக் கொண்டாள். அவனைக் குறுகுறுவென்று பார்த்தாள். குறும்பாகச் சிரித்தான்.

''ம்..! சோஷியல் சிந்தனையெல்லாம் இருக்கும் போல இருக்கே!'' என்றாள்.

''ஏன் இருக்காதாக்கும்?'' என்றான். இப்போதெல்லாம் அவனிடம் வாயடிக்க ஆரம்பித்திருந்தாள். அவனும் ரசித்துச் சிரித்தான்.

''மூணு நாள்தானே..! பையனை நாங்களே பாத்துக் கறோம். நாலு பேர் கிழங்கு கிழங்கா இருக்கோம். பாத்துக்க



மாட்டமா?'' என்றார்கள் பெரியவர்கள். இதற்காகவே உறவினர்கள் குடும்பங்கள் இரண்டு மூன்றை வர வழைத்திருந்தார்கள். அவர்கள் குடும்பங்களிலும் குழந்தைகள் இருந்ததாலோ என்னவோ பேரனை ஒரு வழியாகச் சமாளித்தார்கள்.

''ஏன்.. யாழினி! பையனையும் கூட்டிட்டு வந்திருக்க லாம்.. இல்லே..! இந்தப் பெரியவர்கள்.. சொன்னாக் கேட்கமாட்டேங்கறாங்க..!'' என்றான் உமாசங்கர்.

''ஆமா.. எனக்கும் அப்படித்தான் இருக்கு!'' என்றாள் யாழினி.

''சரி.. விடு! பெரியவர்களுக்கு நாம தனியா போயிட்டு வரணும்னு ஒரு ஆசை! நாளன்னைக்குப் பகலே கிளம் பிலாம்..! என்றான்.

''ம்..!'' என்றாள் உற்சாகமாக.

''ஆனா.. ஒரு கண்டிஷன்..!'' என்றான்.

''அப்பனை நல்லாக் கவனிச்சுக்கணும்!'' என்றான்.

''ஏன்.. இப்ப.. என்ன குறையாம்?'' என்றாள்.

''ம்.. ஏதோ.. பரவாயில்லை! இருந்தாலும்.. ஊருக்குப் போனா.. பையனைக் கண்டா.. நம்மளைக் கண்டுக்கவே மாட்டே!''

''ஐயே.. போதுமே! இப்பத்தான் ஊர்லயும் ஒண்ணுமே நடக்காத மாதிரி..'' என்றாள்.

''அது.. என்னமோ..! அய்யா.. சாமர்த்தியசாலியா இருக்கறதுனால எப்படியோ நடத்திக்கறேன்'' என்றான்.

யாழினி கலகலவென்று சிரித்தாள்.

''ம்..!'' என்று இழுத்தான். அவன் முகத்தைப் பார்த்து விட்டுக் குனிந்து கொண்டாள்.

''ம்.. என்ன விஷயம்?'' என்றாள்.

''இல்லே! நான் யாழினியை நேசிச்சுக் கல்யாணம் பண்ணினேன்னு சொன்னீங்களாம்! அது எப்ப.. உங்களுக்குப் புரிஞ்சுது..! என்றாள் தயக்கத்துடன்.

''எப்படா கேப்பே..! விவரமா சொல்லிடலாம்னு காத்துக்கிட்டிருக்கேன்..! வெளியில உட்கார்ந்து பேசற விஷயமா அது! வா.. உள்ளே.. போலாம்..!'' என்றான்.

அவன் குறும்புப் பேச்சை அவள் ரசித்துக் கொண்டாள். எழுந்து உள்ளே செனறாள்.

உள்ளே இருந்த சோபாவில் கால் நீட்டி அவன் அமர்ந்து கொண்டு அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான். அவளும் இதமாகச் சாய்ந்து கொண்டாள்.

''உமா..!'' என்றாள்.

''ம்..!'' என்றான் தனது கிறக்கக் குரலில்.

''ஆக்சுவலா.. நான் என்னோட வாழ்க்கைங்கறது ஒரு வானவில் மாதிரி. சந்தோஷம்கறது கல்ஃபுல் லாக் காட்டிட்டுப் போயிருச்சுன்னு நினைச்சேன்'' என்றாள்.

''ஹேய்..!'' என்ன ஆச்சரியம்!'' என்றான்.

''ஏன்?'' என்றாள் அவளும் ஆச்சரியமாக.

''இல்லே! நானும் உன்னைப் பார்த்தவுடனே வானவில் மாதிரி எவ்வளவு அழகா இருக்கு. இந்தப் பொண்ணு அப்படின்னுதான் நினைச்சேன்..'' என்றான்.



''உதாரணம் தப்பாச்சே!'' என்றாள்.

''ஏன்..?'' என்றான்.

''ஏன்னா.. வானவில் கொஞ்ச நேரத்துல மறைஞ் சுடுமே..!'' என்றாள்.

''ஆமா..! அது உண்மைதான்! ஆனா.. வானவில்லை யும் நிரந்தரமாக்கறதுக்கு ஒரு டெக்னிக் இருக்கு..!'' என்றான்.

''எப்படி?'' என்றாள்.

அதையே கலைப்படைப்பாக்கிட்டா.. அது அப்படியே இருக்குமில்லே?''

''ஆமா.. இது நல்ல ஐடியாவா இருக்கே? அது எப்படி என்னைக் கலைப்படைப்பாக்கினீங்க!'' என்றாள்.

''அது பெரிய சீக்ரெட்! அதுக்குத் தகுந்த சன்மானம் கிடைச்சாத்தான் சொல்ல முடியும்..?''

''ஐயே..! பெரிய இவரு..!'' என்று அவள் பழித்துக் காட்டினாள்.

அவன் சிரித்தான்.

''இதெல்லாம் ஒண்ணும் வேலையாகாது அம்மிணி..'' என்றான்.

அவள் அவன் கோரிக்கையை நிறைவேற்றி வைத்த தற்குப் பின் சொன்னான்.

''அந்த வானவில்லையே அழகான ஓவியமாக் கிட்டா?'' என்றான்.

''ஓ..!'' என்றாள் அவள் ஆச்சரியமாக.

''யெஸ்..! அதைத்தான் நான் செஞ்சேன்.. உன்னை அழகான ஓவியமாக்கி என் மனசுல பதிச்சுகிட்டேன். யாரால அழிக்க முடியும். சொல்லு.. பாக்கலாம்..'' என்றான்.

''யப்பா..! பயங்கரமான மூளைதான்..!'' என்று அவன் கன்னங்களையும் கிள்ளினாள். பாசத்துடன் பார்த்தாள்.

''வெறும் பார்வை போதாது.. அம்மிணி..!'' என்று அவன் தன் பிடியிலேயே நின்றான்.

சற்று நேரத்திற்குப் பிறகு..!

''இன்னொன்று சொல்லட்டா! என்றான்.

''ம்..!'' என்றாள் யாழினி.

''உனக்கும் என்னைப் பிடிச்சிருந்தது. தெரியுமா?'' என்றான்.

அவள் சற்றே அதிர்ந்து போய்ப் பார்த்தாள். ''அதிர்ச்சி அடையாதே.. கண்மணி! ஒரு வேளை கலாவோட நீ நல்லபடியா.. வாழ்ந்திருந்தா.. நிலைமை வேற விதமா இருந்திருக்குமோ.. என்னமோ..! நான் நம்ம பயலோட விளையாடும்போதெல்லாம் ஓரக்கண்ணால பாத்து கிட்டு ரசிச்சுகிட்டிருப்பே! நீ அப்படிப் பாக்கறதை என்கரேஜ் பண்ணனும்கறதுக்காகவே அவனோட நான் இன்னும் கொஞ்சம் விளையாடுவேன் தெரியுமா?'' என்றான்.

''அப்ப.. பையன் மேல பிரியம் இல்லையா?'' என்றாள் சற்றே புகார் போல.

''யாழினி! ஒண்ணு புரிஞ்சுக்கோ! முதல்ல.. என் மனசைக் கொள்ளையடித்தது அந்தப் பையன் தான் தெரி



யுமா? என்னன்னு தெரியலே.. இன்ஸ்டன்ட் அஃபெக் ஷன்னு சொல்லுவாங்களே.. அது மாதிரி அவனை எனக்குப் புடிச்சுது. அவனுக்கும் அப்பா.. ஏக்கம்.. உள்ளுக் குள்ளே இருந்திருக்கணும். போலே.. அதனால அவனுக் கும் என் மேலே ரொம்ப ஒட்டுதல்..! அப்புறமாத்தான் நான் உன்னைக் கவனிக்க ஆரம்பிச்சேன்.. அதிலயும்.. அந்தத் தழும்பைப் பாத்ததும்'' என்று தன் கையைக் காட்டினான்.

சிகரெட்டுத் தழும்பைப் பார்த்து அவள் மிகவும் பதறி விட்டாள்.

''ஐயோ..! என்ன இது..!'' என்றாள்.

''இல்லல்லே.. இது வேணும்னெல்லாம் செஞ்சு கிட்டது இல்லே..! உன்னப் பத்தி நான் வருத்தமா யோசிச்சிகிட்டிருந்தப்போ.. நடந்தது. இந்த ஒரு சூடே இப்படி இருக்கே..னு நான் நினைச்சப்பத்தான் உன்னை என் கைக்குள்ளே கொண்டு வரணும். வாழ்க்கைன்னா என்னன்னு காட்டணும்கற எண்ணமெல்லாம் தோணுச்சு!'' எண்ணம் தோன்றதென்ன.. தீவிரமா.. என்னை உலுக்கி எடுக்க ஆரம்பிச்சுடுச்சு..!'' என்றான்.

''கடவுள்.. எனக்கும் ஏதோ நல்லதை இந்த வாழ்க்கை யில வச்சிருக்கான் போல..!''

''உனக்கு மட்டுமில்லடி.. ராஜாத்தி..! எல்லாருக்கும் நல்லது வச்சிருக்கான். அதைத் தேடி எடுத்துப் பாது காத்துக்கறது நம்ம சாமர்த்தியம்'' என்றான்.

அவள் புன்னகைத்தாள்.

''இப்படிச் சிரிக்காதடி..! தலை கிறுகிறுங்குது..'' என்றான்.

அவள் கலகலவெனச் சிரித்தாள். பாதியிலேயே அவள் சிரிப்புக்கு அவன் வேறு விதமாக பதில் கொடுத்தான். மேலும் சொன்னான்.

''அது மட்டுமில்ல. ஒரு நாள் நானும் பயலும் விளையாடிக்கிட்டிருந்தப்ப.. அந்தப் பக்கமா.. பெரியப்பாவும், பெரியம்மாவும் பேசிகிட்டிருந்தாங்க இந்த உமா மாதிரி நம்ம பையன் இருந்திருக்கக் கூடாதா? பையன் இப்படி நெருங்கிப் பழகறான். நாளைக்கு உமாவுக்குக் கல்யாணமாகிப் பிரிஞ்சு போனா.. பையன் ஏங்கிப் போயிடுவான்.. இல்லே..!'' என்று.

.................!

''நான் மனசுக்குள்ளே அப்பவே.. கவலைப்படாதீங்க.. பையன் பிரிஞ்சு போகாத அளவுக்கு நான் ஏதாவது ஏற்பாடு பண்றேன்.. அப்படீன்னு நினைச்சுகிட்டேன்.''

''அய்யா.. படிப்படியாத் திட்டம் போட்டீங்களாக்கும்!'' என்றாள் குறும்பாக.

''நல்லதுக்குத்தானே.. திட்டம் போட்டோம்! நாங்க போட்ட திட்டத்தால எல்லாருக்கும் நல்லதுதானே நடந்தது'' என்றான்.

''ஆனா.. பாவம்..! வீணாப் பழியை வாங்கிட்டீங்க!'' என்றாள்.

''அதை விடு யாழினி! எப்பேர்ப்பட்ட காரியத்தையும் குறை சொல்ல ரெண்டு பேர் இருப்பாங்க! எனக்கும் உன்னைப் பிடிக்குது..! உனக்கு என்னைப் பிடிக்குது..! நம்ம ரெண்டு பேருக்கும். பையனைப் பிடிக்குது! நம்ம சின்னக் குடும்பத்தை சுத்தியிருக்கிற உறவுக்காரங்களுக்குப் பிடிக்குது! மத்தவங்களைப் பத்தி நமக்கென்ன கவலை..!'' என்றான்.

''ஆனா.. அப்புறம்.. ஹி.. ஹி.. ராமானுஜம் என்கிட்டே வந்து மன்னிப்புக் கேட்டாரு'' என்றான் யாழினி.

''அந்தாள்.. கெடக்கறான்.. விடு..!'' என்றான் உமா சங்கர். குபீரென்று சிரித்தாள்.

''சரளா.. அந்தாளுக்கு நல்லாத்தான் பேரு வச்சுது..'' என்றாள். ''ஏய்! ஒரு நேரத்துல சரளாகிட்டே பேசினாக் கூட உனக்குக் கொஞ்சம் பொறாமை வந்துச்சு.. இல்லே..!'' என்றான்.

''பொறாமையான்னு தெரியல! ஆனா.. ஒரு மாதிரி இருந்துச்சு..'' என்றாள் யாழினி.

''அப்பத்தான்.. எனக்கும் புரிஞ்சுது.. ஆஹா.. அம்மாவுக்கும் நம்மளைப் புடிச்சிருக்கு.. மேற்கொண்டு தொடரலாம்னு..'' என்று.

''அதான் தொடர்ந்துட்டீகளே! முற்றுப் புள்ளிக்கே வந்துட்டீங்களே..!'' என்றாள் யாழினி.

''நாட் அட். ஆல்.. என் காதல் பெண்ணே! நம்ம அன்புக்கு முற்றுப்புள்ளியே கிடையாது..! வாங்க.. என் வானவில் ஓவியமே..! இனிமேலும் பேசிக் கொண்டிருக்கப் பொறுமையில்லை..'' என்றான்.

''ஆகட்டும்.. ஓவியரே..'' என்று அவளும் சிரித்தாள்.

வானவில்லாகத் தோன்றி மறைந்திருக்க வேண்டிய மகிழ்ச்சி யாழினியின் மனத்தில் வானவில் ஓவியமாக

நிலை கொண்டது மட்டுமல்லாமல்.. நாள்தோறும் புதுப்புது விளக்கங்களையும் அளிக்கத் தொடங்கியது.

சிறந்த கலையைப் போல அவர்களின் வாழ்வும் பரிமளிக்கத் தொடங்கியது. சிறந்த கலைஞனின் கையில் கிடைத்த ஓவியம் போல அவனும் தன் வாழ்வைப் பாதுகாக்கப் போகிறான் என்ற நிம்மதியில் அவள் சிரிக்க அவள் சிரிப்பில் வசீகரிக்கப்பட்டவனாய் அவனும் சிரித்தான்.